# திருச்சிற்றம்பலம்

# திருமந்திரம் - II

## நான்காம் தந்திரம்

### 1. அசபை

அசபை என்பது, செபிக்கப்படாமலே பிராணனோடு சேர்ந்து இயங்கும் மந்திரம் என்படி இதுவே மந்திரம் என்றும், பிரணவம் என்றும் கூறப்பெறும் மூச்சுக் காற்று ஹ என்ற ஒலியுடன் வெளிப்படுகிறது. ஸ என்ற ஒலியுடன் உள்நுழைகிறது. இம்மந்திரத்தை எல்லா உயிர்களும் செபிக்கின்றன.

***884.*** ***போற்றுகின் றேன்புகழ்ந் தும்புகல் ஞானத்தைத்***
***தேற்றுகின் றேன்சிந்தை நாயகன் சேவடி***
***சாற்றுகின் றேன்அறை யோசிவ யோகத்தை***
***ஏற்றுநின் றேன்நம் பிரான்ஓர் எழுந்தே.***

புகழ்ந்து சொல்லப்படுகின்ற ஞானத்தை இடைவிடாது நிலைத்துக்கொண்டு இருக்கிறேன். மனத்தில் உலக நாயகனாகிய சிவன் திருவடியைத் துணையெனத் தெளிகின்றேன். சேவடிடையும் சிவயோக நெறியை உங்களுக்குச் சொல்லுகின்றேன், எம்பெருமானாகிய சிவபரம்பொருளின் ஓரெழுத்து மந்திரத்தை ஓதுகின்றேன்.

***885.*** ***ஓரெழுத் தாலே உலகெங்குந் தானாகி***
***ஈரெழுத் தாலே இசைந்தங் கிருவராய்***
***மூவெழுத் தாலே முளைக்கின்ற சோதியை***
***மாவெழுத் தாலே மயக்கமே உற்றதே.***

அகரமாகிய ஓரெழுத்தால் உலகமெல்லாம் பரவி அதுவதுவாய் விளங்கி, உகரம் என்ற இரண்டாவது பாதத்தால் உடம்பினுள் பொருந்திச் சிவசத்தியாய், மூன்றாவது பாதமாகிய மகரத்தால் தோன்றுகின்ற ஒளிப்பொருளை, மாயையால் மயக்கத்தைப் பொருந்தும்படி செய்தது.

***886.*** ***தேவ ருறைகின்ற சிற்றம் பலம்என்றுந்***
***தேவ ருறைகின்ற சிதம்பர மென்றுந்***
***தேவர் உறைகின்ற திருஅம் பலமென்றுந்***
***தேவர் உறைகின்ற தென்பொது வாமே.***

தேவர்கள் உறைகின்ற சிரசின் வலப்புற இடமே. தேவர்கள் பொருந்தி நிற்கும் சிற்றம்பலம் என்றும், அவர் பொருந்தி நிற்கும் சிதம்பரம் என்றும், அவர் பொருந்தி நிற்கும் திரு அம்பலம் என்றுமாகும்.

***887.*** ***ஆமேபொன் னம்பலம் அற்புதம் ஆனந்தம்***
***ஆமே திருக்கூத் தனவரத தாண்டவம்***
***ஆமே பிரளய மாகும்அத் தாண்டவம்***
***ஆமே சங் காரத் தருந்தாண் டவங்களே.***

முன்னே சொன்ன பொன்னம்பலத்தில் அற்புதத் தாண்டவமும் ஆனந்தத் தாண்டவமும் ஆகும். திருக்கூத்தாகிய அனவரததாண்டவமும் அங்கே ஆகும். அங்கு பிரளய தாண்டவமும் ஆகும், சங்காரத் தாண்டவமும் அங்கு நடைபெறும்.

***888.*** ***தாண்டவ மான தனியெழுத் தோரெழுத்***
***தாண்டவ மான தனக்கிரக கத்தொழில்***
***தாண்டவக் கூத்துத் தனிநின்ற தற்பரத்***
***தாண்டவக் கூத்துத் தமனியந் தானே.***

தாண்டவமான ஒப்பற்ற எழுத்து பிரணவம், அத்தாண்டவம் அனுக்கிரக்தையே முதல் தொழிலைக் கொண்டு இயங்குவது, அஃது எல்லாவற்றிலும் மேலாக நின்ற தற்பர சிவ நிலையாகும், அக்கூத்துப் பொன்னம்பலத்துள் நிகழ்வதாகும்.

***889.*** ***தானே பரஞ்சுடர் தத்துவ மாய்நிற்குத்***
***தானே அகார உகாரம தாய்நிற்குந்***
***தானே பரஞ்சுடர் தத்துவக் கூத்துக்குத்***
***தானே தனக்குத் தராதலந் தானே.***

சிவபரம்பொருளாகிய பரஞ்சோதி தத்துவ ரூபமாக விளக்கப்பட்டவைகளில் கலந்துள்ளது, அதுவே பிரணவத்தின் உறுப்புகளால் அகர உகர கலைகளையும் உள்ளது, தத்துவங்களை இயக்குவதற்கு தானே ஒளி தருவது, அது வேறு ஆதாரமின்றித் தன்னேயே தனக்கு ஆதாரமாயும் கொண்டுள்ளது.

**890.** *தராதல மூலைக்குத் தற்பர மாபரன்*
*தராதலம் வெப்பு நமவா சியவாந்*
*தராதலஞ் சொல்லிற் றான்வா சியவாகுந்*
*தராதல யோகந் தயாவாசி யாமே.*

ஆதாரமாகிய மூலாதாரத்தில் தற்பரமாக எழுந்தருளியுள்ள சிவம் அக்கினி மண்டலத்தில் நமவாசிய என நிற்கும், மேல் ஆதாரமாக விளங்கும் ஒளி மண்டலத்தைச் சொல்லப்போனால் நமவாசிய என்றமைப்பும், அதற்குமேல் விளங்கும் சகஸ்ர தள ஆதாரத்தில் யவாசி ஆம்.

**891.** *ஆமே சிவங்கள் அகார உகாரங்கள்*
*ஆமே பரங்கள் அறியா விடம்என்ப*
*ஆமே திருக்கூத் தடங்கிய சிற்பரம்*
*ஆமே சிவகதி ஆனந்த மாமே.*

ஆன்மாக்களின் அறிவுக்கும் உணர்வுக்கும் ஏற்பவே பாசத்தையும் பாச நீக்கத்தையும் அமைக்கின்றனர் பிரமனாதியர், யகரம் என்ற ஆன்மா அருளுடன் கூடிய சிவத்தை அடைந்தபோது தத்துவங்களை உணராது, திருக்கூத்தினைச் செய்து கொண்டிருந்தவன் கூத்தினை விட்டு மேலான அறிவாக விளங்குபவனாவான், இவ்வியோகத்தால் சிவகதி பெற்று இன்பம் உண்டாம்.

**892.** *ஆனந்த மூன்றும் அறிவிரண் டொன்றாகும்*
*ஆனந்தஞ் சிவாய அறிவார் பலரில்லை*
*ஆனந்த மோடும் அறியவல் லார்கட்கு*
*ஆனந்தக் கூத்தாய் அகப்படுந் தானே.*

ஆனந்தமாகிய அ உ ம என்ற மூன்றும் அறிவாகிய விந்து நாதமாகிய இரண்டும் சேர்ந்து பிரணவமாகிய ஒன்றாகும், இனி சிகாரத்தை நமவுடன் பொருந்தாது ஆன்மாவுடன் பொருந்தும் வகையில் அதன் சத்தியை மாற்றினால் (சிவாய என்றிருந்தால்) சிவானந்தம் உண்டாம் என்பதை அறிவுடையோரிலும் பலர் அறியவில்லை, இவ்வுண்மையை அறியவல்லார்கட்குச் சிவன் ஆனந்தக் கூத்தனாய் இருப்பதும், அவன் செய்யும் ஆனந்தக் கூத்தும் புலப்படும்.

**893.** *படுவ திரண்டும் பலகலை வல்லார்*
*படுவ தோங்காரம் பஞ்சாக் கரங்கள்*
*படுவது சங்காரத் தாண்டவப் பத்தி*
*படுவது கோணம் பரந்திடும் வாறே.*

பல நூல்களைக் கற்றுணர்ந்தவர் விந்து நாதத்தினைப் பெறுவர், ஓங்காரத்தைக் கொண்டோ பஞ்சாக்கரத்தைக் கொண்டோ விந்து நாதம் விளங்கும் குரு மண்டலத்தை அடையலாம், இம்முறையை விளக்குவதே சங்காரத் தாண்டவமாகும், இது விந்துத் திரிகோணம் என்று சொல்லப்படுகின்ற சகஸ்ரதளத்தில் விரிந்து விளங்குவதாய் உள்ளது.

**894.** *வாறே சதாசிவ மாறிலா ஆகமம்*
*வாறே சிவகதி வண்டுறை புன்னையும்*
*வாறே திருக்கூத்து ஆகம வசனங்கள்*
*வாறே பொதுவாகு மன்றின் அமலமே.*

இவ்வாறே சதாசிவமூர்த்தியால் அருளிச் செய்யப்பட்டது வேத நெறி சைவ நெறிக்கு மாறுபடாத ஆகமம் ஆகும், இவ்வாறு சிவகதியில் வளப்பம் மிகுந்த துறையை அடையின் பாச நீக்கம் உண்டாகும், சைவாகமங்களால் கூறப்பட்ட உண்மை இவ்வாறுள்ளது, இதுவே எல்லோரும் சென்றடையும் பொதுச்சபையாகவும், அதன்கண் விளங்கும் நின்மல சிவமாகவும் உள்ளது.

**895.** *அமலம் பதிபசு பாசங்கள் ஆகமம்*
*அமலம் திரோதாயி யாகுமா னந்தமாம்*
*அமலஞ்சொல் ஆணவ மாயை காமியம்*
*அமலந் திருக்கூத்தங் காமிடந் தானே.*

நின்மல சிவமே பதிபசு பாசங்களுக்குத் தாரகம் என்றும் கூறம், நின்மல சிவமே மறைப்புக்கும் ஆனந்தத்துக்கும் தாரகமாம், நின்மல சிவமே சொல்லப்பட்ட ஆணவம் மாயை கன்மத்துக்குத் தாரகம், நின்மல சிவம் விளங்குவது சங்காரத் தாண்டவம் செய்யும் இடமாகும்.

**896.** *தானே தனக்குத் தலைவனு மாய்நிற்குந்*
*தானே தனக்குத் தன்மலை யாய்நிற்குந்*
*தானே தனக்குத் தன்மய மாய்நிற்குந்*
*தானே தனக்குத் தலைவனு மாமே.*

அச்சிவமே சிவசத்தி பிரிப்பின்றி நிற்றலால் சத்திக்கத் தலைவனாக உள்ளான், தான் விளங்கும் அருள்மாலையாகவும் அவனே உள்ளான், தான் பிறவற்றோடு கலந்திருந்தாலும் தன் சுபாவம் குன்றாது நிற்கிறான்,தன்னை ஒருவர் ஏவப்படுவாரின்றித் தானே தனக்குத் தலைவனாய் விளங்குகிறான்.

*897.* *தலைவனு மாய்நின்ற தற்பரக் கூத்தனைத்*
*தலைவனு மாய்நின்ற சற்பாத் திரத்தைத்*
*தலைவனு மாய்நின்ற தாதவிழ் ஞானத்*
*தலைவனு மாய்நின்ற தாளிணை தானே.*

உயிர் வருக்கத்துக்குத் தலைவனாக நின்று விளங்குவது நின்மல சிவமாகும், அவற்றைத் தாங்குபவனாகவும் தலைவனாக உள்ளவனும் நின்மல சிவமாகும், சகஸ்ர தளத்தில் விளங்கும் ஞானத்தை அளிப்பதற்கு, திருவடிகளாகிய சூரிய சந்திரர்களும் அவனே தலைவனாவான்.

*898.* *இணையார் திருவடி எட்டெழுந்த தாகும்*
*இணையார் கழலிணை யீரைஞ்சு தாகும்*
*இணையார் கழலிணை ஐம்பத்தொன் றாகும்*
*இணையார் கழலிணை ஏழா யிரமே.*

அவனது திருவடியே அகரமாகிய பெரும்பொருளாம், அப்பெரும்பொருளே யகரமாகிய ஆன்மாவில் விளங்கும், அதுவே ஐம்பத்தோர் அக்கரங்களாகும், அதுவே எல்லா மந்திரங்களும் தலைவனாக உள்ளது.

*899.* *ஏழா யிரமாய் இருபதாய் முப்பதாய்*
*ஏழா யிரத்தும் எழுகோடி தானாகி*
*ஏழா யிரத்துயிர் எண்ணிலா மந்திரம்*
*ஏழா யிரண்டாய் இருக்கின்ற வாறே.*

ஏழாயிரமாய்க் கூறப்பட்ட மந்திரங்கள் இருபது முப்பது என்ற எண்ணிக்கையிலுள்ள எழுத்துகளாலானவை, ஏழாயிர வகையான மந்திரங்களும் ஏழு முடிவில் பொருந்துவனவாய், ஏழாயிரம் பிரிவில் எண்ண முடியாத பேதங்களாக விரியும், ஏழு முடிவுகளையுடைய மந்திரங்கள் எல்லாம் இரண்டு விந்து நாதத்தில் முடிவனவாம்.

*900.* *இருக்கின்ற மந்திரம் ஏழா யிரமாம்*
*இருக்கின்ற மந்திரம் எத்திலும் இல்லை*
*இருக்கின்ற மந்திரஞ் சிவன்திரு மேனி*
*இருக்கின்ற மந்திரம் இவ்வண்ணந் தானே.*

அசபையாகிய பிரணவமே ஏழாயிர மந்திரங்களாகும், அசபையாகிய மந்திரம் எத்தன்மையதாக இல்லை, அசபையே சிவனது வடிவாகவுள்ளது, அசபையே இவ்வாறு எல்லாமாய் உள்ளது.

*901.* *தானே தனக்குத் தகுநட்டந் தானாகுந்*
*தானே அகார உகாரம தாய்நிற்குந்*
*தானே ரீங்காரத் தத்துவம் கூத்துக்குத்*
*தானே உலகில் தனிநடந் தானே.*

தன்னை ஒருவர் தூண்டாமல் தானே தக்க நடனத்தை மேற்கொள்ளும், தானே தன்னின் வேறாகச் சத்தியைப் பிரிப்பித்து நிற்கும், பின்பு மகாமாயையில் நடைபெறும் பஞ்சக் கிருத்தியத்துக்கும் தானே ஒப்பற்ற நடனத்தை மேற்கொள்ளும்.

*902.* *நடமிரண் டொன்றே நளிமை தாகும்*
*நடமிரண் டொன்றே நமன்செய்யுங் கூத்து*
*நடமிரண் டொன்றே நகைசெயா மந்திரம்*
*நடஞ்சிவ லிங்கம் நலஞ்செம்பு பொன்னே.*

நடனம் இரண்டில் சங்காரத் தாண்டவம் அருள் பற்றினதானபடியால் நன்மையைச் செய்வதாகும். மற்றொன்றாகிய அற்புதத் தாண்டவம் பிறவியிற் செலுத்தலால் நமனுக்கு வேலை கொடுக்கும் கூத்து, சங்காரத் தாண்டவமே உலகோர் பழிப்புக்காளாகாத பிரணவ மந்திரமாகும், இத்தாண்டவப் பயன் எடுத்த உடம்பு செம்பு பொன்னாவது போல் சிவாகாரமாய்விடும்.

*903.* *செம்புபொன் னாகுஞ் சிவாய நமவெள்ளிற்*
*செம்புபொன் னாகத் திரண்டது சிற்பரஞ்*
*செம்புபொன் னாகும் ஸ்ரீயுங் கிரீயுமெனச்*
*செம்புபொன் னான திருவம் பலமே.*

சிவாயநம எனத் திருவைந்தெழுந்து ஓதினால் செம்பின் குற்றம் நீங்கிப் பொன்னாவது போல் உயிரின் குற்றமாகிய ஆணவம், கன்மம், மாயை கெட்டுத் தூய்மை பெறும், அப்போது உயிரின் அறிவு மயமான பரம்அமையும், ஸ்ரீம் கிரீம் என்று செபித்தாலும் அவ்விதமே உடம்பு பொன்னாகும், செம்பு பொன்னானது போல் திருவம்பலம் சமைந்தபோது உயிரின் குற்றம் நீங்கிச் சிவாகரமாய் விளங்கும்.

***904.*** ***திருவம் பலமாகச் சீர்ச்சக் கரத்தைற்***
***திருவம் பலமாக ஈராறு கீறித்***
***திருவம் பலமாக இருபத்தைஞ் சாக்கித்***
***திருவம் பலமாகச் செபிக்கின்ற வாறே.***

திருவம்பலமாக விளங்கும் சிறப்பான சக்கரத்தைச் சபை அமைக்கக் குறுக்கும் நெடுக்குமாக முறையே ஆறு ஆறு கோடுகள் இட்டு, அதனை இருபத்தைந்து அறைகளாக்கி, அவ்விருபத்தைந்து அறைகளிலும் முறையாகப் பஞ்சாட்சரம் அமைதுச் செபிக்கவும்.

***905.*** ***வாறே சிவாய நமச்சி வாயநம***
***வாறே செபிக்கில் வரும்பேர் பிறப்பில்லை***
***வாறே அருளால் வளர்கூத்துக் காணலாம்***
***வாறே செபிக்கில் வருஞ்செம்பு பொன்னே.***

சிவாயநம சிவாயநம என்ற முறையில் வலிமையாக எண்ணிச் செபித்தால், பிறப்பில்லாதது ஒழியும், அவ்வாறே வளர்ச்சியைத் தருகின்ற திருக்கூத்துத் தரிசனம் காணலாம், அப்போது ஆன்மா மலமற்றுப் பொன்போல் விளங்கும்.

***906.*** ***பொன்னான மந்திரம் புகலவும் ஒண்ணாது***
***பொன்னான மந்திரம் பொறிகிஞ்சு கத்தாகும்***
***பொன்னான மந்திரம் புகையுண்டு பூரிக்கிற்***
***பொன்னாகும் வல்லோர்க் குடம்புபொற் பாதமே.***

சிவாயநம என்ற பொருள் போன்ற மந்திரத்தை வாய்விட்டுச் சொல்லாகாது, இப்பொன் போன்ற மந்திரம் உதட்டளவில் ஒலியன்னியில் எண்ணத்தக்கது, இம்மந்திரத்தை எண்ணும் போது சிரசில் அக்கினித்திக்கிலிருந்து உணர்வு ஈசான திக்குக்குப் பாய்ந்து பெருகினால் உடம்பு பொன்னாகும், திருவடிப்பேறு கிட்டும்.

***907.*** ***பொற்பாதங் காணலாம் புத்திரர் உண்டாகும்***
***பொற்பாதத் தாணையே செம்புபொன் னாயிடும்***
***பொற்பாதங் காணத் திருமேனி யாயிடும்***
***பொற்பாத நன்னடஞ் சிந்தனை சொல்லுமே.***

பொன்னா திருவடி தரிசனம் கிட்டும், பஞ்சாட்சார செபத்தால் சிறந்த ஆசாரியனாகச் சீடர்கள் உண்டாவர், சிவானுக்கிரத்தால் சீடனின் மலக்குற்றம் நீங்கும், பொற்பாதத்தைக் காணத்தக்க உடம்பாயிடும், திருவடி நடனச் சிந்தனையை உபதேசியுங்கள்.

***908.*** ***சொல்லு பொருகூட்டிற் புக்குச் சுகிக்கலாம்***
***நல்ல மடவார் நயந்துட னேவருஞ்***
***சொல்லினும் பாசச் சுடர்ப்பாம்பு நீங்கிடுஞ்***
***சொல்லுந் திருக்கூத்தின் சூக்குமந் தானே.***

சொல்லப்படுகின்ற வேறொர் உடம்பில் புகுந்து அங்குள்ள இன்பத்தை பெறலாம், இவரிடம் வசீகரத்தன்மை இருப்பதால் அழகிய பெண்கள் விரும்பித் தொடருவர், இவர்கள் சொன்னாலே உலகினர்க்கு ஆசாபாசம் நீங்கும், இவை திருக்கூத்தினால் அடையும் பயன்கள்.

***909.*** ***சூக்குமம் எண்ணா யிரஞ்செபித் தாலுமேற்***
***சூக்கும மான வழியிடைக் காணலாஞ்***
***சூக்கும மான விளையைக் கெடுக்கலாஞ்***
***சூக்கும மான சிவனதா னந்தமே.***

மானசீகமாக எண்ணப்படுகின்ற ஆயிரம் உரு செபித்தாலும், மேலுள்ள நுண்மையான சகஸ்ர தளம் விளங்குவதைக் காணலாம், வாசனாரூபமாகப் பந்தித்துள்ள வினைகளைக் கெடுக்கலாம், சூக்குமான சிவானந்தம் விளையும்.

***910.*** ***ஆனந்தம் ஆனந்தம் ஒன்றென் றறைந்திட***
***ஆனந்தம் ஆனந்தம் ஆ-ஈ-ஊ-ஏ-ஓமென் றறைந்திடம்***
***ஆனந்தம் ஆனந்தம் அஞ்சும தாயிடும்***
***ஆனந்தம் ஆனந்தம் அம்-ஹ்ரீம் அம்-க்ஷம் ஆம் ஆகுமே.***

சீவன் சகஸ்ரதளத்தைக் கடந்து சிவனோடு ஒன்றிய நிலையைச் சொல்வது ஆனந்தம், இவ்வாறு சிவனின் சமஷ்டித் தன்மையும் சீவனின் வியஷ்டித் தன்மையும் பிரித்தறிய முடியாதபடி இருக்கும் இடத்தை அடைவது அதைவிட ஆனந்தம், இவ்வைந்தும் ஒன்றிய நாதாந்தம் அமைந்தபோது ஆனந்தமாம், வித்தெழுத்துகளான இவை ஐந்துமே சிறந்த ஆனந்தத்தை அளிப்பன.

*911. மேனி யிரண்டும் விலங்காமல் மேற்கொள்ள*
*மேனி யிரண்டு மிக்கார விகாரியா*
*மேனி யிரண்டு ஊ - ஆ - ஈ - ஏ - ஓ - என்ற*
*மேனி யிரண்டு ஈ - ஓ - ஊ - ஆ - ஏ - கூத்ததே.*

தூல உடம்பும் சூக்கும உடம்பும் ஒன்றுக்கொன்று தடையாக இராமல், அவை மிகுந்து ஒளி பொருந்தி விகாரப்படாமல் நின்றால், தூல சூக்கும உடல் இரண்டும், ஊ - ஆ - ஈ - ஏ - ஓ - என்று நின்றது, பின் அவ்விரண்டும் ஊ - ஓ - ஊ - ஆ - ஏ என்றும் விளங்கி அமையவே திருக்கூத்தாகும்.

*912. கூத்தே சிவாய நமமசி வாயிடுங்*
*கூத்தே - ஈ - ஊ - ஆ - ஏ - ஓம் - சிவாயநம வாயிடங்*
*கூத்தே - ஈ - ஊ - ஆ - ஏ - ஓம் சிவயநம வாயிடுங்*
*கூத்தே - இ - ஊ - ஆ - ஏ - ஓம் நமசிவாய கோளொன்று மாறே.*

இந்தக் கூத்தே சிவாயநம, மசிவாயந, நமசிவாய, யநமசிவா, வாயசமசி என விரியும், இவ்வுண்மையை அறிந்து கடைப்பிடித்தால் சந்திர யோகமான சிவாயநம விளங்கி ஈ ஊ ஆ ஏ ஓம் அமையும், சூரிய யோகமான சிவயநம என்பது விளங்கி ஈ ஊ ஆ ஏ ஓம் அமையும், கிரியை நெறியில் நமசிவாய விளங்கி இ ஊ ஆ ஏ ஓம் அமையும், இஃது ஒளி (அறிவு) பொருந்தும் வழியாகும்.

ஒன்றாயிருக்கும் ஆகாய பூதம், இரண்டாயிருக்கும் வாயு பூதம், மூன்றாயிருக்கும் தேயு பூதம் ஆகிய இம்மூன்றும் இறைவனது ஆட்டத்தால் இயங்க, ஆகாய பூதத்தினிடையே இம்மூன்றும் ஒளிகளும் விளங்க, அதனால் பிருதிவி பூத அணுக்கள், அப்பு பூத அணுக்கள், தேயு பூத அணுக்கள், வாயு பூத அணுக்கள், ஆகாய பூத அணுக்கள், விந்து அணுக்கள், நாத அணுக்கள் ஆக ஏழும் மூன்றொளிகளுடன் கலந்தாட, சிவன் ஏகனாய் ஆட அவனும் சிவம் சத்தி நாதம் விந்து சாதாக்கியம் மகேசுரம் உருத்திரன் விஷ்ணு பிரமன் ஆகிய தத்துவங்களும் ஆட, சிற்றம்பலத்தில் செவ்வொளியில் நடித்தனன்.

## 2. திருவம்பலச் சக்கரம்

சக்கரம் என்பது கோடுகள் குறுக்கும் நெடுக்குமாக இட்டு எழுத்துகளைக் கட்டங்களில் அடைத்து வழிபடுவதற்குரியது. திருவம்பலச் சக்கரம் என்றால் சிதாகாயப் பெருவெளியில் ஆனந்தக் கூத்தாடும் பெருமான் சத்தியோடு மந்திர வடிவமாய் நின்று நிலவும் சக்கரம் என்க.

*914. இருந்தஇல் வட்டங்கள் ஈராறி ரேகை*
*இருந்த இரேகைமேல் ஈரா றிருத்தி*
*இருந்த மனைகளும் ஈராறு பத்தொன்*
*றிருந்த மனையொன்றில் எய்துவன் றானே.*

இருந்த இச்சக்கரங்களில் பன்னிரண்டு கோடுகளைக் குறுக்கும் பன்னிரண்டு கோடுகளை நெடுக்குமாக இட்டு, அமைந்த கட்டங்களும் 121 ஆகும், அமைந்த இச்சக்கரத்தின் நடுக்கட்டத்தில் சிவன் பொருந்துவான்.

*915. தானொன்றி வாழிடந் தன்னெழுத் தேயாகுந்*
*தானொன்று மந்நான்குந் தன்பே ரெழுத்தாகுந்*
*தானொன்று நாற்கோணந் தன்னைந் தெழுத்தாகுந்*
*தானொன்றி லேயொன்று மவ்வரன் தானே.*

சிவமாகிய தான் பொருந்தி விளங்கும் இடம் தனக்குரிய எழுத்தாகிய சிகரமாகும், தான் பொருந்துவதற்கு இடமாயிருக்கும் ஏனைய வயநம என்னும் நான்கு எழுத்துகளும் தன் பெயரினை உணர்த்தும் எழுத்துகளாகும், சிவம் பொருந்தியுள்ள அமைப்பில் நாற்கோணத்திலும் சூழவுள்ளவை தன் அஞ்செழுத்தாகும், சிவமாகிய தான் ஏனைய எழுத்துகளுடனும் பொருந்தி நிற்கும்.

*916. அரகர என்ன அரியதொன் றில்லை*
*அரகர என்ன அறிகிலர் மாந்தர்*
*அரகர என்ன அமரரும் ஆவர்*
*அரகர என்ன அறும்பிறப் பன்றே.*

அரகர என்னும் நாமத்தைப் பயின்றவர்களுக்கு எல்லாம் எளிமையில் முடியும், அவ்வளவு பெருமை இருந்தும் மனிதர்கள் அரகர என்று வணங்கிப் பயன் அடையவில்லை, அவர் அழியாத ஒளியுடன் பெறுவர், மேலும் வினையின்மையால் பிறப்பு இல்லை.

*917.* *எட்டு நிலையுள எங்கோன் இருப்பிடம்*
*எட்டினில் ஒன்றும் இருமூன்றும் ஈரேழும்*
*ஒட்டிய விந்துவும் நாதமும் ஓங்கிடப்*
*பட்டது மந்திரம் பான்மொழி பாலே.*

எமது தலைவன் வாழும் இடம் மேற்குறித்த சக்கரத்தில் நான்கு திசைகளிலும் நான்கு கோணங்களிலும் உள்ளது, இந்த எட்டு இடங்களிலும் பஞ்சாக்கரம் பொருந்தும், பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசன், சதாசிவன், விந்து, நாதம், சத்தி, சிவன் ஆகிய நவ வடிவவுமாம், இவ்வாறு வழிபடுவரது சிரசில் விந்து (ஒளி ), இம்மந்திரம் வாக்கு ரூபிணியால் சித்தியாயிற்று.

*918.* *மட்டவிழ் தாமரை மாதுநல் லாளுடன்*
*ஒட்டி இருந்த உபாயம் அறிகிலர்*
*விட்ட எழுத்தை விடாத எழுத்துடன்*
*கட்டவல் லாருயிர் காக்கவல் லாரே.*

தேன் பிலிற்றுகின்ற தாமரையாகிய மூலாதாரத்தால் விளங்கும் குண்டலினியுடன், சிவம் உடனிருந்து உறைவதை அறியவில்லை, சூரிய சந்திர கலைகளின் செயலை மாற்ற அறிந்தவர், உயிரை உடலில் நிறுத்த வல்லார்.

*919.* *ஆலய மாக அமர்ந்தபஞ் சாக்கரம்*
*ஆவய மாக அமர்ந்தவித் தூலம்போய்*
*ஆலய மாக வறிகின்ற சூக்குமம்*
*ஆலய மாக அமர்ந்திருந் தானே.*

கோயிலாக அமர்ந்த பஞ்சாக்கரம், கோயிலாக இருந்த இத்தூல நிலை மாறி, கோயிலாக எண்ணுகின்ற ஒளியை முதலாகவுடைய சூக்குமத்தில், சிவன் கோயில் கொண்டருளினான்.

*920.* *இருந்த இவ்வட்டம் இருமூன்றி ரேகை*
*இருந்த வதனுள் இரேகை யைந்தாக*
*இருந்த அறைகள் இருபத்தைஞ் சாக*
*இருந்த அறையொன்றில் எய்து மகாரமே.*

இருந்த இச்சக்கரம் ஆறு கோடுகளை உடையதாக, அதனுள் கட்டங்கள் ஐந்தாக, அவற்றுள் ஐயைந்து கட்டங்கள் இருபத்தைந்தாக, அங்கு ஓர் நடுக்கட்டத்தில் அகாரம் பொருந்தும்.

*921.* *மகார நடுவே வளைந்திடும் சத்தியை*
*ஒகாரம் வளைத்திட் டும்பிளந் தேற்றி*
*அகாரந் தலையாய் இருகண் சிகாரமாய்*
*நகார வகாரநற் காலது நாடுமே.*

உந்திக் கமலத்தில் வளைந்து சுருண்டு கிடக்கும் குண்டலினி சத்தியை, கீழ்நோக்காது அச்சத்தியை ஓகாரம் விளங்கும் புருவ நடுவுக்குச் செலுத்தி, அகரம் என்ற சிவம் அறிவு மயமாய் இருக்கும் இடம் தலையாகவும், அதன் அக்கினித் தன்மையை வெளிப்படுத்தும் திறன் இரு கண்களில் விளங்குவதாகவும், சுவாதிட்டனத்திலுள்ள அபானனாகிய நகாரம் கண்டத்தில் வகாரமாய் நாதத்தை விளைக்கும் சுழுமுனையாவதை விரும்பிப் பெறுங்கள்.

*922.* *நாடும் பிரணவ நடுவிரு பக்கமும்*
*ஆடு மலர்வாய் அமர்ந்தங்கு நின்றது*
*நாடு நடுவுண் முகநம சிவாய*
*வாடுஞ் சிவாயநம புறவட்டத் தாயதே.*

விரும்பும் பிரணவத்தை ஆஞ்ஞையில் நடுவாக இருபக்கமும் பொருந்திய சிவாக்கினியான ஒளியைக் கொண்டு நோக்குங்கள், அது அசைவினை உண்டாக்கும் சாதகரது வாயில் பொருந்தி நின்றது, அப்போது அண்ணாக்கினுள்ளே உண்டாவது நமசிவாயவாம், பின் வெளியில் சிரசைச் சூழவுள்ள பகுதியில் விளங்குவது சிவாயநம என்பது.

*923.* *ஆயுஞ் சிவாய நமமசி வாயந*
*வாயு நமசிவா யயநம சிவா*
*வாயுமே வாய நமசியெனு மந்திர*
*மாயுந் சிகாரந் தொட்டந்தத் தடைவிலே.*

ஆராயப் பெற்ற

| | | | | |
|---|---|---|---|---|
| சி | வா | ய | ந | ம |
| ம | சி | வா | ய | ந |
| ந | ம | சி | வா | ய |
| ய | ந | ம | சி | வா |
| வா | ய | ந | ம | சி |

என்னும் மந்திரம் சிகாரந் தொட்டுச் சிகாரம் ஈறாகச் சக்கரத்தில் அமையும்.

***924.*** *அடைவினில் ஐம்பதும் ஐயைந் தறையின்*
*அடையும் அறையொன்றுக் கீரெழுத் தாக்கி*
*அடையு மகாரத்தில் அந்தமாம் க்ஷவ்வும்*
*அடைவின் எழுத்தைப் பத்தொன்றும் அமர்ந்ததே.*

வரிசையாக ஷகாரம் நீங்கிய ஐம்பது எழுத்துகளையும் இருபத்தைந்து அறைகளில் அறை ஒன்றுக்கு ஈரெழுத்தாக அமைத்துப் பிரணவ வட்ட மகாரத்தில் க்ஷவ்வை அமைப்பின் ஐம்பத்தோர் அட்சரங்களும் முறையாக அடைபட்டுவிடும்.

***925.*** *அமர்ந்த அரகர வாம்புற வட்டம்*
*அமர்ந்த அரிகரி யாமத னுள்வட்டம்*
*அமர்ந்த அசபை யாம்அத னுள்வட்டம்*
*அமர்ந்தஇ ரேகையும் ஆகின்ற சூலமே.*

சக்கரத்தின் வெளிவட்டத்தில் ஹரஹர என்றும் அதனை அடுத்த உள்வட்டத்தில் ஹரிஹரி என்றும், அதற்கு அடுத்த உள்வட்டத்தில் ஹம்சம் என் அசபையும் சக்கரத்தின் இரேகைகள் முடிவில் சூலமும் இடுக.

***926.*** *சூலத் தலையினில் தோற்றிடுஞ் சத்தியஞ்*
*சூலத் தலையினிற் சூழும்ஓங் காரத்தால்*
*சூலத் திடைவெளி தோற்றிடும் அஞ்செழுந்*
*தாலப் பதிக்கும் அடைவது வாமே.*

சூலத்தின் நுனியில் சத்தியெழுத்தாகிய ஹ்ரீம் என்பதையும், சூலத்தைச் சுற்றி வளைத்து ஓ என்பதையும், சூலங்களுக்கு இடையில் திருவைந்தெழுத்தையும் எழுதுக. இதுவே ஆலமுண்டபதிக்கு அடைவாகிய இடமாம்.

***927.*** *அதுவாம் அகார இகார உகாரம்*
*அதுவாம் எகாரம் ஒகார மதஞ்சாம்*
*அதுவா குஞ் சக்கர வட்டமேல் வட்டம்*
*பொதுவாம் இடைவெளி பொங்குநம் பேரே.*

அப்பஞ்சாக்கரமே அகார, இகார, உகார, எகார, ஒகாரமாகிய ஐந்தாம் இதனைச் சக்கர வட்டம் மேல் வட்டத்து இடைவெளியில் இடுக. அதைச் சூழ நம் பேரான சிவசிவ என்ற எழுத்துகளை வட்டம் சூழ அமைக்கவும், சூலத்திடைவெளியில் அ, இ, உ, எ, ஒ இட்டுச் சூழ ஒரு வட்டமிட்டுச் சிவசிவ அமைக்கலாம் என்க.

***928.*** *பேர்பெற் றதுமூல மந்திரம் பின்னது*
*சோர்வுற்ற சக்கர வட்டத்துட் சந்தியில்*
*நேர்பெற் றிருந்திட நின்றது சக்கரம்*
*ஏர்பெற் றிருந்த இயல்பிது வாமே.*

முன்னர்க் குற்றெழுத்து உயிர் வருக்கம் அடைத்த பின் பேர் பெற்ற மகா மதுவாகிய சிவசிவ என்பதை அடைக்கவும். இவ்வாறு இடைவெளியில்லாமல் மேல் வட்டத்திடை அடைக்கச் சக்கரம் முறையாக அமைந்துவிடும். இதுவே சம்பத்தைத் தரும் முறையான சக்கரமாகும்.

***929.*** *இயலுமிம் மந்திரம் எய்தும் வழியின்*
*செயலும் அறியத் தெளிவிக்கு நாதன்*
*புயலும் புனலும் பொருந்தங்கி மண்ணின்*
*முயலும் எழுத்துக்கு முன்னா இருந்ததே.*

முறையான இம்மந்திரம் அடையும் நெறியில் அதன் கிரியையும் அறியும்படியாகத் தெளிவுபடுத்திய குருநாதன் காற்று, நீர், பொருந்திய தீ, நிலம் ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களுக்கு உரியவாகிய பீசங்களையும் முயலும் எழுத்தாகிய பஞ்சாக்கரத்தின் மூலம் அடையுங்கள் என்றருளினான். பஞ்சாக்கரம் தொழிற்படும் போது பஞ்சபூத பீசாக்கரங்களும் அவைகளின் உருவங்களும் தேவைப்படும் என்க.

*930.* *ஆறெட் டெழுத்தின்மே லாறும் பதினாறும்*
*ஏறிட் டதன்மேலே விந்துவும் நாதமுஞ்*
*சீறிட்டு நின்று சிவாய நமவென்னக்*
*கூறிட்டு மும்மலங் கூப்பிட்டுப் போமே.*

ஸகாரத்தை ஊகாரத்துடனும் ஔகாரத்துடனும் சேர்த்து, விந்து நாதம் பொருந்த அமைத்து மேலெழும்படி செய்து சிவாயநம என்று செபிக்க, உடலினின்றும் வேறுபட்டு மும்மலங்களும் ஓலமிட்டு ஓடும்.

*931.* *அண்ணல் இருப்ப தவளக் கரத்துளே*
*பெண்ணினல் லாளும் பிராளக் கரத்துளே*
*எண்ணி இருவர் இசைந்தங் கிருத்திடப்*
*புண்ணிய வாளர் பொருளறி வார்களே.*

முன்னர்க் கூறிய ஸௌ: என்பதில் தலைவனாகிய சிவமும் இருப்பன், உமாதேவியும் அப்பிரான் அக்கரத்தில் சிறந்து விளங்குவான், இவ்விதமாகச் சிவசக்தி ஈசானத்தில் பொருந்தியிருப்பதை, புண்ணிய சீலர்கள் நாதமாக விளங்குவதை அறிவார்கள்.

*932.* *அவ்விட்டு வைத்தங் கரவிட்டு மேல்வைத்து*
*இவ்விட்டுப் பார்க்கில் இலிங்கம தாய்நிற்கும்*
*மவ்விட்டு மேலே வளியுறக் கண்டபின்*
*தொம்மிட்டு நின்ற சுடர்க்கொழுந் தாமே.*

முன்மந்திரத்தில் கண்டபடி ஈசானிய திசையை அடைந்து அங்கு ஹர என்ற சிவாக்கினியைத் தூண்ட, ஹரி என்ற ஞானலிங்கம் விளங்கி நிற்கும், மகாரம் என்ற தொண்டைச் சக்கரத்தினின்றும் சுழுமுனை மார்க்கமாகத் தொண்டைக்கு மேல் பிராணவாயு எழும்பிப் போவதை உணர்ந்தபின், தொம் தொம் என்று நடனம் செய்யும் ஒளி வடிவினனான கூத்தப் பெருமாள் விளங்குவான்.

*933.* *அவ்வுண்டு சவ்வுண் டனைத்துமங் குள்ளது*
*கவ்வுண்டு நிற்குங் கருத்தறி வாரில்லை*
*கவ்வுண்டு நிற்குங் கருத்தறி வாளர்க்குச்*
*சவ்வுண்டு சத்தி சதாசிவன் தானே.*

முன் மந்திரத்தில் கண்டபடி சிவலிங்கம் அமைவதில் ஹம்சம் என்ற அட்சரங்களினால் குறிக்கப்படும் சிவசத்தியின் விளைவான உலகப் பொருளெல்லாம் சூக்குமமாய் அமைந்து கிடக்கின்றன, அப்படியாகக் காரண ரூபமாய் விளங்கும் கருத்தை உணர்த்தறிவாரில்லை, கலந்து கிடப்பதைத் கண்டவரிடம், சத்தியை அடக்கி நிற்கும் சதாசிவன் விளங்குவான்.

*934.* *அஞ்செழுத் தாலே அமர்ந்தனன் நந்தியும்*
*அஞ்செழுத் தாலே அமர்ந்தபஞ் சாக்கரம்*
*அஞ்செழுத் தாகிய வக்கர சக்கரம்*
*அஞ்செழுத் துள்ளே அமர்ந்திருந்த தானே.*

ஐந்தெழுத்தே வடிவமாக உள்ளனன் இறைவன், ஐந்தெழுத்தாலே உள்ளது, திருவம்பலச் சக்கரம் ஐந்தெழுத்தால் அமைக்கப்பட்டுள்ளது, ஐந்தெழுத்தில் சூக்குமாக எழுந்தருளியிருந்தான்.

*935.* *கூத்தனைக் காணுங் குறிபல பேசிடிற்*
*கூத்த னெழுத்தின் முதலெழுத் தோதினர்*
*கூத்தனொ டொன்றிய கொள்கைய ராய்நிற்பர்*
*கூத்தலைக் காணுங் குறியது வாமே.*

கூத்தப் பெருமானைத் தரிசிக்கும் அடையாளங்களைப் பற்றிப் பேசி, கூத்தனது எழுத்தில் முதலெழுத்தை ஓதியவர், அச்சிவத்துடன் பிரிப்பின்றி நிற்பர், இதுவே கூத்தனை அறியும் உபாயமாம்.

*936.* *அத்திசைக் குள்நின்ற அனலை எழுப்பியே*
*அத்திசைக் குள்நின்ற நவ்வெழுத் தோதினால்*
*அத்திசைக் குள்நின்ற அந்த மறையனை*
*அத்திசைக்கு குள்ளூற வாக்கினன் தானே.*

அகர கலை விளங்கும் திசையாகிய மூலாதாரத்திலுள்ள மூலக்கனலை எழுப்பி, அத்திசையில் விளங்கும் நகாரத்தை அறிந்து ஓதினால், அந்தத் திசையில் மறைந்து கிடந்த சிவனை, அந்தத் திசையில் சிந்தித்து நின்று உறவாக்கிக் கொண்டேன்.

*937.* *தானே யளிந்திடுந் தையலை நோக்கினால்*
*தானே யளிந்திட்டு மேலுற வைத்திடுத்*
*தானே யளித்த மகாரத்தை ஓதிடத்*
*தானே யளித்ததோர் கல்லொளி யாகுமே.*

மூலாதாரத்திலுள்ள குண்டலினி சத்தியை எழுப்பினால் அது தானாகவே அருள் வழங்கும், அச்சத்தி தானே அருளை நல்கிச் சகஸ்ர தளத்தின் மேல் பொருந்த வைக்கும், அங்கே அருளால் உதித்த நாதத்தை அறிய, தானே விளைகின்ற ஒளி சிரசின்மேல் அமையும்.

*938.* *கல்லொளி யேயென நின்ற வடதிசை*
*கல்லொளி யேயென நின்றனன் இந்திரன்*
*கல்லொளி யேயென நின்ற சிகாரத்தைக்*
*கல்லொளி யேயெனக் காட்டிநின் றானே.*

ஒளி மலையாகச் சிவம் வடதிசை அல்லது சிரசின் இடப்புற மூளையில் எழுந்தருளிய போது, இந்திர திசையான கீழ்ப்பகுதியிலும் அஃதாவது முகத்தின் முன்றுத்திலும் ஒளி விளங்கியது, இச்சிரசின்மேல் விளங்கிய ஒளியில் அக்கினி வண்ணனான சிவம், இரத்தினத்தின் பிரகாசம்போல் எனக்குக் காட்சியளித்தனன்.

*939.* *தானே யெழுகுணத் தண்கட ராய்நிற்குந்*
*தானே யெழுகுணம் வேதமு மாய்நிற்குந்*
*தானே யெழுகுண மாவதும் ஓதிடில்*
*தானே யெழுந்த மறையவ னாமே.*

பிறரால் பிரேரிக்கப்படாமல் சிவன் தகுதியான போது குளிர்ந்த சந்திரகலையில் விளங்கி நிற்கும், பிறரால் அறிவிக்கப்படாது தானே அறிவு மயமாய் நிற்கும், சொல்லின்தானே எல்லா நற்பண்புகளும், பிறரால் அறிவிக்கப்படாமல் அவனைப் பற்றிய சிந்தனையில் உள்ளார்க்கு அவனே தனது மறைப்பினின்றும் வெளியாவான்.

*940.* *மறையவ னாக மதித்த பிறவி*
*மறையவ னாக மதித்திடக் காண்பர்*
*மறையவன் அஞ்செழுத் துண்ணிற்கப் பெற்ற*
*மறையவன் அஞ்செழுத் தாமது வாகுமே.*

சிவமாந்தன்மை பெற வேண்டுமென்று அளிக்கப்பட்ட பிறவியில் பிறரெல்லாம் மதித்திடச் சிவமாந் தன்மை பெறுவர், நாத வடிவாகிய சிவனது அஞ்செழுத்தில் அடங்கியுள்ள நாதவடிவான சீவன், அஞ்செழுத்தே சொரூபமாகப் பெறும்.

*941.* *ஆகின்ற பாதமு மந்நவாய் நின்றிடும்*
*ஆகின்ற நாபியுள் அங்கே மகாரமாய்*
*ஆகின்ற சீயிரு தோள்வவ்வாய்க் கண்டபின்*
*ஆகின்ற வச்சுட ரவ்வியல் பாமே.*

முன் மந்திரத்தில் கூறியவாறு பாதம் அந்நகரமாய் நிற்கும், உந்திச் சக்கரத்துள் மகாரம் அமையும், வகரம் என்ற சத்தியை வாயாகக் கண்டபின் அமைகின்ற அந்தச் சுடர் சிவத்தினது இயல்பாம்.

*942.* *அவ்வியல் பாய இருமுன் றெழுத்தையுஞ்*
*செவ்வியல் பாகச் சிறந்தனன் நந்தியும்*
*ஒவ்வியல் பாக ஒளியுற நோக்கிடிற்*
*பவ்வியல் பாகப் பரந்துநின் றானே.*

முன்னர்க் கூறிய இயல்பை அறிந்து இரண்டாகவும் மூன்றாகவும் உள்ள பஞ்சாக்கரத்தை அறிந்தவர்களிடம் செம்மையாகிய இயல்போடு சிவபரம்பொருள் விளங்கும், ஒகரமாகிய பிரணவமாய் உணர்ந்து ஒளி பொருந்தத் தியானிக்கில், அக்கரங்களாலான பாவின் தன்மையாய் அஃதாவது நாத மயமாய் எங்கும் வியாபித்து நின்றான்.

*943.* *பரந்தது மந்திரம் பல்லுயிர்க் கெல்லாம்*
*வரநஷந்தரு மந்திரம் வாய்த்திட வாங்கித்*
*துரந்திடு மந்திரஞ் சூழ்பகை போக*
*உரந்தரு மந்திரம் ஓமென் றெழுப்பே.*

பிரணவத்தின் நாதம் பரந்து விரிந்தது, பல்வேறு வகை உயிர்களுக்கெல்லாம் விரும்பினவற்றைத் தரும் மந்திரம், நற்பேறு கிட்டுங்காலத்து சூழவுள்ள பகையாகிய இருளை நீக்கும் மந்திரம், அதனை ஓம் என்று எழுப்புவாயாக.

*944.* *ஓமென் றெழுப்பித்தன் உத்தம நந்தியை*
*நாமென் றெழுப்பி நடுவெழு தீபத்தை*
*ஆமென் றெழுப்பிவ் வாறறி வார்கள்*
*மாமன்று கண்டு மகிழ்ந்திருந் தாரே.*

மேன்மையான ஒளியைப் பிரணவ யோகத்தால் எழுப்பி, அவ்வொளி மண்டலமே நாம் என்று அறிந்து எழுப்பி,சுழுமுனையில் விளங்கும் ஒளியே நந்தியாகும் என்று அவ்வாறு அறிபவர்கள், சிதாகாயப் பெருவெளியைக் கண்டு மகிழ்ந்திருந்தார் ஆவர்.

*945.* *ஆகின்ற சக்கரத் துள்ளே எழுத்தைந்தும்*
*பாகொன்றி நின்ற பதங்களில் வர்த்திக்கும்*
*ஆகின்ற ஐம்பத் தோரெத் துள்நிற்கப்*
*பாகொன்றி நிற்கும் பராபரன் தானே.*

முன்னே கூறிய திருவம்பலச் சக்கரத்துள்ளே அஞ்செழுத்தும், அழகு பொருந்தி நின்ற ஐந்து இடங்களில் விளங்கும், உயிரும் மெய்யுமாக உள்ள ஐம்பத்தோர் எழுத்துகளும் அவற்றுள் நிற்க, மேலான சிவனும் அழகு பொருந்தி விளங்குவான்.

*946.* *பரமாய அஞ்செழுத் துள்நடு வாகப்*
*பரமாய நமசிம பார்க்கில் மவயநசி*
*பரகாய சியநம வாம்பரத் தோதிற்*
*பரமாய வாசி மயநமாய் நின்றே.*

பரமாய அஞ்செழுத்து, சிவாயநம, அதன் நடு, யகாரம், சிவாயநம என்பது,

| | | | | |
|---|---|---|---|---|
| ய | ந | வ | சி | ம |
| ம | வ | ய | ந | சி |
| சி | ய | ந | ம | வ |
| வ | சி | ம | ய | ந |

என நின்றது, மந்திரத்தின் உண்மை உய்த்து உணர வேண்டியது.

*947.* *நின்ற எழுத்துகள் நேர்தரு பூதமும்*
*நின்ற எழுத்துகள் நேர்தரு வண்ணமும்*
*நின்ற எழுத்துகள் நேர்தர நின்றிடில்*
*நின்ற எழுத்துள்ளும் நின்றனன் தானே.*

பஞ்சாக்கரமாய் நின்ற எழுத்துகளே பூதங்களை இயக்குவனமாம், அங்கு அமைந்துள்ள எழுத்துகள் பஞ்சாக்கரத்தின் சொரூபத்தை உணர்த்துவன, சக்கரத்திலுள்ள எழுத்துகள் முறையாக நின்றால் பஞ்சாக்கர சொரூபமான சிவமும் அவைகளில் சிறந்து விளங்குவான்.

*948.* *நின்றது சக்கரம் நீளும் புவியெல்லாம்*
*மன்றது வாய்நின்ற மாயநன் னாடனைக்*
*கன்றது வாகக் கறந்தனன் நந்தியுங்*
*குன்றிடை நின்றிடுங் கொள்கைய னாமே.*

சிதாகாயத்தில் விளங்கும் நாத மயமான சக்கரம் உலகம் முற்றிலும் பரவும் ஆற்றலுடையது, அவ்வாறு சித் விளங்கும் திருவம்பலத்தையே இடமாகக் கொண்டு மறைந்து விளங்கும் உலக நாயகனாகிய சிவத்தை, கன்றானது பசுவின் மடியினை ஊட்டியபோது பசு பாலினை நல்குவது போல் குரு மண்டலத்தில் விளங்கும் நந்தியும், சிரசின்மேல் நின்று சிவத்தின் பயனாகிய அமுதினை நல்குவான்.

*949.* *கொண்ட இச் சக்கரத் துள்ளே குணம்பல*
*கொண்ட இச் சக்கரத் துள்ளே குறியைந்து*
*கொண்ட இச் சக்கரங் கூத்தன் எழுத்தைந்துங்*
*கொண்ட இச் சக்கரத் துள்நின்ற கூத்தே.*

சிரசின் மேல் விளங்கும் சித் சபையில் விளையும் நன்மைகள் பலவாம், உருவமாக உணரப்படும் பிரமன், திருமால், உருத்திரன், மகேசுரர், சதாசிவர் ஆகிய ஐவரும் இங்கு உளர், கூத்தப் பெருமானை உணர்த்தும் சூக்கும பஞ்சாக்கரம் என்ற பிரணவமும், இறைவனது நடனமும் இச்சக்கரத்திலிருந்தே நடிக்கப்படுகிறது.

*950.* *வெளியி லிரேகை யிரேகையி லத்தலை*
*களியில் உகாரமாஞ் சுற்றிய வன்னி*
*நெளிதரு கால்கொம்பு நேர்வித்து நாதந்*
*தெளியும் பிரகாஞ் சிவமந் திரமே.*

சிதாகாயப் பெருவெளியில் சந்திரகலை உள்ளது.சிதாகாயப் பெருவெளியிலுள்ள சகஸ்ரதள வட்டத்தில் உகாரத்தால் சுற்றப்பட்ட அக்கினி கலை பொருந்தியுள்ளது, மூடப்பட்டிருக்கும் சகஸ்ரதளத்தை நெகிழ்ந்து அசைக்கும்படி உள்ளது காலாகிய கொம்பாகும், இதனால் உண்டாகும் விந்து நாதத்தினைத் தெளிந்து பெறும் முறையில் சிவமந்திரம் உள்ளது.

**951.** *அகார உகார சிகார நடுவாய்*
*வகாரமோ டாறும் வளியுடன் கூடிச்*
*சிகார முடனே சிவன்சிந்தை செய்ய*
*ஓகார முதல்வன் உவந்துநின் றானே.*

இரு கண்களுக்கு இடையே புருவ மத்தியத் தாளத்தில், மூலாதாரத்தில் விளங்கும் குண்டலினி சத்தியை மூல வாயுவினால் பேதித்து ஆறாதாரங்களைக் கடந்து, சிவாக்கினியில் விளங்குபவனைத் தியானம் செய்ய, பிரணவத்தலைவரான சதாசிவன் மிக விரும்பி அங்கு எழுந்தருளியிருந்தான்.

**952.** *அற்ற விடத்தே அகாரம தாவது*
*உற்ற விடத்தே யுறுபொருள் கண்டிடச்*
*செற்றம் அறுத்த செழுஞ்சுடர் மெய்ப்பொருள்*
*குற்றம் அறுத்த பொன்போலுங் குளிகையே.*

உடலைக் கடந்து சென்றவரிடத்தே அகரமாகிய சந்திரகலை விளங்குவது, சந்திரகலை விளங்கும் சிதாகாசப் பெருவெளியில் உரிய பொருளை அறிய, ஆன்மாக்களுக்கு உயிர்க்குற்றமாகிய இருளை மாற்றிய செவ்வொளியான சிவன் தோன்றும், அது தனது சத்தியால் உயிர்க்குற்றத்தை நீக்கிப் பொன் போலச் செய்யும் குளிகையாம்.

**953.** *அவ்வென்ற போதினில் உவ்வெழுத் தாலித்தால்*
*உவ்வென்ற முத்தி யுருகிக் கலந்திடும்*
*மல்வென் றென்னுள்ளே வழிப்பட்ட நந்தியை*
*எவ்வணஞ் சொல்லுகேன் எந்தை இயற்கையே.*

அகரகலையாகிய சந்திரன் இடக்கண்ணின்மேல் உதிக்க உகர கலையாகிய சூரியன் வலப்புறத்திலிருந்து இடப்புறமாக மாறி ஈசானிய நிக்கில் அ, உ, ம என்ற மூன்றும் பொருந்தினால், உகரத்தால் உணர்த்தப்படும் ஒளி கிட்டி நித்தியமான நிலை மறைந்திருந்தது வெளிப்படும், மகரமாகிய அக்கினியில் என்னுடலில் வழிபட்ட குரு மண்டலத்தின் பெருமை எவ்வண்ணம் சொல்லக்கூடும், ஒளி மண்டலம் ஒளி மண்டலமே குரு மண்டலமாகும், அஃது எந்தையாகிய பரமேசுரனது இயற்கையாம்.

**954.** *நீரில் எழுத்தில் வுலக ரறிவது*
*வானில் எழுத்தொன்று கண்டறி வாரில்லை*
*யாரிவ் வெழுத்தை அறிவா ரவர்கள்*
*ஊனில் எழுந்தை உணர்கிலர் தாமே.*

நீர்மேல் எழுத்துப் போல இவ்வுலகியல் அறிவு நிலையற்றாகும், சிதாகாய மண்டலத்தில் விளங்கும் பிரணவமாகிய ஓர் எழுத்தைக் கண்டு அதன் அறிவைப் பெறுபவர் யாரும் இல்லை, யாரொருவர் இவ்வெழுத்தை அறிந்தாரோ அவர் பிரமனால் தலையில் எழுதப்படும் எழுத்தை மீளவும் அடையமாட்டார்கள், அதவாது மீண்டும் பிறக்க மாட்டார்கள்.

**955.** *காலை நடுவுறக் காயத்தில் அக்கரம்*
*மாலை நடுவுற ஐம்பது மாவன*
*மேலை நடுவுற வேதம் விளம்பிய*
*மூலம் நடுவுற முத்திதந் தானே.*

சுழுமுனையில் விளங்கும் சிவன் இடகலை பிங்கலையாக உடலில் ஐம்பது அக்கரமாய் விரிந்தான், உயிர் மயக்கமுற்றுச் சூரிய சந்திரகலைப் பற்றிய போது அவ்வைம்பதும் விளங்கி நின்றன, சிரசின்மேல் விளங்கும் சிவன் வேகத்தால் புகழ்ந்து கூறப்பட்ட பிரணவத்தை எழுப்பிச் சகஸ்ரதள நடுவில் நிறுத்தினவர்க்கு முத்தியை அளித்தான்.

**956.** *நாவியின் கீழது நல்ல எழுத்தொன்று*
*பாவிக ளத்தின் பயனறி வாரில்லை*
*ஓவிய ராலும் அறியலொண் ணாதது*
*தேவியுந் தானுந் திகழ்ந்திருந் தானே.*

சுவாதிட்டான சக்கரத்தில் உள்ளது நல்ல எழுத்தாகிய நகாரம், அவ்வெழுத்தின் பயனைப் பாவிகள் அறியவில்லை, அந்தப் பிரமணனும் அறிய முடியாதது, அவ்வெழுத்தில் தேவியும் சிவனும் சிறப்புடன் மகிழ்ந்திருந்தனர்.

**957.** *அவ்வொடு சவ்வென்ற தரனுற்ற மந்திரம்*
*அவ்வொடு சவ்வென்ற தாரும் அறிகிலர்*
*அவ்வொடு சவ்வென்ற தாரும் அறிந்தபின்*
*அவ்வொடு சவ்வும் அனாதியு மாமே.*

ஹம்சம் என்பது அரன் விளங்கும் மந்திரம், ஹம்ச மந்திரத்தை யாரும் அறியவில்லை, ஹம்ச மந்திரத்தை அறிந்தவர் அது உடலுற்பத்திக்கு முன்னமே உள்ளது என்பதை அறிவர்.

*958.* *மந்திரம் ஒன்றுள் மலரால் உதிப்பது*
*உந்தியி னுள்ளே உதயம்பண் ணாநிற்குஞ்*
*சந்திசெய் யாநிற்பர் தாம தறிகிலர்*
*அந்தி தொழுதுபோ யார்த்தகன் றார்களே.*

பிராசாத கலையான சந்திரகலை உடலுள் பொருந்திய மூலாதாரத்தினின்றும் உதிப்பது, அஃது உன்னுடைய தீயினிடமாக உதிப்பது, அந்தியும் சந்தியும் சந்தியாவந்தனம் செய்பவர் சூரியன் சந்திரன் சேரும் நேரத்தை அறிந்தவரல்லர், சந்தியா தேவியை வழிபடுவதாகக் கூறிக்கொண்டு வீண் ஆரவாரம் செய்து உண்மையினின்றும் நழுவினவர்களாகின்றனர்.

*959.* *சேவிக்கு மந்திரஞ் செல்லுந் திசைபெற*
*ஆவிக்குள் மந்திரம் ஆதார மாவன*
*பூவுக்குள் மந்திரம் போக்கற நோக்கிடில்*
*ஆவிக்குள் மந்திரம் அங்குச் மாமே.*

ஹம்ச மந்திரம் உபாசனையால் உடலுள் எல்லாத் திசைகளுக்கும் செல்லும் ஆற்றல் உண்டாகும், இது மூலாதாரத்தில் தொடங்கி எல்லா ஆதாரங்களையும் ஊடுருவிச் செல்லும் உயிர்த்தன்மையானது, இஃது ஒளி மயமானபடியால் போவதுமில்லை வருவதுமில்லை, ஒளியை நினைந்து உருகும் மனத்தராகில் இஃது உயிரினிடையே பொருந்திப் பஞ்சேந்திரியமான யானைகளைச் செலுத்தும் அங்குசமாக விளங்கும்.

*960.* *அருவினில் அம்பரம் அங்கெழு நாதம்*
*பெருகு துடியிடை பேணிய விந்து*
*மருவி யகார சிகார நடுவாய்*
*உருவிட வூறு முறுமந் திரமே.*

கண்ணுக்குப் புலனாகாத பரவெளியில் தோன்றுவது நாதம், அவ்விதம் பெருகி நிற்கின்ற ஒளியிடை நிலவுவது ஒளியாகிய விந்து, ஆன்மாவாகிய யகாரத்தைச் சிகாரமாகிய இருகண் பார்வைக்கும் நடுவாய்க் கொண்டு தியானிக்கச் சபியாத பிரணவம் சிறந்து விளங்கும்.

*961.* *விந்துவும் நாதமும் மேவி யுடன்கூடிச்*
*சந்திர னோடே தலைப்படு மாயிடில்*
*அந்தர வானத் தமுதம்வந் தூறிடும்*
*அங்குதி மந்திரம் ஆகுதி யாமே.*

சிரசில் வடதிசையாகிய இடப்பக்கம் மூளையில் ஒளியும் ஒலியும் பொருந்துமாயில், பரமாகாயத்தில் ஒளி பெருகும், அங்கு இயல்பாக ஒலித்துக் கொண்டிருக்கும் பிரணவம் வேள்விப் பொருளாகும்.

*962.* *ஆறெழுத் தோதும் அறிவார் அறிகிலர்*
*ஆறெழுத் தொன்றாக ஓதி உணரார்கள்*
*வேறெழுத் தின்றி விளம்பவல் லார்கட்கு*
*ஒரெழுத் தானே உயிர்பெற லாமே.*

ஆறெழுத்து மந்திரத்தை ஓதும் அறிவுடையவர்கள் இதனால் அமைய வேண்டிய உண்மை நிலையை உணரவில்லை, பஞ்சாக்கரத் தியானத்தால் ஒரெழுத்தாகிய பிரணவத்தை உதிக்கச் செய்யவில்லை, பிரணவத்துடன் வேறு எழுத்துகள் சேர்க்காமலே பிரணவ வித்தையை அறிவார்க்கு, பிரணவத்தாலேயே உயிரின் விளக்கம் காணலாம்.

*963.* *ஓதும் எழுத்தோ டுயிர்க்கலை மூவைஞ்சும்*
*ஆதி எழுத்தவை ஐம்பதோ டொன்றென்பர்*
*சோதி எழுத்தினில் ஐயிரு முன்றுள*
*நாத எழுத்திட்டு நாடிக்கொள் ளீரே.*

எழுத்துகளெல்லாம் முதற்கண் அங்காத்தலில் உண்டாகும் அகரத்தோடு உயிரெழுத்துகள் பதினைந்தும், பழமையான மெய்யெழுத்துகள் முப்பத்தைந்தும் அவற்றோடு சேர எழுத்துகள் ஐம்பத்தொன்றாகும், சோதியை உண்டாக்கும் அகர கலையில் ஏனைய எழுத்துகளும் சூக்குமமாய் இடம் பெற்றுள்ளன, நாத எழுத்தாகிய உகரத்தை அத்துடன் சேர்த்து அறியுங்கள்.

*964.* *விந்துவி லுஞ்சுழி நாதம் எழுந்திடப்*
*பந்தத் தலைவி பதினாறு கலையதாங்*
*சுந்தர வாகரங் காலுடம் பாயினாள்*
*அந்தமும் இன்றியே ஐம்பத்தொன் றாயதே.*

அகரமாகிய பிந்து விரிந்தும் கழன்றும் ஆகாய மண்டலத்தில் ஸ்பந்தத்தை உண்டாக்கிட, இவ்வாறு விரிந்த பந்தத்தைத் தரும் குண்டலினி அகர முதலாக உன்மனை ஈறாகப் பதினாறு கலையாக விளங்கினாள், அவளே கழுத்து, கை, கால், உடம்பு, ஆயினாள், முடிவில்லாத ஐம்பத்தோர் அக்கரங்களாகவும் ஆயினாள்.

*965.* *ஐம்ப தெழுத்தே அனைத்தும்வே தங்களும்*
*ஐம்ப தெழுத்தே அனைத்தாக மங்களும்*
*ஐம்ப தெழுத்தேயு மாவ தறித்தபின்*
*ஐம்ப தெழுத்தும்போய் அஞ்செழுத் தாமே.*

பிரணவம் ஒழிந்த ஐம்பது எழுத்துகளால் வேதங்கள் உள்ளன, அவ்வைம்பது எழுத்துகளால் ஆகமங்களும் உள்ளன, இவ்வைம்பது எழுத்துகளால் அறிவிக்கப்படுவது பிரணவமேதான் என்று அறிந்த பிறகு, ஐம்பது எழுத்துகளையும் கடந்து பிரணவத்தை அறிந்து சிவசொரூபம் பெறுவர்.

*966.* *அஞ்செழுத் தாலைந்து பூதம் படைத்தனன்*
*அஞ்செழுத் தாற்பல யோனி படைத்தனன்*
*அஞ்செழுத் தாலிவ் வகலிடத் தாங்கினான்*
*அஞ்செழுத் தாலே அமர்ந்துநின் றானே.*

நமசிவாய என்ற ஐந்தெழுத்துகள் முறையே பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களை உற்பத்தி செய்தன, அருவமான உயிர்களுக்கு இப்பூதங்களுடன் பொருந்தி வாழ அவற்றுக்கேற்ற யோனியில் சிருட்டியைச் செய்தருளினான், இவ்விரிந்த உலகை ஐம்பூத மயமாக இருந்து தாங்கினான், இத்தகைய ஐந்தெழுத்தாலே உயிர்களுடேயும் விளங்கி நின்றான்.

*967.* *வீழ்ந்தெழ லாம்விகிர் தன்திரு நாமத்தைச்*
*சோர்ந்தொழி யாமல் தொடங்கும் ஒருவற்குச்*
*சார்ந்த விளைத்துயர் போகத் தலைவனும்*
*போத்திடும் என்னும் புரிசடை யோனே.*

விகிர்தனாகிய இறைவனது திருநாமத்தை மனம் சோர்வடையாது ஓதுவார் இன்ப மயக்கத்திலிருந்து தெளிந்து எழலாம், தலைவனாகிய சடாதரன் ஆன்மாக்களைச் சார்ந்துள்ள வினைகளும் அவற்றால் உண்டாகும் துன்பங்களும் நீங்கப் பிரணவத் தொனியினால் என்னுடன் வாருங்கள் என்று அழைப்பான்.

*968.* *உண்ணு மருந்தும் உலப்பிலி காலமும்*
*பண்ணுறு கேள்வியும் பாடலு மாய்நிற்கும்*
*விண்ணில் றமரர் விரும்பி அடிதொழ*
*எண்ணின் றெழுத்தஞ்சு மாகிநின் றானே.*

சிவன் அனுபவிக்கின்ற ஒளிப் பொருளாயும், காலதத்துவம் கடந்த நித்தியப் பொருளாயும், இசை பொருந்திய வேதப் பொருளாயும், பாடலாயும் விளங்குவான், ஆகாய மண்டலத்திலுள்ள தேவர்கள் வணங்க, ஆராயுமிடத்து பஞ்சாக்கர வடிவமான நமசிவாய ஆகும்.

*969.* *ஐந்தின் பெருமையே அகலிட மாவதும்*
*ஐந்தின் பெருமையே ஆலய மாவதும்*
*ஐந்தின் பெருமையே யறவோன் வழக்கமும்*
*ஐந்தின் வகைசெயப் பாலனு மாமே.*

விரிந்த உலகமாகக் காட்சியளிப்பது நமசிவாய என்ற ஐந்தெழுத்தின் பெருமையாலேயாம், தேவாலயம் விளங்குவதும், ஐந்தெழுத்தின் பெருமையாலேயாம், அற வழியிலே நீதி நிலை பெறுதலும் ஐந்தெழுத்தின் பெருமையாலேயாம், பஞ்ச பூதங்களிலும் விளங்கி அவன் அவற்றின் காவலனாக உள்ளனான்.

*970.* *வேரெழுந்த தாய்விண்ணாய் அப்புற மாய்நிற்கும்*
*நீரெழுத் தாய்நிலத் தாங்கியும் அங்குளன்*
*சீரெழுத் தாய்அங்கி யாயுயி ராமெழுத்*
*தோரெழுத் தீசனும் ஒண்சுட ராமே.*

அகரமாயும் ஆகாயமாயும் அதற்கு மேலுள்ள நாதமாயும் உள்ளான், மகாரமாகவும் நகரமாகவும் உள்ளான், பெருமை மிக்க சிகாரமாய் அக்கினியாய் உயிரான யகாரமாய் உள்ள பிரணவ சொரூபமான சிவன், ஒளிமிக்க சுடராகும்.

*971.* *நாலாம் எழுத்தோசை ஞாலம் உருவது*
*நாலாம் எழுத்தினுள் ஞாலம் அடங்கிற்று*
*நாலாம் எழுத்தே நவிலவர் லார்கட்கு*
*நாலாம் எழுத்தது நன்னெறி தானே.*

உலகம் சத்தி மயமாய் உள்ளது, வகரமாகிய சத்தியிலே இவ்வுலகம் ஒடுங்கியது, நாலாம் எழுத்தாகிய வகாரத்தைச் செபிப்பவர்க்கு அதுவே ஆதாரமாய் நின்று மேன்மையான நெறியினைக் காட்டும்.

*972.* *இயைந்தனள் ஏந்திழை என்னுள மேவி*
*நயந்தன ளங்கே நமசிவ என்னும்*
*பயந்தனை யோரும் பதமது மற்றும்*
*பெயர்ந்தனன் மற்றும் பிரற்றறுத் தேனே.*

முன்னர்க் கூறிய சத்தி ஆன்மாவாகிய என்னுடைய உள்ளத்தை விரும்பிப் பொருந்தினாள், அதனையே விரும்பி அங்கே அமர்ந்தனன், நாம் சிவத்துக்கு அடிமை என்ற பயனை ஆராய்ந்து தெளியுங்கள், பிரணவமான பதத்தைப் பற்றுங்கள், உலகப் பற்றை நீங்கினேன், வேறு பிதற்றல்களையும் ஒழித்தேன் (தெளிந்த ஞானம் பெற்றேன் என்க).

*973.* *ஆமத் தினிதிருத் தன்ன மயத்தினை*
*ஓமத்தி லேயுதம் பண்ணும் ஒருத்திதன்*
*நாம நமசிவ என்றிருப் பாருக்கு*
*நேமத் தலைவி நிலவிநின் றானே.*

சீவர்கள் உயிர் வாழத் தானியத்தில் பொருந்தி அன்ன மயமாகப் பக்குவமாகச் செய்ததை, ஓமகுண்டமாகிய வயிற்றுத் தீயில் ஆகுதி பண்ணுகின்ற சத்தியின், நாமமாகிய நமசிவ என்று தானற்றிருப்பார்க்கு, கிரியையைத் தூண்டும் குண்டலினி சத்தி விளங்குவாள்.

*974.* *பட்ட பரிசே பரமஞ் செழுத்ததின்*
*இட்ட மறித்திட் டிரவு பகல்வர*
*நட்டம தாடு நடுவே நிலையங்கொண்*
*டட்டதே சப்பொரு ளாகிநின் றானே.*

செய்த புண்ணியத்தால் கிடைத்த பரிசே மேலான சிவாயநம என்றும் ஐந்தெழுத்தாம், பகல்வர இவ்வைந்தெழுத்தின் பயன்கள் விருப்பத்துக் கேற்றவாறு இரவு பகலாக, நடுவே இடங்கொண்டு சிவன் நடிப்பான், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், அக்கினி, (ஒளி) ஆகிய எட்டுப் பொருளாகவும் அவனே உள்ளான்.

*975.* *அகாரம் உயிரே உகாரம் பரமே*
*மகார மலமாய் வருமுப் பதத்திற்*
*சிகாரஞ் சிவமாய் வகாரம் வடிவமா*
*யகாரம் உயிரென் றறையலு மாமே.*

உகாரம் உயிராயும், உகாரம் பரமாயும், மகாரம் மலமாயும், பிரணவம் இவ்வாறு மூன்று பதங்களில் வரும், சிகாரம் சிவமாய் வகாரம் வடிவுடைய சத்தியாய், யகாரம் உயிராயும் சொல்லலுமாகும்.

*976.* *நகார மகார சிகார நடுவாய்*
*வகாரம் இரண்டும் வளியுடன் கூடி*
*ஒகார முதற்கொண் டொருக்கால் உரைக்க*
*மகார முதல்வன் மனத்தகத் தானே.*

இரு கண்களின் நடுவே நகாரம் நெற்றியிலும் மகாரம் கண்டத்திலுமாய் அசபா சத்தியை உசுவாச நிசுவாசத்தில் பொருந்தி, பிரணவத் தலைவனைச் சுழுமுனையில் விளங்கும்படி செய்ய, அக்கினி கலைக்குரிய சிவன் மனத்தை விட்டு நீங்கான்.

*977.* *அஞ்சுள வானை அடவியுள் வாழ்வன*
*அஞ்சுக்கும் அஞ்செழுத் தங்குச மாவன*
*அஞ்சையுங் கூடத் தடுக்கவல் லார்கட்கே*
*அஞ்சாதி யாதி அகம்புக லாமே.*

தேகமான காட்டில் இந்திரியங்களான ஐந்து யானைகள் வாழ்கின்றன, அவ்விதமான இந்திரியங்களாகிய யானைகளை அடக்க ஐந்தெழுத்தாகிய நமசிவாய என்பது அங்குசம் போன்றது, அவ்வைந்தனையும் எழுத்தைந்தனைக் கொண்டு ஒருசேர அடக்க வல்லார்க்கு ஐந்துக்கும் முதலாய ஆன்மாவிடம் புக முடியும்.

*978.* *ஐந்து கலையில் அகராதி தன்னிலே*
*வந்த நகராதி மாற்றி மகராதி*
*நந்தியை மூலத்தே நாடிப் பரையொடுஞ்*
*சந்திசெய் வார்க்குச் சடங்கில்லை தானே.*

நிவிருத்தி முதலிய ஐந்து கலைகளில் மேதை முதலிய சந்திர கலை பதினாறில், கொப்பூழிலுள்ள மகாரம் பிருதிவி மயமாய்க் குறிப்பிரதேசத்தில் காமக்கழிவினைச் செய்வதை மாற்றி நகாரத்தைப் புருவ நடுவில் விளங்கும்படி செய்து, அதன்மேல் விளங்கும் ஒளியுடன் சேர்க்கத் தெரிந்தவர்கட்கு ஒரு விதமான உடலால் செய்ய வேண்டிய தொழில் வேண்டா.

***979.*** ***மருவுஞ் சிவாயமே மன்னும் உயிரும்***
***அருமந்த போகமும் ஞானமு மாகுத்***
***தெருள்வந்த சீவனார் சென்றிவற் றாலே***
***அருள்தங்கி யச்சிவ மாவது வீடே.***

சி என்ற சிவத்துடனும் வா என்ற அருளுடனும் உயிர் பொருந்தியிருப்பதே அருமையான சிவபோகமும் சிவஞானமும் ஆகும், மல கன்மத்தினின்றும் நீங்கித் தெளிந்த உயிர்கள் மேலே கண்ட மந்திரத்தாலே, திருவருளின்கண்ணே தங்கி அச்சிவமேயாவது வீடாகும்.

***980.*** ***அஞ்சுக அஞ்செழுத் துண்மை அறிந்தபின்***
***நெஞ்சகத் துள்ளே நிறையும் பராபரம்***
***வஞ்சக மில்லை மனைக்கும் அழிவில்லை***
***தஞ்ச மிதுவென்று சாற்றுகின் றேனே.***

மிகவும் இன்பத்தைத் தரும் திருவைந்தெழுத்தின் உண்மையை அறிந்த பின், மனத்தையே இடமாகக் கொண்டு பரமும் அபரமும் ஆகிய சதாசிவர் அல்லது சிவசத்தி சிறந்த விளங்குவார், நான் கூறுவது முழுதும் உண்மையேயன்றிச் சிறிதும் பொய்யில்லாமையோடு தேகத்துக்கும் அழிவில்லை, சிவத்தினிடம் அடைக்கலம் புகுவதே சிவத்தை அடையும் வழி என்று நான் சொல்லுகிறேன்.

***981.*** ***சிவாயவொ டல்வே தெளிந்துளத் தோதச்***
***சிவாயவொ டல்வே சிவனுரு வாகுஞ்***
***சிவாயவொ டவ்வுந் தெளியவல் லார்கள்***
***சிவாயவொ டவ்வே தெளிந்திடுந் தாரே.***

சந்திரகலை அறிந்து சிவாய என்பதைத் தெளிந்து உள்ளத்தில் உன்ன, அச்சந்திர கலையின் பயனால் அவர் சிவனுரும் பெறுவர், சந்திர கலையையும் சிவாய என்ற மந்திரப் பொருளையும் தெளிய வல்லவர்கள், சிவரூபமாகச் சந்திர மண்டலத்தில் தம்மைத் தெளிந்திருந்தார்கள்.

***982.*** ***சிகார வகார யகார முடனே***
***நகார மகார நடுவுற நாடி***
***ஒகார முடனே ஒருகா லுரைக்க***
***மகார முதல்வன் மதித்துநின் றானே.***

சிவாயநம என்னும் மந்திரத்தில் யகாரம் இடையில் உள்ளதை அறிந்து, பிரணவமாகச் சுழுமுனையின் முழக்கத்தைக் கண்டால், அசபையின் தலைவானகிய சிவன் இவர்களை மதித்து வெளிப்பட்டு நிற்பான்.

***983.*** ***நம்முதல் ஓரைந்தின் நாடுங் கருமங்கள்***
***அம்முதல் ஐந்தில் அடங்கியவல்வினை***
***சிம்முத லுள்ளே தெளியவல் லார்கட்குத்***
***தம்முத லாகுஞ் சதாசிவந் தானே.***

விரும்பிய கருமங்களைச் செய்ய நமசிவாய என்ற மந்திரத்க் கொள்ளவும், அந்த முதலாகிய உருத்திரர் வலிய வினைகளைச் செய்து முடிப்பார், சிகாரத்தைத் தம்முள்ளே தெளிய வல்லார்கட்கு, சதாசிவரே நம் முதலான உருத்திரரை இயக்கித் தொழிற்படுத்துவார்.

***984.*** ***நவமுஞ் சிவமும் உயிர்பர மாகும்***
***தவமொன் றிலாதன தத்துவ மாகுஞ்***
***சிவமொன்றி யாய்யவ ராதா வால்அச்***
***சிவமென்ப தானாம் எனந்தொளி வற்றதே.***

தோழமையால் சிவத்தைப் பொருந்தின போது உயிர் பரமாக விளங்கும், சிவத்தைத் தோழமையால் கொள்ள உடலை வருந்தும் தவங்கள் வேண்டாமையோடு ஆன்மா சிவத்துடன் சார்ந்து பரமாதல் தன்மை அமையும், சிவத்துடன் பொருந்தி உணர்பவர் அருளால், அச்சிவமே தான் என்ற தெளிவு உண்டாயிற்று.

***985.*** ***கூடிய எட்டும் இரண்டுங் குவிந்தறி***
***நாடிய நந்தியை ஞானத்துள் ளேவைத்து***
***ஆடிய ஐவரும் அங்குற வாவர்கள்***
***தேடி அதனைத் தெளிந்தறி யீரே.***

இரு கண்களாகிய சூரிய சந்திரர்கள் சேர்த்துப் பார்க்க, விளக்கும் சிவனாகிய ஒளியை நம் தீயாக அங்குள்ள குரு மண்டலத்தில் கண்டால், அசைந்தாடிக்கொண்டிருந்த ஐம்புலனறிவும் அவற்றைத் தொழிற்படுத்துகின்ற பிரமனாதி ஐவரும் அக்குரு மண்டலத்தில் இலயமடைவர், குருவைத் தேடி அவரருள் பெற்றுத் தெளிந்து கொள்ளுங்கள்.

***986.*** *எட்டும் இரண்டும் இனிதறி கின்றிலர்*
*எட்டும் இரண்டும் அறியாத ஏழையர்*
*எட்டும் இரண்டும் இருமூன்று நான்கெனப்*
*பட்டது சித்தாந்த சன்மார்க்க பாதமே.*

எட்டு என்பதையும் இரண்டு என்பதையும் இன்பந்தரும் நெறி என்று மூடர்கள் அறியவில்லை, எட்டும் இரண்டும் ஆறையும் நான்கையும் கூட்டினதால் வருவது என்று சித்தாந்த சன்மார்க்க நெறி அறுதியிட்டுக் கூறியது.

***987.*** *எட்டு வரையின்மே வெட்டு வரைநீறி*
*எட்ட நடுவுள் இறைவன் எழுத்தொன்றில்*
*வட்டத்தி லேயறை நாற்பத்தெட் டுமிட்டுச்*
*சிட்டஞ் செழுத்துஞ் செபிசீக் கிரமே.*

எட்டுக் கோடுகளின் மேல் எட்டுக் கோடுகள் இட்டு நாற்பத்தொன்பது அறைகளாக்கி,அந்த நடு அறையில் சிவனது எழுத்தாகிய சிகரம் பொருந்தின், சுற்றிலுமுள்ள நாற்பத்தெட்டு அறைகளிலும் எஞ்சிய எழுத்துகளை அடைத்து, மேன்மையான ஐந்தெழுத்தை விரைவில் செபிப்பாயாக.

***988.*** *தானவர் சட்டர் சதிரர் இருவர்கள்*
*ஆனஇம் மூவரோ டாற்றவ ராதிகள்*
*ஏனைப் பதினைந்தும் விந்துவும் நாதமுஞ்*
*சேனையுஞ் செய்சிவ சக்கரந் தானே.*

நிருதி முதலிய அட்டதிக்குப் பாலகர்கள், பைரவர் எண்மர், நந்தி முதலிய சிவ கணங்கள் எண்மர், ஆகிய இம்மூவகையினரும் வழிப்படுத்துபவர்கள், அகரம் முதல் உயிர் எழுத்துகளும், விந்து நாத எழுத்துகளும் ஆகிய, சேனையும் சிவ சக்கரமாகும்.

***989.*** *பட்டன மாதவ மாறும் பராபரம்*
*விட்டனர் தம்மை விகிர்தா நமான்பர்*
*எட்டனை யாயினும் ஈசன் திறத்திறம்*
*ஓட்டுவன் பேசுவன் ஒன்றறி யேனே.*

ஆறு ஆதாரங்களும் ஒன்றுபட்டுப் பராபரம் அமைவது பெரிய தவம் (இவை ஆறும் ஒன்றிய போது பராபரமான சதாசிவர் விளங்குவா என்க). இதை அறிந்தவர் தம்மைச் சிவத்தினிடம் அடிமையெனக் கண்டு தற்போதத்தை விட்டனர், அவருடன் கூடி எள்ளளவு காரியத்திலும் ஈசனது கருணையைப் பற்றிப் பேசுவேன், வேறொன்றும் அறியேன்.

***990.*** *சிவன்முதல் மூவரோ டைவர் சிறந்த*
*அவைமுதல் ஆறிரண் டொன்றொடொன் றான*
*அவைமுதல் விந்துவும் நாதமும் ஓங்கச்*
*சவைமுதல் சங்கரன் தன்பெயர் தானே.*

சிவன் மூவராகவும் ஐவராகவும் திருச்சிற்றம்பலமான சபையில் விளங்குவார், அந்தச் சபையானது ஆறு ஆதாரங்களும் மகேசுர சதாசிவம் பொருந்தியதாய்க் கவிழ்ந்துள்ள சகஸ்ரதளம் ஒன்றம் நிமிர்ந்துள்ள சகஸ்ரதளம் ஒன்றுமாம், அவற்றின் விந்துவும் நாதமும் விளங்க, அந்நிலையில் அதற்குச் சங்கரன் என்ற பெயராம்.

***991.*** *வித்தாஞ் செகமய மாக வரைநீறி*
*நத்தார் கலைகள் பதினாறு நாட்டிப்பின்*
*உத்தாரம் பன்னிரண் டாதி கலைதொகும்*
*பத்தாம் பிரம சடங்குபார்த் தோதிடே.*

விந்து மயமான சந்திரகலையைப் பிருதிவியிலிருந்து கணக்கிட்டு, விருப்பமுள்ள சந்திர கலைகள் பதினாறையும் நிலை நிறுத்திக் கொண்டு, பிறகு மறு பகுதியான பன்னிரண்டு கலைகளில் விளங்கும் சூரியனைச் சேர்க்கப் பத்தான அக்கினி கலைகள் அமையும், இது பிரமத்தை அறியும் கிரியை என்று பஞ்சாக்கரம் ஓதவும்.

***992.*** *கண்டெழுந்த தேன்கம லம்மல ருள்ளிடை*
*கொண்டெழுந் தேன்உடன் கூடிய காலத்துப்*
*பண்டழி யாத பதிவழி யேசென்று*
*நண்பழி யாமே நமவென லாமே.*

சகஸ்ரதளத்திடை சிவபெருமானைக் கண்டெழுந்தேன், நான் அகத்துள் சிவத்துடன் ஒன்றித்து நின்றபோது, உடலை விட்டு அழியாத சிவசக்கரத்தில் வழியே சென்று, எனக்கம் சிவனுக்குமுள்ள அடிமையாம் உறவு கெடாமல் சிவாயநம என ஓதிக்கொண்டிருந்தேன்.

***993.*** ***புண்ணிய வானவர் பூமழை தூவிநின்***
***றெண்ணுவர் அண்ணல் இணையடி மந்திரம்***
***நண்ணுவர் நண்ணி நமஎன்று நாமத்தைக்***
***கண்ணென உன்னிக் கலந்துநின் றாரே.***

புண்ணியப் பேற்றினால் வானுலகம் சென்றவர் அங்கேயும் அவர்கள் பூவினால் சிவத்தை அருச்சித்து, சிவபிரானது திருமந்திரத்தைக் கவனித்து நிற்பர், நன்றியோடு சிவனுக்கு அடிமை என்று பொருந்துவர், இறைவனது நாமத்தைக் கண் போல நினைந்து கணித்துச் சிவத்துடன் கலந்து நின்றார்கள்.

***994.*** ***ஆறெழுத் தாவ தாறு சமயங்கள்***
***ஆறுக்கு நாலே இருபத்து நாலென்பர்***
***சாவித் திரியில் தலையெழுத் தொன்றுள***
***பேதிக்க வல்லார் பிறவியற் றார்களே.***

ஆறெழுத்தம் ஆறு எல்லைகளை உடையது,ஆறனை நான்கால் பெருக்க இருபத்து நான்காகும், சாவித்திரியின் முதல் எழுத்து பிரணவமாகிய ஒரெழுத்தாம், இதனை அறிந்து உருவத்தினால் மாற்றத் தெரிந்தவர் பிறவியற்வராவர்.

***995.*** ***எட்டினில் எட்டறை யிட்டோ ரறையிலே***
***கட்டிய ஒன்றெட்டாய்க் காண நிறையிட்டுச்***
***கட்டி இவற்றைப் பிரணவஞ் சூழ்ந்திட்டு***
***மட்டும் உயிர்கட் குமாபதி யானுண்டே.***

எட்டு அறைகள் வெளியிலும் ஓர் அறை உள்ளிருக்கும்படியாகவும் அமைத்து, பொருந்திய சிகாரம் என்ற அக்கினியே எட்டு அறைகளிலும் ஸ்வர ரூபமாய் வியாபித்துள்ளது என்று பாவித்து, பின்னர்ப் பிரணவத்தால் சூழ விட்டு, இவ்வெல்லைக்குட்பட்டுத் தியானிக்கும் உயிர்கட்கு உமாகாந்தன் வெளிப்பட்டருளுவான்.

***996.*** ***நம்முதல் அவ்வொடு நாவின ராகியே***
***அம்முத லாகிய எட்டிடை யுற்றிட்டு***
***உம்முத லாகவே உணர்பவர் உச்சிமேல்***
***உம்முத லாயவன் உற்றுநின் றானே.***

நமசிவாய என்ற தூல பஞ்சாக்கரத்துடன் தியானம் செய்து (நமசிவாய என்பதில் அகரம் இறுதியில் உள்ளது என்று அறிக.) அகர முதலாகிய எட்டு அறைகளை அறிந்து அவற்றினிடையே பொருந்தி, உகரத்தை முதலாகக் கொண்டு உணர்பவரின் உச்சியில், உகரமாகிய சத்தியின் தலைவன் பொருந்தி நிற்பான்.

## தம்பனம்

***997.*** ***நின்ற அரசம் பலகைமேல் நேராக***
***ஒன்றிட மவ்விட்டு ஓலையிற் சாதகந்***
***துன்று மெழுகையுள் பூசிச் சுடரிடைத்***
***தன்ற வெதுப்பிடத் தம்பனங் காணுமே.***

நிலையான அரசம் பலகை மேல் நேராகப் பொருத்த, மகாரத்தை முதலாக மாற்றி எழுதிப் பனை ஓலையில் அவ்வாறே அடைத்து, சாதகன் பொருந்தும் தேன் மெழுகை ஓலையுள் பூசி, சுடரில் சிறிது வெதுப்பத் தம்பன கன்மமாகும்.

## மோகனம்

***998.*** ***கரண விரளிப் பலகை யமன்றிசை***
***மரணமிட் டெட்டின் மகார வெழுத்திட்டு***
***வாணமி லைங்காயம் பூசி யடுப்பிடை***
***முரணிற் புதைத்திட மோகன மாகுமே.***

கொன்றை மரப்பலகையைக் கருவியாகக் கொண்டு யமன் திசையாகிய தெற்குத் திசையில் அப்பலகையை அமைத்து, தீமையாகிய பகையை ஒழித்தற்கு மாரக மந்திரத்தை எழுதி எட்டில் மகாரம் மட்டும் இட்டு, மறைப்பற்று ஐங்காயத்தைப் பூசி, அடுப்பில் தலைகீழாகப் புதைத்தால் மோகன் சத்தியுண்டாம்.

## உச்சாடனம்

***999.*** ***ஆங்கு வடமேற்கில் ஐயனார் கோட்டத்திற்***
***பாங்கு படவே பலாசப் பலகையிற்***
***காங்கரு மேட்டிற் கடுப்பூசி விந்துவிட்***
***டோங்காமல் வைத்திடும் உச்சா டளத்துக்கே.***

அவ்விடம் வடமேற்குப் புலமாகிய வாயு திக்கில் ஐயனார் கோயிலில், தொழும்படியாகப் புரசுப் பலகையில், காரீயத் தகட்டில் நஞ்சு பூசி, விந்துவாகிய வட்டம் அமைத்து அதன்மேல் ஓங்காரம் சூழ உச்சாடனத்திற்கு இடவும்.

## மாரணம்

*1000.* *உச்சியம் போதில் ஒளிவள்ளி மூலையிற்*
*பச்சோலை யிற்பஞ்ச காயத்தைப் பாரித்து*
*முச்சது ரத்தின் முதுகாட்டில் வைத்திட*
*அச்சமற மேலோர் மாரணம் வேண்டிலே.*

நண்பகற் போதில் ஒளியுடைத்தாகிய தென்கிழக்கு மூலையில், பச்சையான பனை ஓலையில் ஐங்காயத்தைத் தடவி, முச்சந்தியிலோ சுடுகாட்டிலோ புதைத்து வைத்திட, பகையை அழிக்கும் மாரணமாக அஃது அமையும்.

*1001.* *ஏய்ந்த வரிதார மேட்டின்மே லேபூசி*
*ஏய்ந்த வகாரம் உகாரம் எழுத்திட்டு*
*வாய்ந்ததோர் வில்லம் பலகை வசியத்துக்*
*கேய்ந்தவைத் தெண்பதி னாயிரம் வேண்டிலே.*

பொருந்த அரிதாரம் ஏட்டின் மேலே தடவி, அகார உகாரங்களை எழுதி, வசியத்துக்குப் பொருந்திய வில்வப் பலகையில் வைத்து, எண்பதினாயிரம் உருச்செய்க.

## ஆகர்ஷணம்

*1002.* *எண்ணாக் கருடனை ஏட்டில் உகாரமிட்*
*டெண்ணாப் பொன்னாளில் எழுவெள்ளி பூசிடா*
*வெண்ணாவற் பலகையி லிட்டுமேற் கேநோக்கி*
*எண்ணா வெழுத்தொடெண் ணாயிரம் வேண்டிலே.*

எண்ணப்படுகின்ற ஆகர்ஷண முறையாவது ஏட்டில் உகாரத்தைவிட்டு, எண்ணுதற்கு அருமையான வியாழக்கிழமையில் வெள்ளிப் பொடி பூசி, வெண்ணாவல் பலகையில் வைத்து மேற்க நோக்கி, பிரணவத் தியானம் எண்ணாயிரம் செய்க.

## 3. அருச்சனை

அருச்சனை என்பது பூசை அல்லது தேவாராதனை, இங்கு இயந்திரத்திலே மந்திர வடிவிலே இறைவனை எழுந்தருளச்செய்து தியானித்தல் கூறப்பெறும்.

*1003.* *அம்புய நீலன் கழுநீ ரணிசெய்தல்*
*வம்பவீழ் பூகமும் மாதவி மந்தாரத்*
*தும்பை வகுளஞ் கரபுன்னை மல்லிகை*
*செண்பகம் பாதிரி செவ்வந்தி சாத்திடே.*

இயந்திரத்தில் மந்திர வடிவிலே எழுந்தருளச்செய்து தாமரை, நீலோற்பலம், செங்கழுநீர், அழகிய கருநெய்தல், மணம் விரியும் பாக்குப்பூ, மகிழம்பூ, புன்னை, மல்லிகைப்பூ, செண்பகம் பாதிரி, செவ்வந்தி ஆகிய வாசனையுள்ள பூக்களைச் சாற்றுக.

*1004.* *சாங்கம தாகவே சந்தொடு சந்தனத்*
*தேங்கமழ் குங்குமங் கர்ப்பூரங் காரகிற்*
*பாங்கு படப்பணி நீராற் குழைத்துவைத்*
*தாங்கே அணிந்துநீர் அர்ச்சியும் அன்பொடே.*

முறையாகப் புனுகு, கத்தூரி முதலிய சாந்துடன் கூடிய சந்தனம், மணம் கமழும் குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், காரகிற்குழம்பு ஆகியவற்றை அழகாகப் பனிநீர் விட்டு நன்றாகக் குழைத்துச் சக்கரத்துக்குச் சாத்தி அன்போடு அருச்சனை செய்யும்.

*1005.* *அன்புட னேநின் றமுதமும் ஏற்றியே*
*பொன்செய் விளக்கும் புகைதீபந் திசைதொறுந்*
*துன்பம் அகற்றித் தொழுவோர் நிலையுங்கால்*
*இன்புட னேவந் தெய்திடும் முத்தியே.*

அன்புடனே அமுதத்தை நிவேதித்து, பொன்னொளி தரும் விளக்கு ஏற்றி வைத்துத் திக்கு பந்தனம் செய்து தூப தீபம் கொடுத்து, வழிபடுவோர் இம்மைப் பேறும் மறுமை முத்தியும் பெறுவர்.

*1006.* *எய்தி வழிப்படில் எய்தா தனவில்லை*
*எய்தி வழிப்படில் இந்திரன் செல்வமுன்*
*எய்தி வழிப்படில் எண்சித்தி உண்டாகும்*
*எய்தி வழிப்படில் எய்திடும் முத்தியே.*

இவ்வண்ணம் எய்திப் பூசிப்பவர் தானே வந்தணையும் பிறர் மனைவியையும் விரும்பாதவராய் இந்திரியங்களை வென்றவராவர், இவரது தூய்மையான நிவேதனம் இடைவிடா யோகம் பொருந்திய பஞ்சாங்க நமஸ்காரம், பொருந்தும் மனம் பிராயனோடு நிலைபெற்று நிற்கும் (மனம் அடங்க வாயு அடங்கும் என்க).

*1008.* *வேண்டார்கள் கன்மம் விமலனுக் காட்பட்டோர்*
*வேண்டார்கள் கன்ம மதிவிச்சை யற்றபேர்*
*வேண்டார்கள் கன்மம் மிகுசிவ யோகிகள்*
*வேண்டார்கள் கன்மம் மிகுதியோ ராய்ந்தன்பே.*

பரமேசுரனை விரும்பி அடிமையாயினோர் எவ்விதக் கிரியையாலும் அவனை வழிபட விரும்பார், ஏனெனில் அ=டக்கம்க் கிரியையில் அவாவின்மையால் கிரியை வழித்தான உபாசனையை விரும்பார்கள், சிவயோகிகள் ஞானத்தால் இறைவனை வழிபட்டு அவனிடம் தம்மை ஒப்புக் கொடுப்பவராதலால் பற்றிக் கிரியையான வழியைக் கடைப்பிடிப்பதில்லை, இவ்வகையான உபாசனையை விரும்பாமல் சிவத்தினிடம் அன்பு கொண்டவர் அவனருளின் வழியே நிற்பர்.

*1009.* *அறிவரு ஞானத் தெவரும் அறியார்*
*பொறிவழி தேடிப் புலம்புகின் றார்கள்*
*நெறிமனை யுள்ளே நிலைபெற நோக்கில்*
*எறிமணி யுள்ளே இருக்கது மாமே.*

சிவயோகம் அறிவு ஒன்றாலேயே அடையத்தக்கது என்பதைக் கிரியை வழி நிற்போர் உணர்வதில்லை, அவர்கள் நாட்டம் எல்லாம் புறத்தேயுள்ள மூர்த்தி பூசைத் திரவியம் மந்திரம் செபம் ஆகியவற்றில்தான் அலைந்து கொண்டிருக்கும், நியதிக்குட்பட்டுக் கிடைத்த உடம்பினுள் ஒரு நெறிய மனத்தோடு காணில், பிரகாசம் பொருந்திய மணிக்குள்ளே விளங்கும் ஒளி போல இறைவனைக் காணலாம்.

*1010.* *இருளும் வெளியும்போல இரண்டாம் இதய*
*மருளறி யாமையும் மன்னு மறிவு*
*மருளிவை விட்டெறி யாமை மயங்கு*
*மருளுஞ் சிதைத்தோ ரவர்களா மன்றே.*

மனம் இருளும் வெளியும் போல இரு தன்மையுடையது, வெளியாகிய ஒளியைச் சார்ந்து அருளையும் மயக்கமாகிய இருளைச் சார்ந்து அறியாமையும் பொருந்தும், மயக்கத்தை விட்டு எறியாமையால் அறிவு மயங்கும், ஆகையால் மயக்கத்தைக் கெடுத்தவர் சிவனடியாராவர்.

*1011.* *தானவ னாக அவனேதா னாயிட*
*ஆன இரண்டில் அறிவன் சிவமாகப்*
*போனவ னன்பிது நாலாம் மரபுறத்*
*தானவ னாகுமோ ராசித்த தேவரே.*

தான் சிவன், சிவன் தான் என இரண்டன் வழி தன்னைச் சிவமாகக் காண்பன், சிவத்திடம் காதல் கொண்டு தன்னறிவைச் சிவ அறிவில் ஒன்றுபடுத்திய நாலாம் நிலையாகிய சாயுச்சிய நிலையை அடையும் மார்க்கம் இதுவாகும், இச்சித்தி பெற்ற சிவஞானிகள் தம்மைச் சிவம் நடத்தும் என்று தாம் ஒன்றையும் சிந்தியாதவர்களாய் இருப்பர்.

*1012.* *ஓங்கார முந்திக்கீழ் உற்றிடும் எந்நாளும்*
*நீங்கா வகாரமும் நீள்கண்டத் தாயிடும்*
*பாங்கார் நகாரம் பயில்நெற்றி யுற்றிடும்*
*வீங்காகும் விந்துவும் நாதமே லாகுமே.*

உந்திக்குக் கீழ் எந்நாளும் நிலைபெற்றிருப்பது சுவாதிட்டானத்திலுள்ள அணையா நெருப்பான அக்கினி கலையாகும், இவ்வக்கினியைச் சிவாக்கினியாக்கச் சிவத்தியானம் செய்தால் சீவர்களை விட்டு அகலாத குண்டலினி சத்தி கண்டத் தானத்தில் வந்து பொருந்துவாள், அழகிய ஒளியுடன் கூடிய நகாரம் சுவாதிட்டானத்தினின்றும் நெற்றியை இடமாகப் பொருந்தும், இந்த இடத்திலிருந்தே விந்து நாதங்கள் (ஒளி, ஒலி) உதித்து மேலே செல்லும்.

*1013.* *நமவது வாசன மான பகவே*
*சிவமது சித்திச் சிமாம் பதியே*
*நவமவற வாதி நாடுவ தன்றாஞ்*
*சிவயாகு மாமோனஞ் சேர்தல்மெய் வீடே.*

ஆன்மாக்கள் நம எழுத்துகளால் குறிப்பிடப்படும் திரோதனத்தையும் (மறைப்புச்சத்தி) மலத்தையும் ஆசனமாகக் கொண்டு இயங்குவதால் பசுத்தன்மையுடையன, பசுத்தன்மையை மாற்றச் சிவத்தைச் சார்ந்து சிவத்தைச் சிந்திக்க நமவுடன் கூடிய பசு சிவத்துக்கு ஆசனமாகும், நம தன்மை கெட நமசிவாய சிவாயநம என்று செபித்தால் மட்டும் உண்மைப் பொரள் சித்திக்காது, உண்மைப் பொருளாகிய சிவத்துடன் சேர்ந்து மாட்சிமை மிக்க பிரணவத்தில் சமாதி அடைதலே மெய் வீடாகும்.

*1014.* *தெளிவரு நாளிற் சிவஅமு தூறும்*
*ஒளிவரு நாளில் ஒரெட்டில் உகளும்*
*ஒளிவரும் அப்பதத் தோரிரண் டாகில்*
*வெளிதரு நாதன் வெளியாய் இருந்தே.*

உடல் தானல்ல என்று தெளிந்த அந்நாளில் சீவனுடைய அண்டத்தில் சிவ ஒளி பிரகாசிக்கும், ஒளி வரும் காலத்தில் அது சந்திர கலையாக விளங்கும், ஒளி வரும்போது பிரிப்புற்றிருந்த சீவனுடைய நிலை சிவத்தோடு ஒன்றாயின், சீவ ஒளி சிவ ஒளியுடன் கலந்து விளங்கும்.

## 4. நவகுண்டம்

நவகுண்டமாவது மந்திர சித்தி பெற்றவர், அவர் வேண்டும் தொழிலுக்கேற்பக் குண்டம் அமைத்து, அதற்குரிய திரவியத்தால் ஓமம் செய்யும் ஒன்பது வகைக் குண்டம் - சதுரம், யோனி, பிறை, முக்கோணம், வட்டம், அறுகோணம், பதுமம், அட்டகோணம், வர்த்துவம் என்பன. அதைக் கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, ஈசானியம், ஈசானியத்துக்கும் கிழக்குக்கும் நடுவு ஆகிய ஒன்பது இடங்களிலும் ஆம். இப்பகுதியில் புறத்தே வழிபடுவது போன்ற அகத்தே வழிபட வேண்டும் என்று கூறுப்பெறுகிறது.

*1015.* *நவகுண்ட மானவை நானுரை செய்யின்*
*நவகுண்டத் துள்ளெழு நற்றீபத் தானும்*
*நவகுண்டத் துள்ளெழு நன்மைகள் எல்லாம்*
*நவகுண்ட மானவை நானுரைப் பேனே.*

நவ குண்டங்களைப் பற்றி நான் சொல்வது என்னவென்றால், நவகுண்டத்துள் நல்ல தீபம் போன்ற சோதி எழுந்து நிற்கும் (அகப்பூசையில் சூக்கும உடலை ஒளியாகத் தரிசிக்கும் ஆற்றல் உண்டாம் என்க), அத்தகைய நவகுண்ட சோதியால் எல்லா நன்மைகளையும் அடையலாம், அத்தகைய நவகுண்டத்தை நான் உரைக்கின்றேன்.

*1016.* *உரைத்திடுங் குண்டத்தின் உள்ளே முக்காலும்*
*நகைத்தெழு நாற்கோண நன்மை கள்ஐந்தும்*
*பகைத்திடு முப்பரம் பாரங்கி யோடே*
*மிகைத்தெழு கண்டங்கள் மேலறி யோமே.*

சொல்லப்படுகின்ற குண்டத்தில் முப்போதும் சிவக்காதலினால் பிருதிவி மயமான நாற்கோணம் மகிழ்ச்சினைத் தரும், அதனால் சிருட்டியாதி ஐந்தொழில்களும் நன்மையாம், ஆணவாதி மும்மலங்களும் சிவானுக்கிரத்தால் கெடும், மூலாதாரத்திலிருந்து அக்கினியானது ஊர்த்துவ முகமாகவும் மண்டலங்களையும் கடந்துவிளங்கும், அதன் விளைவு சொல்ல முடியாது.

*1017.* *மேலறிந் துள்ளே வெளிசெய்த வப்பொருள்*
*காலறிந் துள்ளே கருத்துற்ற செஞ்சுடர்*
*பாரறிந் தண்டஞ் சிறகற நின்றது*
*நானறிந் துள்ளே நாடிக்கொண் டேனே.*

மேல்நிலையை அறிந்தபோது உள்ளே ஆகாய மயமாக அப்பரம்பொருள், அப்பொருளைப் பற்றாகக் கொண்டபோது எண்ணத்தில் பொருந்திய செம்மையான சுடர், பிருதிவி முதலான புவனங்களையும் அண்டப்புறங்களையும் கடந்து நின்றது, நான் அத்தகைய செஞ்சுடரை அறிந்து அஃது எழுவதை உணர்ந்தேன்.

*1018.* *கொண்ட இக் குண்டத்தின் உள்ளெழு சோதியாய்*
*அண்டங்கள் ஈரேழு மாக்கி அழிக்கலாம்*
*பண்டையுள் வேதம் பரந்த பரப்பெலாம்*
*இன்றுசொல் நூலாய் எடுத்துரைத் தேனே.*

இவ்வாறு அகத்திலே கொண்ட குண்டத்தில் தோன்றுகின்ற ஒளி வடிவாய், ஈரெழு மண்டலங்களையும் படைத்து அழிக்கலாம், பழமையாகவுள்ள வேதம் இக்குண்டத்தில் பெருமையாகக் கூறியவையெல்லாம், இன்று நான் சொல்லப்புகும் இப்பகுதியில் எடுத்துரைத்தேன்.

*1019.* *எடுத்தவக் குண்டத் திடம்பதி னாறிற்*
*பதித்த கலைகளும் பாலித்து நிற்குங்*
*கதித்தனல் உள்ளெழக் கண்டுகொள் வார்க்கே*
*கொதித்தெழும் வல்வினை கூடகி லாவே.*

இங்ஙனமாக எடுக்கப்பட்ட அக்குண்டத்தில், சோடா கலைகளும் விளங்கித் தோன்றும், மூலாக்கினி காம செயத்துடன் சுழுமுனை நாடி வழியாக மேல் எழுவதைக் கண்டுகொள்பவர்க்கு, வெப்பத்தைத் தரும் வலிய வினைகள் வந்து பொருந்தா.

*1020.* *கூடமுக் கூடத்தின் உள்ளெழு குண்டத்துள்*
*ஆடிய ஐந்தும் அகம்புறம் பாய்நிற்கும்*
*பாடிய பன்னீ ரிராசியம் அங்கெழ*
*நாடிக்கொள் வார்கட்கு நற்சுடர் தானே.*

மூலாதாரத்தில் முக்கோணமாகவுள்ள குண்டத்தில், விளங்குகின்ற பிரமனாதி ஐவரும் சத்தியோசாதம், வாமதேவம், தத்புருடம், அகோரம், ஈசானம் ஆகிய ஐம்முகச் சிவனாராக உடலிலும் உடலுக்குப் புறம்பாகவும் விளங்குவர், சிரசின் மேல் சூரியன் வட்டம் பூர்த்தியாகிப் பன்னிரண்டு இராசிகளும் அமையுமாறு, தியானத்தில் உறுதி பெற்றவர்க்குச் சிரசின் மேலே சிவசூரியன் விளங்கும்.

*1021.* *நற்சுட ராகுஞ் சிரமுக வட்டமாங்*
*கைச்சுட ராகுங் கருத்துற்ற கைகளிற்*
*பைச்சுடர் மேனி பதைப்புற் றிலிங்கமும்*
*நற்சுடர் ராயெழு நல்லதென் றாளே.*

நவகுண்ட வழிபாட்டால் வட்டமான சிரம், முகம் ஆகியவை நல்ல ஒளி பெற்று விளங்கும், இடைகலை பிங்கலையாகிய இரு கைகளில் கருதுகின்ற சுழுமுனை ஒளியாக விளங்கும், அன்னத்தாலாகிய அன்னமய கோசத்தில் வேகத்தோடு கூடிய இலிங்கமும் நல்ல ஒளியாக உடலைக் கடந்ததாயும் உள்ளும் வெளியும் தங்கு தடையுற விளங்கும். இதுவே நன்மை பயக்கும் என்று அம்மை கூறினாள்.

*1022.* *நல்லதென் றாளே நமக்குற்ற நாயகஞ்*
*சொல்லதென் றாளே சுடர்முடி பாதமா*
*மெல்லநின் றாளை வினவகில் லாதவர்*
*கல்லதன் நாளையுங் கற்றும் வின்னாளே.*

திவ்விய இலிங்கம் நன்மையைத் தரும் என்று சொன்ன பராசத்தியே ஆன்மாக்களாகிய நமக்குக் கடைத்தேறுவதற்கேற்ற சொல் பிரணவம் ஆகும் என்றாள், (திவ்விய இலிங்கமே பிரணவம் என்க) இவ்வண்ணம் முடி முதல் பாதம்வரை ஒளியாக எல்லாவற்றையும் ஆக்கி நிற்கின்ற சத்தியை நல்ல குருவின்பால் சென்று கேட்டறியாதவர், கற்ற கல்வி கல்வியாக மாட்டாததுடன் அவர்கள் அறிவிலும் வெளிப்பட்டு விளங்க மாட்டாள்.

*1023.* *வின்னா விளம்பிறை மேவிய குண்டத்துச்*
*சொன்னால் இரண்டுஞ் சுடர்நாகந் திக்கெங்கும்*
*பன்னாலு நாகம் பரந்த பரஞ்சுடர்*
*என்னாகத் துள்ளே இடங்கொண்ட வாறே.*

ஒளியையுடைய இளம்பிறை பொருந்திய சுவாதிட்டானச் சக்கரத்து, சொல்லப்பட்ட இடைகலை பிங்கலை என்ற இரு ஒளிகள் பாம்பு போல எல்லாத் திசைகளுக்கும் செல்லும், சொல்லப்படுகின்ற நான்கு இதழ்களையுடைய சர்ப்பாகாரமான ஆகாயக் கூறில் முன்னர் வியாபிக்கும் மேலான சோதி, என்னுள்ளத்துள்ளே பின்னர் இடங்கொண்டு விளங்கிற்று.

*1024.* *இடங்கொண்ட பாதம் எழிற்சுட ரேக*
*நடங்கொண்ட பாதங்கள் நண்ணீ ரதற்குச்*
*சகங்கொண்ட கையிரண் டாறுந் தழைப்ப*
*முகங்கொண்ட செஞ்சுடர் முக்கண னார்க்கே.*

மூலாதாரத்தை இடமாய்க் கொண்ட சிவக்கனலுக்கு ஊன்றிய கால் சூரியன் ஆகிய பிங்கலை நாடியாகும், நீர்ப்பகுதியாகிய மணிபூரகத்தை நோக்கித் தூக்கியாடும் கால் இடைகலை நாடியாகும், தேகமாகிய மண்டலத்தை இடைகலை பிங்கலையாகிய இரு கலைகளால் மூல முதலான ஆறாதாரங்களையும் செழிக்கச் செய்ய, முகத்தின் முன் செஞ்சுடர் சிவாக்கினி வந்து பொருந்தும்.

*1025.* *முக்கணன் றானே முழுச்சுட ராயவன்*
*அக்கணன் றானே அகிலமுங் உண்டவன்*
*திக்கண னாகித் திகையெட்டுங் கண்டவன்*
*எக்கணன் றானுக்கும் எந்தை பிரானே.*

சோம சூரியக்கினியைக் கண்களாகக் கொண்ட சிவனே முழுச்சுடராக விளங்கிற்று, அவ்வாறு கண்களையுடைய சீவனே எல்லாத் தத்துவங்களையும் கீழ்ப்படுத்தித் தன்னுள் அடக்கிக் கொண்டனன், இச்சீவனே திக்கெல்லாம் கண்களையுடையவனாகித் தன்னைச் சூழவுள்ள எட்டுத் திசையையும் கண்டனன், எல்லா வகைக் கணங்களும் எனது ஐயனே தலைவனாகும்.

*1026.* *எந்தை பிரானுக் கிருமூன்று வட்டமாய்த்*
*தந்தைதன் முன்னே சண்முகத் தோன்றலாற்*
*கந்தன் சுவாமி கலந்தங் கிருத்தலான்*
*மைந்தன் இவளென்று மாட்டிக்கொள் வீரே.*

எமது ஐயனாகிய சிவனிடத்து ஆறு பொறிகள் ஆறு வட்டங்களாக, தந்தையின் முன்னே ஆறுமுகம் தோன்றவே, அதில் கந்தனாகச் சிவன் கலந்திருக்கின்றமையின், கந்தன் சிவனுக்கு மைந்தன் முறையாயினான் என்ற அறிந்துகொள்ளுங்கள்.

*1027. மாட்டிய குண்டத்தின் உள்ளெழு வேதத்துள்*
*ஆட்டிய காலொன்றும் இரண்டும் அலர்ந்திடும்*
*வாட்டிய கையிரண் டொன்று பதைத்தெழ*
*நாட்டுஞ் கரரிவர் நல்லொளி தானே.*

பொருந்திய மூலாதாரக் குண்டமாகிய நான்கிதழ்ச் சக்கரத்தில், விளங்கும் ஒன்றாகிய சுழுமுனை நாடி இடைநாடி பிங்கலை நாடியின் இயல்பை விரிவடையச் செய்யும், அங்ஙனம் இரண்டும் பக்குவம் பெற்றுச் சுழுமுனையில் விளங்கும் அக்கினி கலை விரைந்தெழுவதனால், இத்தகையோர் ஒளி பெற்ற தேவராவர்.

*1028. நல்லொளி யாக நடத்துல கெங்குங்*
*கல்லொளி யாகக் கலந்துள் இருந்திடும்*
*சொல்லொளி யாகத் தொடர்ந்த உயிர்க்கெல்லாம்*
*கல்லொளி கண்ணுளு மாகிநின் றானே.*

முன் மந்திரத்தில் உணர்த்தியபடி ஒளி உடல் பெற்றவர் தமது ஒளியுடலில் உலகமெங்கும் சஞ்சரித்தும், நிலைபெற்ற அவரது தூல உடலிலும் ஒளி அமைந்து விளங்குவர், பிரணவத்தை அறிந்து அடைய முற்படுவோர்க்கெல்லாம், நிலைபெற்ற ஒளியை வழங்கும் அருட்கண்ணாளராக விளங்க அவரது கண்களில் பராசத்தி நின்றனள்.

*1029. நின்றஇக் குண்டம் நிலையாது கோணமாய்ப்*
*பண்டையில் வட்டம் பதைத்தெழு மாறாறுங்*
*கொண்டஇத் தத்துவம் உள்ளே கலந்தெழ*
*விண்ணுளும் என்ன எடுக்கலு மாமே.*

ஒளிக்கு இடமான இப்பிரணவ குண்டம் முன் நிலைத்திருந்த ஆறு ஆதாரங்களிலும் பழமையில் இச்சக்கரங்களைப் பற்றிய முப்பத்தாறு தத்துவங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டதாகும், பிரணவம் உள்ளும் வெளியுமாகக் கலந்திருப்பதால் வியோமரூபிணி, வியாபினி முதலிய கலைகளில் தொடர்பு கொண்டு பூத சரீரத்தை எங்கும் எடுத்துச் செல்லுதல் கூடும்.

*1030. எடுக்கின்ற பாதங்கண் மூன்ற தெழுத்தைக்*
*கடுத்த முகம்இரண் டாறுகண் ணாகப்*
*படித்தெண்ணு நாவெழு கொம்பொரு நாலும்*
*அடுத்தெழு கண்ணான தந்தமி லாற்கே.*

அந்தமில்லாத பிரணவத்துக்கு எடுக்கின்ற பாதங்கள் மூன்று, கூர்மையான முகங்கள் இரண்டும் ஆறு கண்களுமாக, கற்று எண்ணும் நாக்குகள் ஏழும் கொம்புகள் நான்குமாக, அக்குண்டம் பொருந்தி எழுகின்ற இடமாயிற்று.

*1031. அந்தமில் லானுக் ககலிடந் தானில்லை*
*அந்தமில் லானை அளப்பவர் தாமில்லை*
*அந்தமில் லானுக் கடுத்தசொற் றானில்லை*
*அந்தமில் லானை அறிந்துகொள் பத்தே.*

ஈறில்லாத ஆன்மாவான பிரணவத்துக்கு இருப்பிடம் இல்லை, அதனை அளந்து வரையறை செய்வாரும் இல்லை, அதனை அறிவிக்கும் சொல்லும் இல்லையாகும், ஆன்மாவைப் பத்தின் வடிவான யகரமாய் அறியவும்.

*1032. பத்திட்டங் கெட்டிட் டாறிட்டு நாலிட்டு*
*மட்டிட்ட குண்டம் மலர்ந்தெழு தாமரை*
*கட்டிட்டு நின்று கலந்தமெய் யாகமும்*
*பட்டிட்டு நின்றது பார்ப்பதி பாலே.*

இரு நேத்திரங்களில் விளங்கும் அகர உகரங்களைப் புருவ மத்தியில் ஒன்றாகச் செய்து, அவ்விடத்து எட்டாகிய (அகரமாகிய) சந்திர கலையைக் கொண்டு தொடங்கி, சுவாதிட்டானச் சக்கரமாகிய ஆறு இதழும் மூலாதாரச் சக்கரமாகிய நான்கு இதழும் மாற்றத்தை அடைய, தேன் போன்று இன்பத்தை விளைக்கும் சுவாதிட்டானச் சக்கரம் மலர, விந்து செயம் பெற்று நின்று, உணர்வாகக் கலந்த ஆறாதாரங்களும், ஒன்றுபட்டு மேல்நோக்கிய சத்தியாகிய பார்வதியிடம் பொருந்தி நின்றது.

*1033. பார்பபதி பாகன் பரந்தகை நாலைஞ்சு*
*காற்பதி பத்து முகம்பத்துக் கண்களும்*
*பூப்பதி பாதம் இரண்டு சுடர்முடி*
*நாற்பது சோத்திரம் நல்லிரு பத்தஞ்சே.*

பார்வதியின் மணாளனான சதாசிவமூர்த்திக்கு மூலாதாரச் சக்கரத்தில் உள்ள வ, ஷ, ஸ, ஸ என்ற கலைகள் நான்கு, பஞ்சப் பிராணனுக்குத் தலைவர், பஞ்ச பூதங்களில் சிவமும் சத்தியாக விளங்குவதில் பத்து முகங்களும் அவற்றில் ஒளி மயமாக விளங்குவதை அறியம் பத்துக் கண்களும், சுவாதிட்டானத்தில் பொருந்திய இடைகலை பிங்கலையாகிய கால்கள் இரண்டு, ஒளி மயமாக விளங்கும் முடி ஒன்று, தொங்குகின்ற இடைகலை பிங்கலையாகியவை பஞ்ச பூதங்களில் உண்டாக்கும் நாதம் பத்து, தத்துவம் இருபத்தைந்து ஆகப் பொருந்தும்.

*1034. அஞ்சிட்ட கோலம் அளப்பன ஐயைந்தும்*
*மஞ்சிட்ட குண்டம் மலர்ந்தங் கிருத்தலால்*
*பஞ்சிட்ட சோதி பரந்த பரஞ்சுடர்*
*கொஞ்சிட்ட வன்னியைக் கூடுதன் முத்தியே.*

ஆன்மா அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் ஆகிய ஐந்தையும் உடையது, பிறரால் அளவிட்டுச் சொல்லக்கூடிய தத்துவங்கள் இருபத்தைந்தும் கொண்டவை தூல சூக்கும உடம்புகளாம், பனிப்படலம் போல விளங்கும் சகஸ்ரதள குண்டம் விரிவு பெற்று விளங்குங்கால், பஞ்சு பறப்பது போன்ற கிரணங்களையுடைய ஒளி விரிந்த மேலான சுடரும், நாதமும் ஆகிய அக்கினியை, கூடுதல் முத்திப் பேறாம்.

*1035. முத்திநற் சோதி முழுச்சுட ராயவன்*
*கற்றற்று நின்றார் கருத்துள் இருந்திடும்*
*பற்றற நாடிப் பரந்தொளி யூடுபோய்ச்*
*செற்றற் றிருந்தவர் சேர்ந்திருந் தாரே.*

அநாதி மலமுத்தனான சோதியாய் முழுச்சுடராய் விளங்கும் பரம்பொருள், கற்று அவற்றில் மயங்காது அவற்றைக் கடந்து நிற்பாரது கருத்தில் எழுந்தருளும், அப்பொருளை உலகப் பற்றுகளை விட்டு வியாபியாயுள்ள குண்டலினியாகிய ஒளியின் துணையால் கடந்து சென்று, சிவமாகிய பகையினை நீங்கி அசையாதிருந்தவர்கள் அப்பொருளோடு பிரிப்பின்றிச் சேர்ந்திருப்பார்.

*1036. சேர்ந்த கலையஞ்சுஞ் சேருமிக் குண்டமும்*
*ஆர்ந்த திசைகளும் அங்கே அமர்ந்திடும்*
*பாய்ந்தஜம் பூதமும் பார்க்கின்ற வன்னியைத்*
*காய்ந்தவர் என்றுங் கலந்தவர் தாமே.*

நிவிருத்தியாதி ஐந்து கலைகளும் பொருந்தும் பிரணவம் விளங்கும் இக்குண்டத்தில் (ஊர்த்துவ சகஸ்தரளத்தில்), அவை நிலை பெறும்படியான திசைகளும் அதனிடம் பொருந்தும், கீழ்நோக்குதலுடன் பாய்ந்து செல்லும் ஐந்து பூதங்களையும் தொழிற்படுத்தும் மூலாக்கினியை, வெறுத்தவர் என்றும் பிரணவத்துடன் கலந்தவராவர்.

*1037. மெய்கண்ட மாம்விரி நீருல கேழையும்*
*உய்கண்டஞ் செய்த ஒருவனைச் சேருமின்*
*செய்கண்ட ஞானந் திருந்திய தேவர்கள்*
*பொய்கண்டம் இல்லாப் பொருள்கலந்த தாரே.*

விரிந்த கடலால் சூழப்பட்ட ஏழு உலகங்களையும் நிலைபெறும் வண்ணம், உய்யுமாறு செய்த ஒப்பற்ற தலைவனைத் தியானித்துச் சேருங்கள், பலனை எதிர்பார்த்துச் செய்த யாகாதி கிரியைகளை விட்டுப் பலனை எதிர்பாராது இறைவனை அடைதலே நல்ல முடிவு என்ற ஞானம் பெற்ற தேவர்கள், பொய்யால் கண்டிக்கப்படாத மெய்யான சிவப் பொருளுடன் பிரிப்பின்றி இருந்தார்கள்.

*1038. உத்தமன் சோதி உளனொரு பாலனாய்*
*மத்திம னாகி மலர்ந்தங் கிருந்திடும்*
*பச்சிம திக்கும் பரந்து குழிந்தன*
*சத்திமா னாகத் தழைத்த கொடியே.*

தாமரை போல விரிந்த சகஸ்ர தளத்து விளங்குகின்ற உத்தமனாராகிய இறைவனுக்கு, இடை பிங்கலை நாடிகளே இரு திருவடியாம், சுழுமுனையே மூக்கு, மலர்ந்தெழுகின்ற செவ்வொளியே முகம், சோம சூரியர்களுடன் விளங்கும் அக்கினியே நெற்றிக்கண், குடுமிக்கு மேல் உள்ள இடத்தில் இவ்வாறு உணர்த்திருக்க.

*1039. உத்தமன் சோதி உளனொரு பாலனாய்*
*மத்திம னாகி மலர்ந்தங் கிருந்திடும்*
*பச்சிம திக்கும் பரந்து குழிந்தன*
*சத்திமா னாகத் தழைத்த கொடியே.*

உத்தமனாகிய சிவன் மூலாதாரத்து விளங்கும்போது ஒரு பாலனாய், மத்திம வயது என்ற யௌவனப் பிரயாம் பெறும்போது சகஸ்ரதளத்தில் ஈசான மூர்த்தியாக இருந்திடும் (குண்டலினி சத்தி மூலாதாரத்தில் உள்ள போது வாலை என்றும், ஆறு ஆதாரங்களைக் கடந்த போது தருணி என்றும் பெயர்). அப்போது சிரசின் பின்புறமுள்ள சிறு மூளையின் ஆற்றல் பெருகி உச்சிக்குழியை அடைந்தது, ஆறாதாரங்களையும் தாண்டிச் சென்ற அக்கினி கலையே ஆன்மாவைத் தழைக்கச் செய்தது.

*1040.* *கொடியாறு சென்று குலாவிய குண்டம்*
*அடியிரு கோணமாய் அந்தமும் ஒக்கும்*
*படியே மூலகும் பரந்த கடரை*
*மடியாது கண்டவர் மாதன மாமே.*

சித்ரணி என்னும் நாடி வழியே சென்று விளங்கிய பிரணவமாகிய குண்டம், மூலாதாரம் முதல் சகஸ்ரதளம் முடிய ஒன்றாய் ஒத்திருக்கும், முறையாக ஏழு ஆதாரங்களிலும் விரிந்த ஒளியை, சோம்பலின்றிக் கண்டவர் பெருஞ்செல்வம் பெற்றவராவர்.

*1041.* *மாதன மாக வளர்கின்ற வன்னியைச்*
*சாதன மாகச் சமைந்த குருவென்று*
*போதன மாகப் பொருந்த உலகாளும்*
*பாதன மாகப் பரிந்தது பார்த்தே.*

பெருஞ்செல்வமாக வளர்கின்ற மூலாக்கினியை, பயிலும் சாதனமாகக் கொண்ட குருவானவர், எப்போதும் உபதேசத்தைச் செய்யும் ஆற்றல் உடையவராகி, உலகை நடத்தும் அருட்செல்வராக விளங்கி அவ்வக்கினியை அன்புடன் நேசித்திருப்பர்.

*1042.* *பாத்திடம் எங்கும் பரந்தெழு சோதியை*
*ஆத்தம தாகவே யாய்ந்தறி வாரில்லை*
*காத்துட லுள்ளே கருதி இருந்தவர்*
*மூத்துடல் கோடி யுகங்கண்ட வாறே.*

பார்த்த இடங்களில் எல்லாம் பரந்து எழுகின்ற சோதியாகிய சிவனை, அன்போடு ஆய்ந்து அறிவார் யாரும் இல்லை, அப்பேரொளியினைத் தேகமாகிய ஓம குண்டத்திலே காத்து உள்ளே தியானிப்பவர், அறிவில் முதிர்ந்தவராய்க் கோடி யுகங்கள் கண்டவராவர்.

*1043.* *உகங்கண்ட ஒன்பது குண்டமும் ஒக்க*
*அகங்கண்ட யோகியுள் நாடி எழுப்பும்*
*பகங்கண்டு கொண்டஇப் பாய்கரு வொப்பச்*
*சகங்கண்டு கொண்டது சாதன மாமே.*

மிகப் பழமையான ஒன்பது குண்டங்களையும், ஒருசேர அகத்திலே தரிசித்த யோகி ஒளிமயமாக எழும்படி செய்வான், யோனி குண்டத்தைக் கண்டு பாய்கின்ற கருவினை ஒப்ப, உலகத்தைத் தம்முள்ளே காணுவதே சாதனமாகும்.

*1044.* *சாதனை நாலு தழல்மூன்று வில்வயம்*
*வேதனை வட்டம் விளையாறு பூநிலை*
*போதனை போதைஞ்சு பொற்கய வாரண*
*நாதனை நாடு நவகோடி தானே.*

முக்கோணம், அர்த்த சிந்திரன், வட்டம், அறுகோணம், அட்டகோணம், பதுமம், யோனி, நீள்வட்டம், இவ்வொன்பதும், ஒன்பது கோணமுடைய குண்டங்களாம்.

## 5. சத்திபேதம் - திரிபுரை சக்கரம்

சத்தி பேதமாவது, சத்தியே கலைமகள், அலைமகள், மலைமகளாகவுள்ள பேதம், திரிபுரை - மும்மண்டல நாயகி, இவளே பரமேசுரனோடு அபின்னமாகப் பிரிப்பின்றியிருந்து பஞ்சக்கிருத்தியம் செய்ய வல்லவள், இதனைப் பற்றி விரிவாகப் பேசுவது இப்பகுதி என்க.

*1045.* *மாமாயை மாயை வயிந்தவம் வைகரி*
*ஓமாயை உள்ளொளி ஓராறு கோடியின்*
*தரமான மந்திரஞ் சத்திதன் மூர்த்திகள்*
*ஆமா யலவாந் திரிபுரை யாங்கே.*

அசுத்த மாயையாக, விந்துவாக, வைகரி வாக்காக, ஓம் என்னும் பிரணவமாக, உள் ஒளியாக, ஓர் ஆறு தொகுதியில், தாமேயான மந்திரமாகவும் சத்தியினது மூர்த்தியாகவும், அவற்றைக் கடந்து அல்லவாகவும் விளங்குவாள் திரிபுரை.

*1046.* *திரிபுரை சுந்தரி அந்தரி சிந்துரப்*
*பரிபுரை நாரணி யாம்பல வன்னத்தி*
*இருள்புரை ஈசி மனோன்மணி என்ன*
*வருபல வாய்நிற்கு மாமாது தானே.*

அக்கினி, சூரியன், சந்திரன் என்ற மூன்று கண்டங்களாக விளங்குபவள், பேரழகு வாய்ந்தவள், ஆகாய வடிவானவள், உலகைப் பரிந்து காக்கும் செவ்வொளியுள் உள்ளவள், நாரணனுக்குத் திதித்தொழிலை நடத்த மாயா உருவை வழங்கியவள், பலவாகிய நிறத்தையுடையவள், மகேசன் சத்தியாகிக் கரு நிறத்தில் விளங்கபவள், சதாசிவ சத்தியாகி நினைப்பவர் மனத்தில் விளங்குபவள், இவ்வாறாகத் திரிபுரதேவி ஒருத்தியே பலசத்திகளாக விளங்குகிறாள்.

*1047.* *தானா அமைந்தவம் முப்புரந் தன்னிடைத்*
*தானான மூவுரு வோருருத் தன்மையள்*
*தானான பொன்செம்மை வெண்ணிறத் தாள்கல்வி*
*தானான போகமும் முத்தியும் நல்குமே.*

இயல்பாகவே அமைந்த முப்புரங்களில் (முப்புரமாவது சிரசின்மேல் விளங்கும் விந்து மண்டலம்). தானே மூவுருவும் ஓர் உருவாந் தன்மையுடையவள், தானே பொன் செம்மை வெண்மை ஒளியுடையவள், போகத்தையும் மோட்சத்தையும் கல்வியையும் அளிப்பவனாக விளங்கும்.

*1048.* *நல்குந் திரிபுரை நாதநா தாந்தங்கள்*
*பல்கும் பரவிந்து பாரண்ட மானவை*
*நல்கும் பரைஅபி ராமி அகோசரி*
*புல்கு மருளுமப் போதந்தந் தாளுமே.*

திரிபுரை நாதத்தையும் நாதம் கடந்து நிலையையும் தந்தருளுவாள், பரவிந்துவாக இருந்து பெருகுகின்ற உலகம் முதலான அண்டங்களை நல்குவாள், பரையும் அபிராமியும் அகோசரியும் ஆகிய அன்னை அன்போடு தழுவி அருளுவாள், பின் அந்த அறிவினை வழங்கி ஆட்கொள்வாள்.

*1049.* *தாளணி நூபுரஞ் செம்பட்டுத் தானுடை*
*வாரணி கொங்கை மலர்க்கன்னல் வாளிவில்*
*ஏரணி அங்குச பாசம் எழில்முடி*
*காரணி மாமணிக் குண்டலக் காதிக்கே.*

அழகிய காலணி சிலம்பு, செம்பட்டு உடை, கச்சு கொங்கையில் அணி செய்வது, மலர் அம்பு, கரும்பு வில், எழுச்சியைத் தரும் அங்குச பாசமும், அழகிய கிரீடமும், கருமையான நீல நிறக் குண்டலத்தையும் உடைய தேவிக்கு ஆம்.

*1050.* *குண்டலக் காதி கொலையிற் புருவத்தன்*
*கொண்ட வரத்த நிறமன்னு கேலத்தள்*
*கண்டிகை யாரங் கதிர்முடி மாமதிச்*
*சண்டிகை நாற்றிசை தாங்கிநின் றானே.*

குண்டலங்களைக் காதில் அணிந்தவள், கொல்லும் தன்மையுடைய வில் போன்ற வளைந்த புருவத்தையுடையவள், செந்நிறத் திருமேனி கொண்டு விளங்குபவள், தோளணியையும், கழுத்தணியையும் ஒளி விடுகின்ற முடியினையும் சந்திரனையும் உடைய சண்டிகாதேவி, நான்கு திசைகளையுடைய உலகங்களைக் காப்பவளாவாள்.

*1051.* *நின்ற திரிபுரை நீளும் புராதனி*
*குன்றலில் மோகினி மாதிருக் குஞ்யீசகை*
*நன்றறி கண்டிகை நாற்கரற் கரீடணி*
*துன்றிய நற்சுத்த தாமரைச் சுத்தையே.*

உயிர் உய்யக் கலந்து நிற்கும் அம்மை திரிபுரையாவாள், நிலைபெற்ற தொன்மையால், குறையாத அழகுடையவள், இவள் சீவர்களின் சிரசுக்குமேலுள்ள சிகையில் விளங்குபவள், நன்றா அறியும் கண்களையுடையவள், நான்கு திசை இடங்களில் உள்ளனவற்றைத் தன்பால் இழுக்கும் செயல் புரிபவள், சுத்த தாமரையாகிய சகஸ்ரதளத்தில் விளங்கும் சுத்த வித்தியாதேவியாகும்.

*1052.* *சுத்தவம் பாரத் தனத்தி சுகோதயன்*
*வத்துவ மாயா ளுமாசத்தி மாபரை*
*அத்தகை யான மனோரணி தாணுமாய்*
*வைத்தவக் கோல மதியவ ளாகுமே.*

தூய்மையான கச்சினையும் மாலையையும் அணிந்தவள், இன்ப ஊற்றாகும் இயல்பினள், பொருளாகக் கொண்டு சீவர்களை ஆட்கொள்கின்ற பெரிய சத்தி, பராபரை, அவ்வாறான மனமாகிய காட்டில் வசிப்பவன்ள், தானேயாகப் படைத்துக்கொண்ட வடிவத்தையுடைய ஞான சொரூபியாக ஆவாள் அல்லது தானேயாக விளங்கும் சந்திரமண்டலம் ஆவாள்.

*1053.* *அவைள யறியா அமரரும் இல்லை*
*அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை*
*அவளன்றி ஐவரால் ஆவதொன் றில்லை*
*அவளன்றி ஊர்புகு மாறறி யேனே.*

சந்திர மண்டலத்தில் விளங்கும் அச்சத்தியை ஒளி மண்டல வாசிகளாகிய தேவர்கள் உணராமல் இல்லை, ஒளி மண்டல மயமான தேவியை அறியாது செய்யும் அருமையான தவம் வேறு இல்லை, சந்திர மண்டலத்திலிருந்து கொண்டுதான் பிரம்மா, விஷ்ணு, உருத்திரர், மகேசுவர், சதாசிவர் ஆகிய ஐவரும் சீவர்களைத் தொழிற்படுத்துகின்றனர், ஆகையால் அவளை அறியாது வீடு புகும் நெறியை நான் காணவில்லை.

*1054.* *அறிவார் பராசத்தி ஆனந்தம் என்பர்*
*அறிவா ரறிவுரு வாமவள் என்பர்*
*அறிவார் கரும மவளிச்சை என்பர்*
*அறிவார் பரனு மவளிடத் தானே.*

ஞானிகள் பராசத்தி ஆனந்த வடிவினள் என்பவர், அறிவுரு வடிவில் விளங்குபவள் என்பர், நாம் செய்யும் செயல் அனைத்தும் அவளது இச்சை வழி நடப்பன என்பர், பரமசிவனும் அவளிடம் எழுந்தளியிருப்பவரே என்பர் ஞானியர்.

*1055.* *தானெங் குளனங் குளதையன் மாதேவி*
*ஊனெங் குளஅங் குள்ளுயிர்க் காவலன்*
*வானெங் குளஅங் குளேவந்து மப்பாலாம்*
*கோனெங்கும் நின்ற குறிபல பாரே.*

சிவமாகிய தான் எங்கு உள்ளதோ அங்கு உள்ளது தையலாகிய பராசக்தி, ஊனாலாகிய உடல் எங்கோ அங்கு உயிர்க்குயிராகிக் காவலனாக இருப்பவள், ஆகாயம் எங்கெங்கு உள்ளதோ அங்கங்கெல்லாமும் அதற்கு அப்பாலாம் பரவெளியிலும் விளங்கும், அவ்வாறு தலைவனாகத் தேவியே நின்ற குறிப்புகளை ஆராய்ந்து அறிக.

*1056.* *பராசத்தி மாசத்தி பல்வகை யாலுந்*
*தராசத்தி யாய்நின்ற தன்மை யுணராய்*
*உராசத்தி ஊழிகள் தோறும் உடனே*
*பராசத்தி புண்ணிய மாகிய போகமே.*

பராசத்தியே பல வகையாலும் மேன்மை வாய்ந்தவள், யாவற்றையும் தாங்கும் ஆதார சத்தியாய் நின்ற தன்மை உணர்க, எங்கும் பரவுகின்ற சத்தியும் அவளே, எல்லா ஊழிகளிலும் ஆருயிர்களைக் காக்கும் ஆற்றல் உடையவளும் அவளே, புண்ணிய தந்தருளும் வாழ்வும் அவளேயாம்.

*1057.* *போகஞ்செய் சத்தி புரிகுழ லாளொடும்*
*பாகஞ்செய் தாங்கே பராசத்தி யாய்நிற்கும்*
*ஆகஞ்செய் தாங்கே அடியவர் நாள்தொறும்*
*பாகஞ்செய் ஞானம் படர்கின்ற கொம்பே.*

சீவர்களுக்குப் போகத்தை ஊட்டுபவள், குண்டலினி சத்தியோடு பொருந்திச் சீவர்களுக்குப் பரிபாகத்தைச் செய்து பராசத்தியாய் நிற்கும், அடியார்களுக்கு நாள்தோறும் வளர்கின்ற ஒளியுடலை அளித்து, பரிபாகம் உண்டாகும்படி செய்யும் கொழுகொழும்பாகவும் விளங்குவாள்.

*1058.* *கொம்பனை யானைக் குவிமுனை மங்கையை*
*வம்பவிழ் கோதையை வானவர் நாடியைச்*
*செம்பவ ளத்திரு மேனிச் சிறுமியை*
*நம்பிஎன் உள்ளே நயந்துவைத் தேனே.*

கொழுகொம்பானவளை, குவிந்த தனத்தையுடைய பெண்ணை, தேன் துளிக்கும் பூக்களை அணிந்த திருமுடியையுடைய திரிபுரையை, வானோர் விரும்பும் விழுப்பொருளை, செம்மையான பவளம் போன்ற திருமேனியை உடையவளை, நான் இலட்சியமாகக் கொண்டு என் மனத்தினில் விரும்பி வைத்தேன்.

*1059.* *வைத்த பொருளும் மருவுயிர்ப் பன்மையும்*
*பத்து முகமும் பரையும் பராபரைச்*
*சித்தக் கரணச் செயல்களுஞ் செய்திடுஞ்*
*சத்தியும் வித்தைத் தலையவ ளாமே.*

உலகில் உண்டு பண்ணி வைத்த பொருளும் அவற்றோடு பொருந்திய உயிர்க்கூட்டமும், பத்துத் திசையிலும் நிறைந்து காக்கும் பத்து முகங்களையுடையவளும், பரையும் பராபரையும், அந்தக்கரணம் நான்கனையும் செயல்படுத்துபவளும் ஆகிய தேவி, ஸ்ரீ வித்தைக்கும் தலைவியாம்.

*1060.* *தலைவி தடமுலை மேல்நின்ற தையல்*
*தொலைவில் தவஞ்செயுந் தூய்நெறித் தோகை*
*கலைபல வென்றிடுங் கன்னியென் உள்ளம்*
*நிலைபெற இங்கே நிறைந்துநின் றாளே.*

சுத்த வித்தைக்குத் தலைவி, விசாலமான மார்பிடத்துக்கு மேல் சூழவுள்ள சந்திர மண்டலத்தில் விளங்குபவள், அழியாத தவத்தைச் செய்யும் தூய்மையான நெறிகளை அருளிய தோகை மயில் போல்வாள், சகல கலைகளையும் வென்று மேம்பட்ட இளமை நலங்குன்றாத கன்னி, என் உள்ளத்தில் நிலைபெற இங்குப் பூரணமாக நின்றாள்.

*1061.* *நின்றவள் நேரிழை நீள்கலை யோடுற*
*என்றள் அகம்படிந் தேழுல குந்தொழ*
*மன்றது வொன்றி மனோன்மனி மங்கலி*
*ஒன்றெனோ டொன்றிநின் றொத்தடைந் தாளே.*

இவ்வாறு சித்ரணி என்னும் நாடியில் நின்ற பராசத்தி பூரண கலையோடு பொருந்த, என்னுடைய உள்ளத்திலே பொருந்தி, ஏழுலகத்தாரும் வணங்க, சகஸ்ர தளத்தில் ஒன்றுபட்டு, மனோன்மனியாய் மங்கலப் பொருளாய், நான் வேறு அவள் வேறு என்று பிரித்தறிய முடியாதவாறு ஒத்து நிலை பெற்றனள்.

*1062.* *ஒத்தடங் கும்கம லத்திடை யாயிழை*
*அத்தகை செய்கின்ற வாய பெரும்பதி*
*மத்தடை கின்ற மனோன்மனி மங்கலி*
*சித்தடைக் கும்வழி தேர்ந்துண ரார்களே.*

அங்ஙனம் ஒத்து அடங்கி நிற்கும் சகஸ்ரதள கமலத்திலுள்ள பராசத்தியும், அவ்வண்ணமாகச் செய்கின்றவாகிய பெரிய தலைவனான சிவனை, களித்துக் கூடுகின்ற மனோன்மனியும் மங்கலமாயுள்ளவளுமாகிய சிவசத்தியை, சித்தத்தில் நிறுத்தும் உபாயத்தைத் தெளிவு பெற்று அறியவில்லை.

*1063.* *உணர்ந்துட னேநிற்கும் உள்ளொளி யாகி*
*மணங்கமழ் பூங்குழல் மங்கையுந் தானும்*
*புணர்ந்துட னேநிற்கும் போதருங் காலைக்*
*கணிந்தெழு வார்க்குக் கதியளிப் பாளே.*

சிவ ஒளியில் பொருந்தி அனைத்தையும் உணர்ந்து உடனாய் நிற்கும், இயல்பாகவே மணமுள்ள பூவினை அணிந்த கூந்தலையுடைய சத்தியும் தானுமாய்க் கூடி நிற்கும், அந்நிலையில் எழுந்தருளும்போது எண்ணுவார்க்கு நன்னிலையை அளித்தருளுவாள்.

*1064.* *அளியொத்த பெண்பிள்ளை ஆனந்த சுந்தரி*
*புளியுறு புன்பழம் போலுள்ளே நோக்கித்*
*தெளியுறு வித்துச் சிவகதி காட்டி*
*ஒளியுற வைத்தென்னை உய்யவுண் டாளே.*

கருணையால் அனைவரிடத்தும் ஒத்து விளங்குகின்ற பராசத்தி ஆனந்தமே வடிவான அழகியாவாள், ஓட்டுடன் பொருந்தியுள்ள புளியம்பழத்தைப் போலவுள்ள என் இயல்பை நோக்கி, பக்குவம் உண்டாக்கிச் சிவகதியைக் காட்டி தன்னொளியில் ஒன்றாக்கிக் கொண்டாள்.

*1065.* *உண்டில்லை என்ற துருச்செய்து நின்றது*
*வண்டில்லை மன்றினுள் மன்னி நிறைந்தது*
*கண்டிலர் காரண காரணி தம்மொடு*
*மண்டல மூன்றுற மன்னிநின் றாளே.*

உலகோர் உண்டு என்றும் இல்லை என்றும் கூறிய சத்தியே சூக்குமத்தைத் தூலமாகச் செய்தது, வளப்பம் பொருந்தியதில்லை மன்று என்று கூறப்பெறும் சகஸ்ரதளத்தில் நிலைபெற்று நின்றது, ஆன்மாவின் பந்த மோட்சங்களுக்குக் காரணம் அறிவுருவான சிவத்தினிடம் உள்ளது என்பதையும் அதனைத் தொழிலுக்கு விடுவது சத்தி என்பதையும் உலகோர் அறிவதில்லை. ஆன்மாக்களது அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம் ஆகிய மூன்றிலும் நிலைபெற்று விளங்கினாள்.

*1065.* *நின்றா ளவன்தன் உடலும் உயிருமாய்ச்*
*சென்றாள் சிவகதி சேரும் பராசத்தி*
*ஒன்றாக என்னுட் புகுந்துணர் வாகியே*
*நின்றாள் பரஞ்சுடர் ஏடங்கை யாளே.*

பராசத்தி சீவர்களின் உடலும் உயிருமாக நின்றாள், சிவகதியில் சீவனைச் சேர்க்க விரும்பிய பராசத்தி சந்திர மண்டலத்தை நோக்கி ஊர்த்துவ முகம் கொண்டு சென்றாள், அவள் உடலில் விளங்கிய போது எனது உணர்வில் பொருந்தி ஒன்றாகவே புகுந்து நின்றாள், இவள் வேதமாகிய வாக்கை ஏந்தி நிற்கும் ஒளி வடிவானவள்.

*1067.* *ஏடங்கை நங்கை இறைஎங்கள் முக்கண்ணி*
*வேடம் படிகம் விரும்பும்வெண் தாமரை*
*பாடுந் திருமுறை பார்ப்பதி பாதங்கள்*
*சூடுமின் சென்னிவாய்த் தோத்திரஞ் சொல்லுமே.*

வாக்கு ரூபத்தில் விளங்குபவள், எங்களது இறைவி மூன்று கண்களையுடைய, படிகம் போன்ற தூய வெண்ணிறத்தாள், வெண் தாமரையாகிய சகஸ்ரதளத்தில் விரும்பி இருப்பவள், நாதமயமாய் விளங்குபவள், இவளைச் சிரசில் அறியுங்கள், புகழ்ந்து இவளைத் துதியுங்கள்.

*1068.* *தோத்திரஞ் செய்து தொழுது துணையடி*
*வாய்த்திட ஏத்தி வழிபடு மாறிரும்*
*பார்த்திடு மங்குச பாசம் பகங்கரும்*
*பார்த்துடும் பூம்பிள்ளை யாகுமாம் ஆதிக்கே.*

தோத்தரித்து, அவளது இரு திருவடிகளாகிய சூரிய சந்திரர்களை ஒன்றுசேர்த்து வணங்கி, ஒலி, ஒளிகள் அமையுமாறு இருங்கள், தியானத்தில் அங்குசம், பாசம் பசுமையான கரும்பு ஆகிய இவற்றுடன் பொருந்திய மெல்லியலை, அதித் தலைவியாகக் காணவும்.

*1069.* *ஆதி விதமிகுத் தண்டந்த மால்தங்கை*
*நீதி மலரின்மேல் நேரிழை நாமத்தைப்*
*பாதியில் வைத்துப் பல்காற் பயில்விரேல்*
*சோதி மிகுந்துமுக் காலமுந் தோன்றுமே.*

சிருட்டியைப் பெருகுமாறு செய்த குளிர்ச்சி பொருந்திய நீர்ப் பிரதேசத்திலுள்ள திருமாலின் தங்கையாகிய நாராயணியும், சகஸ்ரதளத்தின்மேல் சுழுமுனையில் விளங்குபவளும் ஆகிய தேவியின் மந்திரத்தை, சிவசத்தியமாகக் கருதிப் பலகால் தியானம் செய்வீராகில், சூக்கும உடல் ஒளிமயமாக விளங்கி இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய முக்காலம் தோன்றும்.

*1070.* *மேதாதி ஈரெட்டு மாகிய மெல்லியல்*
*வேதாதி நூலின் விளங்கும் பராபரை*
*ஆதார மாகியே ஆய்ந்த பரப்பினன்*
*நாதாதி நாதத்து நல்லரு ளாளே.*

அகரம் முதல் உன்மனை ஈறாகவுள்ள பதினாறு கலைகளையும் வடிவமாகவுடையவள், வேதம் முதலாகவுள்ள நூல்களில் பரமாகவும் அபரமாகவும் புகழ்ந்து பேசப்பட்டவள், சீவர்களின் இருப்புக்கு ஆதாரமாய் விளங்குபவள், நாதம் நாதாந்தத்தில் விளங்கும் சிவத்துக்கு இவளே அருட்சத்தியும் ஆவாள்.

*1071.* *அருள்பெற் றவர்சொல்ல வாரீர் மனிதர்*
*பொருள்பெற்ற சிந்தைப் புவனா பதியார்*
*மருளுற்ற சிந்தையை மாற்றி யருமைப்*
*பொருளுற்ற சேவடி போற்றுவன் நானே.*

மெய்ப் பொருளைத் தனக்கே உரிமையாகப் பெற்ற அருள்வழங்கும் தன்மையுடைய சகலபுவன நாயகியான திரிபுரை, மயக்கத்தைத் தரும் பிரப'சத்தைப் பற்றிய சீவர்களது சித்தத்தை மாற்றி, நிலையான பந்தமற்ற புவனங்களைப் பொருந்திய திருவடியை நான் வணங்குவேன், மனிதர்கள்! இவ்வுண்மையை அனுபவத்தில் கண்ட நீங்கள் பிறருக்கு எடுத்துச் சொல்ல முன் வாருங்கள்.

*1072.* *ஆன வராக முகத்தி பதத்தினன்*
*ஈன வராகம் இடிக்கும் முசலத்தோ*
*டேனை யுழுபடை ஏந்திய வெண்ணகை*
*ஊன மறவுணர்ந் தாருளத் தோங்குமே.*

தேவியைச் சூழவுள்ள சப்த மாதர்களில் ஒருத்தியான வராகி என்பாள் வராக முகத்தோடு கூடிய அடையாளத்தை உடையவள், இழிந்தோர் உடலை இடித்து வருந்துகின்ற உலக்கையோடு, மற்றை கலப்பை ஏந்திய கைகளையும் வெண்மையான நகையினையும் உடையவள், அவள் குற்றமற்ற ஊனுடலைக் கடந்து தியானிப்பவர் உள்ளத்தில் சிறந்து விளங்குவாள்.

*1073.* *ஓங்காரி என்பா ளவனொரு பெண்பிள்ளை*
*நீங்காத பச்சை நிறத்தை யுடையவள்*
*ஆங்காரி யாகியே ஐவரைப் பெற்றிட்டு*
*ரீங்காரத் துள்ளே யிளிதிருந் தானே.*

பிரணவ வடிவமான தேவியே பஞ்ச கிருத்திய நிலைக்கு வரும்போது பஞ்ச கிருத்தியங்களுக்கும் தலைவியாவாள், ஓங்கார சத்தி பச்சை நிறத்தில் விளங்குபவள், இவளே அகங்காரத் தத்துவத்துடன் பொருந்தி விளங்கும்போது சதாசிவர், மகேசுரர், உருத்திரர், விஷ்ணு, பிரமன் ஆகியோர்களைத் தனது அம்சமாக உண்டாக்கிவிட்டு, ஹ்ரீம் என்னும் மந்திர பீசத்துள் எழுந்தளியிருந்தாள்.

*1074.* *தானே தலைவி யெனநின்ற தற்பரை*
*தானே உயிர்வித்துத் தந்த பதினாலும்*
*வானோர் தலமும் மனமும்நற் புத்தியந்*
*தானே சிவகதி தன்மையு மாமே.*

தானே எல்லாவற்றிக்கும் தலைவியாக நின்ற பராசத்தி, தானே வாக்கு ரூபமாக விளங்கும் பதினான்கு வித்தைகளும், தேவ லோகங்களையும் மனமண்டலத்தையும் நுண்ணறிவையும் கடந்த நாதாந்தமும், தானே சிவகதியை அளிப்பவளும் ஆவாள்.

## 6. வயிரவி மந்திரம்

வயிரவி - வயிரவிக் கடவுளின் சத்தி. வயிரவியை நினைவுகூர்வது வயிரவி மந்திரம்.

*1075.* *பன்னிரண் டாங்கலை யாதி பயிரவி*
*தன்னில் அகாரமு மாயையுங் கற்பித்துப்*
*பன்னிரண் டாதியோ டந்தம் பதினாலுஞ்*
*சொன்னிலை சோடச மந்தமென் றோதிடே.*

உயிரெழுத்து வரிசையில் பன்னிரண்டாவது எழுத்தாகிய 'ஐ' என்பதால் உணர்த்தப்பெறும் ஆதி பயிரவி பீசத்தில், அகரமாகிய பிரணவத்தையும் மாயையாகிய 'ம்' என்பதையும் சேர்த்து, ஓம் ஐம் என்ற பதினான்கும், சொல் நிலையாகவுள்ள பதினாறு கலை முடிவாம் என்று செபிப்பாயாக.

*1076.* *அந்தப் பதினாலும் அதுவே வயிரவி*
*முந்து நடுவும் முடிவும் முதலாகச்*
*சிந்தை கமலத் தெழுகின்ற மாசத்தி*
*அந்தமும் ஆதியு மாகின் றானே.*

முன்னர்க் கூறிய பதினான்கு எழுத்தாகவுள்ள வயிரவியே, ஞானேந்திரிய அந்தக்கரணங்களாகிய பதினான்கையும் சீவர்களோடு பொருந்திப் படைத்துக் காத்து அழித்தல் முதலாகச் செய்து, சிந்தையாகிய தாமரையில் எழுகின்ற பெரிய சத்தியும் ஆவாள், அவளே முடிவும் முதலுமானவளாக உள்ளாள்.

*1077.* *ஆகின்ற மூவரும் அங்கே அடங்குவர்*
*போகின்ற பூதம் பொருந்து புராதரர்*
*சார்கின்ற சார்வழிச் சாரார் சதிர்பெறப்*
*போகுந் திரிபுரை புண்ணியத் தோரே.*

வயிரவி உபாசனையில் பிரமன், விஷ்ணு, உருத்திரர் ஆகிய மூவரும் அங்கே அடங்குவர், அழியுந்தன்மையுடைய ஐம்பூதத்தாலாகிய உடம்பைப் பொருந்திய அநாதியான ஆன்மாக்கள், அடைகின்ற இடத்தை அடையார், யார்? ஆற்றல் பொருந்தச் செல்லும் திரிபுரையை வழிபட்ட புண்ணியமுடையவர்கள்.

*1078.* *புண்ணிய நந்தி புனிதன் திருவாகும்*
*எண்ணிய நாட்கள் இருபத்தேழ் சூழ்மதி*
*பண்ணிய வன்னி பகலோன் மதியீறு*
*திண்ணிய சிந்தைதன் தென்னனு மாமே.*

புண்ணியனும் நந்தியும் தூயவனும் ஆகிய சிவன் நாதசத்திக்குத் தலைவன் ஆவான், அவன் விளங்கும் சிரசின்மேல் வானராசி மண்டலத்தைச் சந்திரன் சுற்றுவது வட்டமாய், இவ்வட்டத்தில் சூரியனும் சுற்றி வந்து வட்டம் பூர்த்தியானால் அங்கு விளங்குவது அக்கினி கலையாகும், அவ்வக்கினி கலையை அறிந்து தியானிப்பவர் நிறைந்த சிந்தையராய்ச் சிவமாவர்.

*1079.* *தென்னன் திருநந்தி சேவகன் தன்னொடும்*
*பொன்னங் கிரியில் பூதலம் போற்றிடும்*
*பன்னும் பரிபிடி யந்தம் பகவனோ*
*டுன்னுந் திரிபுரை ஓதிநின் றானுக்கே.*

வேதங்கள் ஹ்ரீங்காரத்தைச் சத்திப் பிரணவம் என்று கூறும், அது சமவாயமாகும் இடம் ஓங்காரம், இவ்விதமான சிவசத்தியை அறிந்து திரிபுரரையைச் சேவிப்பவர், அழகனும் திருநத்தியும் சேவகனுமாகிய சிவனுடன், சகஸ்ரதளத்தில் பொன்னொளியில் வாழ்வர்.

***1080.*** ***ஓதிய நந்தி உணருந் திருவருள்***
***நீதியில் வேத நெறிவந்த துரைசெய்யும்***
***போதம் இருபத் தெழுநாள் புணர்மதி***
***சோதி வயிரவி சூலம்வந் தாளுமே.***

விரும்பி குரு மண்டலத்தில் தியானித்திருக்கும் உண்மை நிலையை உணரும் பராசத்தி, நேர்மையாக நாதவழியில் சீவனுக்கு உபதேசம் செய்தருளுவாள், அவ்விதம் உபதேசிக்கப்பட்டவருக்குச் சந்திர வட்டமாகிய சோடா கலை பொருந்தும், சோதி வடிவான வயிரயின் சூலம் வந்து உடலில் விளங்கிச் சோதியாக மாற்றியருளும்.

***1081.*** ***சூலங் கபாலங்கை ஏந்திய சூலிக்கு***
***நாலாங் கரமுள நாகபா சாங்குச***
***மாலங் கயனறி யாத வடிவுக்கு***
***மேலங்க மாய்நின்ற மெல்லிய லாளே.***

சூலத்தையும் கபாலமாகிய மண்டை ஓட்டையும் கையிலே தாங்கியுள்ள துர்க்கைக்கு, நான்கு கைகள் உள்ளன, ஏனைய இரு கைகளிலே நாக பாசத்தையும் அங்குசத்தையும் தாங்கியுள்ளாள், திருமாலும் பிரமனும் அறியாத வடிவுடைய சிவனுக்கு, மேலான அங்கமாக நின்ற மென்மையுடைய சூலினி துர்க்கையாவாள்.

***1082.*** ***மெல்லியல் வஞ்சி விடமி கலைஞானி***
***சொல்லிய கிஞ்சுக நிறமன்னு சேயிழை***
***கல்லியல் ஒப்பது காணுந் திருமேனி***
***பல்லிய லாடையும் பன்மணி தானே.***

சீந்திற்கொடி போன்று கீழ்நோக்கியும் மேல்நோக்கியும் படருந்தன்மையள், நெறியினின்றும் தவறுகின்றவர்களைத் தண்டிப்பவள், எல்லாக் கலைகளில் விளங்கும் அறிவை ஒருசேரப் பெற்றவள், சொல்லப்பெறுகின்ற முள் முருக்கம் பூப்போன்ற சிவந்த நிறத்தையுடைவள், இரத்தினக் கல்லின் பிரகாசம் போன்ற பிரகாசத்தை உடையவள், அவளுடைய திருமேனி நானாவித சோபித மணியால் ஆக்கப்பட்ட ஆடையால் அலங்கரிக்கப்பட்டது.

***1083.*** ***பன்மணி சந்திர கோடி திருமுடி***
***சொன்மணி குண்டலக் காதி யுழைக்கண்ணி***
***நன்மணி சூரிய சோம நயனத்தள்***
***பொன்மணி வன்னியும் பூரிக்கின் றாளே.***

நிராதாரக் கலைகள் விளங்கும் சந்திரமண்டலம், பல மணிகளால் இழைக்கப்பட்ட முடியாம், சொல்லப்பட்ட சோபிதமான ஆகாயத்தைக் காதாகவுடையவள், தோழியாகவுள்ளவள், நல்ல சோபிதமான சூரியனையும் சந்திரனையும் கண்களாகவுடையவள், பொன்னைப் போன்று சொலிக்கின்ற ஒளியில் எங்கும் நிறைந்திருக்கின்றாள்.

***1084.*** ***பூரித்த பூவிதழ் எட்டினுக் குள்ளேயோர்***
***ஆரியத் தாளுண்டங் கெண்மர் கன்னியர்***
***பாரித்த பெண்கள் அறுபத்து நால்வருஞ்***
***சாரித்துச் சத்தியைத் தாங்கள்கண் டாரே.***

சிரசின் மேல் விரிந்துள்ள எட்டிதழ்க் கமலத்தின் நடுவுள், ஒப்பற்ற தெய்வத் தன்மை பொருந்திய திரிபுரை (மனோன்மணி) உள்ளாள், அங்கு அவளைச் சூழ எட்டுக் கன்னியர் உள்ளனர், ஒவ்வொரு சத்திக்கும் எட்டு எட்டுச் சத்தியாக அறுபத்து நான்கு சத்திகளும், சூழ்ந்து சத்தியைத் தரிசித்து நிற்கின்றார்கள்.

***1085.*** ***கண்ட சிலம்பு வளைசங்கு சக்கரம்***
***எண்டிகை யோகி இறைவி பராசத்தி***
***அண்டமோ டெண்டிசை தாங்கும் அருட்செல்வி***
***புண்டரி கத்தினுட் பூசனை யாளே.***

ஆராய்ந்து கண்ட சிலம்பு வளை சங்கு சக்கரம் ஆகிய அணிகளை, அணிந்த எட்டுத் திக்குகளிலும் நிறைந்திருக்கின்ற பராசத்தி, எல்லா அண்டங்களையும் திசைகளையும் தாங்கி நிற்கும் திருவருட்செல்வியாவாள், அவள் சிரசின்மேல் சகஸ்ரதளத்தில் பூசிக்கத் தகுந்தவள்.

***1086.*** ***பூசனை கெந்தம் புனைமலர் மாகோடி***
***யோசனை பஞ்சத் தொவிவந் துரைசெய்யும்***
***வாசமி லாத மணிமந் திரயோகந்***
***தேசந் திகழுந் திரிபுரை காணே.***

பூசைக்குரிய பொருள் பிருதிவி மயமான வீரியம், ஆற்றலின் எல்லையே அவளுக்குச் சாற்றும் மலராகும், அவளைச் சிந்திப்பதால் குயில் ஒலி போன்ற நாதம் கேட்கும், இதுதான் வாசகமில்லாத மேன்மையான மந்திரயோகம் ஆகும். இதனை அறிந்து ஒளிவடிவாய் விளங்கும் திரிபுரையைத் தரிசிக்கவும்.

***1087.*** ***காணும் பலபல தெய்வங்கள் வெவ்வேறு***
***பூணும் பலபல பொன்போலத் தோற்றிடும்***
***பேணுஞ் சிவனும் பிரமனும் மாயனுங்***
***காணுந் தலைவிநற் காரணி காணே.***

காணுகின்ற பலபல தெய்வங்கள், வெவ்வேறு அணிகலன்களாத் தோன்றும் பொன் போலத் தேவியின் பேதமாக விளங்கிடும் (பொன்னின் பேதமே பல அணியதால் போல் தேவியின் பேதமே பல தெய்வங்களாம் என்க). பெருமையாகப் போற்றும் சிவனும் பிரமனும் திருமாலும், பிறதெய்வங்களாக விளங்குவது சகத்துக்குக் காரணமாகிய தேவியால்தான் என்று அறிவாயாக.

***1088.*** ***காரணி மந்திரம் ஓதுங் கமலத்துப்***
***பூரண கும்ப விரேசம் பொருந்திய***
***நாரணி நந்தி நடுவங் குரைசெய்த***
***ஆரண வேதநூல் அந்தமு மாமே.***

எல்லா மந்திரங்களும் காரணமாகிய சூக்கும ஓங்காரியைத் தியானிக்கும் சகஸ்ரதளத்தில், வாயுவை வெளிப்படுத்துவதால் அமையும் பூரண கும்பகத்தில் பொருந்திய, காற்றை வெளிப்படுத்தலால் அமையும் பூரண கும்பகத்தில் விளங்கிய நாரணி, குருநாதன் நடுவேயிருந்து கூறியருளிய, வேத உபநிடத முடிவாகவும் உள்ளாள்.

***1089.*** ***அந்த நடுவிரல் ஆதி சிறுவிரல்***
***வந்த வழிமுறை மாறி யுரைசெய்யுஞ்***
***செந்தமி ழாதி தெளிந்து வழிபடு***
***நந்தி இதனை நவமுரைத் தானே.***

மந்திரம் செபிப்போர் நடுவிரல் கீழுள்ள இறை இரண்டும் சிறுவிரலில் உள்ள இறை நான்கும் சுட்டு விரல் இறை நான்கையும், வட்டமாகச் சுற்றிப் பத்து என்று எண்ணுவதை விட்டு முறையை மாற்றி நடுவிரலில் இருந்து சுட்டு விரல் எண்ணிப் பின் சிறுவிரல் இறை முடியப் பத்து என்று எண்ணவும், இவ்வாறு செந்தமிழ் முறையில் வயிரவியைத் தேர்ந்து வழிபடுக, இதுவே நந்தி புதியதாக உரைத்தான்.

***1090.*** ***உரைத்த நவசத்தி ஒன்று முடிய***
***நிரைத்த விராசி நெடுமுறை எண்ணிப்***
***பிரைச்சதம் எட்டுமுன் பேசிய நந்தி***
***நிரைத்து நியதி நியமஞ்செய் தானே.***

சொல்லப்பட்ட சத்திகளுள் ஒன்றாகிய மனோன்மணியை முடியின்மேலும், ஏனைய சத்திகளை வரிசையாகச் சிரசைச் சூழவும் அமைய எண்ணி, பிராசாத கலைகளில் உடம்பில் விளங்கும் எட்டுக் கலைகளை முன்னே பேசிய நந்தி, ஏனைய எட்டும் நிரம்பினதாய் உயிரில் விளங்கும்படி ஒழுங்கு செய்தான்.

***1091.*** ***தாமக் குழவி தயைக்கண்ணி உள்நின்ற***
***வேமத் திருளற வீசும் இளங்கொடி***
***ஓமப் பெருஞ்சுடர் உள்ளெழு நுண்புகை***
***மேவித் தமுதொடு மீண்டது காணே.***

உடலில் சூழல் போன்ற சுழுமுனை நாடியில் விளங்குபவள், அருட்கண்ணையுடையவள், உயிரினிடமாக மயக்கத்தைச் செய்யும் இருளை முற்றிலும் அகற்றும் குண்டலினி (பாலை)யாகவுள்ளாள், மூலாதாராத்தினின்றும் எழுகின்ற மூலக்கனலில் உண்டாகிய மூலவாயுவுடன் பொருந்தி ஒளி மண்டலத்தை உண்டாக்கிவிட்டுத் திரும்புவள், இத்தகைய தேவியை நீ கண்டுகொள்.

***1092.*** ***காணும் இருதய மந்திர முங்கண்டு***
***பேணு நமவென்று பேசுந் தலைமேலே***
***வேணு நடுவு மிகநின்ற வாகுதி***
***பூணு நடுவென்ற வந்தஞ் சிகையே.***

சொல்லும் இருதய மந்திரப் பொருள் உணர்ந்து, சிரசின் மேலுள்ள பீடத்தில் வீற்றிருக்கும் திரிபுரை தேவிக்கு நம என்று நமஸ்காரத்தைச் செய்க, மூங்கில் குழாய் போன்றுள்ள நடு நாடியின் வழியாக உச்சியில் பொருந்தி உன்னுடைய ஆகுதியை ஏற்பாள், உச்சியின் நடுவே விளங்குவது சிகா மந்திரம் என்று அறிவாயாக.

*1093.* *சிகைநின்ற வந்தக் கவசங்கொண் டாதிப்*
*பகைநின்ற வங்கத்தைப் பாரென்று மாறித்*
*தொகைநின்ற நேத்திர முத்திரை சூலம்*
*வகைநின்ற யோனி வருத்தலு மாமே.*

சிகையால் உணர்த்தப்பெற்ற சகஸ்ரதளத்தில் விளங்கும் ஒளியை எங்கும் சூழ்வதாகக் கண்டு, முன்னர்க் காமாதி அரிஷ்ட்வர்க்கங்களாகிய இருள் பொருந்திய அங்கத்தை மாறும்படி செய்து, தொகையாக நின்ற நேத்திரத்திரயமாகிய சூலினி, யோனி முதல் கபாலம் வரை விளங்குபவளாகக் கண்டுகொள்க.

*1094.* *வருத்த மிரண்டுஞ் சிறுவிரல் மாறிப்*
*பொருத்திஅணிவிரற் கட்டிப் பிடித்து*
*தெரித்தொன்ற வைத்து நெடிது நடுவே*
*பெருத்த விரலிரண் டுன்புக்குப் பேசே.*

உள்ளம் பிரகாசமடையச் சிறுவிரலையும் அதனை அடுத்துள்ள மோதிர விரலையும் எதில் முறையில் மாறி மோதிர விரல் பொருந்தும்படி கட்டிப் பிடித்துக் கண்களை அமுக்கி நெரித்தலில் நீண்டுள்ள நடுவிரல் பொருத்தத்தில் பார்வையைச் செலுத்தினால் ஒளி உண்டாகும் அவ்வொளியில் புக முயல்வாயாக.

*1095.* *பேசிய மந்திரம் இகாரம் பிரிந்துரை*
*கூசமி லாத சகாரத்தை முன்கொண்டு*
*வாசிப் பிராணன் உபதேச மாகைக்குக்*
*கூசிய விந்து வுடன்கொண்டு கூடவே.*

வாசியான பிராணன் வசப்படுத்துவதற்குச் சொல்லிய மந்திரமாவது, சொல்லுதற்கு அருமையான சகாரத்தை முன்னிறுத்தி அதனுடன் இகாரத்தைப் பிரித்துக் கூட்டி மாத்திரைக் குறைவான மகாரத்தையும் சேர்த்துப் பேசுக.

*1096.* *கூவிய சீவன் பிராணன் முதலாகப்*
*பாவிய சவ்வுடன் பண்ணும் யகாரத்தை*
*மேவிய மாயை விரிசங்கு முத்திரை*
*தேவி நடுவுள் திகழ்ந்துநின் றாளே.*

இவ்வண்ணம் செபித்த சீவன் பிராணன் மேலேழ, எண்ணிய சகாரத்தால் குறிப்பிடும் சிவத்துடன் யகாரமாகிய ஆன்மாவும் உடன் உறையும், அங்குச் சுத்த மாயை விளங்கும்போது சங்கோசை விரிய, அவ்வோசை நடுவுள் திரிபுரா தேவி சோபிதமாய் நின்றருளுவாள்.

*1097.* *நின்ற வயிரவி நீலி நிசாசரி*
*ஒன்றும் இரண்டும் ஒருங்கிய உள்ளத்துச்*
*சென்றருள் நாயகி தேவர் பிரானுக்கே*
*நன்றருள் ஞாலத்து நாடிடுஞ் சாற்றியே.*

நிலைபெற்ற வயிரவி நீல நிறமுடையவள், இரவில் இயங்குபவள், இராசத தாமத சாத்விகம் ஆகிய முக்குணங்களும் அடங்கிய உள்ளத்துத் தானே வலியச் சென்று அருள் வழங்கும் தலைவி, தேவ தேவனாகிய சிவபெருமானது ஏவல் வழி நன்மையை அருள்பவள், ஆதலால் உலகத்தில் நீங்கள் அவளைப் புகழ்ந்து விரும்புங்கள்.

*1098.* *சாற்றிய வேதஞ் சராசரம் ஐம்பூதம்*
*நாற்றிசை முக்கண்ணி நாடும் இருள்வெளி*
*தோற்றும் உயிர்ப்பன்மை சோதி பராபரை*
*ஆற்றலொ டாய்நிற்கும் ஆதி முதல்வியே.*

சிவனார் மொழிந்த வேதம், இயங்குவன நிற்பன ஆகிய உலகம், இவற்றின் முதலாகிய ஐம்பூதங்கள், நான்கு திசைகள் ஆகியவை யாவும் முக்கண்ணியின் வடிவே, விரும்பும் இருள் வெளியாயும் தோற்றுகின்ற ஆன்ம சமஷ்டியாயும் உள்ள ஒளிப்பிழம்பாயவள், இவையாவற்றுக்கும் ஆற்றலை அளிக்கும் தலைவியும் ஆவாள்.

*1099.* *ஆதி வயிரவி கன்னித் துறைமன்னி*
*ஓதி யுணரில் உடலுயிர் ஈசனாம்*
*பேதை உலகிற் பிறவிகள் நாசமாம்*
*ஓத வுலவாத கோலமொன் றாகுமே.*

குண்டலினி சுருண்டு கிடக்கும் மூலாதாரமாகிய துறையைப் பொருந்தி, அவளைச் சகஸ்ரதளத்துக்குக் கொண்டுவந்து ஞான சாத்திரங்களில் கூறியவற்றை அனுபவமாகப் பெற்றால் உடலும் உயிரும் சிவத்தன்மை பெற்று விளங்கும், அறியாமை நிறைந்த உலகில் பிறவிகள் உண்டாகா, சொல்லில் அமையாத அழகுடையவளாக ஆக்கியிருள்வாள்.

*1100.* ***கோலக் குழவி குலாய புருவத்தள்***
***நீலக் குவளை மலரன்ன கண்ணினாள்***
***ஆவிக்கும் இன்னமு தானந்த சுந்தரி***
***மேலைச் சிவத்தை வெளிப்படுத் தானே.***

அழகிய முடியின்மேல் விளங்குபவள், விளங்கிய புருவங்களையுடையவள், கருங்குவளை மலர் போன்ற கண்களையுடையவள், கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்பும்படி ஒளியைப் பெருக்கி நிற்கும் ஆனந்த சுந்தரி, இவ்விதம் அமைந்த மேன்மையான சிவத்தை விளங்கும்படி செய்தாள்.

*1101.* ***வெளிப்படு வித்து விளைவறி வித்துத்***
***தெளிப்படு வித்தென் சிந்தையி னுள்ளே***
***களிப்படு வித்துக் கதிர்ப்படு சோதி***
***ஒளிப்படு வித்தென்னை உய்யக்கொண் டாளே.***

சிவத்தை வெளிப்படச் செய்து, அதனாலாகும் பயனையும் உணர்த்தி, தெளிவு தந்து, என்னுடைய சிந்தையினுள்ளே விளங்குகின்ற பரஞ்சோதிப் பெருமானை ஒளி மிகும்படி செய்து, அடியேனை ஆட்கொண்டருளினாள்.

*1102.* ***கொண்டனள் கோலங் கோடி அநேகங்கள்***
***கண்டனன் எண்ணெண் கலையின்கண் மாலைகள்***
***விண்டனன் மேலை விரிகதிர் மூன்றையும்***
***தண்டலை மேல்நின்ற தையல்நல் லாளே.***

சந்திர மண்டலத்தில் சிரசின் உச்சியின்மேல் விளங்கும் தையலாகிய திரிபுரையே, பல கோடி சீவர்களிடம் பொருந்திப் பல கோடி உயிர் வருக்கங்களையும் தாங்கியுள்ளாள், பதினாறு கலைகளையும் (சோடசகலை) தன்னிடம் வரிசையாகக் கொண்டனள், விண்ணில் விரித்து விளங்குகின்ற சோம சூரியாக்கினி என்ற மூன்று ஒளிப்பொருள்களையும் படைத்தாள்.

*1103.* ***தையல்நல் லாளைத் தவத்தின் தலைவியை***
***மையலை நோக்கும் மனோன்மனி மங்கையைப்***
***பையநின் றேத்திப் பணிமின் பணிந்தபின்***
***வெய்ய பவமினி மேவகி லாவே.***

தையல் நாயகியும், சகஸ்ரதளத்தில் தவசிகளுக்கு விளங்கும் முதல்வியும், அருட்பார்வையால் பிரபஞ்சத்தின் மயக்கத்தை அகற்றும் மனோன்மனியுமாகிய தேவியை, மெதுவாக நின்ற தோத்திரம் செய்து பணியுங்கள், பணிந்த பிறகு கொடிய பிறவி உங்களைச் சாராது.

*1104.* ***வேயன தோளி விரையுறு மென்மலர்***
***ஏய குழலி இளம்பிறை ஏந்திழை***
***தூய சடைமுடிச் சூலினி சுந்தரி***
***ஏயென துள்ளத் தினிதிருந் தாளே.***

மூங்கிலை யொத்த தோளினையுடையவள், தோளுக்குமேல் விளங்கும் சந்திர மண்டலத்தில் விளங்குபவள், பொருந்திய குழல் போன்ற சித்ரணி நாடியில் விளங்குபவள், இளம் பிறை என்ற காமக்கலையைத் தாங்கி நிற்பவள், தூய கிரணங்களைச் சடைமுடி போல் கொண்ட சூலினி, பொருந்திய எனது உள்ளத்தை இடமாகக் கொண்டு வீற்றிருந்தாள் என்பதாம்.

*1105.* ***இனியதென் மூலை இருக்குங் குமரி***
***தனியொரு நாயகி தானே தலைவி***
***தனிப்படு வித்தனன் சார்வு படுத்து***
***நனிப்படு வித்துள்ளம் நாடிநின் றாளே.***

இன்பம் விளங்கும் மூலாதாரத்தில் வாசம் செய்யும் வாலைப்பெண், தன் நிகரற்ற ஏக நாயகி, தன்னைச் செலுத்துவார் யாரும் இல்லாத தலைவி, என்னுடைய மலச்சார்புகளை அகற்றி அவற்றினின்றும் வேறுபடுத்தித் தனியனாக்கினள், என் மனம் தன்னடிக்கண் நன்றாகப் பாடும் வண்ணம் செய்து அடியேனை விரும்பி நின்றாள்.

*1106.* ***நாடிகள் மூன்று நடுவெழு ஞானத்துக்***
***கூடி இருந்த குமரி சூலக்கன்னி***
***பாடகச் சீறடிப் பைம்பொற் சிலம்பொலி***
***ஊடக மேவி உறங்குகின் றாளே.***

இடைபிங்கலை, சுழுமுனை ஆகிய மூன்றனுள் நடுவிலுள்ள நாளம் போன்ற சித்ரணி நாடியில், பொருந்தியிருந்த வாலை பல சத்திகளைக் கொண்டு விளங்குபவள், அவள் காலணியோடு கூடிய அழகிய திருவடி அசைவால் உண்டாகும் நாதத்தோடு, உள்ளத்தில் பொருந்தி அமைதியோடு இருக்கின்றாள்.

*1107.* *உறங்கு மளவின் மனோன்மனி வந்து*
*கறங்கு வளைக்கைக் கழுத்தாரப் புல்லிப்*
*பிறங்கொளித் தம்பலம் வாயில் உமிழ்ந்திட்*
*டுறங்கலை யாவென் றுபாயஞ்செய் தாளே.*

நான் அவளோடு பொருந்தி யோக உறக்கம் கொள்ளும்போது மனோன்மனி எழுந்து வந்து, ஒலிக்கின்ற வளையவை அணிந்த கையால் என் கழுத்தை நன்றாகத் தழுவி, விளங்குகின்ற ஒளியோடு கூடிய அவளுடைய சத்தியை எனது நுழைவாயிலில் இட்டு, உறங்காதே ஐயா என்று உபாயத்தைச் செய்தருளினாள்.

*1108.* *உபாயம் அளிக்கும் ஒருத்தியென் உள்ளத்*
*தபாயம் அறக்கெடுத் தன்பு விளைத்துச்*
*கவாவை விளக்குஞ் சுழியகத் துள்ளே*
*அவாவை அடக்கிவைத் தஞ்சலென் றாளே.*

அடியேனுக்கு உபாயங்களை அளித்தருளும் மனோன்மனி என் உள்ளத்து எழும், காமாதி பகைவர்களால் உண்டாகும் கேடுகளை நீக்கி இறைவனிடம் நீங்காத அன்பு உண்டாகும்படி செய்து, நாய் போல் அலைகின்ற மனத்தை விளக்கி நிற்கும் சுழுமுனை நடுவுள், ஆசையை அடக்கி வைத்து அஞ்சேல் என்று அபயம் கூறினாள்.

*1109.* *அஞ்சொல் மொழியாள் அருந்தவப் பெண்பிள்ளை*
*செஞ்சொல் மடமொழி சீருடைச் சேயிழை*
*தஞ்சமென் றெண்ணித்தன் சேவடி போற்றுவார்க்*
*கின்சொல் அளிக்கும் இறைவியென் றாரே.*

அம் என்ற சந்திரகலையில் விளங்கும் பிரணவத் தொனியை உண்டாக்குபவள், அரிய தவத்தால் எய்தத் தகுந்தவள், செம்மையான பரவாக்காக விளங்கும் மடமொழி, சிறப்புடைய செவ்வொளியில் விளங்குபவள், அவளே அடைக்கலம் என்று திருவடியைத் தொழுவார்க்கு, பயப்படாதே என்னும் பிரணவத்தின் நாதத்தை அளிக்கும் இறைவியாவாள் என்பர்.

*1110.* *ஆருயி ராயும் அருந்தவப் பெண்பிள்ளை*
*காரியல் கோதையள் காரணி நாரணி*
*ஊரும் உயிரும் உலகும் ஒடுக்கிடுங்*
*கோரியென் உள்ளங் குலாவிநின் றாளே.*

புண்ணியம் செய்தவர்களால் ஆராயப்பெறும் அருந்தவப் பெண்பிள்ளை, கருமையான நிறமுடையவள், ஐந்தொழிற்கும் காரணமானவள், நாராயணி, உடல் உயிர் உலகு ஆகியவற்றை ஒடுக்கும் கோரமானவள், அவள் என்னுடைய உள்ளத்தில் மகிழ்ச்சியோடு பொருந்தியிருந்தாள்.

*1111.* *குலாவிய கோலக் குமரிமென் னுள்ளம்*
*நிலாவி யிருந்து நெடுநாள் அணைந்தும்*
*உலாவி இருந்துணர்ந் துச்சியி னுள்ளே*
*கலாவி யிருந்த கலைத்தலை யாளே.*

நாதத்தை வெளிப்படுத்தும் அழகிய குமரி, என்னுடைய உள்ளத்தில் விளங்கியிருந்து நெடுநாள் பொருந்தியிருந்தும், உச்சியில் உலாவியிருந்து உணர்ந்து, கலந்து விளங்குகின்ற சந்திர கலைகளைத் தனது தலையிலே உடையவளாவாள்.

*1112.* *கலைத்தலை நெற்றியோர் கண்ணுடைக் கண்ணுள்*
*முலைத்தலை மங்கை முயங்கி இருக்குஞ்*
*சிலைத்தலை யாய தெரிவினை நோக்கி*
*அலைத்தபூங் கொம்பினன் அங்கிருந் தானே.*

நெற்றியிலுள்ள அர்த்த சந்திரவொளியில் சிறப்புறுகின்ற மதி மண்டலத்தில், இருமுலைப் பிரதேசத்துக்குமேல் மங்கை தழுவி இருப்பாள், மேருவின் உச்சியில் விளங்கும் சிவத்துடன் கூட, அசைந்தாடிக் கொண்டு படருகின்ற கொடிபோல அங்கு இருந்தாள்.

*1113.* *இருந்தனள் ஏந்திழை என்னுள்ள மேவிப்*
*பொருந்திய நால்விரல் புக்கனள் புல்லித்*
*திருந்திய தாணுவிற் சேர்ந்துடன் ஒன்றி*
*அருந்தவ மெய்தினன் ஆதியி னாளே.*

என்னுடைய உள்ளத்தில் இழை போன்ற வடிவினள் விளங்கினள், உண்ணாக்குப் பிரதேசத்துக்குமேல் நான்கு விரற்கடைப் பாதையில் புகுந்தனள், திருந்திய அறிவாகிய சிவத்துடன் சேர்ந்து ஒன்றாய், அருந்தவத்தின் பயனை ஆதிசத்தி அடைந்தனள்.

*1114. ஆதி யனாதி யகாரணி காரணி*
*சோதிய சோதி சுகபர சுந்தரி*
*மாது சமாதி மனோன்மனி மங்கலி*
*ஓதியென் னுள்ளத் துடனியைந் தானே.*

தனக்கு முற்பட்டது இன்மையாயும், தனக்கு ஒரு காரணம் இல்லாதவளாயும், தான் எல்லாவற்றுக்கும் காரணமாயும், சோதியாயும் சோதி இன்மையாயும், சுகம் பொருந்திய மேலான அழகையுடையவளாயும், இன்பத்தை அளிக்கும் மாதாயும், சமாதியைத் தருபவளாயும், மனோன்மனியாயும், மங்கலத்தைத் தருபவளாயும், எனக்கு அறிவித்து என்னிடம் பிரிப்பின்றி விளங்கினாள்.

*1115. இயைந்தனள் ஏந்திழை என்னுள்ள மேவி*
*நயந்தனள் அங்கே நமசிவ என்னும்*
*அயன்தனை யோரும் பதமது பற்றும்*
*பெயர்ந்தனன் மற்றும் பிதற்றலுத் தானே.*

பராசத்தி எனது உள்ளத்துப் பிரிப்பின்றி இருந்தாள், என்னை விரும்பி நின்றாள், அங்கு சிவ ரூபமாகிய தேவிக்கு வணக்கம் செலுத்தினேன், பிரம சிருட்டியை ஆராய்ந்து அறியும் வல்லமையைத் தரும் நிலை அதுவேயாகும், அந்நிலையை அடைய இடையூறான பற்றுகளை நீங்கச் செய்தாள், அத்துடன் நூல் வாயிலாகப் பெற்ற அறிவினால் கூறும் பிதற்றுதல்களை அகற்றினாள்.

*1116. பிதற்றிக் கழிந்தனர் பேதை மனிதர்*
*முயற்றியின் முந்தி அருளும் முதல்வி*
*கயற்றிகழ் முக்கண்ணுங் கம்பலைச் செவ்வாய்*
*முகத்தருள் நோக்கமும் முன்னுள்ள தாமே.*

உண்மை அறியாது தர்க்க வாதம் புரிந்து காலத்தை வீணாக்கி ஏழை மனிதர் கெடுகின்றனர், ஆனால் அவள் முயற்சியினால் வீடு பேற்றை அறிக்கும் முழுமுதல் தலைவி, மீனைப் போன்று இமையா நாட்டம் மூன்றோடும், ஒலியை உண்டாக்கும், கருணை வழிகின்ற திருமுகமும், நம்முள் விளங்கும்படி உள்ளவள்.

*1117. உள்ளத் திதயத்து நெஞ்சத்தொரு மூன்றுள்*
*பிள்ளைத் தடமுள்ளே பேசப் பிறந்தது*
*வள்ளற் றிருவின் வயிற்றினுள் மாமாயைக்*
*கள்ள ஒளியின் கருத்தாகுங் கன்னியே.*

உள்ளம், இதயம், நெஞ்சம் ஆகிய மூன்றனுள், உண்ணாக்குப் பிரதேசம் தொடங்கிப் பிரமரந்திரம் செல்லும் சிறு வழியில் நாதத்தோடு விளங்கிற்று, எல்லாம் அளிக்க வல்ல அறிவாகிய சிவத்தின் திருவுள்ளப்படி தொழில் புரியும் சுத்தமாயை, மூலாதாரத்தில் அடங்கிய ஒளியாய் இருந்து சிருட்டியில் நோக்கங்கொண்ட கன்னியாவாள்.

*1118. கன்னியுங் கன்னி அழிந்திலன் காதலி*
*துன்னியங் கைவரைப் பெற்றனன் தூய்மொழி*
*பன்னிய நன்னூற் பகவரும் அங்குள*
*என்னேஇம் மாயை இருளது தானே.*

சத்தியும் கன்னித் தன்மை அழியாதவள், காதலியாய்ச் சிவத்தோடு பொருந்தி ஐந்து மக்களைப் பெற்றனள், தூய மொழியாகிய நாத சொரூபி, வேதங்களால் புகழ்ந்து கூறப் பெற்ற சிவனும் அங்குளன், இத்தகையான மாயையானது இருளாகவும் விளங்கியது என்ன ஆச்சரியம்!

*1119. இருளது சத்தி வெளியதெம் அண்ணல்*
*பொருளது புண்ணியர் போகத்துள் இன்பம்*
*தெருளது சிந்தையைத் தெய்வமென் றெண்ணில்*
*அருளது செய்யுமாம் ஆதிப் பிரானே.*

சத்தி இருள் மயமானது, ஞான வெளியில் விளங்குவது சிவம், புண்ணியர்க்குப் பொருளாவது சிவத்தோடு கலந்திருக்கும் சிவபோகத்தில் விளையும் இன்பம், இங்ஙனமாகத் தெளிந்த சிந்தையராய் நாதத்தை வழிபடில், எம் ஆதிப் பிரானாகிய சிவம் நாதத்தை இடமாகக் கொண்டு அருள் செய்யும்.

1120. *ஆதி அனாதியும் ஆய பராசத்தி*
*பாதி பராபரை மேலுறை பைந்தொடி*
*மாது சமாதி மனோன்மணி மங்கலி*
*ஓதுமென் னுள்ளத் துடன்முகிழ்த் தானே.*

ஆதியாயும் அனாதியாயும் வீற்றிருக்கின்ற பராசத்தி, பாதித் திருமேனியைக் கொண்ட பராபரை, எல்லாத் தெய்வங்களுக்கும் மேலாக உறைகின்ற நாத சித்தி, பெருமையுடைய இவள் அனைத்தையும் தன்னிடத்து நிலைக்கச் செய்பவள், மனோன்மனி, நித்திய மங்கலி, அவளை நினைக்கும் என் உள்ளத்திலேயே விரிந்து விளங்கினள்.

1121. *ஓதிய வண்ணங் கலையின் உயர்கலை*
*ஆதியில் வேதமே யாமென் றறிகிலர்*
*சாதியும் பேதமுந் தத்துவ மாய்நிற்பவள்*
*ஆதியென் றோதினள் ஆவின் கிழத்தியே.*

சொல்லிய முறையில் உயர்வாகிய கலை பிரணவமே நாம் என்று அறியாது மக்கள் உளர், சத்தியானவள் சாதியும் அவற்றால் விளையும் பேதமும் தத்துவங்களுமாய் நிற்பள் என்று ஆன்ம நாயகி எனக்கு உபதேசித்தருளினள்.

1122. *ஆவின் கிழத்திநல் லாவடு தண்டுறை*
*நாவின் கிழத்தி நலம்புகழ்ந் தேத்திடுந்*
*தேவின் கிழத்தி திருவாஞ் சிவமங்கை*
*மேவுங் கிழத்தி விளைகடிந் தானே.*

உயிர்களின் தலைவி, நல்ல விதமாக உயிர்களைப் பக்குவம் செய்யும் வீணாத்தண்டில் விளங்கும் வாகீசுவரி, நன்மைகளைக் கொடுப்பவள் என்று புகழ்ந்து பேசப் பெறும் தேவர்களின் தலைவி, சிவத்துக்குரிய சிவமங்கை, விரும்பு வழிபடப்பெறும் கிழத்தி என்னுடைய விளைகளைப் போக்கியருளினாள்.

1123. *வினைகடிந் தாருள்ளத் துள்ளொளி மேவித்*
*தனையடைந் தோர்க்கெல்லாந் தத்துவ மாய்நிற்பன்*
*எனையடிமை கொண்ட ஏந்திழை ஈசன்*
*கணவனைக் காண அனாதியு மாமே.*

வினைப்பயனைக் கெடுத்தார் உள்ளத்து உள்ளொளியாக எழுந்தருளியிருந்து, தன்னைச் சரணாக வந்தடைந்தோர்களுக்கெல்லாம் உண்மைப் பொருளாக நிற்பள், அடியேனை வழிவழியாக அடிமை கொண்ட எந்திழை, ஈசனும் அவளுக்குக் கணவனுமாகிய சிவத்தைப் பார்க்கும்போது அநாதியாவாள்.

1124. *ஆதி அனாதி அகாரணி காரணி*
*வேதம தாய்ந்தனள் வேதியர்க் காய்நின்ற*
*சோதி தனிச்சுடர் சொரூபமாய் நிற்கும்*
*பாதி பராபரை பன்னிரண் டாதியே.*

தேவி முதலாயும் பழமையாயும் தனக்கு ஒரு காரணமில்லாதவனாயும் தான் எல்லாவற்றுக்கும் காரணமாயும் உள்ளவன், வாக்கு தேவியாக இருந்து வேதியர்க்கு வேத ஆராய்ச்சியைக் கொடுத்தனள், நிலைத்து நின்ற சோதியாய்ப் பரஞ்சுடராகிய சிவத்துக்கு உருவமாய் நிற்பள், பாதி மேனியாவாள், பன்னிரண்டு இராசிகளையுடைய சூரியன் போன்ற ஒளியையுடைய ஆதி சத்தியாவாள்.

## 7. பூரண சத்தி

1125. *அளந்தேன் அகலிடத் தந்தமும் ஈறும்*
*அளந்தேன் அகலிடத் தாதிப் பிரானை*
*அளந்தேன் அகலிடத் தாணொடு பெண்ணும்*
*அளந்தேன் அவனருள் ஆய்ந்துணர்ந் தேனே.*

புவனங்களின் முடிவையும் எல்லாம் முடியும் இடத்தையும் ஆராய்ந்தறிந்தேன், எல்லாப் புவனங்களும் ஆதிப் பிரானாகிய சிவத்தினிடம் இலயமடைகின்றன என்பதை அறிந்தேன், ஆணாகவும் பெண்ணாகவும் உள்ள பாலுணர்ச்சி முடியும் புவனத்தையும் கண்டேன், சிவசத்தி எந்தெந்தப் புவனத்தில் எவ்விதம் தொழிற்படுகிறது என்பதையும் ஆய்ந்துணர்ந்தேன்.

1126. *உணர்ந்திலர் ஈசனை ஊழிசெய் சத்தி*
*புணர்ந்தது பூரணம் புண்ணியர் தங்கள்*
*கணங்களைத் தன்னருள் செய்கின்ற கன்னி*
*கொணர்ந்த வழிகொண்டு கும்பக மாமே.*

ஈசனை முடிவுறச் செய்யும் பராசத்தியைச் சீவர்கள் அறியவில்லை, குண்டலினி சத்தி பராசத்தியோடு சேர்ந்து பூரணம் அடைந்தது, இவள் புண்ணியர்களது திருக்கூட்டங்களைத் தன்னருளில் திளைக்கச் செய்யும் கன்னியாவாள், உலகுக்குக் கொண்டு வந்த முறையே சீவர்களை மீண்டும் இலயமடையச் செய்வாள்.

*1127.* *கும்பக் களிறைந்துங் கோலொடு பாகனும்*
*வம்பில் திகழும் மணிமுடி வண்ணனும்*
*இன்பக் கலவி இனிதுறை தையலும்*
*அன்பிற் கலவியு ளாயொழிந்த தாரே.*

குண்டலினி சத்தி சிரசைக் கடந்து நிராதாரக் கலைக்குச் சென்றால் மத்தகத்தையுடைய ஐந்து ஆண் யானைகளாகிய புலன்களும் அவற்றைச் செலுத்தும் மனமும் உலக வாசனைகளோடு கூடிய நவரத்தினங்களால் திருமுடியையுடைய விஷ்ணுவும் ஸ்திரீ போகத்தில் விருப்புற்று விளங்கும் பிரம்ம சத்தியாகிய வாகீசுவரியும், அன்பினால் அமையும் கலவியுள்பட்டு வேறுபாடொழிந்தனர்.

*1128.* *இன்பக் கலவியில் இட்டெழு கின்றதோர்*
*அன்பிற் புகவல்ல னாம்எங்கள் அப்பனுந்*
*துன்பக் குழம்பில் துயருறும் பாசத்துள்*
*என்பிற் பராசத்தி என்னம்மை தானே.*

இன்பக் கூட்டத்தில் செலுத்தி அங்கே எழுகின்ற ஆனந்தத்தில், நுழைய வல்லவன் எங்கள் தந்தையாகிய சிவனும், துன்ப மயமான சுக்கில சுரோணிதச் சேர்க்கையில் விருப்பங்கொண்டு, பந்தத்தை விளைக்கும் எலும்பாகிய வீணாத் தண்டின் அடியில் என்னம்மை பராசத்தியும் உள்ளாள்.

*1129.* *என்னம்மை என்னப்பன் என்னுஞ் செருக்கற்று*
*உன்னம்மை ஊழித் தலைவனும் அங்குளன்*
*மன்னம்மை யாகி மருவி யுரைசெய்யும்*
*பின்னம்மை யாய்நின்ற பேர்நந்தி தானே.*

உடலுறவால் வந்த தாயும் தந்தையும் உற்பத்திக்கு காரணம் என்னும் மயக்கம் நீங்கி, நினைவாயாக, அந்தச் சுத்த வித்தியா மண்டலத்தில் (சுத்த மாயையில்) அம்மையும் உருத்திரரும் அங்குள்ளார், இந்த அம்மை என்றும் நிலைபெற்று உன்னைப் பொருந்தி நாதத்தை அளித்தருளுவாள், அவள் விளங்கும் ஒளி மண்டலமே நந்தி என்ற பேரினையுடையது.

*1130.* *தார்மேல் உறைகின்ற தண்மலர் நான்முகன்*
*பார்மேல் இருப்பதொரு நூறு தானுள*
*பூமேல் உறைகின்ற போதகம் வந்தனள்*
*நாமேல் உறைகின்ற நாயகி ஆணையே.*

மாலை போன்ற ஆதாரங்களில் சுவாதிட்டானமாகிய மலரில் வீற்றிருக்கும் பிரமன், படைப்பாகிய உலகில் சீலர்கள் வாழ்வன நூறாண்டுகள் ஆகும், சுவாதிட்டானத்தில் பிரமனோடு உடனுறைகின்ற சரஸ்வதி ஞானவாணியாக, வாக்கு தேவியாக மேலே எழுந்தருளினாள், படைப்பினை நீத்து மேலே வரச்செய்தது நடுவுள் வீற்றிருக்கின்ற பராசத்தியின் ஆணையாகும்.

*1131.* *ஆணைய மாய்வருந் தாது ளிருந்தவர்*
*மாணைய மாய மனத்தை ஒருக்கிப்பின்*
*பாணைய மாய பரத்தை அறிந்தபின்*
*தாணய மாய தளாதனன் தானே.*

உண்மையாக இறைவனிடம் நம்பிக்கை கொண்டு கவலையை விட்டுச் சுத்த வித்தை விளங்கும் ஒளி மண்டலத்தில் நிலை பெற்றவர், பின் மிக்க சந்தேகத்தைக் கொண்ட மனத்தை அடக்கி, நாதத்தில் நுண்மையாக விளங்கும் பரத்தை அறிந்த பிறகு, இறைவன் அகலாது விளங்க ஆசனமாவார்.

*1132.* *தானே எழுந்தஇத் தத்துவ நாயகி*
*வானேர் எழுந்து மதியை விளக்கினள்*
*தேனேர் எழுகின்ற தீபத் தொளியுடன்*
*மானே நடமுடை மன்றறி யீரே.*

கருணை மிகுதியால் தானே மூலாதாரத்திலிருந்து எழுந்த தத்துவ நாயகி, ஆகாய மண்டலத்தில் புலப்படும்படி விளங்கி மதி மண்டலத்தைப் பிரகாசம் பெறும்படி அமைத்தனள், செந்தேனைப் போன்று இடையறாக விருப்பத்தில் எழுகின்ற தீப சோதியில், பராசத்தி நடனம் செய்யும் சிற்றம்பலம் என்று அறியுங்கள்.

*1133. அறிவான மாயையும் ஐம்புலக் கூட்டத்*
*தறிவான மங்கை அருளது சேரிற்*
*பிரியா அறிவறி வாருளம் பேணு*
*நெறியாய சித்த நினைந்திருந் தாளே.*

பஞ்ச தன்மாத்திரைகளை அறியும் ஞானேந்திரியம் ஐந்தும், இந்திரியங்கள் இல்லாது அறியும் அருட்சத்தியைச் சேர்ந்தால், நீங்காத அறிவினை அறிவார், அங்ஙனம் அருட்சத்தியை விடாது பற்றி நிற்போரிடம் அவளும் பொருந்தி அவரது விருப்பத்தைப் பூர்த்தி செய்வாள்.

*1134. இரவும் பகலும் இலாத விடத்தே*
*குரவஞ்செய் கின்ற குழவியை நாடி*
*அரவஞ்செய் யாமல் அருளுடன் தூங்கப்*
*பருவஞ்செய் யாததோர் பாலனு மாமே.*

சீவர்கள் சந்திர சூரியர்கள் இயங்காத இடத்தில், மகிழ்ச்சியினைச் செய்யும் நாத சத்தியை விரும்பி, ஆரவாரமின்றி அருளோடு பொருந்தியிருக்க, பருவ வேறுபாடு இல்லாத இளைஞராவார்.

*1135. பாலனு மாகும் பராசத்தி தன்னோடு*
*மேலணு காவித்து நாதங்கள் விட்டிட*
*மூலம தாமெனும் முத்திக்கு நேர்படச்*
*சாலவு மாய்நின்ற தற்பரத் தானே.*

பாலனுமாகிய பராசத்தியோடு, அணுகுவதற்கு உரியவாகா விந்து நாதங்களைக் கடக்க, முதல் நிலை அடைவதாகிய முத்திக்கு அமைந்த பாதையில், மிகவும் சிறப்புடன் பொருந்திய தற்பரை விளங்கும்.

*1136. நின்ற பராசத்தி நீள்பரன் தன்னொடு*
*நின்றறி ஞானமும் இச்சையு மாய்நிற்கும்*
*நன்றறி யுங்கிரி யாசத்தி நண்ணவே*
*மன்றன வற்றுள் மருவிடுந் தானே.*

நாதாந்தத்தில் நிலை பெற்றிருந்த பராசத்தி அநாதி நித்தியனாக விளங்கும் சிவத்துடன் ஒன்றியபோது, அவளே சீவர்களுடன் பொருந்திய இச்சையாகவும் ஞானமாகவும் இருப்பள், முன்னர்க் கீழ்நோக்குதலுடன் கூடிய கிரியா சத்தி நல்லவற்றை உணர்த்த அங்கு நிற்கும் போது, இம்மூவரும் பொருந்திய சபையில் சபைக்குரிய சிவமும் பொருந்திவிடும்.

*1137. மருவொத்த மங்கையுந் தானும் உடனே*
*உருவொத்து நின்றமை ஒன்றும் உணரார்*
*கருவொத்து நின்று கலக்கின போது*
*திருவொத்த சிந்தைவைத் தெந்தைநின் றானே.*

மணமும் மலரும் போன்ற சத்தியும் சிவனும், ஒன்றாக ஆன்மாவிலும் ஏனைய அதன் தத்துவங்களிலு ஒத்துப் பொருந்தியதை உலகவர் உணரார், அவ்விதம் சத்தியும் சிவமும் சமவாய நிலையில் கலக்கும்போது, சத்தியோடு ஒத்துள்ள சிந்தையை என்னிடம் வைத்து எந்தையும் விளங்கினான்.

*1138. சிந்தையின் உள்ளே திரியுஞ் சிவசத்தி*
*விந்துவும் நாதமு மாயே விரிந்தனள்*
*சந்திர பூமி சடாதரி சாத்தவி*
*அந்தமொ டாதிய தாம்வண்ணத் தானே.*

அன்பர்கள் சிந்தையில் உலவும் சிவசத்தி, விந்து நாதங்களாக விரிந்தனள், அச்சத்தி சந்திர மண்டலத்துக்கு உரியவள், ஆறாதாரங்களையும் கொண்டு விளங்குபவள், அகர முதல க்ஷகரம் ஈறாகவுள்ள ஐம்பத்தோர் அட்சரங்களிலும் வசிப்பவளாவாள்.

*1139. ஆறி யிருந்த அமுத பயோதரி*
*மாறி யிருந்த வழியறி வாரில்லை*
*தேறி யிருந்துநல் தீபத் தொளியுடன்*
*ஊறி யிருந்தனள் உள்ளுடை யார்க்கே.*

சந்திர மண்டலத்தில் சிறப்புற்று விளங்கும் சத்தி தனது வேகத்தைக் காட்டாது அமுதம் சுரக்கும் தனங்களுக்குக் கீழே விளங்கினள், இத்தகைய இரு நிலைகளை அறிந்துகொள்வார் இல்லை, மனத்தெளிவு பெற்றுப் புருவ மத்தியில் விளங்கும் தீபத்தொளியை, உள்ளே காண்பவரிடம் அவளும் அவர்களது சிந்தனையில் ஊற்றுப் போல விளங்கினள்.

***1140.*** ***உடையவன் அங்கி உருத்திர சோதி***
***விடையவன் ஏறி விளங்கி யிருக்குங்***
***கடையவர் யோயிடுங் கண்டவர் நெஞ்சத்***
***தடையது லாகிய சாதகர் தாமே.***

என்னை அடிமையாக ஏற்றுக் கொண்டவன் அக்கினி வடிவன், மூலாதாரத்தில் விளங்கும் உருத்திர சோதி, விந்து மண்டலத்தில் ஏறிச் சிறப்புற இருப்பவன், இவ்வுண்மையைக் காணாத கீழோர் போய்விடுங்கள், இவ்வுண்மையை நெஞ்சத்து உணர்ந்தவர் அடயோக சாதகராவார்.

***1141.*** ***தாமேல் உறைவிடம் ஆறித ழானது***
***பார்மேல் இதழ்பதி னெட்டிரு நூறுள***
***பூமேல் உறைகின்ற புண்ணியம் வந்தனள்***
***பார்மேல் உறைகின்ற பைந்தொடி யாளே.***

சத்தி எல்லாவற்றிலும் மேலாக உறைகின்ற இடம் ஆறு இதழினையுடைய சுவாதிட்டானச் சக்கரமாகும் (இது பூமி தத்துவம்(, பூமி தத்துவத்துக்கு மேல் இருநூற்றுப் பதினெட்டுப் புவனங்கள் உள, இவள் சகஸ்ரதளத்தில் எமத புண்ணியத்தால் வந்தனள், இவள் பூமி தத்துவத்தில் விளங்கிய நாத சத்தியேதான்.

***1142.*** ***பைந்தொடி யாளும் பரம னிருந்திடத்***
***திண்கொடி யாகத் திகழ்தரு சோதியாம்***
***விண்கொடி யாகி விளங்கி வருதலாற்***
***பெண்கொடி யாக நடந்த துலகே.***

பரமன் இருந்தபடி இருக்க நாதசத்தி செயல் புரியும், இவளே வல்லமை மிக்க சித் சத்தியாக விளங்கும், அவள் ஆகாயக் கூற்றில் இரண சமூகமாக விளங்குவதால், உலகம் சத்தியால் நடைபெறுகிறது.

***1143.*** ***நடந்தது வம்மலர் நாலுடன் அஞ்சாய்***
***இருந்தனர் கன்னிகள் எட்டுடன் ஒன்றாய்ப்***
***படர்ந்தது தன்வழி பங்கயத் துள்ளே***
***தொடர்ந்தது உள்வழி சோதி யடுத்தே.***

சுவாதிட்டானத்தை இடமாகப் பெற்ற குண்டலினி சத்தி மூலாதாரமாகிய நாலிதழுடன் மேலுள்ள மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை, சகஸ்ரதளம் ஆகிய ஐந்தைப் பொருந்தி, நவசத்திகளாய் விளங்கியிருந்தனர், அது தன் வழியாகிய சுவாதிட்டானத்திலிருந்த படர்ந்து, உள்வழியாகிய வீணாத்தண்டினூடே சோதியாக நுழைந்து சென்றது.

***1144.*** ***அடுக்குந் தாமரை ஆதி இருப்பிடம்***
***எடுக்குந் தாமரை இல்லகத் துள்ளது***
***மடுக்குந் தாமரை மத்தகத் தேசெல***
***முடுக்குந் தாமரை முச்சது ரத்தே.***

ஆதி சத்தி பொருந்தி இருக்கும் இடம் சகஸ்ரதளம், இதன் ஆற்றல் இதர சக்கரங்களில் உள்ளது, உடலையும் சித காயத்தையும் இணைக்கும் சகஸ்ரதளமாகிய உச்சியை அடைய, மேலுந்தித் தொழில்படுத்துவது நாற்கோணமும் முக்கோணமும் பொருந்திய மூலாதாரமாகும்.

***1145.*** ***முச்சது ரத்தே எழுந்த முளைச்சுடர்***
***எச்சது ரத்தும் இடம்பெற ஓடிடக்***
***கைச்சது ரத்துக் கடந்துள் ஒளிபெற***
***எச்சது ரத்தும் இருந்தனள் தானே.***

மூச்சதுரமாகிய மூலாதாரத்து எழுந்த முளை போன்ற சுடராகிய சத்தி, ஆதாரச் சக்கரங்கள் எல்லாவற்றிலும் வியாபிக்க, சுழுமுனை நாடியின்மேல் விளங்கும் பிரமரந்திரத்தைக் கடந்து உள்ளம் ஒளி பெற, எல்லாச் சக்கரங்களிலும் வியாபித்திருந்தாள்.

***1146.*** ***இருந்தனள் தன்முகம் ஆறொடு நாலாய்ப்***
***பரந்தன வாயு திசைதிசை தோறுங்***
***குவிந்தன முத்தின் முகவொளி நோக்கி***
***நடந்தது தேறல் அதோமுகம் அம்பே.***

பூரண சத்தி பத்துத் திசைகளையும் பத்து முகங்களாகக் கொண்டு எழுந்தருளியிருந்தனள், அதனால் வாயு எல்லாப் பக்கங்களிலும் பரவியது, சிரசை நோக்கிச் குவிந்து முத்தைப் போன்ற சகஸ்ரதளத்தில் விளங்கும் ஒளியை நோக்கி, தேன் போன்று இனிப்பைத் தரும் காம வாயு அதோமுகத்திலிருந்து நீரோட்டம் போலச் சகஸ்ரதளத்தை அடைந்தது.

*1147. அம்பன்ன கண்ணி அரிவை மனோன்மனி*
*கொம்பன்ன நுண்ணிடை கோதை குலாவிய*
*செம்பொன்செய் யாக்கை செறிகமழ் நாடொறும்*
*நம்பனை நோக்கி நவிலுகின் றாளே.*

நீல ஒளியில் விளங்குபவள், பார்வதி, அருவுருவச் சத்தி, கொம்பில் படரும் கொடி போன்று ஆதாரச் சக்கரங்களை மாலை போலுடையவள், நாதத் தத்துவத்தில் விளங்கிப் பொன்னொளியாகிய யாக்கையைச் செய்பவள், தன்னுடன் சிறந்து விளங்கும் சிவத்தை நோக்கிச் செல்வதில் இதத்தைச் சொல்லிக்கொண்டேயுள்ளாள்.

*1148. நவிலும் பெருந்தெய்வம் நான்மறைச் சத்தி*
*துகிலுடை யாடை நிலம்பொதி பாதம்*
*அகிலமும் அண்ட முழுதுஞ் செம்மாந்தும்*
*புகலுமுச் சோதி புனையநிற் பாளே.*

பெரிய தெய்வத்தன்மை பொருந்திய பிரணவத்தில் விளங்கும் சத்தியாவள், பவளம் போன்ற செந்நிற ஒளி அவள் உடுக்கும் ஆடையாகும், நிலத்துக்குக் கீழும் கடந்துள்ள பாதங்களையுடையவள், அவள் அகிலாண்டங்களையும் கடந்து பரந்து, சொல்லப்பெறும் மூச்சுடர்களையும் தரித்து நிற்பள்.

*1149. புனையவல் லாள்புவ னத்திறை எங்கள்*
*வனையவல் லாள்அண்ட கோடிகள் உள்ளே*
*புனையவல் லாள்மண் டலத்தொளி தன்னைப்*
*புனையவல் லாளையும் போற்றியென் பேனே.*

எமது புவனாபதியாகிய இறைவனைத் தன் மேனியின் ஒரு பாகத்துப் புனைய வல்லாள், அண்டகோடிகளைச் சங்கற்பமாத்திரத்தில் உள்ளேயே மாற்றத்தைச் செய்பவள், எல்லா மண்டலத்து ஒளியையும் தன்னிடம் கொண்டவள், எல்லாவற்றையும் தாங்கியுள்ளவளை வாழ்த்துகின்றேன்.

*1150. போற்றியென் பேன்புவ னாபதி அம்மையென்*
*ஆற்றலுள் நிற்கும் அருந்தவப் பெண்பிள்ளை*
*சீற்றங் கடிந்த திருநுதற் சேயிழை*
*கூற்றந் துரக்கின்ற கொள்பைந் தொடியே.*

அடியேனது அன்புக்கிலக்கான புவனாபதி அம்மையைப் போற்றி என்பேன், அடியேனது அருந்தவத்தின் ஆற்றலினுள் நிற்கும் பெண்பிள்ளை, எனது கோபத் தன்மையை மாற்றிச் சிற்றம்பலத்துள் விளங்கும் செவ்வொளி மயமானவள், எமனை விரட்டும் வலிமையள் ஆவாள்.

*1151. தொடியார் நடக்கைச் சகோதய சுந்தரி*
*வடிவார் திரிபுரை யாமங்கை கங்கைச்*
*செடியார் வினைகெடச் சேர்வரை என்றென்*
*றடியார் விளைகெடுத் தாதியு மாமே.*

சுழுமுனையில் நாத மயமாக விளங்கும் சுகத்தைத் தரும் சுந்தரி, அழகுடன் கூடிய திரிபுரையாகிய மங்கை, கங்கை போலப் பெருக்கெடுத்து வரும் துன்பங்களை அகற்ற மலையாகிய சிரத்தை அடையுங்கள் என்றருளி,அடியாரது வினைகளைப் போக்கி ஆதிப் பரம்பொருளுமாவாள்.

*1152. மெல்லிசைப் பாவை வியோமத்தின் மென்கொடி*
*பல்லிசைப் பாவை பயன்தரு பைங்கொடி*
*புல்லிசைப் பாவையைப் போகத் துரந்திட்டு*
*வல்லிசைப் பாவை மனம்புகுந் தானே.*

மென்மையான சூக்கும நாதத்தில் விளங்குபவள், பராகாயத்தில் பரந்துள்ள மெல்லிய ஒளி அணுக்களாலானவள், பலராலும் புகழப்படுபவள், வழிபடுவார் பக்குவத்துக் கேற்பப் பயன் தரும் பைங்கொடி, அற்பமான புகழில் விருப்பம் கொள்ளும் தேக சத்தியைக் கொடுத்து, வலிமை மிக்க நாத மயமாகிய பராசத்தி அடியேன் மனத்தில் புகுந்து ஆண்டருளினாள்.

*1153. தாவித்த வப்பொருள் தானவன் எம்பிறை*
*பாவித் துலகம் படைக்கின்ற காலத்து*
*மேவிப் பராசத்தி மேலொடு கீழ்தொடர்ந்*
*தாவிக்கு மப்பொருள் தானது தானே.*

சத்தியால் தாபிக்கப்பட்டவன்தான் எமது இறைவன், சங்கற்பத்தால் உலகைப் படைக்கின்ற போது, தானே மேலும் கீழுமாக எங்கும் வியாபித்து, அப்பொருளாகவே தான் இருந்து அவ்வப்பொருளுக்கும் உயிர் வழங்குபவள் அவளேயாகும்.

சிவத்தை அறியாதவர் பல தேவர்களைப் பயன் கருதி வழிபடுவர், முத்திப் பேறு கிடைத்தற்குரிய மூல காரணமாகிய பொருள் இது எனக் காணார், குழல் போன்ற சித்ரணி நாடியில் விளங்கும் பராசத்தியின் நிலையால் ஆவது இது என்றறியார்கள், இவர்கள் தெளிவு பெறாதவர்களே.

*1154.* *அதுவிது என்பர் அவளை அறியார்*
*கதிவர நின்றதோர் காரணங் காணார்*
*மதுவிரி பூங்குழல் மாமங்கை நங்கை*
*திதமது உன்னார்கள் தேர்ந்தறி யாரே.*

சிவத்தை அறியாதவர் பல தேவர்களைப் பயன் கருதி வழிபடுவர், முத்திப் பேறு கிடைத்தற்குரிய மூல காரணமாகிய பொருள் இது எனக் காணார், குழல் போன்ற சித்ரணி நாடியில் விளங்கும் பராசத்தியின் நிலையால் ஆவது இது என்றறியார்கள், இவர்கள் தெளிவு பெறாதவர்களே.

## 8. ஆதார வாதேயம்

ஆதாரம் - இடம், ஆதேயம் - இடத்தில் உள்ள பொருள். சத்தி இரண்டாயும் உள்ளாள்.

*1155.* *நாலிதழ் ஆறில் அவிர்ந்தது தொண்ணூறு*
*தானித மானவை நாற்பத்து நாலுள*
*பாலித மானவள் பங்கய மூலமாய்த்*
*தானித மாகித் தரித்திருந் தாளே.*

நான்கு இதழ்களையுடைய மூலாதாரம், ஆறாம் ஆதாரமாகிய ஆஞ்ஞை ஆகிய இரண்டுக்கும் இடையே தொண்ணூறு நரம்புத் தொகுதிகள் தொழிற்படுகின்றன, இவ்விரண்டுக்கும் இடையே சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி ஆகிய ஆதாரச் சக்கரங்களில் முறையே 6+10+12+16 ஆக 44 இதழ்கள் உள்ளன, ஆணாகவும், பெண்ணாகவும் விளங்கும் ஆஞ்ஞைச் சக்கரத்தில் உள்ளவள், பிற ஆதாரங்களாய் விளங்கி அவைகளைத் தாங்கியும் உள்ளாள்.

*1156.* *தரித்திருந் தாளவள் தன்னொளி நோக்கி*
*விரித்திருந் தாளவன் வேதப் பொருளைக்*
*குறித்திருந் தாளவன் கூறிய ஐந்து*
*மறித்திருந் தாளவள் மாதுநல் லாளே.*

தன் கீழுள்ள ஆதாரங்களில் அறிவை அறிய அவள் ஆறு ஆதாரங்களையும் தனது திருமேனியில் கொண்டாள், தனது அறிவைச் செலுத்த மூலாதாரம் வரை நரம்புத் தொகுதிகளை விரிந்திருந்தாள், அவள் கண்டத்துக்குக் கீழுள்ள ஐந்து சக்கரங்கள் தொழிற்படுவதைக் கவனித்துக் கொண்டிருந்தாள், மேல் நோக்கங் கொண்டவர்க்கு இவ்வைந்தும் செயல்படாது தடுத்தும் இருந்தாள் பராசத்தி.

*1157.* *மாதுநல் லாளும் மணாளன் இருந்திடப்*
*பாதிநல் லாளும் பகவனு மானது*
*சோதிநல் லாளைத் துணைப்பெய்ய வல்லிரேல்*
*வேதனை தீர்தரும் வெள்ளடை யாமே.*

அறிவு கண்டத்துக்குக் கீழேயுள்ள விஷயங்களை அறிய வேண்டுமென்ற விருப்பம் சிவத்துக்கு இல்லாத போது பராசத்தியும், சிவனுடன் அறிவை அறியும் சிற்சத்தியாக தேகோபாதையற்றுச் சமவாயாக விளங்குவள், இவ்வாறு சமவாய நிலையில் உள்ள போது ஒளி வடிவான அன்னையைத் தியானிக்கில், கிரியை வழித்தான சத்தி நிலை கெட்டுத் துன்பம் நீங்கும், நீங்களும உடலைத் தாண்டி வெளியில் விளங்குவீர்.

*1158.* *வெள்ளடை யானிரு மாமிகு மாமலர்க்*
*கள்ளடை யாரக் கமழ்குழ லார்மன*
*மள்ளடை யானும் வகைத்திற மாய்நின்ற*
*பெண்ணொரு பாகம் பிறவிபெண் ணாமே.*

பரமாகாயத்தில் விளங்கும் சிவத்துடன் பொருந்தியவனும், இரண்டு பிரபைகளினால் விளங்கும் பெரிதான சகஸ்ரதளத்தில் உண்டான இன்பம் பொருந்த, வாசனையுடைய பூக்களை முடியில் தரித்த பெண்கள் மனத்தில் இடம் பெறாதவனும் ஆகியவன், சிருட்டி காரியம் முடிவுற்ற பின் இறைவனுடன் சமவாயமாகவுள்ள சத்தியை விரும்பியபோது அவளைப் போன்று பெண் தன்மை அடைவான்.

*1159.* *பெண்ணொரு பெண்ணை புணர்ந்திடும் பேதைமை*
*பெண்ணிடை ஆணும் பிறந்து கிடந்தது*
*பெண்ணுடை ஆணென் பிறப்பறிந் தீர்க்கின்ற*
*பெண்ணுடை ஆணிடைப் பேச்சற்ற வாறே.*

ஒரு பெண் மற்றொரு பெண்ணை விரும்பிச் சேருவது அறியாமை, ஆனால் இங்குப் பராசத்தியாகிய பெண்ணுக்கு ஆண் தன்மையும் உண்டு, இங்ஙனம் பெண்ணும் ஆணுமாக இருப்பானேன்? பிறவியின் இயல்பை அறிந்து பெண்ணுடன் ஆணும் சேர்ந்தபோது பேசும் காரியம் முடிவுற்றதன்றோ?

*1160.* *பேச்சற்ற நற்பொருள் காணும் பெருந்தகை*
*மாச்சற்ற சோதி மனோன்மனி மங்கையாங்*
*காச்சற்ற சோதி கடவு ளுடன்புணர்ந்*
*தாச்சற்றெ னுட்புகுந் தாலிக்குந் தானே.*

உரை கடந்த நற்பொருளாகவுள்ள குற்றமில்லாத ஒளி வடிவாகிய பரம்பொருள், மனோன்மனி மங்கையாகிய சினமில்லாத ஒளிக்கடவுளுடன் கூடி, என்னுடைய மனத்துள் தானே புகுந்து மகிழ்ச்சியினைக் கொடுப்பதாயிற்று.

*1161.* *ஆலிக்குங் கன்னி அரிவை மனோன்மனி*
*பாவித் துலகிற் பரந்துபெண் ணாகும்*
*வேலைத் தலைவியை வேத முதல்வியை*
*ஆலித் தொருவன் உகந்துநின் றானே.*

மூலாதாரத்திலிருந்து சீவர்களுக்குக் களிப்பினைத் தரும் பாலை, சிவத்துக்கு வேறாக இருந்து உலகை விளக்கும் பார்வதி, மனோன்மனி சத்தியான போது அனைத்துயிரையும் பாதுகாத்து உலகில் எங்கும் பரந்த பெண் வடிவாகும், பஞ்சக்கிருத்திய தலைவியும், பிரணவ சொரூபியுமான சத்தியை, களிப்பூட்ட சிவன் மகிழ்ந்து நின்றனன்.

*1162.* *உகந்துநின் றான்நம்பி ஒண்ணுதற் கண்ணோ*
*டுகந்துநின் றான்நம் முழைபுக நோக்கி*
*உகந்துநின் றான்இவ் உலகங்கள் எல்லாம்*
*உகந்துநின் றான்அவ டன்றோ டொகுத்தே.*

சிவன் நெற்றிக்கண்ணொடு மகிழ்ச்சி பொங்க நின்றான், ஆன்மாக்களாகிய நம்மிடம் எழுந்தருள விரும்பி நின்றான், அதனால் உலகங்களில் எல்லாம் விரும்பி நின்றாள், பராசத்தியின் தோள்களைத் தழுவிப் போகியாயிருந்தனன்.

*1163.* *குத்து முலைச்சி குழைந்த மருங்கினள்*
*துத்தி விரிந்த கணங்கினள் தூமொழி*
*புத்தகச் சீறடிப் பாவை புணர்வினைத்*
*தொத்த கருத்துச் சொல்லகில் லேனே.*

விம்முகின்ற தனங்களையுடையவளும், மெல்லிய இடையினையுடையவளும், புள்ளிகள் விரவிய தேமலையுடையவளும், தூய்மையான மொழியினை உடையவளும், மயில்தோகை போன்ற அழகிய திருவடிகளையும் உடைய பாவை போன்ற பராசத்தியை, சேர்ந்தமையால் உண்டான குறிப்பைச் சொல்ல முடியாது.

*1164.* *சொல்லவொண் ணாத அழற்பொதி மண்டலஞ்*
*சொல்லவொண் ணாது திகைத்தங் கிருப்பர்கள்*
*வெல்லவொண் ணாத வினைத்தனி நாயகி*
*மல்லவொண் ணாத மனோன்மனி தானே.*

அக்கினி மண்டலம் விளங்கும் காம பீடத்தின் வல்லபத்தை யாராலும் அளவிட்டுச் சொல்ல முடியாது, அளந்தறிய முடியாமலேயே திகைப்புடன் மக்கள் அங்கு உள்ளனர், வினைப்போகத்தை வெல்ல அரிதாகும்படி ஒப்பற்ற நாயகி அமைத்துள்ளாள், இப்படிப்பட்ட ஆற்றலுடன் கூடிய சத்தியாகிய மனோன்மனியைப் பந்தித்துச் செயல்படாது நிறுத்த முடியாது.

*1165.* *தானே இருநிலந் தாங்கிவிண் ணாய்நிற்குந்*
*தானே கடும்அங்கி ஞாயிறுந் திங்களுந்*
*தானே மழைபொழி தையலு மாய்நிற்குத்*
*தானே வடவரைத் தண்கடற் கண்ணே.*

மனோன்மனியே பெரிய பூதங்களைத் தாங்கி ஆகாயமாய் நிற்பள், அவளே சுடுகின்ற அக்கினியாகவும் சூரியனாகவும் சந்திரனாகவும், அவளே கருணை பொழிகின்ற சத்தியுமாய் உள்ளாள், அவளே வடவரை என்ற சிரசில் உடபாகமாகவும் குளிர்ந்த கடலிடையேயுள்ள வடவாக்கினி என்ற காமமாயும் உள்ளாள்.

*1166.* *கண்ணுடை யானைக் கலந்தங் கிருந்தவர்*
*மண்ணுடை யாரை மனித்தரிற் கூட்டொணாப்*
*பண்ணுடை யார்கள் பதைப்பற் றிருந்தவர்*
*விண்ணுடை யார்களை மேலுறக் கண்டே.*

நெற்றிக் கண்ணுடைய பராசத்தியைக் கூடி மதி மண்டலத்துக்களித்த ஞானிகள், மண்ணுலகத்தவராயினும் மனிதர்கள் என்று கருத வேண்டா, தெய்வ குணம் பொருந்தியவராவார்கள், பதைப்பின்றி இருந்து அவர்கள் ஆகாய மண்டலவாசிகளைச் சூக்கும சிருஷ்டியினால் கண்டிருப்பர்.

*1167. கண்டெண் டிசையுங் கலந்து வருங்கன்னி*
*பண்டெண் டிசையும் பராசத்தி யாய்நிற்கும்*
*விண்டெண் டிசையும் விரைமலர் கைக்கொண்டு*
*தொண்டெண் டிசையுந் தொழநின்ற கன்னியே.*

வாலை என்ற பெயரினையுடைய குண்டலினி எல்லாத் திசைகளிலும் வியாபித்து நிற்பவள், இவளே பழமையில் உடலுற்பத்திக்கு முன்னால் எல்லாத் திக்குகளிலும் விளங்கிப் பராசத்தியாய் நிற்பள், கீழே வந்த குண்டலினி மேலே சென்ற போது உடலை விட்டு உயிரைப் பிரித்து சகஸ்ரதளத்தை இடமாகக் கொண்டு, எல்லாத் திக்குகளிலுள்ளவர்களும் தொழும்படி செய்தனள்.

*1168. கன்னி ஒளியென நின்றவிச் சந்திரன்*
*மன்னி யிருக்கின்ற மாளிகை செந்நிறஞ்*
*சென்னி யிருப்பிடஞ் சேர்பதி னாறுடன்*
*பன்னி யிருப்பப் பராசத்தி யாமே.*

கன்னி ஒளி போன்றிருந்த பிறைச்சந்திரன், பொருந்தியிருக்கின்ற இடம் செந்நிறமுடைய சுவாதிட்டானமாகும், சந்திரர் பதினாறு கலைகள் நிரம்பியபோது விளங்கும் இடம் சிரசாகும், இதுவே போற்றியிருக்கும் பராசத்தி நிலையமாகும்.

*1169. பராசத்தி யென்றென்று பல்வகை யாலுந்*
*தராசத்தி யான தலைப்பிர மாணி*
*இராசத்தி யாமள வாகமத் தாளாகுங்*
*குராசத்தி கோலம் பலவுணர்ந் தேனே.*

பராசத்தி பல வகையிலும் எல்லாவற்றையும் என்றென்றும், தாங்கி நிற்கும் சத்தியாய் முதன்மையான அளவையாக இருப்பவள், இரவின்கண் விளங்கும் சத்தியாய் உருத்திரயாமளம் என்னும் ஆகமத்தால் உணர்த்தப்படுபவள், குருவாக வருகின்ற சத்தியின் வடிவங்கள் பலவற்றையும் உணர்ந்தேன்.

*1170. உணர்ந்துல கேழையும் யோகினி சத்தி*
*உணர்ந்துயி ராய்நிற்கும் உள்ளத்தின் ஈசன்*
*புணர்ந்தொரு காலத்துப் போகம தாதி*
*இணைந்து பரமென் றிசைந்திது தானே.*

ஏழு ஆதாரங்களிலும் யோகினி சத்திகள் அறிந்து உயிருக்கு உணர்த்துவராவர், உள்ளத்திலுள்ள ஈசன் இவர்களைக் கூடி ஒரு காலத்து, ஸ்திரீ போகம், உலக போகம், வித்தியா போகம் பொருந்தி, பரம் என்ற பெயரினைப் பெற்றிருந்தது, (இச்சத்திகளின் தொகுப்பு பராசத்தியாகும்).

*1171. இதுவப் பெருந்தகை எம்பெரு மானும்*
*பொதுவக் கலவியும் போகமு மாகி*
*மதுவக் குழலி மனோன்மனி மங்கை*
*அதுவக் கலவியுள் ஆயுழி யோகமே.*

சத்தியாகிய இதுவும் பெருந்தகையாகிய சிவனும், ஆகாயக் கலப்பில் சேருவதால் கலவியும் அதனால் விளையும் போகமுமாகி, இன்பம் பொருந்திய சுழுமுனையில் விளங்கும் மங்கையே, அக்கலவியும் ஆராயுமிடத்து அது யோகமுமாகும்.

*1172. யோகநற் சத்தி ஒளிபீடத் தானாகும்*
*யோகநற் சத்தி ஒளிமுகந் தெற்காகும்*
*யோகநற் சத்தி உதர நடுவாகும்*
*யோகநற் சத்திதாள் உத்தரத் தேரே.*

யோகத்தை விளக்கும் நல்ல சத்தி ஒளியைப் பீடமாகக் கொண்டு விளங்குவாள் (புருவ மத்தி), அத்தகைய யோக சத்தியின் ஒளிபெற்ற முகம் தெற்குப்பக்கம் என்ற வலக்கண்ணாகும், யோக நற்சத்தி உதர நடுவாகிய மணிபூரகத்தில் சூரியனாக விளங்குவள், யோக நற்சத்தி சந்திரனாக விளங்குவது வடபுறமாகிய இடக்கண் என்று கொள்வாயாக.

*1173. தேர்ந்தெழு மேலாஞ் சிவனங்கி யோடுற*
*வார்ந்தெழு மாயையு மந்தம தாய்நிற்கும்*
*ஓர்ந்தெழு விந்துவும் நாதமும் ஓங்கிட*
*கூர்ந்தெழு கின்றனள் கோல்வளை தானே.*

குருவினால் தேர்ந்து மேலாகிய சிவாக்கினியைத் தூண்டி ஒளிப் பீடத்துக்குக் கொண்டுசென்றால், ஒழுகும் தன்மைத்தான மாயையும் முடிவுறும், ஆராய்ந்து அறியப்படுகின்ற விந்து நாதங்கள் பெருகிட, சுழுமுனை நாடியில் வளைந்து செல்லும் குண்டலினியும் முளைத்து எழுகின்றனள்.

*1174. தானான வாறெட்ட தாம்பரைக் குண்மிசை*
*தானான வாறுமீ ரேழுஞ் சமகலை*
*தானான விந்து சகமே பரமெனுந்*
*தானாம் பரவா தனையெனத் தக்கதே.*

பராசத்தியே ஆறு ஆதாரங்களிலும், அகரகலை என்ற சந்திரகலை பதினாறையும் பொருந்தி விளங்குவாள், ஆறு ஆதாரங்களும் அவளாக இருப்பினும் ஒன்பதாவது கலை வரையில் அதிகமான விரிவு பெற்று விளங்காத நிலையாகும், கலை வடிவாகச் சமைந்த விந்து உலகத்திலும் பரத்திலும் தான் கலந்திருப்பள், இங்ஙனம் அவள் கலந்திருக்கும் நிலையே பரவாதனை எனத் தக்கதாம்.

*1175. தக்க பராவித்தை தானிரு பானேழிற்*
*றக்கெழு மோருத் திரஞ்சொல்லச் சொல்லவே*
*மிக்கிடும் எண்சத்தி வெண்ணிற முக்கண்ணி*
*தொக்க கதையோடு தொன்முத் திரையாளே.*

மிகவும் சிறந்த திருவருளின் கலையைப் பயிலுவதற்குப் பராசத்தியே இருபத்தேழு நட்சத்திரங்களாக விளங்குவதை அறிந்து, தக்கபடி சிரசில் ஸ்பந்த ரூபமாக விளங்கிடும், பிறகு சிறிது சிறிதாக ஸ்பந்தம் (அசைவு) மிகுந்து எண் சத்திகளும் வெண்ணிறத்தில் விளங்கும் பராசத்தியிடம் வெளிப்பட்டருளுவாள், அவளே அமைந்த காரணத்துடன் அரிய பழமையான முதல் நிலையையும் உடையவள்.

*1176. முத்திரை மூன்றின் முடிந்தமெய்ஞ் ஞானத்தள்*
*தத்துவ மாயல்ல வாய சகலத்தள்*
*வைத்த பராபர னாய பராபரை*
*சத்தியு மானந்த சத்தியுங் கொங்கே.*

அக்கினி கண்டம், சூரிய கண்டம் ஆகிய மூன்றும் முடிந்து விளங்குவதில் பராசத்தியுள்ளாள், பராசத்தி சொல்லப்பட்ட தத்துவமாயும், அல்லவாயும் எல்லாவற்றிலும் விளங்குபவர், பாரபரனைத் தன்னிடம் கொண்ட பராபரை, அச்சத்தி பேரானந்தத்தைத் தருபவனாயும் சிற்றின்பத்தைத் தருபவளாயும் உள்ளாள்.

*1177. கொங்கீன்ற கொம்பின் குரும்பைக் குலாங்கன்னி*
*பொங்கிய குங்குமத் தோளி பொருந்தினள்*
*அங்குச பாச மெனுமகி லங்கனி*
*தங்கு மவள்மனை தானறி வாயே.*

தேன் போன்று விருப்பத்தைத் தரும் வீணாத் தண்டின் அடியில் புற்றாஞ்சோறு போல் பல சத்திகளைக் கூட்டமாகவுடையவள், உவகை மிகுந்த போது சிவந்த குங்கும நிறத்தை உடையவள், அங்குசமாகவும் பாசமாகவும் உள்ள பிருதிவி, விரும்பித் தங்குகின்ற அவள் இடம் என்று அறிவாயாக.

*1178. வாயு மனமுங் கடந்த மனோன்மணி*
*பேயுங் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை*
*ஆயும் அறிவுங் கடந்த அரனுக்குத்*
*தாயும் மகளுநல் தாரமு மாமே.*

சீவர்களின் உட்சுவாச நிசுவாசத்தையும் மனத்தையும் கடந்து விளங்கும் மனோன்மனி, பேய்களையும் பல்வேறு கணங்களையும் தமக்கு ஏவலாகப் பெற்றவள், ஆராய்ச்சி அறிவைக் கடந்த சிவனுக்கு, மனோன்மனி தாயாகவும், மகளாகவும் மனைவியாகவும் உள்ளாள்.

*1179. தாரமு மாகுவன் தத்துவ மாய்நிற்பள்*
*காரண காரிய மாகுங் கலப்பினன்*
*பூரண விந்து பொதிந்த புராதனி*
*பாரள வாந்திசை பத்துடை யாளே.*

பராசத்தி சிவத்துக்கு மனைவியும் ஆவள், சத்தி தத்துவமாய் நின்று நாத விந்துகளைத் தோற்றுவிக்கவும் செய்வள், சிவத்தோடு ஒன்றிய நிலையில் அனைத்துக்கும் பரம காரணியாகவும், சிருட்டியை நினைத்து பிரிந்தபோது சிவத்தின் காரியமும் ஆவள், இத்தகைய புணர்ப்பினை உடையாள் நிறைந்த விந்து சத்தி பொருந்தியுள்ள பழமைக்கெல்லாம் பழமையானவள், அண்டங்களின் அளவாகப் பிரிந்துள்ள திசைகள் பத்தினையும் உடைமையாகக் கொண்டவள்.

*1180.* *பத்து முகமுடை யாள்நம் பராசத்தி*
*வைத்தனள் ஆறங்க நாலுடன் றான்வேதம்*
*ஒத்தனன் ஆதாரம் ஒன்றுடன் ஓங்கியே*
*நித்தமாய் நின்றாளெம் நேரிழை கூறே.*

பத்து முகங்கள் உடையவள் நம்முடைய பராசத்தி, ஆறு இதழ்களையுடைய சுவாதிட்டானத்தை அங்கமாக, நாலு இதழ்களையுடைய மூலாதாரத்தை வேதமாக அமைத்துள்ளாள், சகஸ்ரதளத்தில் சிவத்துடன் ஒன்றும்போது சமவாயமாக ஒத்து நின்றனள், எமது நேரிழையாகிய அவள் நிலையான பொருளாவாள் என்று அறிவாயாக.

*1181.* *கூறிய கன்னி குலாய புருவத்தன்*
*சீறிய ளாயுல கேழுந் திகழ்ந்தவன்*
*ஆரிய நங்கை யமுத பயோதரி*
*பேருயி ராளி பிறிவறுத் தாளே.*

கூறிய குண்டலினியாகிய கன்னி கூட்டமாகிய சத்திகளுடன் புருவத்திடை விளங்குவள், சிறந்தவளாக ஏழுலகும் விளங்குவள், மேலானவள், அமுதம் நிறைந்த சூரிய சந்திரராகிய தனங்களையுடையவள், பிரமனை ஆளுபவள், அவள் அந்நியமாக விளங்குபவள்.

*1182.* *பிறிவின்றி நின்ற பெருந்தகைப் பேதை*
*குறியொன்றி நின்றிடுங் கோமளக் கொம்பு*
*பொறியொன்றி நின்று புணர்ச்சிசெய் தாங்கே*
*அறிவொன்ற நின்றனள் ஆருயி ருள்ளே.*

சிவத்தோடு பிரிப்பின்றிக் கலந்து நின்ற பெருந்தகுதியுடைய பேதை, தியானத்தில் புருவ மத்திக்குமேல் பொருந்தி விளங்கும் அழகிய கொடி போல்வாள், அறிவினுள் அறிவாகப் பொருந்தி நின்று, அவ்விடத்து அரிய உயிர்க்கு அறிவாகக் கலந்து நின்றாள்.

*1183.* *உள்ளத்தி னுள்ளே யுடனிருந்த தைவர்தங்*
*கள்ளத்தை நீக்கிக் கலந்துட னேபுல்கிக்*
*கொள்ளத் தவநெறி கூடிய இன்பத்து*
*வள்ளற் றலைவி மருட்டிப் புரிந்தே.*

வள்ளலாகிய பராசக்தி, மனத்தினுள் உடனாய் இருந்து, ஐம்பொறிகள் செய்யும் கள்ளத்தனத்தை ஒழித்து, உயிரோடு கலந்து, தவநெறி உண்டான இன்பத்தில், என்னை மயக்கி விரும்பச் செய்தாள்.

*1184.* *புரிந்தருள் செய்கின்ற போகமா சத்தி*
*இருந்தருள் செய்கின்ற இன்பம் அறியார்*
*பொருந்தி யிருந்த புதல்விபூ வண்ணத்*
*திருந்த விலக்கில் இனிதிருந் தானே.*

விரும்பி அருள் புரிகின்ற போக சத்தி, மனத்துள் இருந்து இன்பம் அளிப்பதை யாரும் அறியார், அவ்வாறு பொருந்தியிருந்த புதல்வியாகிய சத்தி, மலரும் மணமும் போல் சிவத்தோடு பொருந்தி இனிமையாக வீற்றிருந்தாள்.

*1185.* *இருந்தனள் ஏந்திழை என்னுள மேவித்*
*திருத்து புணர்ச்சியில் தேர்ந்துணர்ந் துன்னி*
*நிரந்தர மாகிய நிரதி சயமொடு*
*பொருந்த விலக்கிற் புணர்ச்சி அதுவே.*

ஏந்திழையாகிய சத்தி எனது உள்ளத்தை இடமாகக் கொண்டு விரும்பி இருந்தாள், திருத்தமாகிய கலப்பில் தெளிந்து அறிந்து தியானித்து, இடையீடில்லாத வியப்பற்ற நிலையில் பொருந்தியிருக்க, தடையானவைகளை விலக்கியிருந்தாள், அதுவே சத்தியோடு கலப்பதாகும்.

*1186.* *அதுஇது என்னும் அவாவினை நீக்கித்*
*துதியது செய்து கழியுற நோக்கில்*
*விதியது தன்னையும் வென்றிட லாகும்*
*மதிமல ராள்சொன்ன மண்டல மூன்றே.*

அது வேண்டும் இது வேண்டும் என்னும் ஆசையினை விட்டு, அவளைப் புகழ்ச்சி செய்து பிரமரந்திரத்தில் தியானிக்கில், விதிக்கப்பட்ட வினைகளையும் வென்றுவிடலாம், சந்திர மண்டலவாசியாகிய அம்மை சொன்ன மண்டலங்கள் மூன்றாகும்.

**1187.** ***மூன்றுள மண்டலம் மோகினி சேர்விடம்***
***ஏன்றுள ஈரா றெழுகலைை உச்சியில்***
***தோன்று மிலக்குற வாகுதல் மாமாயை***
***ஏன்றனள் ஏழிரண் டிந்துவொ டீறே.***

மோகினி சேர்கின்ற மண்டலங்கள் அக்கினி, எனினும் பொருந்திய பன்னிரு கலைகளையுடைய சூரிய மண்டலத்தின் உச்சியில், விளங்கும் இலக்கில் பொருந்துதல் சுத்த மாயையும், அப்போது நலத்தரு பேதமாகிய பராசத்தி சந்திர மண்டலத்தில் விளங்குவாள்.

**1188.** ***இந்துவி னின்றெழு நாதம் இரவிபோல்***
***வந்துபின் நாக்கின் மதித்தெழுங் கண்டத்தில்***
***உந்திய சோதி இதயத் தெழும்ஒலி***
***இந்துவின் மேலுற்ற ஈறது தானே.***

சந்திர மண்டலத்தில் உதிக்கின்ற நாதம் மலைபோல் ஓங்கி, பின்நாக்கு என்ற சிறுமூளைப் பகுதியில் கண்டத்தினின்றும் மேலெழும், உந்திய சோதியாக அநாதகச் சக்கரத்திலுள்ள இதயத்துடிப்பு ஒலி, சந்திரகலை மேற்சென்று இறுதியை அடையும்.

**1189.** ***ஈறது தான்முதல் எண்ணிரண் டாயிர***
***மாறுதல் இன்றி மனோவா மாயெழில்***
***தூறது செய்யுஞ் சுகந்தச் சுழியது***
***பேறது செய்து பிறந்திருந் தாளே.***

சந்திர கலை பதினாறின் முடிவே சிருட்டிக்கு முதலாம், ஆயிரக்கணக்கான மாற்றங்கள் இல்லாமல் மனம் சமநிலையைப் பெற்று, அது அழகு மிக்கு விளங்கும் வாசனை நிறைந்த இடமாகும், அதனையே பேறாகக் கொண்டு விளங்கியிருந்தாள்.

**1190.** ***இருந்தனன் ஏந்திழை ஈறதி லாகத்***
***திருந்திய ஆனந்தஞ் செந்நெறி நண்ணிப்***
***பொருந்து புவனங்கள் போற்றிசெய் தேத்தி***
***வருந்த இருந்தனள் மங்கைநல் லாளே.***

ஏந்திழையாகிய சத்தி சந்திர கலையில் ஈறாக விளங்கும் சூக்குமை வாக்குகளான பரசரீரத்தில் எழுந்தருளியிருந்தனன், மேலான ஆனந்தத்தைப் பெறுவதற்கான நன்னெறியை அடைந்து, பொருந்திய புவனங்களில் உள்ளோர் அவளது புகழை நினைத்து வழிபட்டு ஏங்கியிருக்க, நன்மையைச் செய்யும் சத்தி வீற்றிருந்தாள்.

**1191.** ***மங்கையும் மாரனுந் தம்மொடு கூடிநின்***
***றங்குவி கூட்டி அகம்புறம் பார்த்தனர்***
***கொங்கைநல் லாளுங் குமாரர்கள் ஐவருந்***
***தங்களின் மேவிச் சடங்குசெய் தாரே.***

சத்தியும் சிவனும் பொருந்தி நின்று, யானை துதிக்கை போன்ற பிரணவத்தின் உச்சியிலிருந்து சிருட்டிக்க எண்ணிச் சீவர்களுக்கு உடலுக்கு வேண்டியதையும், உயிருக்கு வேண்டியதையும் கணித்தனர், சூரிய சந்திரர்களைத் தனங்களாகக் கொண்ட பார்வதியும் ஐந்து குமாரர்களுடன், தங்களது சத்தியோடு சேர்த்து உலகத்துக்கான படைத்தலாதித் தொழில்களைச் செய்தனர்.

**1192.** ***சடங்கது செய்து தவம்புரி வார்கள்***
***கடந்தனி னுள்ளே கருதுவ ராகில்***
***தொடர்ந்தெழு சோதி துளைவழி ஏறி***
***அடங்கிடும் அன்பின் தாயிழை பாலே.***

புறக்கிரியைகளை மட்டும்செய்து தவத்தைப் புரிகின்ற மக்கள், அகத்திலுள்ள சிவசத்தியைத் தியானிப்பராயின், மூலாதாரத்தினின்று மூண்டெழுகின்ற மூலாக்கினி ஆறாதாரங்களாகிய வழியுடன் பிரமப் புழையில் உயர்ந்து, அன்பு வடிவான சத்தியினிடத்து அடங்கும்.

**1193.** ***பாலித் திருக்கும் பனிமல ராறினும்***
***ஆலித் திருக்கும் அவற்றின் அகம்படி***
***சீலத்தை நீக்கத் திகழ்ந்தெழு மந்திர***
***மூலத்து மேலது முத்தது வாமே.***

சந்திரகலை ஆறு ஆதாரங்களிலும் பொருந்தித் தனது சத்தியை வெளிப்படுவதாக உள்ளது, அவற்றினுள் பொருந்திக் களிப்பூட்டிக் கொண்டுள்ளது, அதன் தன்மையை மாற்ற ஒளி பெற்று மூலாதாரத்தினின்று மேலெழும் பிரணவம் உதவுவதாகும், சொல்லப்போனால் முத்துப் போன்ற நிறத்தினையுடைய வீரியமேயாகும்.

*1194.* *முத்து வதனத்தி முகந்தொறு முக்கண்ணி*
*சத்தி சதிரி சகளி சடாதரி*
*பத்துக் கரத்தி பராபரன் பைந்தொடி*
*வித்தகி என்னுள்ள மேவிநின் றாளே.*

முத்துப்போன்ற சுக்கில நாடியில் முகமுள்ளவள், சோம சூரியக்கினியாகிய முக்கண்களைப் பத்து முகங்களிலும் உடையவள், ஆற்றலையுடையவள், திறமையுடையவள், உருவத்தையுடையவள், ஒளிக் கிரணங்களை முடியிலுடையவள், பத்துநாடிகளினால் தொழில் செய்பவள், பராபரனாகிய சிவத்துக்கு ஸ்பந்தரூபமான தேவி, பைரவி, இத்தன்மையுடையவள் என்னுள்ளத்தைப் பொருந்தி நின்றனள்.

*1195.* *மேவிய மண்டலம் மூன்றுடன் கீழெளி*
*தாவிய நற்பதத் தண்மதி யங்கதிர்*
*மூவருங் கூடி முதல்வியாய் முன்னிற்பார்*
*ஒவினு மேலிடும் உள்ளொளி யாமே.*

பொருந்திய மூன்று மண்டலங்களுள், அக்கினி மண்டலத்தில் பொருந்திய திருவடியை உடையவள், மதி மண்டலத்தை முகமாகவும் கதிர் மண்டலத்தை உடலாகவும் கொண்டு மும்மண்டல நாயகியாய் முன்னிற்பள், நாம் விலக்கினும் நம்மை விட்டு விலகாத உள்ளொளியாய்ப் பொருந்துவள்.

*1196.* *உள்ளொளி மூவிரண் டோங்கிய அங்கங்கள்*
*வெள்ளொளி அங்கியின் மேவி அவரொடுங்*
*கள்ளவிழ் கோதை கலந்துடனே நிற்குங்*
*கொள்ள விசுத்திக் கொடியமு தாமே.*

உள்ளொளியாகிய குண்டலினி ஆறு ஆதாரங்களாகிய அங்கங்களில், வெண்ணிற ஒளியாகச் சிவத்துடன் பொருந்தி, எல்லா ஆதார தேவதைகளுடன் சத்தி கலநது மேலே செல்வள், அநாகதச் சக்கரம் அடங்க விசுத்திச் சக்கரத்துக்கு மேல் அமுத மண்டலம் விளங்கத் தொடங்கும் நிலையாம்.

*1197.* *கொடியதி ரேகை குருவுள் இருப்பப்*
*படியது வாருணைப் பைங்கழ வீசன்*
*வடிவது வானந்தம் வந்து முறையே*
*இடுமுதல் ஆறங்கம் ஏந்திழை யாளே.*

விசுத்திக்குமேல் நெற்றி நடுமுதல் பிரமரந்திரம் முடிய விளங்கும் சகஸ்ரதளத்தில் விளங்கும் சதாசிவமாகிய பரமகுரு இருக்க, அங்கு வெளிப்படுவது ஆனந்தக் கள்ளாகும், அந்த ஆனந்தமே இறைவனின் பசுமையான திருவடியாம், அவன் உருவம் ஆனந்தம், மூலாதார முதல் ஆறு ஆதாரங்களையும் அங்கமாகவுடைய ஏந்திழை ஆனந்தத்தை அளிப்பாள்.

*1198.* *ஏந்திழை யாளும் இறைவர்கள் மூவரும்*
*காந்தார மாறுங் கலைமுதல் ஈரெட்டு*
*மாந்த குளத்தியு மந்திர ராயவுஞ்*
*சார்ந்தனர் ஏத்த இருந்தனள் சத்தியே.*

குண்டலினியும், அயன் முதலிய மூன்று இறைவர்களும், அஞ்ஞானக் காடாகிய ஆறாதாரங்களும், சந்திரகலை பதினாறும், சதாசிவ பத்தினியும், மந்திர ராஜனான ஈசானரும், சார்ந்து வழிபடப் பராசத்தி எழுந்தருளினாள்.

*1199.* *சத்தியென் பாளொரு சாதகப் பெண்பிள்ளை*
*முத்திக்கு நாயகி என்ப தறிகிலர்*
*பத்தியைப் பாழில் உகுத்தஅப் பாவிகள்*
*கத்திய நாய்போற் கதறுகின் றாரே.*

சத்தி சாதகர்க்குப் பாலை வடிவில் குண்டலினியாக உள்ளாள், அவளை அறிந்து மேலெழச் செய்தால் அவளே முத்தியை அளிக்கும் தலைவியாவாள், இவ்வுண்மையை அறியாது பத்தியை வீணே செலுத்திய பாதகர்கள், ஆரவாரம் செய்யும் நாய் போல் கதறிக் கொண்டுள்ளார்களே!

*1200.* *ஆரே திருவின் திருவடி காண்பர்கள்*
*நேரே நின்றோதி நினையவும்வல் லார்க்குக்*
*காரேர் குழலி கமல மலரன்ன*
*சீரேயுஞ் சேவடி சிந்தையைத் தானே.*

திருவாகிய பராசத்தியின் திருவடியைக் காண்பவர் யார்? அவளை ஒளியில் கண்டு புகழ்ந்து தியானம் செய்பவர்க்கு, கருமை நிறமுள்ள சுழுமுனையாகிய குழலின் அடிப்பாகத்தில் சிவந்த தாமரை போன்ற பெருமை நிறைந்த திருவடியை அருளச் செய்வாள்.

*1201.* *சிந்தையில் வைத்துச் சிராதியி லேவைத்து*
*முந்தையில் வைத்துத்தம் மூலத்திலே வைத்து*
*நிந்தையில் வையா நினைவதிலே வைத்துச்*
*சந்தையில் வைத்துச் சமாதிசெய் வீரே.*

சத்தியைப் பற்றிய கருத்துகளைச் சிந்தனையில் அகலாது வைத்து, சிரத்தில் ஆதியான புருவ மத்தியத்தில் தொடங்கி, ஒளி முகமாக முன்னிலைப்படுத்திக் கொண்டு, ஆகுமஞ்சனம், கூர்மாசனம் போன்றவைகளால் குண்டலினியின் முகத்தை மாற்றி மேலெழுச் செய்து கொண்டு, உலக விஷயங்களை நினையாது அவளையே நினைத்து, ஞானேந்திரியங்கள் கூடுமிடமான நாதத் தொனியில் பொருந்தி, சமாதி செய்யுங்கள்.

*1202.* *சமாதிசெய் வார்கட்குத் தான்முத லாகிச்*
*சிவாதியி லாருஞ் சிலைநுத லாளை*
*நவாதியி லாக நயந்தது ஓதில்*
*உவாதி அவளுக் குறைவில தாமே.*

சமாதியாகிய ஒடுக்கத்தில் பயில்வாருக்குத் திருவரும்மையே முதல்வியாகி, 'சிவா'வை முதலாகக் கொண்டு விளங்கும் மந்திரத்தால் அநுபவிக்கப்படுவளை, நவந்தரு பேதமாகவுள்ள நிலையினை உணர்ந்து சிந்திக்கில், சந்திர கலையின் உச்சியே அவளுக்கு உறையுளாகக் கொண்டு விளங்குவாள்.

*1203.* *உறைபதி தோறும் முறைமுறை மேவி*
*நறைகமழ் கோதையை நாடொது நண்ணி*
*மறையுட னேநிற்கு மற்றுள்ள நான்கும்*
*இறைதினைப் போதினில் எய்திட லாமே.*

சத்தி விளங்குகின்ற மூலாதாரம் முதலிய இடங்கள் தோறும் முறையாக அடைந்து, இன்பத்தை அளிக்கும் நங்கையை நாடொறும் விரும்பி இருந்தால், மூலாதாரத்துடனுள்ள ஏனைய சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆகிய நான்கு சக்கரங்களும், சிறிது நேரத்தில் விளங்கி இறைவினைப் பொருந்தலாம்.

*1204.* *எய்திட லாகும் இருவினை யின்பயன்*
*கொய்தளிர் மேனிக் குமரி குலாங்கன்னி*
*மைதவழ் கண்ணிநன் மாதுரி கையொடு*
*கைதவம் இன்றிக் கருத்துறும் வாறே.*

மேன்மையான பயனை அடையலாம், இளந்தளிர் போன்ற மேனியையும் கூட்டத்தையும் உடைய குண்டலினியையும், நீலோற்பலம் போன்ற கண்ணையுடைய பராசத்தியையும், இன்பமான முறையில், வஞ்சனையின்றி வழிபடும் முறை இதுவாகும்.

*1205.* *கருத்துறுங் காலங் கருது மனமுந்*
*திருத்தி யிருந்தவை சேரு நிலத்து*
*ஒருத்தியை உன்னி உணர்ந்திடு மண்மேல்*
*இருத்திடும் எண்குணம் எய்தலும் ஆமே.*

உனக்கு இன்பம் உண்டாகின்ற நேரத்து மனத்தால் தியானிக்கவும், மூலாதாரத்தில் விளங்கும் பாலையைச் சுவாதிட்டான வழிச் செல்லாது பிரமரந்திரம் நோக்கிய மனத்துடன் பராசத்தியை உணர்ந்தறிவாயாக, பூமியின்மேல் நீண்ட ஆயுளோடு வைப்பாள், தன் வயத்தனாதல் முதலிய எட்டுக் குணங்களும் அடைதலும் அமையும்.

*1206.* *ஆமையொன் றேறி அகம்படி யானென*
*ஓம்என் றோதியெம் உள்ளொளி யாய்நிற்கும்*
*தாம நறுங்குழல் தையலைக் கண்டபின்*
*சோம நறுமலர் சூழநின் றாளே.*

ஆமை போன்று இந்திரியங்களை அடக்கி யான் செருக்கு இல்லாதவள் என்று, பிரணவத்தின் சுரமாகிய மகாரத்தைத் தொண்டைக்கு மேல் நினைக்க மூலாதாரத்திலிருந்து ஒரே சோதியாய் விளங்கும், பராசத்தியைக் கண்டபின், சந்திர மண்டலத்தில் விளங்குவதைக் காணலாம்.

*1207.* *சூடிடும் அங்குச பாசத் துளைவழி*
*கூடும் இருவளைக் கோலக்கைக் குண்டிகை*
*நாடும் இருபத நன்னெடு ருத்திரம்*
*ஆடிடுஞ் சீர்புனை ஆடக மாமே.*

மூலாதார முதல் பிரமரந்திரம் வரை செல்லும் சித்திரணி நாடியில் தோட்டியையும் சுட்டுக் கயிற்றையும் தரித்திருப்பாள், அத்துடன் பெரிய சங்கமும் அமுத கலசமும் பொருந்தும், இருபதங்களாகிய 'சிவா' என்று நீண்டு உச்சரிக்கப்படும் மந்திரத்தை விரும்பும், சிறப்புப் பொருந்திய பொன் மன்றுள் ஆடும்.

*1208.* *ஆமயன் மாலரன் ஈசன் சதாசிவன்*
*தாமடி சூழநின் றெய்தினர் தம்பதங்*
*காமனுஞ் சாமன் இரவி கனலுடன்*
*சோமனும் வந்தடி சூடநின் றாளே.*

பிரமன், திருமால், உருத்திரன், மகேசன், சதாசிவன் ஆகியோர், சத்தியின் திருவடியைச் சூடித் தத்தம் பதவியைப் பெற்றனர், காமனும் அவன் தம்பியாகிய சாமனும் சூரியனும் அக்கினியுடன், சந்திரனும் திருவடியில் பொருந்தும்படி மூலாதார முதல் ஒரே சோதியாக நின்றனள்.

*1209.* *சூடும் இளம்பிறை சூலி கபாலினி*
*நீடும் இளங்கொடி நின்மலி நேரிழை*
*நாடி நடுவிடை ஞான முருவநின்*
*றாடு மதன் வழி அண்ட முதல்வியே.*

சுவாதிட்டனத்தில் இன்பத்தைப் பெருக்கும் இளம்பிறையைச் சிரசில் கொண்டவள், சுழுமுனை நாடியும் அதன்மேல் விளங்கும் சோம சூரியாக்கினியும் ஆகிய சூலத்தைத் தன் வடிவாகக் கொண்டவள், மேல் மண்டையில் விளங்கும் சந்திர மண்டலத்தைத் தரித்துள்ளவள், மூலாதாரத்தொட்டு பிரமரந்திரம் முடீய கொடி போல் சித்திரணி நாடியில் செல்பவள், மலம் இல்லாதவள், பெண், இத்தகையவள் நடு நாடி வழி ஞானம் விளங்க நின்று, திரு நடனமிடுதல் அண்ட முதல்வி என்று அழைக்கப்படுகிறது.

*1210.* *அண்ட முதலாய் அவனிபரி யந்தங்*
*கண்டதொன் றில்லைக் கனங்குழை யல்லது*
*கண்டனுங் கண்டியு மாகிய காரணங்*
*குண்டிகை கோளிகை கண்டத னாலே.*

ஆகாயக் கூறான அண்ட முதல் பூமி தத்துவம் வரை, பொற்காதணியுடைய பராசத்தியைத் தவிர வேறு நிலையான இடம் பெற்றவர் இல்லை, சிவனும் சத்தியமாகிய காரணம், பெண்ணும் ஆணுமாகப் படைப்பதற்காகவேயாம்.

*1211.* *ஆலமுண் டானமு தாங்கவர் தம்பதஞ்*
*சாலவந் தெய்துந் தவத்தின்பந் தான்வருங்*
*கோலிவந் தெய்துங் குவிந்த பதவையோ*
*டேலவந் தீண்டி இருந்தனன் மேலே.*

சத்தி ஆலகாலம் உடை சிவத்துக்கு அமுதம் ஆவாள், அவர் அடையும் பதவியாவாள், நிரம்ப வந்து பொருந்தும் தவத்தால் வரும் இன்பமாகத் தானே வருவாள், அத்தகைய சத்தி ஆதாரங்கள்தோறும் கோலி வந்து அடையப்பெறும் குவிந்த வழியாகிய சுழுமுனையோடு, பொருந்த வந்து செறிந்த உச்சியின் மேல் விளங்கினள்.

*1212.* *மேலாம் அருந்தவம் மேன்மேலும் வந்தெய்தக்*
*காலால் வருந்திக் கழிவர் கணத்திடை*
*நாலா நளினநின் றேத்திநட் டுச்சிதன்*
*மேலா மெழுத்தின னாமத்தி னானே.*

மேன்மையான அரிய தவம் மேலும் மேலும் பெருகவும், பிராண வாயுவின் இயக்கத்தால் அழியும் மாந்தர் இதனை அறியாது கணத்திடை கெடுவர், அன்ன மயமான உடலிலுள்ள நாவிதழ்ச் தாமரையினின்று வழிபடப்பெற்று, உச்சி நடுவில் மேலான பிரணவமாக அம்மை விளங்குவாள்.

*1213.* *ஆமத் தினிதிருந் தன்ன மயத்தினள்*
*ஓமத்தி லேயும் ஒருத்தி பொருந்தினள்*
*நாம நமசிவ என்றிருப் பார்க்கு*
*நேமத் துணைவி நிலாவி நின்றாளே.*

அன்னமய கோசத்துக்கு உண்ணும் உணவினால் சத்தி வழங்குபவளாக இருந்தனள், யோனியாகிய குண்டத்தில் தன்னைச் சிவார்ப்பணம் செய்பவர்க்கு அங்கேயும் சோதி வடிவாக விளங்கினள், சிவத்துக்கு அடிமை என்றிருப்பவர்க்கு, வேரினிடமே துணைவி பொருந்தி விளங்கினள்.

*1214.* *நிலாமய மாகிய நீள்படி கத்தின்*
*சிலாமய மாகுஞ் செழுந்த ரளத்தின்*
*கலாமய மாகுஞ் கரிகுழற் கோதை*
*கலாமய மாகக் கலந்துநின் றாளே.*

நிலாவைப் போன்ற நீண்ட வெண் பளிங்கின், செழுமையான முத்துப் போன்ற சிலைமயமாய்ச் சத்தி உள்ளாள், சுருண்ட குழல் போன்ற சுழுமுனையில் விளங்குபவள் சொலிக்கும் தன்மையள், மூலாதாரச் சத்தியால் மாற்றப்பட்டபோது நிவிருத்தியாதி பஞ்ச கலைகளாகக் கலந்து நின்றாள்.

*1215.* *கலந்துநின் றாள்கன்னி காதல னோடுங்*
*கலந்துநின் றாள்உயிர் கற்பனை எல்லாங்*
*கலந்துநின் றாள்கலை ஞானங்கள் எல்லாங்*
*கலந்துநின் றாள்கன்னி காலமு மாயே.*

மூலாதாரத்திலுள்ள உருத்திரருடன் குண்டலினி பொருந்தி நின்றாள், மனத்தின் கற்பனைகளுக்கு எல்லாம் அவளே காரணமாயினாள், பாச அறிவுகளில் எல்லாம் அவளே விளங்கினாள், பாச அறிவு அழியும் உடலுடன் தொடர்புள்ளவையாதலின் குண்டலினி காலதத்துவத்துடன் கலந்திருந்தாள்.

*1216.* *காலவி எங்குங் கருத்தும் அருத்தியுங்*
*கூலவி ஒன்றாகுங் கூட இழைத்தனள்*
*மாலினி மாகுலி மந்திர சண்டிகை*
*பாலினி பாலவன் பாகம தாமே.*

சீவர்களுக்குக் காலதத்துவமாயுள்ளவள், எங்கும் எண்ணத்தைப் பூர்த்தி செய்யும் அனுகூலமுடையவள், பிரிப்பின்றி விளங்கும் கலப்பினைச் செய்தவள், உமை, மூலாதாரச் சத்தியாகிய குண்டலினி, சண்டிகை மந்திரத்தில் விளங்குபவள், இவள் காப்பவளாய்க் காக்கின்ற சிவத்துக்கு ஒரு பாகமாவுள்ளாள்.

*1217.* *பாகம் பராசத்தி பைம்பொன் சடைமுடி*
*ஏகம் இருதயம் ஈரைந்து திண்புய*
*மோக முகமைந்து முக்கண் முகந்தொறும்*
*நாகம் உரித்து நடஞ்செய்யும் நாதர்க்கே.*

பசிய பொன்மயமான கிரணங்களை முடியாகவுடையவள், ஒருடல், பத்து வலிய புயங்கள், விருப்பத்தை விளைக்கும் ஐந்து முகங்கள், ஒவ்வொரு முகத்திலும் மூன்று கண்கள் ஆகியவற்றை உடையவள், அஞ்ஞான மயமான இருட்டைப் பிளந்து செல்லும் பிரணவத்தில் விளங்கும் சிவத்துக்கு, பராசத்தி பாகமாகவுள்ளாள்.

*1218.* *நாதனும் நாலொன் பதின்மருங் கூடிநின்*
*றோதிடுங் கூட்டங்கள் ஓரைந் துளஅவை*
*வேதனும் ஈரொன்ப தின்மரும் மேவிநின்*
*றாதியும் அந்தமு மாகிநின் றாளே.*

ஆன்மாவும் முப்பத்தாறு தத்துவங்களும் பொருந்தி நின்று, செயற்படும் கொத்துகள் ஐந்து ஐந்தாகவுள்ளன, அக்கொத்துகளில் வேதனும் பதிணெண்கணத்தவரும் பொருந்த, ஆதியாகவும் அந்தமாகவும் தேவி விளங்கி நின்றாள்.

*1219.* *ஆகின்ற நாள்கலை ஐம்பத் தொருவர்கள்*
*ஆகிநின் றார்களில் ஆருயி ராமவள்*
*ஆகிநின் றாளுட னாகிய சக்கரத்*
*தாகிநின் றானவள் ஆயிழை பாடே.*

படைக்கின்ற நாள் ஆதாரச் சக்கரங்களிலுள்ள ஐம்பத்தோர் அட்சரங்களிலும் அவளுடைய சத்திகள் பொருந்தி, அவற்றுக்குப் பராசத்தி உயிராக அமைந்தனள், இவ்வாறு ஆகின்ற அவளுடன் உடம்புள், சிவன் அம்மையோடு பொருந்தி எல்லாவற்றிலும் கலந்து நின்றான்.

*1220.* *ஆயிழை யாளொடு மாதிப் பரமிடம்*
*ஆயதொ ரண்டவை யாறும் இரண்டுள*
*ஆய மனந்தொ றறுமுக மவைதனில்*
*ஏயவார் குழலி இனிதுநின் றாளே.*

சத்தியோடு சிவத்துக்கு இடமான சக்கரம், சிரசின் மேலுள்ள எட்டிதழ்ச் கமலமாகும், மனம் எந்த எந்தச் குறிப்பைப் பற்றி நிற்கிறதோ அதற்கேற்ப அந்த அந்த ஆதாரங்களில் சென்று, பொருந்தி சத்தி அருள் புரிந்து நின்றாள்.

*1221.* *நின்றனள் நேரிழை யோடுடன் நேர்பட*
*இன்றெ னகம்படி ஏழு உயிர்ப்பெய்துந்*
*துன்றிய வோரொன் பதின்மருஞ் சூழலுள்*
*ஒன்றுயர் வோதி யுணர்ந்துநின் றாளே.*

நேரிழையாகிய பராசத்தி என்னுள்ளே சுழுமுனையில் சுழுமுனையில் ஊர்த்துவ முகமாக நின்றனள், அதனால் ஏழு ஆதாரச் சக்கரங்களிலும் பிராணன் உந்தப்பெற்று சகஸ்ரதளம் விளங்கிற்று, அதனால் பிராணவாயு ஏனைய ஒன்பது வாயுக்களுடன் மேலேறிச் சென்று, அது ஒன்றே உயர்வானது என்று அறிவித்துத் தானும் அதில் நின்றாள்.

*1222.* *உணர்ந்தெழு மந்திரம் ஓமெனும் உள்ளே*
*மணந்தெழு மாங்கதி யாகிய தாகுங்*
*குணர்ந்தெழு சூதனுஞ் சூதியுங் கூடிக்*
*கணந்தெழுங் காணுமக் காமுகை யாமே.*

பிராணன் ஊர்த்துவ முகமானபோது உணர்வாக எழும் மந்திரமாகிய பிரணவத்துள்ளே, சேர்ந்து எழுகின்றது மேலான முத்தி நெறியாகும், அப்பொழுது சத்தி சிவத்தை நோக்கி அகண்டத்தில் செல்ல விரும்பிச் சீவனோடு கலந்தெழும், இந்நிலை சிவத்தின்படி விரும்பிச் செல்லும் காதலி போன்ற நிலையாகும் என்று காண்பாயாக.

*1223.* *ஆமது வங்கியும் ஆதியும் ஈசனும்*
*மாமது மண்டல மாருத மாதியும்*
*ஏமது சீவன் சிகையங் கிருண்டிடக்*
*கோமலர்க் கோதையுங் கோதண்ட மாகுமே.*

ஊர்த்துவ சகஸ்ரதளம் அக்கினியாயும் ஆதி சத்தியாயும் அமையும், மகேசன் விளங்கும் மண்டலமாயும், வாயு முதலாக மேலுள்ள ஆகாயம் சூரியன், சந்திரன் அக்கினி ஆகியவையும் அங்கு விளங்கும், கவசமாகச் சீவனுக்குள்ள சிகை மந்திரம் உடலறிவு கடந்தபோது தொழிலற்றதாக, பராசத்தியும் அரசன் வாழும் வீணாத்தண்டில் விளங்குவாள்.

*1224.* *ஆகிய கோதண்டத் தாகு மனோன்மணி*
*ஆகிய ஐம்ப துடனே அடங்கிடும்*
*ஆகும் பராபரை யோடப் பரையவள்*
*ஆகு மவள்ஐங் கருமத்தன் தானே.*

இவ்வாறாக வீணாத்தண்டின் மேல் மனோன்மணி விளங்கிய போது, எல்லாவற்றுக்கும் காரணமாகிய மூலாதார முதல் ஆறாதாரங்களிலும் உள்ள ஐம்பது அட்சரங்களின் தொழிலும் ஒய்ந்துவிடும், இதற்கு மேலாகும் பராபரையோடுள்ள பரை, அவளே சீவர்களுக்கு ஐந்தொழிலைப் புரிபவள்.

*1225.* *தானிகழ் மோகினி சார்வான யோகினி*
*போன மயமுடை யாரடி போற்றுவர்*
*ஆனவ ராவியி னாகிய வச்சிவந்*
*தானாம் பரசிவ மேலது தானே.*

தானே நிகழ்வதாகிய மோகினி, அதனைச் சார்ந்துள்ள யோகினி சத்திகளாகிய இவற்றை, கடந்து சென்றவர் திருவருட்சத்தி மயமுடையவராய் அவளது திருவடியைப் போற்றுவர், அங்ஙனமான உயிரினிடமாக விளங்கும் சிவன், அதுதானே மேலான பரசிவமாம்.

*1226.* *தானந்த மேலே தருஞ்சிகை தன்னுடன்*
*ஆனந்த மோகினி யம்பொற் றிருவொடு*
*மோனையில் வைத்து மொழிதரு கூறது*
*வானவை யோமெனும் இவ்வுயிர் மார்க்கமே.*

உடம்பின்மேல் இறுதியிலுள்ள சிகையில் மேல் விளங்கும் சகஸ்ரதளத்தி, ஆனந்த மோகினியாகிய பராசத்தி பொன்னொளியில் விளங்கும் சிவத்துடன், மவுனத்தில் வைத்து விளங்கும், இதுவே அகர உகர மகர விந்து நாதமான உயிர் அடையும் பிரணவ நெறியாம்.

*1227.* *மார்க்கங்கள் ஈன்ற மனோன்மனி மங்கலி*
*யார்க்கும் அறிய வரியா ளவளாகும்*
*வாக்கு மனமும் மருவியொன் றாய்விட்ட*
*நோக்கும் பெருமைக்கு நுண்ணறி வாமே.*

உலகினர் உய்ய சமய நெறிகளை வகுத்த உமாதேவி தனது பதியுடன் பிரிப்பற்று விளங்குவள், யாவர்க்கும் அறிவதற்கு அருமையானவள், யாவர்க்கும் அறிவதற்கு அருமையானவள், வாக்கும் மனமும் பொருந்தி ஒன்றானபோது, அவரது நுண்ணறிவில் விளங்கும் பெருமையினை உடையவள்.

1228. *நுண்ணறி வாகும் நுழைபுலன் மாந்தர்க்குப்*
*பின்னறி வாகும் பிரானறி வத்தடஞ்*
*செந்நெறி யாகுஞ் சிவகதி சேர்வார்க்குத்*
*தன்னெறி யாவது சன்மார்க்க மாமே.*

மிகக் கூரிய புலன்களைக் கொண்டு அறியும் மாந்தரின் அறிவு, சிவம் அக்கருவிகளுடன் பொருந்தியதால் அமைவது ஆதலின் இதுபின் அறிவாகும், கருவிகளை விட்டுப் பிரானுடன் ஒன்றிக் கருவிகள் இல்லாது அறியும் அறிவைப் பெறுவது செந்நெறியாகும், சிவத்துடன் பொருந்தி அடையப்படுவதே ஆன்மா அடைய வேண்டிய நெறியாகும், இதுவே சன்மார்க்கமாகும்.

1229. *சன்மார்க்க மாகச் சமைதரு மார்க்கமுந்*
*துன்மார்க்க மானவை எல்லாந் துரந்திடும்*
*நன்மார்க்கத் தேவரும் நன்னெறி யாவதுஞ்*
*சன்மார்க்கத் தேவியுஞ் சத்தியென் பாளே.*

சன்மார்க்கமாக அமைந்த நெறி, தூய நெறிகள் அல்லாத எல்லாவற்றையும் அகற்றிவிடும், நன்மார்க்கத்தால் நல்லொழுக்கம் ஆம். அச்சன்மார்க்கத்தைக் காட்டிய தேவியும் சத்தியேயாகும்.

1230. *சத்தியும் நானுஞ் சயம்புவும் அல்லது*
*முத்தியை யாரும் முதலறி வாரில்லை*
*அத்திமேல் வித்திடில் அத்தி பழுத்தக்கால்*
*மத்தியி லேற வழியது வாமே.*

சத்தியும் ஆன்மாவும் இவை இரண்டையும் உடைய சிவமும் ஆகிய மூன்றும் அல்லது, முத்தியின் நிலையின் மூடிவை அறிவார் ஒருவரும் இல்லை, பிரணவத்துக்கு மேல் அர்த்த மாத்திரையான சுரமாகிய மகரத்தை இட்டு, பிரணவம் பக்குவமானால் மூலாதாரம் தொடங்கி வீணாத்தண்டின் வழியாக பிரமரந்திரம் சென்று மேலும் சிவசத்தியின் மத்தியில் இருக்க வழியுண்டாகும்.

1231. *அதுவிது வென்றவ மேகழி யாதே*
*மதுவிரி பூங்குழல் மங்கைநல் லாளைப்*
*பதிமது மேவிப் பணியவல் லார்க்கு*
*விதிவழி தன்னையும் வென்றிட லாமே.*

அது இது என்று வாழ்நாளை வீணாகக் கழிக்காமல், இன்பம் சுரக்கும் சித்திரணி நாடியில் விளங்கும் குண்டலினியை, அவள் நாயகனோடு பொருத்திச் சந்திர மண்டல அமுதைப் பெருக்கி வணங்கும் தகுதி பெற்றவர், விதி வழிச் செல்லாது அருள் வழிச் சென்று விதியை வெல்லும் ஆற்றலைப் பெறுவர்.

1232. *வென்றிட லாகும் விதிவழி தன்னையும்*
*வென்றிட லாகும் வினைப்பெரும் பாசத்தை*
*வென்றிட லாகும் விழைபுலன் தன்னையும்*
*வென்றிடு மங்கைதன் மெய்யுணர் வோர்க்கே.*

வெற்றியையுடைய மங்கையராகிய பராசத்தியை உண்மையாக உணர்வார்க்கு, விதியை வெல்லலாகும், வினைக்கூட்டங்களை வெல்லலாகும், சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் ஆகிய விருப்பத்தை தருகின்ற புலன்களையும் வெல்லலாம்.

1233. *ஓரைம் பதின்மருள் ஒன்றியே நின்றது*
*பாரம் பரியத்து வந்த பரமிது*
*பாரன் சூழலாளும் அப்பதி தானுமுன்*
*சாரும் பதமிது சத்திய மாமே.*

ஐம்பத்தோர் அட்சரங்களுடன் கலந்து விளங்கியது, மரபுவழி வந்த பரம்பொருள் இது, விருப்பத்தைத் தரும் குழலாளும் அகர வாச்சியப் பொருளான சிவமும், முதலாகச் சாரும் இடம் இதுவாகும், இது உண்மையாம்.

1234. *சத்தியி னோடு சயம்புவும் நேர்படில்*
*வித்தது வின்றியே எல்லாம் விளைந்தன*
*அத்தகை யாகிய ஐம்பத் தொருவருஞ்*
*சித்தது மேவித் திருந்திடு வாரே.*

சத்தியோடு சிவன் சேர்ந்தால், மூலப் பொருளின்றியே சங்கற்பத்தினாலே எல்லாம் தோன்றின, அத்தகைய சங்கற்பத்தினாலே ஐம்பத்தோர் அட்சரங்களாகிய சத்திகளும், சீவர்கள் அறிவில் பொருந்தி அவர்களது எண்ணங்களுக்கேற்பப் பொருட்பிரஞ்சம் அமையும்படி செய்வர்.

*1235.* *திருந்து சிவனுஞ் சிலைநுத லாளும்*
*பொருந்திய வானவர் போற்றிசெய் தேத்த*
*அருந்திட அவ்விடம் ஆரமு தாக*
*இருந்தனள் தானங் கிளம்பிறை என்றே.*

திருந்திய சிவனும் ஆஞ்ஞையின்மேல் விளங்குபவளாகிய சத்தியும், வந்தடைந்த தேவர் வணங்கி வழிபட, அவ்விடத்து அருந்தும்படி அரிய அமுதமாக, இளம்பிறை போல அவள் அங்கு இருந்தாள்.

*1236.* *என்றும் எழுகின்ற ஏரினை எய்தினார்*
*அன்றது வாகுவர் தார்குழ லாளொடு*
*மன்றரு கங்கை மதியொடு மாதவர்*
*துன்றி தாரகை சோதிநின் றாளே.*

மூலாதாரத்திலிருந்து மேல் எழுகின்ற எழுச்சியினைப் பெற்றவர், அப்பொழுது குழலில் விளங்கிய சத்தியின் தன்மையைப் பெறுவர், இடாநாடியில் விளங்கும் சந்திர மண்டலத்தில், பொருந்திய தவமுடையோர் ஆன்ம ஒளியாகவும் உள்ளாள்.

*1237.* *நின்றனள் நேரிழை யாளொடு நேர்பட*
*ஒன்றிய வுள்ளொளி யாலே யுணர்ந்தது*
*சென்ற பிராணிகள் சிந்தையில் வேண்டிய*
*துன்றிடு ஞானங்கள் தோன்றிடும் தானே.*

அங்ஙனம் நின்றவளாகிய பராசத்தியுடன், பொருந்திய சந்திரமண்டல ஒளியாலே உணர்ந்து, அதனுள் பொருந்திய உயிர்களின் சிந்தையில், அவரவர்க்கு வேண்டிய சித்தத்தில் மறைந்திருந்த ஞானங்கள் உதித்து நிற்கும்.

*1238.* *தோன்றிடும் வேண்டுரு வாகிய தூய்நெறி*
*ஈன்றிடு மாங்கவன் எய்திய பல்கலை*
*மான்றரு கண்ணியும் மாரனும் வந்தெதிர்*
*சான்றது வாகுவர் தாமவ ளாயுமே.*

விரும்பிய வடிவை எய்துதற்குரிய தூய நெறி தோன்றிடும், பராசத்தியைப் பெறுவதற்கேற்ற பல்கலை ஞானங்களை அளிப்பவள், மானை ஒத்த கண்களையுடைய பராசத்தியும் மன்மதனை ஒத்த பரசிவமும் எதிரில் வெளிப்பட்டு, ஆன்மாவிடம் பேதமற நிற்பதை உணர்த்தச் சான்றாக வெளிப்பட்டு நிற்பள்.

*1239.* *ஆயும் அறிவுங் கடந்தணு வாரணி*
*மாயம தாகி மதோமதி யாயிடுஞ்*
*சேய அரிவை சிவானந்த கத்தரி*
*நேயம தாநெறி யாகிநின் றாளே.*

இவ்வண்ணம் ஆராயப்படுகின்ற அறிவின் எல்லையுங்கடந்து பரவாக்கு வடிவான பிரணவ சத்தியாவாள், மாயத்தையுடையதாகி மிக்க களிப்பினையுடையவள், செவ்வொளியில் விளங்குபவள், சிவத்தால் விரும்பப்படும் அழகினையுடையவள், அறியப்படும் பொருளாயும் அறியும் நெறியாயும் நின்றருளினாள்.

*1240.* *நெறியது வாய்நின்ற நேரிழை யாளைப்*
*பிறிவது செய்யாது பிஞ்ஞக ளோடுங்*
*குறியது கூடிக் குறிக்கொண்டு நோக்கும்*
*அறிவொடும் அங்கே அடங்கிட லாமே.*

அங்ஙனம் நெறியாக நின்ற பராசத்தியை, கணமும் பிரியாமல் பரவாக்கு வடிவான சிவத்தோடு, அவளது குறியைக் கொண்டு தியானிப்பவர், அறிவு குன்றாது அங்கே பொருந்தியிருக்கலாம்.

*1241.* *ஆமயன் மாலரன் ஈசன்மா லாங்கதி*
*ஓமய மாகிய ஒன்பதும் ஒன்றிடத்*
*தேமய னாளுந் தெனாதென என்றிடும்*
*மாமய மானது வந்தெய்த லாமே.*

பிரமன்மால் உருத்திரன் மகேசன் ஆகியவர் மயக்கத்தை விளைக்கும் கதியில் உள்ளனர், பிரணவ வடிவான சிவத்தில் பிரமன், மால், உருத்திரன், மகேசன், சதாசிவர், சூரியன், சந்திரன், அக்கினி, தாரகை என்ற ஒன்பதும் ஒடுங்கிட, தேன் உண்டு களித்த வண்டு போல, சிவசத்தி வடிவமாய் விளங்கும் நிலையை அடையக்கூடும்.

***1242.*** ***வந்தடி போற்றுவர் வானவர் தானவர்***
***இந்து முதலாக எண்டிசை யோர்களும்***
***கொந்தணி யுங்குழ லாளொடு கோனையும்***
***வந்தனை செய்யும் வழிநவில் வீரே.***

சகஸ்ரதளத்தில் விளங்கும் சத்தியோடு கூடிய சிவத்தை, வழிபடும் நெறியை உலகவர்க்குச் சொல்லுங்கள், இந்திரன் முதலாகவுள்ள எட்டுத் திசைக் காவலர்களும் ஏனைய தேவர்களும் அசுரர்களும் வந்து உங்கள் அடிகளை வணங்குவார்கள்.

***1243.*** ***நவிற்றுநன் மந்திரம் நன்மலர் தூபங்***
***கவற்றிய கந்தங் கவர்ந்தெரி தீபம்***
***பயிற்றும் உலகினிற் பார்ப்பதி பூசை***
***அவிக்கொண்ட சோதிக்கோர் அர்ச்சனை தானே.***

இடைவிடாது கூறப்பெறும் நல்ல மந்திரமும், கவர்ச்சியைத் தரும் வாசனைப் பொருளும், இருளைப் போக்கும் தீபமும் கொண்டு, உலகில் பார்வதிக்குச் செய்யப் பெறும் பூசையானது, வேள்வியிடும் அவியை ஏற்கும் இறைவனுக்குரிய அருச்சனையாக அமையும்.

***1244.*** ***தாங்கி உலகில் தரித்த பராபரன்***
***ஓங்கிய காலத் தொருவன் உலப்பிலி***
***பூங்கிளி தங்கும் புரிகுழ லாளன்று***
***பாங்குடன் ஏற்பப் பராசத்தி போற்றே.***

சத்தியை ஒருபால் கொண்டு உலகைத் தாங்கிய சிவன், அவளால் வந்த ஆக்கத்தால் உலகில் நிலைபெற்று ஒப்பற்றவனாகவும் அழியாதவனாகவும் உள்ளான், அழகிய கிளியை ஏந்திச் சுருண்ட சடையைத் தரித்த சாமுண்டியாகிய பார்வதி அன்று, பாங்குடன் பரனை ஒருபால் கொண்ட பராசத்தி ஆனமையால் அவளை வழிபடுவாயாக.

***1245.*** ***பொற்கொடி மாதர் புனைகழல் ஏத்துவர்***
***அற்கொடி மாதுமை யார்வத் தலைமகள்***
***நற்கொடி மாதை நயனங்கள் மூன்றுடை***
***விற்கொடி மாதை விரும்பி விளங்கே.***

கருமையான கொடி போன்ற மாதும், உமாதேவியும், அன்பர்க்கு உதவும் தலைவியும், நல்ல கொடி போன்ற மாதும், முச்சுடர்களை மூன்று சிறந்த கண்களாகக் கொண்டு ஆஞ்ஞைச் சக்கரத்தில் விளங்கும் மாதும் ஆகிய சத்தியை, போற்றி விளக்கம் பெறுவாயாக, பொற்கொடி போன்ற பெண்கள் உன்னுடைய அடிகளைப் புனைந்து வணங்குவர்.

***1246.*** ***விளங்கொளி யாய விரிசுடர் மாலை***
***துளங்கு பராசத்தி தூங்கிருள் நீங்கக்***
***களங்கொள் மணியுடன் காம வினோதம்***
***உளங்கொ னிலம்பியம் ஒன்று தொடரே.***

பராசத்தியின் விரிந்த சுடர் மாலை போன்ற ஆதாரச் சக்கரங்களில் அசைவு கீழ்நோக்கிச் செல்லாது நீங்க, பத்தினியோடு கூடி மூலாதாரத்தில் உண்டாகும் நாதத்தைக் கண்டத்தின் வழியாக உண்ணார்க்குப் போகும்படி (கீழ் நோக்கும் அசைவினை) மேல்முகமாக ஆக்குக.

***1247.*** ***தொடங்கி உலகினிற் சோதி மணாளன்***
***அடங்கி இருப்பதென் அன்பில் பெருமை***
***விடங்கொள் பெருஞ்சடை மேல்வரு கங்கை***
***ஓடுங்கி யுமையொடும் ஒரு வாமே.***

பிருதிவி தத்துவம் முதலாக ஒளி மயமான இறைவன், என்னுள் அடங்கியிருப்பது என் அன்பின் பெருமையினாலேயாம், நஞ்சாகிய காமக்கழிவினைச் செய்யாது மேலே கொண்டு சிரசின்மேல் கங்கையாகிய ஒளி மண்டலத்தில், அடங்கிச் சத்தியொடும் பிரிப்பின்றி ஓர் உருவாகுமே.

***1248.*** ***உருவம் பலவுயி ராய்வல்ல நந்தி***
***தெருவம் புகுந்தமை தேர்வுற நாடிற்***
***புரிவளைக் கைச்சியெம் பொன்னணி மாதை***
***மருவி இறைவன் மகிழ்வன மாயமே.***

இறைவன் அனைத்துயிர்களையும் வடிவாகக் கொண்டு விளங்குவதை நன்றாக ஆராயின், ஒலிக்கின்ற வளையலை அணிந்த பொன்னொளியில் விளங்கும் மாதை இறைவன் மகிழ்ச்சியோடு பொருந்தி உலகைப் படைத்தான் என்பது கற்பனையாம்.

*1249.* *மாயம் புணர்க்கும் வளர்சடை யானடித்*
*தாயம் புணர்க்குஞ் சலநதி அமவனைக்*
*காயம் புணர்க்குங் கலவியுள் மாசத்தி*
*ஆயம் புணர்க்குமவ் வியோனியு மாமே.*

மாயையைக் கூட்டி வைக்கும் வளர்சடையானாகிய சிவன் தன் திருவடியோடு, சம்பந்தப்படுத்தும் ஒளி மண்டலத்தில் விளங்கும் சீவனை, தனது கலவியால் சூக்கும மண்டலத் திருமேனியைச் செய்வான், அவனே உடலால் ஆகிய கலவியுள் பொருத்தி மகாசத்திக் கூட்டங்களுடன் சேர்த்து அவ்வவ் யோனியாகவும் விளங்குகின்றான்.

*1250.* *உணர்ந்தொழிற் தேனவ னாமெங்கள் ஈசனைப்*
*புணர்ந்தொழிந் தேன்புவ னாபதி யாரை*
*அணைந்தொழிந் தேனெங்கள் ஆதிதன் பாதம்*
*பிணைந்தொழிந் தேன்றள் அருள்பெற்ற வாறே.*

அவன் வேறு நாம் வேறு அல்ல என்பதை உணர்ந்தேன், உலக முதல்வனாகிய ஈசனை எனது தனித்தன்மையை விட்டு ஒன்றியபோது நான் அகண்டாகார நிலையை அடைந்தேன், புவனங்களுக்குத் தலைவனான சிவனை உணர்ந்தபோது கீழ்முகமாகவுள்ள புவனங்களில் தொடர்பை நீங்கினேன், ஆதி சத்தியின் திருவடியைப் பற்றி அதன் பிரிவாகிய இச்சாஞானக் கிரியைகளை விட்டு நீங்கி அருள் பெற்றேன்.

*1251.* *பெற்றாள் பெருமை பெரிய மனோன்மனி*
*நற்றாள் இறைவனே நற்பயனே என்பர்*
*கற்றான் அறியுங் கருத்தறி வார்கட்குப்*
*பொற்றாள் உலகம் புகல்தனி யாமே.*

நவசத்திகளுள் பெருமை பெற்றவள் மனோன்மணியாவாள், அவளைத் துணையாகக் கொண்டவர் இறைவனது திருவடியே அழிவில்லாத நற்பயனுடையது என்பர், கற்ற கல்வியின் பயனாகிய கருத்தை அறிவார்கட்கு, அவன் திருவடிவாகிய பொன்னொளி விளங்கு மண்டலத்தை எய்துதல் ஒப்பற்ற பேறாம்.

*1252.* *தனிநா யகன்றனோ டென்னெஞ்சம் நாடி*
*இனியார் இருப்பிடம் ஏழுல கென்பர்*
*பனியான் மலர்ந்தபைம் போதுகை ஏந்திக்*
*கனியாய் நினைவதென் காரணம் அம்மையே.*

ஒப்பற்ற தலைவனோடு என்னுடைய நெஞ்சத்தை விரும்பி, இனிமையான சத்தி இருப்பிடம் ஏழுலகங்கள் என்று கூறுவர், பனி மண்டலம் போல் விளங்கும் சகஸ்ரதள உச்சியில், கனிவோடு என்னை நினைவதற்குரிய காரணம் என்ன அம்மையே !

*1253.* *அம்மனை அம்மை அரிவை மனோன்மனி*
*செம்மனை செய்து திருமங்கை யாய்நிற்கும்*
*இம்மனை செய்த இன்னில மங்கையும்*
*அம்மனை யாகி அமர்ந்துநின் றாளே.*

ஏழாவது பூமியென்ற சகஸ்ரதள நாயகியான மனோன்மனியே, செம்மையான வீட்டுலகைச் செய்து ஞானச்செல்வியுமாய் நிற்பள், எடுத்த இந்த உடலைப் பக்குவம் செய்த குண்டலினியும், அம்மனையில் ஒருமிக்க அமர்ந்தனள்.

*1254.* *அம்மையும் அத்தனும் அன்புற்ற தல்லது*
*அம்மையும் அத்தனு மாரறி வாரென்னை*
*அம்மையொ டத்தனும் யானும் உடனிருந்*
*தம்மையொ டத்தனை யான்புரிந் தேனே.*

உடலுற்பத்திக்குக் காரணமான தாயும் தந்தையும் காதலால் ஒருவருக்கொருவர் உறவுகொண்டதே தவிர, என்னை அவர்கள் அறிய மாட்டார்கள், சிவனும் சத்தியும் ஆன்மாவும் ஒன்றுபட இருந்ததில், என்னை எஞ்ஞான்றும் பிரியாத அம்மையையும் அத்தனையும் தொழுது நான் உய்ந்தேன்.

## 9. ஏரொளிச் சக்கரம்

ஏர் - ஏழுச்சி, ஏரொளிச் சக்கரம் - மேல் நோக்கிய ஒளி வடிவான சக்கரம். மூலாதாரத்திலுள்ள அக்கினி எங்கும் வியாபித்து அனைத்தையும் தன்னுள் அடக்கித் தானொன்றேயாய் நிற்கும் நிலை.

*1255.* *ஏரொளி யுள்ளெழு தாமரை நாலிதழ்*
*ஏரொளி விந்துவி னொலெழு நாதமாம்*
*ஏரொளி யக்கலை எங்கும் நிறைந்தபின்*
*ஏரொளி சக்கர மந்நடு வன்னியே.*

மூலாதாரத்தில் முளைத்தெழுகின்ற நான்கு இதழ்களையுடைய தாமரை மிக்க ஒளி வடிவினதாம், தூல விந்து மாற்றி அமைக்கப்படுவதால் எழுகின்ற ஒளி சிரசில் நாதமாக அமையும், எழுகின்ற அக்கலை சிரசில் படர்ந்து எங்கும் நிறைந்தபின், அதன் நடுவில் அக்கினி மயமான சிவம் விளங்கும்.

*1256.* *வன்னி யெழுத்தவை மாபலம் உள்ளன*
*வன்னி யெழுத்தவை வானுற ஓங்கின*
*வன்னி யெழுத்தவை மாபெருஞ் சக்கரம்*
*வன்னி யெழுத்திடு வாறது சொல்லுமே.*

மூலாதாரத்திலுள்ள வ, ச, ஷ, ஸ என்பவை மகாபலம் பொருந்திய அட்சரங்களாம், அவை பிருதிவி முதல் எழுந்து ஆகாயம் வரை வளர்ந்தன, அங்கு அவை பெருமையுள்ள சக்கரமாய் அமைந்தன, அவை அமைக்கும் முறையைக் கூறுவோம்.

*1257.* *சொல்லிய விந்துவும் ஈராறு நாதமாஞ்*
*சொல்லிடு மப்பதி யவ்வெழுத் தாவன*
*சொல்லிடு நூறொடு நாற்பத்து நாலுரு*
*சொல்லிடு சக்கர மாய்வரு மேலதே.*

வீரியமாய்க் கீழேயிருந்ததே மாற்றி அமைக்கப்படுவதால் பன்னிரண்டு கலைகளையுடைய சூரியனாகச் சிரசின்மேல் விளங்கும், முன்னர்க் கூறிய அக்கினியாக மூலாதாரத்திலுள்ள வ, ச, ஷ, ஸ என்பவையே இங்கு ஒலிகளாக அமையும், அவை மூலாதாரம் முதல் விசுத்தி வரை இடை, பிங்கலை, சுழுமுனை ஆகிய மூன்று நாடிகளிலும் பொருந்தி மேலேறுவதால் 144 கலா சத்திகளாக, சிரசின் மேல் வட்டமாய் விளங்கும்.

*1258.* *மேல்வரும் விந்துவும் மவ்வெழுத் தாய்விடும்*
*மேல்வரு நாதமும் ஓங்கும் எழுத்துடன்*
*மேல்வரு மப்பதி யவ்வெழுத் தேவரின்*
*மேல்வரு சக்கர மாய்வரு ஞாலமே.*

அம் என்றதனால் விளக்கச் சந்திரமண்டலம் மேலே அமையும், அவ்வொளியுடன் அங்கு நாதமும் ஓங்கி நிற்கும், சிரசின்மேல் சந்திர மண்டலம் சிறந்து விளங்கினால், பூமி தத்தவம் சூக்குமமாய் அங்குப் பொருந்தும்.

*1259.* *ஞாலம தாக விரிந்தது சக்கரம்*
*ஞாலம தாயிடும் விந்துவும் நாதமும்*
*ஞானம தாயிடு மப்பதி யோசனை*
*ஞாலம தாக விரிந்த தெழுத்தே.*

மேல் விளங்கும் மண்டலம் உலகமாக விரிந்தது, அங்கு விளங்கும் விந்து நாதங்களே உலகமாக விரிந்தது, அதனுள் விளங்கும் இறைவனின் சங்கற்பமே உலகமாய் விரிந்தது, சந்திர சூரிய மண்டலங்களிலுள்ள சூக்கும ஒலியே தூல உலகமாய் விரிவு பெறுகிறது.

*1260.* *விரிந்த எழுத்தது விந்துவும் நாதமும்*
*விரிந்த எழுத்தது சக்கர மாக*
*விரிந்த எழுத்தது மேல்வரும் பூமி*
*விரிந்த எழுத்தினில் அப்புறம் அப்பே.*

அகர கலை விரிந்து விந்துவும் நாதமும் ஆக விளங்கியது, அதில் சக்கரம் விரிந்து விளங்கும், அங்கு முதலில் காணப்படுவது பிருதிவி தத்துவம், மேலும் விரிந்தபோது அப்பு மண்டலம் அமையும்.

*1261.* *அப்பது வாக விரிந்தது சக்கரம்*
*அப்பினில் அப்புறம் அவ்வன லாயிடும்*
*அப்பினில் அப்புறம் மாருத மாயெழ*
*அப்பினில் அப்புறம் ஆகாச மாமே.*

நீராக அச்சக்கரம் விரிந்தது, அதன் பிறகு நீரினில் அக்கினி தத்துவம் விளங்கும், நீருக்குப் பிறகு காற்றுத் தத்துவம் அமைய, அதன் பிறகு ஆகாசத் தத்துவம் அமையும்.

*1262.* *ஆகாச அக்கர மாவது சொல்லிடில்*
*ஆகாச அக்கரத் துள்ளே எழுத்தவை*
*ஆகாச அவ்வெழுத் தாகிச் சிவானந்தம்*
*ஆகாச அக்கர மாவ தறிமினே.*

ஆகாய பூதத்துக்குரிய அட்சரத்தைச் சொல்லப்போனால், ஆகாய பீசமான எழுத்தானது, அகரமாகிய கலையாகிச் சிவானந்தம், அதனால் விளைவது அறிமின்.

*1263.* *அறிந்திடுஞ் சக்கரம் ஐயஞ்சு விந்து*
*அறிந்திடுஞ் சக்கர நாத முதலா*
*அறிந்திடும் அவ்வெழுத் தப்பதி யோர்க்கும்*
*அறிந்திடும் அப்பக லோனிலை யாமே.*

அறியப்பட்ட இச்சக்கரம் பத்து ஒளி வட்டத்தாலாயது, இதை நாதம் முதலாகக் கொண்டு அறியவும், அவ்வவ் மண்டல நாயகர்கள் அங்குளர் என்று அறியவும், இறுதியாகவுள்ளது சிவ சூரியனாகும் என்று அறியும்.

*1264.* *அம்முதல் ஆறுமவ் வாதி எழுத்தாகும்*
*அம்முதல் ஆறுமவ் வம்மை எழுத்தாகும்*
*இம்முதல் நாலும் இருந்திடு வன்னியே*
*இம்முத லாகும் எழுத்தவை எல்லாம்.*

அம்முதல் ஆறு சக்கரங்களில் உள்ளது பிரணவமான ஆதி எழுத்தாகும், அவை சத்தி எழுத்தாகும், இதற்குமேலுள்ள நான்கு சக்கரங்களும் சூரிய சந்திர சேர்க்கை கொண்டு ஆத்ம சோதி மண்டலமாகும், இந்த சோதி மண்டலத்திலிருந்தே எழுத்து ரூபமானவை உதிக்கின்றன.

*1265.* *எழுத்தவை நூறொடு நாற்பத்து நாலும்*
*எழுத்தவை யாறது வந்தடு வன்னி*
*எழுத்தவை யந்நடு வச்சுட ராகி*
*எழுத்தவை தான்முதல் அந்தமு மாமே.*

மூலாதார முதலாக உள்ள சக்கரங்கள் முன் 1257 இல் விளங்கியபடி 144 கலைகளாக விரியும், ஆறு ஆதாரங்களுக்கும் நடுவாய் உதித்தெழுவது வன்னி விளங்கும் அக்கினி நாடியாகும், வன்னி எழுத்துகள் ஆற ஆதாரங்களினூடேயும் அமைந்து, அவையே முதலாகவும் முடிவாகவும் அமையும்.

*1266.* *அந்தமும் ஈறு முதலா னவையற*
*அந்தமும் அப்பதி னெட்டுடன் ஆதலால்*
*அந்தமும் அப்பதின் மூன்றில் அமர்ந்தபின்*
*அந்தமும் இந்துகை யாருட மானதே.*

முன் மந்திரத்தில் கூறிய அந்தமான எழுத்துகள் முடிவாகிய சூக்குமமும் முதலாகிய தூலமும் நீங்க, விசுத்தி ஆஞ்ஞைச் சக்கரங்களும் முடிவதால், பதின்மூன்றாவது எழுத்தாகிய 'ஓ' கரத்தில் அமைந்த பின், அதன்மேலுள்ள சந்திர மண்டலத்தின்கண் ஏறிக் கடத்தலே முடிவாகும்.

*1267.* *ஆவின மானவை முந்நூற் றறுபது*
*மாவின மப்பதி னைந்தின மாயுறு*
*மாவின மப்பதி னெட்டுட னாயுறு*
*மாவின மக்கதி ரோன்வர வந்தே.*

அவ்வண்ணமான காலம் முந்நூற்றறுபது நாள்களாகும், அவ்வகை பதினைந்து திதிகள் கொண்ட பட்சமாம், அவை ருது ஆறு மாதம் பன்னிரண்டாக வரும், அவ்வகை எல்லாம் சிவ சூரியன் தோற்றத்தால் வந்தனவாம்.

*1268.* *வந்திடும் ஆகாசம் ஆறது நாழிகை*
*வந்திடும் அக்கரம் முப்பதி ராசியும்*
*வந்திடு நாளது முந்நூற் றறுபதும்*
*வந்திடு ஆண்டு வகுத்துரை யவ்வியே.*

பகல் இரவு காலங்கள் ஆகாய முதலாக ஆறு ஆறு நாழிகைகளாக உள்ளன, இராசியும் முப்பது கலைகளாக வரும், ஆண்டுக்குக் கலைகள் முந்நூற்றறுபது ஆகும், இதை வகுத்துப் பார்க்கச் சூரியன் செல்லும் பன்னிரண்டு இராசிகள் விளங்கும்.

*1269.* *அவ்வின மூன்றுமவ் வாடது வாய்வரும்*
*எவ்வின மூன்றுங் கிளர்தரு வேரதாஞ்*
*சவ்வின மூன்றுந் தழைத்திடுந் தண்டதாம்*
*இவ்வின மூன்றும் இராசிக ளெல்லாம்.*

அவ்வினமாகிய மூன்றும் மேட வீதியாய் வரும், மேலாங்கிய மூன்றும் ஏராகிய இடம் வீதியாம், கூட இனமான மூன்றும் தழைக்கின்ற தண்டோடு கூடிய மிதுன வீதியாம், இராசிகள் எல்லாம் இவ்வகையாக மூன்று இனமாம்.

*1270.* *இராசியுட் சக்கரம் எங்கும் நிறைந்தபின்*
*இராசியுட் சக்கர மென்றறி விந்துவாம்*
*இராசியுட் சக்கர நாதமும் ஒத்தபின்*
*இராசியுட் சக்கரம் நின்றிடு மாறே.*

சூரிய வீதியாகவுள்ள சகஸ்ரதளம் நிறைந்த விரிந்த பின், அது விந்துவாகிய ஒளி மயமானது என்று அறிவாயாக, அங்கு நாத இயக்கமும் ஒத்து அமைந்த பின், அதுவே சகஸ்ரதளம் நிற்கும் நிறையாகும்.

*1271. நின்றிடு விந்துவென் றுள்ள எழுத்தெல்லாம்*
*நின்றிடு நாதமும் ஓங்கும் எழுத்துடன்*
*நின்றிடு மப்பதி யவ்வெழுத் தேவரின்*
*நின்றிடு மப்புறந் தாரகை யானதே.*

அக்கினி சூரிய சந்திர கண்டத்திலுள்ள எழுத்துகள் எல்லாம், அவை அவைக்கேற்ப ஸ்பந்தத்தைக் கீழேயும் தூலத்தில் அமைத்துச் சூக்குமத்திலுள்ள அமைகின்றன, இவ்விதமாகச் சிரசில் உள்ள சந்திர சூரிய அக்கினி மண்டலங்கள் ஒத்து வளர்ந்த பின், ஆத்மா என்ற தாரகை பின் பூரணமாகும்.

*1272. தாரகை யாகச் சமைந்தது சக்கரம்*
*தாரகை மேலோர் தழைத்தது பேரொளி*
*தாரகை சந்திரன் நற்பக லோன்வரத்*
*தாரகை தாரகை தாரகை கண்டதே.*

சகஸ்ரதளம் நட்சத்திர ஒளிகளாலாயது, இவ்வாறான நட்சத்திர ஒளிகளுக்கு மேல் பேரொளிப் பிழம்பான சிவம் உள்ளது, இந்த நட்சத்திர ஒளியில் சந்திரனாலாய அறிவும் சூரியனாலாய அறிவும் அக்கினியினாலய அறிவும் அமைந்த விளங்க, தாரகையின் சமஷ்டி அறிவு ஆன்மாவாகும்.

*1273. கண்டிடு சக்கரம் விந்து வளர்வதாங்*
*கண்டிடு நாதமுந் தன்மேல் எழுந்திடக்*
*கண்டிடு வன்னிக் கொழுந்தன வொத்தபின்*
*கண்டிடு மப்புறங் காரொளி யானதே.*

இவ்வண்ணம் காணப்பட்ட சக்கரம் ஒளி வளர்ந்து ஆனது ஆகும், ஒளிக்குப் புற எல்லையில் நாதம் அமைந்திட, தோன்றுகின்ற நெருப்புக் கொழுந்து தீபம் போல ஒத்து விளங்கிய பின், அப்புறம் கரிய ஒளி போன்று காணப்படுவதாகும்.

*1274. காரொளி அண்டம் பொதிந்துல கெங்கும்*
*பாரொளி நீரொளி சாரொளி காலொளி*
*வானொளி ஒக்க வளர்ந்து கிடந்துபின்*
*நேரொளி ஒன்றாய் நிறைந்தங்கு நின்றதே.*

கரிய ஒளியானது அண்ட வடிவாக எல்லாப் பொருள்களிலும் கலந்து, மண், நீர், தீ, காற்று, வான் ஆகிய ஒளியாக, ஒக்க வளர்ந்து பின், ஒரே ஒளி மயமாக நிறைந்து பரந்து நின்றது.

*1275. நின்றது அண்டமும் நீளும் புவியெலாம்*
*நின்றவிவ் வண்ட நிலைபெறக் கண்டிட*
*நின்றவிவ் வண்டமு மூல மலமொக்கும்*
*நின்றவிவ் வண்டம் பலமது விந்துவே.*

ஒவ்வோர் உயிர்ப்பொருளிலும் சூழ்ந்துள்ள அண்டமே உலகெங்கும் விரவியுள்ளது, ஊழி முடிய இவை நிலையாக உள்ளத்தைக் காணும்போது, இவ்வண்டகோசமே சீவர்களது மூலம் போன்றதாகும், இவ்வண்டம் ஒளி மயமாக ஆதல் அதற்கு வலிவூட்டுவதாகும்.

*1276. விந்துவும் நாதமும் ஒக்க விழுந்திடில்*
*விந்துவும் நாதமும் ஒக்க விரையதாம*
*விந்திற் குறைந்திடு நாதம் எழுந்திடில்*
*விந்துவை எண்மடி கொண்டது வீசமே.*

ஒளியும் ஒலியும் (விந்துவும் நாதமும்) சமமாக இருப்பின், ஆகாயக் கூற்றலான அண்டகோசத்துக்கு விந்துப் போலாகும். ஒளி குறைந்து நாதம் மாத்திரம் எழுந்து நிற்கில், ஒளியைவிட நாதம் எட்டு மடங்கு கூடுதல் என்பர்.

*1277. வீசம் இரண்டுள நாதத் தெழுவன*
*வீசமும் ஒன்று விரைந்திடு மேலுற*
*வீசமும் நாதமும் எழுந்துடன் ஒத்தபின்*
*வீசமும் விந்து விரிந்தது காணுமே.*

விதை போன்ற ஒளி அணுக்கள் இரண்டு வகையாக உள்ளன, ஒரு வகை விரை மேலே சென்று அட்கோசத்தில் விந்து நாத மண்டலங்களை அமைக்கும், இவ்வகையான ஒளி அணுக்களும் ஸ்பந்த ரூபமான நாத அணுக்களும் ஒத்தபின், அண்ட கோசம் விரிந்து விந்து மண்டலங்கள் எனலாம்.

*1278.* *விரிந்தது விந்துவுங் கெட்டது வீசம்*
*விரிந்தது விந்துவும் நாதத் தனவினில்*
*விரிந்தது வுட்கட்ட எட்டெட்டு மாகில்*
*விரிந்தது விந்து விரையது வாமே.*

விந்த விரிந்த காலத்து வீசமாகிய ஒளி அணுக்கள் மறையும், விந்து விரியும் தன்மைக்கேற்ப நாதமும் அமையும், விந்துவை (தூல வீரியத்தை)க் கட்டுப்படுத்தினால் எட்டும், எட்டுமாகிய சந்திரகலை பதினாறும் அமையும், அதனால் ஒளிமண்டலம் விரிந்து ஒளி பீசங்களாக அமையும்.

*1279.* *விரையது விந்து விளைந்தன எல்லாம்*
*விரையது விந்து விளைந்த உயிரும்*
*விரையது விந்து விளைந்தவிஞ் ஞாலம்*
*விரையது விந்து விளைந்தவன் தானே.*

தோன்றிய எல்லாம் விந்து அல்லது ஒளியைக் காரணத்தில் உடையன. விந்துவால் விளைந்ததே உயிர், இவ்வுலகம் எல்லாம் விந்துவைக் காரணமாகக் கொண்டே விளைந்தன, அவ்விந்து காரணமாகவே சிவத்தினுடைய திருவடி விளங்கும்.

*1280.* *விளைந்த எழுத்தது விந்தவும் நாதமும்*
*விளைந்த எழுத்தது சக்கர மாக*
*விளைந்த எழுத்தவை மெய்யினுள் நிற்கும்*
*விளைந்த எழுத்தவை மந்திர மாமே.*

எல்லா எழுத்துகளுக்கும் மூலமான பிரணவமும் விந்து நாதத்தலாயது, அதுவே சக்கரமாகச் சிரசில் அமைந்தது, அப்பிரணவம் உடலினுள் நிற்கும், விளைந்த அது எல்லா எழுத்துகளும் சேர்ந்த மந்திரமாகும்.

*1281.* *மந்திரஞ் சக்கர மானவை சொல்லிடில்*
*தந்திரத் துள்ளெழுத் தொன்றெரி வட்டமாங்*
*சுந்தரத் துள்ளுமி ரேகையில் ஒன்றில்லை*
*பந்தம தாகும் பிரணவம் உன்னிடே.*

மந்திரம் சக்கரம் இவற்றைப்பற்றிக் கூறின, உபாயங்களான் உள்ளே காணப்படும் பிரணவமாகிய ஒளி வட்டமாம், கண்டத்தில் வைகரியாக வைத்து எண்ணுவதிலும், தகடுகளில் இரேகை கீறிப் பார்ப்பதிலும் பயன் ஒன்றும் இல்லை, ஸ்பந்தமாகவுள்ள பிரணவத்தை முதன்மையாகக் கொண்டு தியானிக்கவும்.

*1282.* *உள்ளிட்ட வட்டத்தில் ஒத்தெழு மந்திரம்*
*பின்னிட்ட ரேகை பிழைப்பது தானில்லை*
*தன்னிட் டெழுந்த தகைப்பறப் பின்னிற்கப்*
*பன்னிட்ட மந்திரம் பார்க்கலு மாமே.*

அகவழிபாடாகப் புரியப்படும் பிரணவ வட்டத்தில் பொருந்தித் தோன்றும் மந்திரம், பின்னர் அமைக்கப்பட்ட சக்கரக் கோடுகளை விட்டுத் தவறுதல் இல்லையாகும், தன்னிடத்து உண்டான தடைகளாகிய அஞ்ஞானம் பின்னிட, சொல்லப்பட்ட மந்திரத்தை ஆராய்தலுமாகும்.

*1283.* *பார்க்கலு மாகும் பகையறு சக்கரம்*
*காக்கலு மாகுங் கருத்தில் தடமெங்கும்*
*நோக்கலு மாகும் நுணுக்கமற்ற நுண்பொருள்*
*ஆக்கலு மாகும் அறிந்துகொள் வார்க்கே.*

பிறப்பு இறப்புகளாகிய பகையை அறுக்கும் தன்மை வாய்ந்த சக்கரத்தைப் பார்க்கலுமாம், மன இடத்தில் எங்கும் காக்கலுமாகும், நுண்ணியவற்றுக்கெல்லாம் நுண்ணிய பொருளான சிவத்தை அன்புடன் பார்க்கலாம், இதனை உள்ளவாறு உணர்வார்க்கு அதனை அடைதலுமாகும்.

*1284.* *அறிந்திடுஞ் சக்கர மாதி யெழுத்து*
*விரிந்திடுஞ் சக்கர மேலெழுத் தம்மை*
*பரிந்திடுஞ் சக்கர பாரங்கி நாலும்*
*குவிந்திடுஞ் சக்கரங் கூறலு மாமே.*

மேற்கூறியவற்றால் அறியப்படும் சக்கரத்துக்கு ஆதி எழுத்து அகரமாகும், அதன் மேலெழுத்தாகிய அம்மை எழுத்து உகரமாகும், இந்தச் சக்கரத்தில் மாயா காரியமாகிய நிலம், நீர், நெருப்பு, வாயு ஆகிய நான்கு பூதங்களும் (ம) பொருந்தி நிற்கும், இவ்வண்ணம் அனைத்தும் கூடி விளங்கும் சக்கரத்தைப் பற்றிக் கூற முடியுமோ?

*1285.* *கூறிய சக்கரத் துள்ளெழு மந்திரம்*
*ஆறியல் பாக அமைந்து விரிந்திடுந்*
*தேறிய அஞ்சுடன் சேர்ந்தெழு மாரண*
*மாறியல் பாக மதித்துக்கொள் வார்க்கே.*

தெளிந்த ஐந்துடன் கூடிய மாரணத்தை, மாறுபட்ட இயல்பினதாக மதித்துக் கொள்பவர்க்கு, சொல்லப்பட்ட சக்கரத்துள் எழுகின்ற மந்திரம், ஆறு செயல்களைப் புரிவனவாக அமைந்து விரியும்.

*1286.* *மதித்திடும் அம்மையும் மாமாது மாகும்*
*மதித்திடும் அம்மையு மங்கனல் ஒக்கும்*
*மதித்தங் கெழுந்தவை காரண மாகில்*
*கொதித்தங் கெழுந்தவை கூடகி லாவே.*

அனைத்துயிர்க்கும் நீங்கா அருள் புரிகின்றவள் என்று மதிக்கப்படும் அம்மையும் குறித்த சக்கரத்தின் முதல்வியாகும், அவ்வம்மையைப் பயில்வார்க்குப் பகையை வெல்லத் துணை செய்யும் அழகிய அனலை ஒத்து அவள் காணப்படுவாள், அம்மை காரணமாக உடனெழும் ஐம்பூதங்களும் தொழில் செய்யுமாதலின், அவள் ஆணையின்றி அவை எத்தொழிலையும் செய்ய வல்லனவாகா.

*1287.* *கூடிய தம்பளம் மாரணம் வசியம்*
*ஆடியல் பாக அமைந்து செறிந்திடும்*
*பாடியுள் ளாகப் பகைவரும் வந்துறார்*
*தேடியுள் ளாகத் தெளிந்துகொள் வார்க்கே.*

தனக்குள்ளேயே தேடித் தெளிந்த கொண்ட அன்பர்க்கு, சேர்ந்த தம்பனம், மாரணம், வசியம் ஆகியவை, இயல்பாகவே வந்து பொருந்தும், இவர்கள் இருப்பிடத்தின் பகைவரும் வந்து சேரார்.

*1288.* *தெளிந்திடுஞ் சக்கர மூலத்தி னுள்ளே*
*அளிந்த வகாரத்தை யந்நடு வாக்கிக்*
*குளிர்ந்த வரவினைக் கூடியுள் வைத்து*
*வளிந்தவை யங்கெழு நாடிய காலே.*

மூலாதாரத்தினுள்ளே சக்கரத்தைத் தெளிந்து அறிவாயாக, கனிவும் குழைவுமுடைய அகரத்தை அந்நடுவாக, குளிர்ந்த குண்டலினியின் சுற்றுவட்டத்துள் வைத்து, மூல வாயுவை அங்கிருந்து சுழுமுனை வழியாக உயரக் கொண்டுவருவாயாக.

*1289.* *காலரை முக்கால் முழுதெனும் மந்திரம்*
*ஆலித் தெழுந்தமைந் தூறி எழுந்ததாய்ப்*
*பாலித் தெழுந்து பகையற நின்றபின்*
*மாலுற்ற மந்திர மாறிக்கொள் வார்க்கே.*

கால் அரை முக்கால் முழுதென்னும் பிரணவம், சுழுமுனை மார்க்கமாகப் பொருந்தி எழுவதாய், பரந்து விரிந்து காமாதி அறுபகை கெட நிலை பெற்ற பின், விருப்பத்தை விளைவிக்கும் இம்மந்திரம் மாறிக் கொள்வார்க்கு ஆம்.

*1290.* *கொண்ட இம் மந்திரங் கூத்தன் எழுத்ததாய்ப்*
*பண்டையுள் நாவிற் பகையற விண்டபின்*
*மன்று நிறைந்த மணிவிளக் காயிடும்*
*இன்றும் இதயத் தெழுந்து நமவெனே.*

கூத்தன் எழுத்தான பிரணவமாகிய இம்மந்திரம், பண்டையில் வெளிப்படாது நின்று பின் உண்ணாக்குப் பிரதேசத்திலிருந்த அதன் பகைவர்களை மாற்றி வெளிப்பட்டு, சிரசை நோக்கிச் சென்று சகஸ்ரதளம் விரியும்படி ஒளி பெற்று நிற்கும், அங்கு விளங்குவது சிவம் என்று அறிந்து வணங்குவாயாக.

## 10. வயிரவச் சக்கரம்

வயிரவர் சிவனது சோர மூர்த்தங்களும் ஒன்று, பகை முதலிய இடையூறுகளைப் போக்க இவரை உபாசிப்பது வழக்கம், இவருக்குரிய சக்கரம் வயிரவச் சக்கரம் ஆகும்.

*1291.* *அறிந்த பிரதமையோ டாறு மறிஞ்சு*
*அறிந்தவர் சத்தமி மேலிவை குற்றம்*
*அறிந்தவை யொன்றுவிட் டொன்றுபத் தாக*
*அறிந்து வலமது வாக நடவே.*

வளர்பிறை பிரதமை முதல் சட்டிவரை ஆறு ஆதாரங்களிலும் அறிந்து, அறிந்த அச்சத்தமிக்கு மேல் அட்டமி குற்றம் என்று அறிந்து, ஒன்பதாந்திதியாகிய நவமியில் நெற்றிக்கு மேலும் பதினோராம் திதியாகிய ஏகாதசியில் வலக்காதுக்குப் பக்கமும் பதின்மூன்றாந்திதியாகிய திரையோதசியில் பிடரிப்பக்கமும் பதினைந்தாம் திதியாகிய பௌர்ணமியில் இடக்காதுப் பக்கமும் ஆகப் பத்து இடங்களில், வயிரவரை அறிந்து சிரசில் வலப்பக்கமாகத் தியானிக்கவும்.

***1292.*** ***நடந்த வயிரவன் சூல கபாலி***
***கடந்த பகைவனைக் கண்ணது போக்கித்***
***தொடர்ந்த வுயிரது உண்ணும் பொழுது***
***படர்ந்த வுடல்கொடு பத்தாட லாமே.***

தியானிப்பவர் மனத்தில் நடந்த வயிரவன் சூலத்தையும் கபாலத்தையும் ஏந்தியவனாக, பகைவனை வென்று அவன்மேல் கருணை காட்டாது, தொடர்ந்த உயிரைத் தோண்டி உண்ணுகின்ற போது, கிடந்த அப்பகைவனது உடம்பைப் பந்தாடலாம்.

***1293.*** ***ஆமேவப் பூண்டரு னாதி வயிரவன்***
***ஆமே கபாலமுஞ் சூலமுங் கைக்கொண்டங்***
***காமே தமருக பாசமுங் கையது***
***வாமே சிரத்தொடு வாளது கையே.***

ஆன்மாக்கின் பக்தியை ஏற்றுக் கொண்டு அவை விரும்பும் வண்ணம் திருவள் பாலிக்கின்ற முதன்மை வாய்ந்த வயிரவர், இரண்டு கைகளில் கபாலமும் சூலமும் ஏந்தி, தமருகத்தையும் பாசத்தையும் மற்றும் இரண்டு கைகளில் தண்டித்தற்கு மேற்கொண்டவராய், மேலும் ஐந்து ஆறாம் கைகளில் சிரசும் வாளும் ஏந்தி நிற்கும் என்றவாறு.

***1294.*** ***கையவை யாறுங் கருத்துற நோக்கிடு***
***மெய்யது செம்மை விளங்கு வயிரவன்***
***துய்யரு ளத்தில் துளங்குமெய் யுற்றதாய்ப்***
***பொய்வகை விட்டுநீ பூசனை செய்யே.***

ஆறு கைகளையும் அவற்றில் பொருந்திய ஆயுதங்களையும் மனம் பொருந்தித் தியானிக்கவும், அவனது திருமேனி செம்மை நிறமாக விளங்கும், அவன் மிகத் தூய்மையானவர் உள்ளத்தில் விளங்குவான், மெய்யான ஒளியைப் பொருந்தி உடலைக் கடந்து நின்று நீ பூசிப்பாயாக.

***1295.*** ***பூசனை செய்யப் பொருந்தியோ ராயிரம்***
***பூசனை செய்ய மதுவுட னாடுமால்***
***பூசனை சாந்து சவாது புழுகுநெய்***
***பூசனை செய்துநீர் பூசனை வேண்டுமே.***

ஓராயிரம் உருச் செபித்துப் பூசிக்கவும், பூசனைக்கு நல்ல தேனை விரும்பிப் படையுங்கள், பூசைக்குச் சாந்து, சவ்வாது, புனுகுச் சட்டம் ஆகியவற்றை, சாத்தி நீர் பகை நீக்கம் வேண்டுமே.

***1296.*** ***வேண்டிய வாறு கலகமு மாயிடும்***
***வேண்டிய ஆறினுள் மெய்யது பெற்றபின்***
***வேண்டிய வாறு வரும்வழி நீநட***
***வேண்டிய வாறது வாகுங் கருத்தே.***

நாம் விரும்பும் வண்ணம் பகைவருக்குள் கலகமும் உண்டாகிவிடும், விரும்பிய சட்கர்ம வித்தையை உண்மையாகப் பெற்ற பின், விரும்பிய வழிகள் யாவும் பெற நீ நடப்பாயாக, அப்போது உனக்கு வேண்டிய எல்லாம சித்திக்கும்.

## 11. சாம்பவி மண்டலச் சக்கரம்

சாம்பவி - சிவசத்தி, சிவசத்தி விளங்கும் சிவலிங்கத் திருமேனி நிறைந்துள்ள சக்கரமாதலின், சாம்பவி சக்கரம்.

***1297.*** ***சாம்பவி மண்டலச் சக்கரஞ் சொல்லிடில்***
***ஆம்பதம் எட்டாக விட்டிடின் மேலதாங்***
***காண்பதத் தத்துவ நாலுள் நயனமும்***
***நாம்பதங் கண்டபின் நாடறிந் தோமே.***

சாம்பவி மண்டலச் சக்கரத்தின் அமைப்பைச் சொன்னால், ஆகின்ற இதழ்கள் எட்டாக அமையின், மேலானதாகக் காணப்படுகின்ற இதழ்களில் விந்து, நாதம், சிவம், சத்தி ஆகிய நான்கனுள், விந்துவை நயனமாக நாம் அறிந்தோமானால் நாட்டார்கள் நம்மை வழிபடும் பேறு உண்டாகும்.

*1298.* *நாடறி மண்டலம் நல்லவிக் குண்டத்துக்*
*கோடற வீதியுங் கொடர்ந்துள் இரண்டழி*
*பாடறி பத்துடன் ஆறு நடுவீதி*
*ஏடற நாலைத் திடவகை யாமே.*

நாடறிந்த மண்டலமாகிய இச்சக்கரத்து, கோணுதலின்றி வீதிகளைக் கொணர்ந்து, உள்ளே இரண்டு குறைந்த பத்துடன் பதினாறு பதங்கள் நடு வீதியாக, சுற்றிலுமுள்ள நான்கு இதழ்கள் நீங்க இருபது பதங்களை அமைப்பின் சக்கரமாகும்.

*1299.* *நாலைந் திடவகை யுள்ளதோர் மண்டலம்*
*நாலுநல் வீதியுள் நல்ல இலிங்கமாய்*
*நாலுநற் கோணமும் நந்தா லிலிங்கமாய்*
*நாலுநற் பூநடு நண்ணலவ் வாறே.*

இருபது வரைகளைக் கொண்டது இச்சக்கரம், நடுவிலுள்ள வீதியில் நல்ல இலிங்க வடிவாயும், நான்கு நாற்கோணங்களிலும் நந்நான்கு இலிங்கமாயும், இடைவெளி நான்கிலும் நான்கு பூக்களும் நடுவிலும் அவ்வாறே பூவும் அமைக்க.

*1300.* *ஆறிரு பத்துநா லஞ்செழுத் தஞ்சையும்*
*வேறுரு வாக விளைந்து கிடந்தது*
*தேறு நிருமல சிவாய நமவென்று*
*கூறுமின் கூறிற் குறைகளும் இல்லையே.*

நடுவீதியில் ககாரம் முதல் க்ஷகாரம் வரையுள்ள முப்பத்தைந்து மெய்யெழுத்துகளையும் சிவாயநம என்ற அஞ்செழுத்தையும், வேறாகவுள்ள நிறத்திலே வலமாக எழுதுக, அதுவே தூய்மையான சிவாயநம என்று தெளிமின், தெளிந்த பின் கூறுக, அவ்வாறு கூறினால் சாதகர்க்கு ஒரு குறையும் இல்லை.

*1301.* *குறைவதும் இல்லை குரைகழற் கூடு*
*மறைவது மாரண மவ்வெழுத் தாகித்*
*திறமது வாகத் தெளியவல் லார்க்கு*
*இறவில்லை என்றென் றியம்பினர் காணே.*

முன் மந்திரத்தில் கூறியவாறு சொல்லின் குறைவு உண்டாகாது, ஒலிக்கின்ற வீரக்கழல் அணிந்த இறைவனது திருவடிப் பேறும் கூடும், வேதம் கூறுவது அப்பிரணவத் தொனியே என்று, உறுதியாக உணர வல்லார்க்கு இறப்பில்லை என்று பெரியோர்கள் கூறினார்கள்.

*1302.* *காணும் பொருளுங் கருதிய தெய்வமும்*
*பேணும் பதியும் பெருகிய தீர்த்தமும்*
*ஊணும் உணர்வும் உறக்கமுந் தானாகக்*
*காணுங் கனகமுங் காரிகை யாமே.*

புறத்தே காணப்படுகின்ற பொருளும் அகத்தே கருதிக தெய்வமும், போற்றுகின்ற ஊரும் பெருகிய புண்ணிய தீர்த்தமும், உணவும் உணர்வும் உறக்கமும், முயற்சியின்றித் தானாகவே வந்தடையும் பொன்னும் ஆகிய எல்லாம், இச்சாம்பவியால் ஆகும்.

*1303.* *ஆமே எழுத்தஞ்சு மாம்வழி யேயாகப்*
*போமே யதுதானும் போம்வழியே போனால்*
*நாமே நினைத்தன செய்யலு மாகும்*
*பார்மேல் ஒருவர் பகையில்லை தானே.*

ஐந்தெழுத்தும் தோன்றுதற்கு இடனாகிய நாதமாகிய ஓசையின் வழியேயாக, போகும் மேலிடமாகிய உச்சித்துள்ள வழியே சென்றால், நாம் நினைத்த எல்லாச் செயல்களையும் செய்யக்கூடும், உலகில் ஒருவரும் பகையாகார்.

*1304.* *பகையில்லை என்றும் பணிந்தவர் தம்பால்*
*நகையில்லை நாணாளும் நன்மைக ளாகும்*
*விளையில்லை என்றும் விருத்தமும் இல்லை*
*தகையில்லை தானுஞ் சலமது வாமே.*

சாம்பவி மண்டலத்தை வணங்குபவரிடம் பகையில்லையாம், நகைப்பிற்குரிய நிகழ்ச்சிகளும் இடம் பெறா, நாடோறும் நன்மைகள் உளவாம், தீவினைகளும் அவற்றால் உண்டாகும் பிறவிச் சக்கரமும் இல்லையாகும், தடையில்லை, தானும் சலம் போலத் தன்மையாக இருப்பர்.

*1305.* *ஆரும் உரைசெய்ய லாமஞ் செழுத்தாலே*
*யாரும் அறியாத ஆனந்த ரூபமாம்*
*பாரும் விசும்பும் பகலும் மதியாதி*
*ஊனும் உயிரும் உணர்வது வாமே.*

யாவரும் சாம்பவியை அஞ்செழுத்தாலே செபிக்கலாம், அதனால் எவரும் அறியாத ஆனந்த வடிவம் உண்டாகும், பிருதிவி முதல் ஆகாயமாயும் சூரிய சந்திர மண்டலமாயும், மேலான உடம்பில் உயிராயும் உயிரில் உணர்வாயும் அச்சாம்பவி விளங்கும்.

*1306.* *உணர்தெழு மந்திரம் ஓமெனும் உள்ளே*
*அணைந்தெழு மாங்கத னாதிய தாகுங்*
*குணர்ந்தெழு சூதனுஞ் சூதியுங் கூடிக்*
*கணந்தெழுங் காணுமக் காமுகை யாலே.*

சிவாயநம என்று எண்ணுவார்க்கு உள்ளே உந்தியிலிருந்து சிரக முடிய பிரணவம் உதித்து எழும், அப்பிரணவமே பஞ்சாக்கர வடிவான இறைவனின் முதல் நிலையாகும், சிவனும் சத்தியும் நாத விந்து தத்துவங்களிலிருந்து உடலைக் கொண்டுவரும், மீள சத்தி சிவத்தை நோக்கியபோது தத்துவங்கள் விந்துவிலும் விந்து நாதத்திலும் ஆக இலயமடையும்.

## 12. புவனாபதி சக்கரம்

புவனைக்குரிய சக்கரம், புவனாபதி சக்கரம் புவனை என்பது சத்திக்குரிய பெயர். புவனைக்குரிய எழுத்துகளும், சக்கரமும், உபாசனையும் பூசையும் இங்குக் கூறப்பெறுகின்றன.

*1307.* *ககராதி யோரைந்துங் காணிய பொன்மை*
*அகராதி யோரா றரத்தமே போலும்*
*சகராதி யோர்நான்குத் தான்சுத்த வெண்மை*
*ககராதி மூவித்தை காமிய முத்தியே.*

சகர முதலாக ஐந்தெழுத்துகளும் பொன்னிறமாம், ஹகாராதி ஓர் ஆறு எழுத்துகளும் செந்நிறமாம், சகாரம் முதலான நான்கு எழுத்துகளும் சுத்த வெண்மையாம், சுகரத்தை ஆதியாக மூன்று கண்டத்தையுடைய இம்மந்திரம் இம்மை மறுமைப் பயன் இரண்டையும் தருவதாம்.

*1308.* *ஓரில் இதுவே உரையும்இத் தெய்வத்தைத்*
*தேரிற் பிறிதில்லை யானொன்று செப்பக்கேள்*
*வாரித் திரிகோண மன்மின்ப முத்தியுந்*
*தேரில் அறியுஞ் சிவகாயத் தானே.*

ஆராயுமிடத்தில் யான் உரைக்கும் உரையும் இதுவேயாகும், தேறுமிடத்து இம்மந்திர வடிவமான புவனேசுவரியைத் தவிரத் தெய்வம் பிறிதில்லை, நான் ஒன்று சொல்லக் கேட்பாயாக, வாரி போன்ற முக்கோணத்தில் மனம் நித்தியானந்தத்தையும் அகண்டத்தையும் விரும்பின், அதுவே சிவனது வடிவம் என்று அறியும்.

*1309.* *ஏக பராசத்தி ஈசற்காம் அங்கமே*
*யாகம் பராவித்தை யாமுத்தி சித்தியே*
*ஏகம் பராசத்தி யாகச் சிவகுரு*
*யோகம் பராசத்தி உண்மைஎட் டாமே.*

ஒன்றாகிய பராசத்தியே இறைவனுக்கு அங்கமாவள், அவளது திருமேனி வித்தையாம், அது முத்தியையும் சித்தியையும் தருவதாம், பராசத்தி ஒருத்தியேயாயினும், சிவகுருவோடு பொருந்தி நிற்பதில் அவள் எட்டுச் சத்தியாக உண்மையில் உள்ளாள்.

*1310.* *எட்டா கியசத்தி எட்டாகும் யோகத்துக்*
*கட்டாகு நாதாந்தத் தெட்டுங் கலப்பித்த*
*தொட்டாத விந்துவுந் தானற் றொழிந்தது*
*கிட்டா தொழிந்தது கீழான மூடாக்கே.*

இந்த எட்டு வகையாகிய சத்திகளும் அட்டாங்கங்களையுடைய யோகத்துக்கு அங்கமாகும், நாதாந்தம் கைவரப் பெற்றவர்க்கு இவ்வெட்டும் கலப்பித்தல் அமையும், விருப்பத்தை விளைவித்துப் போகத்தில் செலுத்தும் வீரியமும் அற்று ஒழிந்தது, ஸ்திரீ போகத்தில் நாட்டமுடைய கீழான மக்களுக்கு அடையவொண்ணாததாயிற்று.

*1311.* *ஏதும் பலமா மியந்திர சன்னடி*
*ஓதிக் குருவின் உபதேசம் உட்கொண்டு*
*நீதங்கும் அங்க நியாசந் தனைப்பண்ணிச்*
*சாதங் கெடச்செம்பிற் சட்கோணந் தானிடே.*

எல்லாப் பயனையும் தருவது இயந்திர ராசனாகிய புவனாபதிச் சக்கரத்தின் திருவடியாம், அதனை அறிந்து அவள் மந்திரத்தைக் குருவினால் அடைந்து அதனை உடலில் நிறுத்திப் பயிலவும், ஆன்மா உடலில் மந்திராத்துவா ஆக நிலைபெற அங்கங்களைச் சிவாங்கங்களாக நியசித்து, உன் பிறவி வேர் கெடுமாறு செப்புத் தகட்டில் அறுகோணம் இடுவாயாக.

*1312.* *சட்கோணந் தன்னில் ஸ்ரீம்ஹிரீம் தானிட்டு*
*அக்கோண மாறின் தலையில்நீங் காரமிட்*
*டெக்கோண முஞ்சூழ எழில் வட்டம் இட்டுப்பின்*
*மிக்கீரெட் டக்கர மம்முதன் மேலிடே.*

அவ்அறுகோணத்தில் ஸ்ரீம் ஹிரீம் என்ற பீசங்களை எழுதி, அக்கோணம் ஆறின் உச்சியிலும் ஹிரீங்காரம் இட்டு, எல்லாக் கோணங்களையும் சூழ அழகிய வட்டம் எழுதி, பின்பு அதன்மேல் பதினாறு உயிர் எழுத்துகளையும் அகர முதலாக எழுதுக.

*1313.* *இட்ட இதழ்கள் இடையந் தரத்திலே*
*அட்டஹவ் விட்டதின் மேலே உவ்விட்டுக்*
*கிட்ட இதழ்களின் மேலே கிரோம்சிரோம்*
*இட்டுவா மத்தாங் கிரோங்கென்று மேவிடே.*

எழுதிய தாமரை இதழ்களில் நடுவிலுள்ள வெளியில், எட்டி 'ஹ' என்னும் எழுத்தையும் 'உ' என்னும் எழுத்தையும் சேர்த்த ஸ்ரீ எழுதி அணுக, இதழ்களுக்கு மேலே கிரோம் சிரோம் என்பனவற்றை எழுதி, அதன் இடப்பாகத்தில் ஆம் கிரோம் என்ற விரும்பி எழுதுக.

*1314.* *மேவிய சக்கர மீது வலத்திலே*
*கோவை யடைவே குரோங்சிரோங் கென்றிட்டுத்*
*தாவில்ரீங் காரத்தாற் சக்கரஞ் சூழ்ந்து*
*பூவைப் புவனா பதியைப்பின் பூசியே.*

விரும்பி எழுதிய சக்கரத்தின்மீது வலப்பக்கத்திலே, மாலை மாதிரியாக கிரோம் சிரோம் என்றிட்டு, குற்றமற்ற ஹிரீம் என்னும் பீசத்தால் சக்கரத்தைச் சூழ்ந்து புவனாபதி சத்தியைப் பூசிப்பாயாக.

*1315.* *பூசிக்கும் போது புவனா பதிதன்னை*
*ஆசற் றகத்தினில் ஆவா கனம்பண்ணிப்*
*பேசிய பிராணப் பிரதிட்டை யதுசெய்து*
*தேகற் றிடவே தியான மதுசெய்யே.*

பூசிக்கும்போது புவனாபதியை, காமாதி குற்றம் நீங்கிய மனத்தினில் நிலைபெற வேண்டும் என்று வேண்டி, அதற்குரிய மந்திரங்களைச் சிந்தித்து உயிர் கொடுத்து அங்கே நிறுத்தி, ஒளி விளங்கும்படி தியானம் செய்வாயாக.

*1316.* *செய்ய திருமேனி செம்பட் டுடைதானுங்*
*கையிற் படையங் குசபாசத் தோடபய*
*மெய்யில் அணிகலன் இரத்தின மாமேனி*
*துய்ய முடியும் அவயவத்தில் தோற்றமே.*

சிவந்த மேனியை உடையவளாய்ச் செம்பட்டுடை உடுத்து, கையினில் அங்குசம் பாசம் அபய வரதத்தையும் கொண்டு, திருமேனியில் அணிகலன்களையும் இரத்தினாபரணங்களையும் தாங்கி, தூய்மையான கிரீடத்தோடு வடிவு கொண்டு தோன்றுவள்.

*1317.* *தோற்போர்வை நீக்கித் துதித்தடைவிற் பூசித்துப்*
*பாற்போ னகமந் திரத்தாற் பயின்றேத்தி*
*நாற்பால நாரதா யாகவா காஎன்று*
*சீர்ப்பாகச் சேடத்தை மாற்றிப்பின் சேவியே.*

உடலைக் கடந்து ஒளி மண்டலத்தில் நின்று தோத்தரித்து நூல் விதிப்படி பூசித்து, பால் அன்னத்தை மந்திரத்தை செபித்து, நான்கு திசைகளிலும் "நாரதாய சுவாகா" என்று கூறி நிவேதித்து, சிறப்பாக நிர்மாலியத்தை அகற்றிப் பிறகு அதனை உண்ணுவாயாக.

*1318.* *சேவிப் பதன்முன்னே தேவியையுத் வாகனத்தாற்*
*பாவித் திதய கமலத்தே பதிவித்தங்*
*கியாவர்க்கும் எட்டா இயந்திர ராசனை*
*நீவைத்துச் சாமி நினைந்தது தருமே.*

நைவேத்திய பிரசாதத்தை உண்பதற்கு முன்னே தேவியை உன்னிடம் கலந்திருப்பவளாகக் கண்டு, இதய கமலத்தில் பதித்துக்கொண்டு அங்கு யாவராலும் கண்டறிய வொண்ணாத இயந்திர ராசனை, நீ மனத்துள் கொண்டு வழிபடுவாயாக, பின் நீ நினைத்தவை எல்லாம் தருவள்.

## 13. நவாக்கரி சக்கரம்

நவாக்கிரி - நவ + அக்கரி = ஒன்பது அட்சரம். நவாக்கரி சக்கரம் ஒன்பது அட்சரங்களைப் பீசமாகக் கொண்ட தேவி மந்திரம் அமைந்த சக்கரம். ஓர் எழுத்தே ஒன்பது எழுத்தாகவும் மாறி அமையும் வகையில் எண்பத்தொரு வகையாகவும் விரியும்.

*1319.* *நவாக்கரி சக்கர நானுரை செய்யின்*
*நவாக்கரி ஒன்று நவாக்கிரி யாக*
*நவாக்கரி எண்பத் தொருவகை யாக*
*நவாக்கரி யக்கிலீ சௌமுத வீறே.*

நவாக்கிரி சக்கரத்தை நான் சொல்லப்புகின், புதுமையை நல்கும் ஏகாட்சரியே ஒன்பது எழுத்துகளைக் கொண்ட தேவி மந்திரமாக, அதுவே எண்பத்தொரு வகையாக, அது கிலீம் முதல் சௌம் ஈறாகக் கொண்டு விளங்கும்.

*1320.* *சௌமுதல் அவ்வொடு ஹௌவுட னாங்கிரீம்*
*கௌவு ளுமையுளுங் கலந்திரீம் சிரீமென்*
*றொவ்வில் எழுங்கிலீ மந்திர பாதமாச்*
*செவ்வுள் எழுந்து சிவாய நமவென்னே.*

சௌம் ஔம் ஹௌவுடன் ஆக, கிரீம் கௌம் ஐம் கலந்து ஹ்ரீம் ஸ்ரீம் என்று, இவற்றோடு கிலீம் மந்திரம் மூலமாகக் கொண்டு, செம்மையாக உள்ளே அடியிலிருந்து நினைந்து சிவாயநம எனக் கூறுவாயாக.

*1321.* *நவாக்கரி யாவது நானறி வித்தை*
*நவாக்கரி யுள்ளெழும் நன்மைகள் எல்லாம்*
*நவாக்கரி மந்திர நாவுளே ஓத*
*நவாக்கரி சத்தி நலந்தருந் தானே.*

நவாக்கிரியாவது நான் அறிந்த ஸ்ரீ வித்தையாகும், இதில் நன்மைகள் அனைத்தும் விளையும், இதனை நாவினுள் வைத்து நினைக்கவே, நவாக்கரி சத்தி நன்மைகளை அருளுவாள்.

*1322.* *நலத்தரு ஞானமுங் கல்வியும் எல்லாம்*
*உரந்தரு வல்வினை யும்மைவிட் டோடுஞ்*
*சிரந்தரு தீவினை செய்வ தகற்றி*
*வரந்தரு சோதியும் வாய்ந்திடுங் காணே.*

ஞானமும் கல்வி முதலாகிய நலம் எல்லாம் தரும், கொடுமையைத் தரும் (சஞ்சிதம்) பழ வினைகள் உம்மை விட்டு நீங்கும், இப்பிறவியில் அறியாமையால் ஈட்டப்படும் தலையான (ஆகாமிய) வினைகளை நீக்கி வரங்களை அருளும், உங்களது சந்திர மண்டலம் விளங்குவதை அநுபவத்தில் காண்க.

*1323.* *கண்டிடுஞ் சக்கரம் வெள்ளியொன் செம்பிடை*
*கொண்டிடும் உள்ளே குறித்த வினைகளை*
*வென்றிடு மண்டலம் வெற்றி தருவிக்கும்*
*நின்றிடுஞ் சக்கரம் நினைக்கு மனவே.*

சக்கரத்தை வெள்ளி, பொன், செம்புத் தகடுகளில் அமைக்கவும், மனத்திலும் தியானியுங்கள், அப்படிச் செய்யின் உங்களுக்கு அமையவுள்ள வினைகளை வென்றுவிடலாம், நீங்கள் வாழுகின்ற பூமியில் உங்களுக்கு வெற்றியை உண்டாக்கும், உங்களுடைய தியான வல்லபத்துக்கேற்ப நிலைத்திருக்கும்.

*1324.* *நினைத்திடு மச்சிரீ மக்கிலீ மீறா*
*நினைத்திடுஞ் சக்கர மாதியு மீறு*
*நினைத்திடு நெல்லொடு புல்லினை யுள்ளே*
*நினைத்திடும் அருச்சனை நேர்தரு வாளே.*

ஸ்ரீம் முதலாகக் கொண்டு கிலீம் ஈறாகத் தியானியுங்கள், அவ்வாறு தியானிக்கும் போது ஆதியாகவுள்ளது ஈறாக அமையும், நெல்லும் அருகம்புல்லும் கொண்டு தியானித்து வழிபாடு செய்யுங்கள், உங்களது அருச்சனையை உகந்து வெளிப்பட்டருளுவான்.

*1325.* *நேர்தரு மத்திரு நாயகி யானவள்*
*யாதொரு வண்ணம் அறிந்திடும் பொற்பூவை*
*கார்தரு வண்ணங் கருதின கைவரும்*
*நார்தரு வண்ணம் நடந்திடு நீயே.*

உங்களுக்கு வெளிப்பட்டு அருள் வழங்கும் பராசத்தி, எவ்விதமான நிறமுடையவள் என உணர விரும்பின், அழகிய காயம்பூவைப் போலக் கரிய வண்ணமாகும், அவ்வண்ணம் தொழுவார்க்கு நினைத்தவை கைகூடும், அவள் உன்னை விரும்பும்படி நீ நடந்துகொள்வாயாக.

*1326.* *நடந்திடும் பாரினில் நன்மைகள் எல்லாங்*
*கடந்திடுங் காலனும் எண்ணிய நாளும்*
*படர்ந்திடு நாமமும் பாய்கதிர் போல*
*அடைந்திடு வண்ணம் அடைந்திடு நீயே.*

இந்த உலகில் எல்லா நன்மைகளும் உண்டாகும், காலன் நமக்குரிய ஆயுளாக எண்ணிய நாள்களும் கடக்கும், எங்குப் பரந்து செல்லும் சூரியனது கதிரைப் போலப் புகழும் பரவும், ஆதலால் பராசத்தி உன்னிடம் பொருந்தும் வகையில் நீ நடப்பாயாக.

*1327.* *அடைந்திடும் பொன்வெள்ளி கல்லுடன் எல்லாம்*
*அடைந்திடு மாதி யருளுந் திருவும்*
*அடைந்திடும் அண்டத் தமரர்கள் வாழ்வும்*
*அடைந்திடும் வண்ணம் அறிந்திடு நீயே.*

பொன், வெள்ளி, நவரத்தினம் முதலியவை தாமே வந்தடையும், பராசத்தியின் அருளும் ஞானமும் வரும், தேவர்கள் வாழ்வு சித்திக்கும், நீ அவளை அடையும் வகையை அறிந்துகொள்வாயாக.

*1328.* *அறிந்திடு வார்கள் அமரர்க ளாகத்*
*தெரிந்திடு வானோர் தேவர்கள் தேவன்*
*பரிந்திடும் வானவன் பாய்புனல் சூடி*
*முரிந்திடு வானை முயன்றிடு நீரே.*

நவாக்கரியை அமரர்களாவதற்காக மக்கள் அறிவார்கள், அவனை அறிந்த தேவர்களுக்குத் தேவ தேவனாகிய பரமேசுவரன் அருள் செய்யும், பாய்கின்ற கங்கையைச் சூடி அதன் வேகத்தை மாற்றியருளிய பரமேசுவரனை, அடைவதற்கு நீ முயல்வாயாக.

*1329.* *நீர்பணி சக்கரம் நேர்தரு வண்ணங்கள்*
*பாரணி யும்ஹிரீ முன்ஸ்ரீ மீறாத்*
*தாரணி யும்புகழ்த் தையல்நல் லாள்தன்னைக்*
*காரணி யும்பொழிற் கண்டுகொள் ளீரே.*

நீங்கள் வணங்குவதற்குரிய சக்கரத்தில் பொருந்திய எழுத்துகள், உலகம் புகழும் ஹ்ரீம் முதலாக ஸ்ரீம் ஈறாகவுள்ளதாம், இதனை வழிபட்டு மாலையை அணிந்து புகழோடு கூடிய பராசத்தியை, மேகம் போன்ற மண்டலத்தில் கண்டுகொள்ளுங்கள்.

*1330.* *கண்டுகொள் ளுந்தனி நாயகி தன்னையும்*
*மொண்டுகொ ளும்முக வசியம தாயிடும்*
*பண்டுகொ ளும்பர மாய பரஞ்சுடர்*
*நின்றுகொ ளும்நிலை பேறுடை யானையே.*

ஒப்பற்ற நாயகியாகிய சத்தியைத் தரிசியுங்கள், அள்ளிப் பருகும்படியாக முகப்பொலிவு உண்டாகும், மேன்மையான பரமசிவம், மஞ்சமாகத் தாங்கும் நிலைபேறுடைய சத்தியை, பழமையாகப் போற்றி மனத்துள் கொள்ளுங்கள்.

*1331.* *பேறுடை யாள்தன் பெருமையை எண்ணிடில்*
*நாடுடை யார்களும் நம்வச மாகுவர்*
*மாறுடை யார்களும் வாழ்வது தானிலை*
*கூறுடை யானையும் கூறுமின் நீரே.*

நீங்கள் எய்தும் பேறாகவுள்ள சத்தியின் பெருமையை எண்ணில், நாட்டையுடைய மன்னரும் நம் வசமாகுவர், நமக்குப் பகையானவர்களும் வாழ்வதும் இல்லை, ஆதலால் இறைவனை ஒரு கூற்றிலே யுடையவளைத் தோத்திரம் செய்யுங்கள்.

*1332.* *கூறுமின் எட்டுத் திசைக்குந் தலைவியை*
*யாறுமின் அண்டத் தமரர்கள் வாழ்வென*
*மாறுமின் வையம் வரும்வழி தன்னையுந்*
*தேறுமின் நாயகி சேவடி சேர்ந்தே.*

எட்டுத் திசைக்கும் தலைவியாகிய நவாக்கரி சத்தியைத் தோத்தரியுங்கள், அண்டங்களில் வாழ்கிற அமரர்கள் வாழ்வு எம்மாத்திரம் என அதில் வைத்த ஆசையை அறுங்கள், மீட்டும் பிறந்து இப்பூமியில் வரும் வழியை மாறுங்கள், நாயகியின் சிவந்த திருவடித் துணையைப் பற்றித் தெளிவு பெறுங்கள்.

*1333.* *சேவடி சேரச் செறிய இருந்தவர்*
*நாவடி யுள்ளே நவின்றுநின் றேத்துவர்*
*பூவடி யிட்டுப் பொலிய இருந்தவர்*
*மாவடி காணும் வகையறி வாரே.*

அம்மையின் திருவடியை இடைவிடாது நினைத்திருந்தவர், நா அசையாது உள்ளே செபித்துக் கொண்டிருப்பர், அவ்வாறு தங்களது அகப் பார்வையைச் செலுத்தி விளங்க இருந்தவர், பெருமையுடைய திருவடியைக் காண்பவராவார்.

*1334.* *ஐம்முத லாக வளர்தெழு சக்கரம்*
*மைம்முத லாக அமர்ந்திரீ மீறாகும்*
*அம்முத லாகி யவர்க்குடை யாடனை*
*மைம்முத லாக வழுத்திடு நீயே.*

ஐம் என்பது முதலாக வளர்ந்து தோன்றும் சக்கரம், ஐம் முதலாகப் பிற பீசங்களோடு ஹ்ரீம் ஈறாகும், அகர வாச்சியப் பொருளாகிய சிவனுக்குடைய சத்தியை, மாயைக்குத் தலைவியாகப் போற்றுவாயாக.

*1335.* *வழுத்திடு நாவுக் கரசிவன் தன்னைப்*
*பகுத்திடும் வேதமெய் யாகம மெல்லாந்*
*தொகுத்தொரு நாவிடைச் சொல்லவல் லாளை*
*முகத்துளும் முன்னெழக கண்டுகொ ளீரே.*

வணங்கப்பெறும் வாகீசுவரியான சத்தியை, வேதாகமங்கள் எல்லாம் பகுத்து ஓதும், அவை அனைத்தையும் சேர்த்து நம் நாவால் பயில அதற்கு அருள்புரிய வல்லாளை, அண்ணாக்கின் உள்ளே முன்னெழக் கண்டுகொள்ளுங்கள்.

*1336.* *கண்ட இச் சக்கரம் நாவில் எழுதிடிற்*
*கொண்ட இம் மந்திரங் கூத்தன் குறியதா*
*மன்றினுள வித்தையு மானுடர் கையதாய்*
*வென்றிடும் வைய மெல்லியல் மேவியே.*

இவ்வாறுள்ள சக்கரத்தை ஒருவன் நாவில் எழுதிடில், கொண்ட இம்மந்திரமானது கூத்தப் பெருமானது வடிவமாகும், பொன்மன்றில் விளங்கும் சபாவித்தையும் மக்கள் கையதாகி, மெல்லியலாகிய நவாக்கிரி கருணை பொருந்துதலால் உலகத்தையே வெல்லலாம்.

*1337.* *மெல்லிய லாகிய மெய்ப்பொரு ளாடன்னைச்*
*சொல்லிய லாலே தொடர்ந்தங் கிருந்திடும்*
*பல்லிய லாகப் பரந்தெழு நாள்பல*
*நல்லியல் பாலே நடந்திடுந் தானே.*

மென்மையான இயல்பினையுடைய உண்மைப் பொருளாகியவளை, குரு உபதேசப்படி விடாது பற்றித் தியானித்திருங்கள், இன்பதுன்பக் கலப்புடைய நாள்கள் பலவும், நல்ல இன்ப நாள்களாகவே அமைந்துவிடும்.

*1338.* *நடந்திடு நாவினுள் நன்மைகள் எல்லாம்*
*தொடர்ந்திடுஞ் சொல்லொடு சொற்பொருள் தானும்*
*கடந்திடுங் கல்விக் கரசிவ னாகப்*
*படர்ந்திடும் பாரிற் பகையில்லை தானே.*

நன்மைகள் எல்லாம் இவன் நாவினால் சொன்னபடி நடக்கும், இவன் சொன்னவாறு சொல்லுக்குரிய பயனும் தொடர்ந்துவிடும், வாகீசுவரியே இவன் நாவில் உள்ளமையால் எல்லாக் கல்வியும் பொருந்தி நாவரசாக விளங்குவாள், பரந்த உலகில் பகையும் இல்லாது போகும்.

*1339.* *பகையில்லை கௌமுத லையது வீறா*
*நகையில்லை சக்கர நன்றறி வார்க்கு*
*மிகையில்லை சொல்லிய பல்லுரு வெல்லாம்*
*வகையில்லை யாக வணங்கிடுந் தானே.*

பகையைக் கெடுக்கும் கௌம் முதல் ஐம் ஈறாகவுள்ள, சக்கரத்தை நன்றாக அறிபவர்க்குப் பிறர் பழித்தலும் இல்லை, பற்பல வடிவங்களாகக் காணப்படுவனவெல்லாம் இவருக்கு வேறாக இல்லை, ஆதலின் வேறு வகையின்மையாக எல்லாம் இவரை வணங்குவனவாம்.

*1340.* *வணங்கிடுந் தத்துவ நாயகி தன்னை*
*நலங்கிடு நல்லுயி ரானவை யெல்லாங்*
*கலங்கிடுங் காம வெகுளி மயக்கந்*
*துலங்கிடுஞ் சொல்லிய சூழ்வினை தானே.*

தத்துவ நாயகியை எல்லோரும் வணங்குவர், ஆதலால் அந்நல்லவர் எல்லாம் அவளிடம் பொருந்தியிருப்பர், காமம் வெகுளி மயக்கமாகிய முக்குற்றங்களும் நீங்கிவிடும், எண்ணிய கருமம் கைகூடி விளங்கும்.

*1341.* *தானே கழறித் தணியவும் வல்லனாய்த்*
*தானே நினைத்தவை சொல்லவும் வல்லனாய்த்*
*தானே தனிநடங் கண்டவள் தன்னையுந்*
*தானே வணங்கித் தலைவனு மாமே.*

தனக்கு மேல் பிறரின்றித் தானே பேசி அடங்குபவனாய், தான் ஒருவனே நினைத்த வண்ணம் ஒளிக்காமல் பேசுபவனாய், தானே பேரூழிக் காலத்தில் சிவனது சங்காரத் தாண்டவம் கண்டவளையும், தானே வழிபட்டு வணங்கித் தலைவனுமாய் ஆவான்.

*1342.* *ஆமே யனைத்துயி ராகிய அம்மையந்*
*தாமே சகலமம் ஈன்றஅத் தையலும்*
*ஆமே யவளடி போற்றி வணங்கிடிற்*
*போமே வினைகளும் புண்ணிய னாகுமே.*

எல்லா உயிர்களுமாகியவள் அம்மையே யாகும், எல்லாவற்றையும் பெற்றெடுத்த அழகு நிரம்பிய அன்னையும் ஆவாள், அவளது திருவடியைப் போற்றி வணங்கினால், நம்முடைய வினைகளும் போய்ப் புண்ணியவள் ஆகலாம்.

*1343.* *புண்ணிய னாகிப் பொருந்தி உலகெங்கும்*
*கண்ணிய னாகித் கலந்தங் கிருந்திடும்*
*தண்ணிய னாகித் தரணி முழுதுக்கும்*
*அண்ணிய னாகி அமர்ந்திருந் தானே.*

உலகமெங்கும் பொருந்திப் புண்ணியனாகி, மதிக்கத் தக்கவனாக அனைவருடன் கலந்து விளங்குவான், கருணை நிறைந்தவனாக உலக முழுதும், மிகவும் இனியனாய் அமர்ந்திருந்தான்.

*1344.* *தானது கிரீம் கெளவது ஈறாம்*
*நானது சக்கர நன்றறி வார்க்கெல்லாம்*
*கானது கன்னி கலந்த பராசத்தி*
*கேளது வையங் கிளரொளி யானதே.*

சக்கரத்தின் பீசமானது கிரீம் முதல் கெளம் ஈறாகும். அது நானாகவுள்ள சக்கரம் என்ற அறிபவர்க்கெல்லாம், அஞ்ஞான மயமான காட்டில் இருள் மயமாகக் கலந்திருந்த அழியாத பராசத்தி, உறவாகி அறிவான நிலையில் ஒளியாக எல்லா உயிர்களிடமும் விளங்குகின்றாள்.

*1345.* *ஒளிக்கும் பராசத்தி உள்ளே அமரிற்*
*களிக்கும்இச் சிந்தையிற் காரணங் காட்டித்*
*தெளிக்கு மழையுடன் செல்லமுன் டாக்கும்*
*அளிக்கும் இவளை அறிந்துகொள் வார்க்கே.*

ஒளி செய்கின்ற பராசத்தி மனத்தில் எழுந்தருளினால், களிக்கும் மனத்தில் உண்மைப் பொருளினை விளக்கித் தெளிவினைத் தரும், மழையுடன் செல்வத்தையும் உண்டாக்கும், இவளை அறிந்துகொள்வார்க்கு இங்ஙனம் அருள் புரியும்.

*1346.* *அறிந்திடுஞ் சக்கரம் அருச்சனை யோடே*
*எறிந்திடும் வையத் திடரவை காணின்*
*மறிந்திடு மன்னனும் வந்தனை செய்யும்*
*பொறிந்திடும் சிந்தை புகையில்லை தானே.*

சக்கரத்தைப் பூசை செய்து அறிவாயாக, உலகத் துன்பம் யாவையும் விலக்கும், பகையினைத் தடுத்து நிறுத்தும் அரசனும் வந்து வணங்கும்படி செய்யும், உள்ளத்தைக் கலங்க வைக்கும் துன்பங்கள் உண்டாக மாட்டா.

*1347.* *புகையில்லை சொல்லிய பொன்னொளி யுண்டாங்*
*குகையில்லை கொல்ல திலாமையி னாலே*
*வகையில்லை வாழ்கின்ற மன்னுயிர்க் கெல்லாஞ்*
*சிகையில்லை சக்கரஞ் சேர்ந்தவர் தாமே.*

சக்கர வழிபாடு உடையவர்க்குத் தாமே, துன்பம் இல்லையாம், உள்ளுடல் பொன்னொளி பெற்று விளங்கும், பிற உயிர்களைக் கொல்லாதவர்கள் ஆனபடியால் மீண்டும் கருப்பத்தை உடைய மாட்டார்கள், வாழ எண்ணுகின்ற உயிர்கட்கெல்லாம் இதனைக் காட்டிலும் சிறந்த வகையில்லையாம், முடிவும் இல்லை.

*1348.* *சேர்ந்தவர் என்றுந் திசையொளி யானவர்*
*காய்ந்தெழு மேல்வினை காண்கி லாதவர்*
*பாய்ந்தெழும் உள்ளொளி பாரிற் பரந்தது*
*மாய்ந்தது காரிருள் மாறொளி தானே.*

தியானித்தவர் ஒளியுடன் பெற்று விளங்குவர், சினந்து எழுகின்ற ஆகாமிய வினைகளைக் காணாதவராவர், இவரிடம் பரவி எழுகின்ற உள்ளொளி அவர் வாழும் பிரதேசத்தில் படர்ந்தது, அதனால் அப்பகுதியினரிடம் பரவிய இருள் மயமான அஞ்ஞானம் கெட்டு ஒளி பெற்று ஞான மயமானவர்களாக விளங்கினர்.

*1349.* *ஒளியது ஹௌமுன் கிரீமது ஈறாங்*
*களியது சக்கரங் கண்டறி வார்க்குத்*
*தெளிவது ஞானமுஞ் சிந்தையும் தேறப்*
*பணிவது பஞ்சாக் கரமது வாமே.*

ஒளியையுடைய ஹௌம் முதல் கிரீம் இறுதியாகவுள்ள, மகிழ்ச்சியைத் தருவதான சக்கரத்தைக் கண்டறிவார்க்கு, தெளிவான ஞானமும் மனமும் உண்டாக, வணங்கி வழிபடுவது பஞ்சாக்கரத்தோடு கூடிய நவாக்கரியாம்.

*1350.* *ஆமே சதாசிவ நாயகி யானவள்*
*ஆமே அதோமுகத் துள்ளறி வானவள்*
*ஆமே சுவையொளி யூறோசை கண்டவள்*
*ஆமே யனைத்துயிர் தன்னுளு மாமே.*

சதாசிவ மூர்த்திக்கு அனுக்கிரகச் சத்தியாக விளங்குபவள் இவளே, இவளே கீழ்நோக்கிய சத்தியாக உயிர்களைச் செலுத்துபவள் ஆவாள், இவள் சுவை ஒளி ஊறு ஓசையாகிய இவற்றை அறியும் அறிவாகத் துணை செய்பவள், இவளே அருவ நிலையில் எல்லா உயிர்களையும் தன்னிடம் அடக்கிக் கொண்டவள் ஆவாள்.

*1351.* *தன்னுளு மாகித் தரணி முழுதுங்கொண்*
*டென்னுளு மாகி இடம்பெற நின்றவள்*
*மண்ணுளும் நீரனல் காலுளும் வானுளுங்*
*கண்ணுளும் மெய்யுளும் காணலு மாமே.*

எல்லா உலகத்தையும் கொண்ட ஈசான மூர்த்தி வடிவுடன், என்னுள்ளும் இடம் பெற்று விளங்கினள், அவளை மண்ணிலும் நீரிலும் ஒளியிலும் காற்றிலும் ஆகாய மண்டலத்திலும், கண்ணின் கருமணிப் பார்வையிலும் உடலிலும் காணலாம்.

*1352.* *காணலு மாகுங் கலந்துயிர் செய்வன*
*காணலு மாகுங் கருத்து ளிருந்திடிற்*
*காணலு மாகுங் கலந்து வழிசெயக்*
*காணலு மாகுங் கருத்துற நில்லே.*

சத்தி உயிரோடு கலந்து நின்று உயிர்களுக்குச் செய்யும் உதவியைக் காணலாம், அவளை அடைய வேண்டும் என்ற ஒரே விருப்புடன் கூடி நிற்பவரிடம் சீவ போதமின்மையால் காணலுமாகும், அங்ஙனம் உயிர்க்குயிராக இருக்கும் அவள் வழியே உயிர்கள் தொழிலாற்றுவதைக் காணலுமாகும், ஆகையால் அவளிடம் என்றும் பிரியாத வண்ணம் கருத்துப் பொருந்தி நிற்பாயாக.

*1353.* *நின்றிடும் ஏழு புவனமும் ஒன்றாகக்*
*கண்டிடும் உள்ளங் கலந்தெங்குந் தானாகக்*
*கொண்டிடும் வையங் குணம்பல தன்னையும்*
*விண்டிடும் வல்வினை மெய்ப்பொரு ளாகுமே.*

சாதகர்க்கு ஏழுலகமும் ஒன்றாகக் கலந்து விளங்கும், எல்லா உயிர்களிடமும் பொருந்தித் தானாகக் காண்பர், பூமியிலுள்ள எல்லா இயல்புகளையும் உள்ளவாறு அறிவர், உயிர்கள் வலிய எய்திய வினைகளை விலக்கும் உண்மைப் பொருளாகவும் நிற்பர்.

*1354.* *மெய்ப்பொரு ளௌமுதல் ஹௌவது ஈறாக்*
*கைப்பொரு ளாகக் கலந்தெழு சக்கரத்*
*தற்பொரு ளாகச் சமைந்தமு தேஸ்வரி*
*தற்பொரு ளாக நடுவிருந் தாளே.*

உண்மைப் பொருளாகிய ஔம் முதல் ஹௌம் ஈறாகவுள்ள எழுத்துகள், விளக்கமாக அமைந்த சக்கரத்தில், சிவம் விளங்க எழுந்தருளிய அமுதேஸ்வரி, நன்மையைத் தரும் பொருளாக உடலின் நடுவில் இருந்தாள்.

*1355. தாளதி னுள்ளே சமைந்தமு தேஸ்வரி*
*காலது கொண்டு கலந்துற வீசிடில்*
*நாளது நாளும் புதுமைகள் கண்டபின்*
*கேளது காயமுங் கேடில்லை காணுமே.*

முன் மந்திரத்தில் சொன்னவாறு மூலாதாரம் முதல் பிரமரந்திரம் வரை சோதியாக விளங்கும் அமுதேசுவரியுடன், மூல வாயுவை மேலே கொண்டுவந்து பொருந்தும்படி செய்யின், நாடொறும் புதுமைகளைக் கண்டு பின், சாதகரது உறவாகிய உடலுக்கும் அழிவில்லையாம்.

*1356. கேடில்லை காணுங் கிளரொளி கண்டபின்*
*நாடில்லை காணும் நாண்முத லற்றபின்*
*மாடில்லை காணும் வரும்வழி கண்டபின்*
*காடில்லை காணுங் கருத்துற் றிடத்துக்கே.*

மூலாதாரத்திலிருந்து மேலோங்கி எழும் ஒளியை அறிந்த பின் ஒரு விதமான கேடும் வந்து அடையாது, பேரொளியைக் கண்டபின் தேச முதலிய இடவேறுபாடு இல்லையாம், நாள் வேறுபாடு அற்ற பின் கீழ்மேல் முன் பின் என்ற தகுதி வேறுபாடும் இல்லையென்றுணர்க, அமுதேசவரியின் அருள் வரும் வழியைக் கண்டபின் பிரபஞ்சமாகிய துக்கக்காடும் இல்லை, இதனை நன்கு கண்டு உய்யுங்கள்.

*1357. உற்றிட மெல்லாம் உலப்பில்பா ழாக்கிக்*
*கற்றிட மெல்லாங் கடுவெளி யானது*
*மற்றிட மில்லை வழியில்லை தானில்லைச்*
*சற்றிட மில்லை சலிப்பற நின்றிடே.*

தான் வந்துற்ற இடமாகிய உலகமெல்லாம் தோன்றாதவாறு பாழாக்கி, அவ்வுலகத்தில் கண்டறிந்தயாவும் வெட்ட வெளியாயிற்று, தானே எங்கும் நிறைந்திருந்தலின் வேறு இடமில்லை, ஆதலின் சஞ்சரித்தலுக்கு வேறு வழியில்லை, தான் என்ற பொருளே இல்லை, சவித்தலுக்குரிய இடம் சிறிதும் இல்லை, ஆதலின் அசையாது அனுபவத்தில் நிலைபெறுவாயாக.

*1358. நின்றிடும் ஏழ்கடல் ஏழ்புவி எல்லாம்*
*நின்றிடும் உள்ளம் நினைத்தவை தானே*
*நின்றிடுஞ் சத்தி நிலைபெறக் கண்டிட*
*நின்றிடும் மேலை விளக்கொளி தானே.*

சாதகர்க்கு ஏழ்கடலும் முன் நிற்கும், ஏழு உலகங்களும் முன்நிற்கும், மனத்தினால் நினைத்தவை எல்லாம் இவன் முன்னே வந்து நிற்கும், சத்தி தன்னிடத்தில் நிலைபெறக் காண்பவர்க்கு, சிரசின்மேல் விளங்கும் ஒளிகள் அமைந்து நிற்கும்.

*1359. விளக்கொளி சௌமுத லௌவது ஈறா*
*விளக்கொளி சக்கரம் மெய்ப்பொரு ளாகும்*
*விளக்கொளி யாகிய மின்கொடி யாளை*
*விளக்கொளி யாக விளங்கிடு நீயே.*

விளக்குகின்ற ஒளியாக விளங்கும் சௌம் முதல் ஔம் ஈறாகவுள்ள பீசங்களையுடைய, நவாக்கிரி சக்கரம் உண்மைப் பொருளாகும், அதில் விளங்கும் மின்கொடி போன்றவளை, விளங்குகின்ற ஞானத்தை உடையவளாகி அறிந்த நீ விளங்குவாயாக.

*1360. விளங்கிடு மேல்வரு மெய்ப்பொருள் சொல்லின்*
*விளங்கிடு மெல்லிய லானது வாகும்*
*விளங்கிடு மெய்நின்ற ஞானப் பொருளை*
*விளங்கிடு வார்கள் விளங்கினர் தானே.*

இதனால் விளங்கும் மேல்வருகின்ற உண்மையை உணர்த்துப் புகுந்தால், எங்கும் விளங்கும் சத்தியேயாகும், இவ்வாறு விளங்குகின்ற உண்மை ஞானப் பொருளை, உணர்ந்தவரே சத்தியை உணர்ந்தவராவார்.

*1361. தானே வெளியென எங்கும் நிறைந்தவள்*
*தானே பரம வெளியது வானவள்*
*தானே சகலமு மாக்கி அழித்தவள்*
*தானே யனைத்துள அண்ட சகலமே.*

தானே ஆகாயம் போல உருவின்றி வியாபகமாய் நின்றவள், தானே பரமாகாயமாய் நின்றவள், தானே எல்லாப் பொருளுமாகி அவை அனைத்தையும் தன்னுள் ஒடுக்கிக் கொண்டவள், எல்லா அண்டங்களும் தானேயானவள்.

*1362.* *அண்டத்தி னுள்ளே அளப்பரி தனவள்*
*பிண்டத்தி னுள்ளே பெருவெளி கண்டவள்*
*குண்டத்தி னுள்ளே குணம்பல காணினுங்*
*கண்டத்தில் நின்ற கலப்பதி யார்க்வே.*

அண்டங்கள் அனைத்திலும் அளத்தற்கு அருமையாக இருப்பவள், பிண்டமாகிய உடலில் ஞானம் விளங்கும் பெருவெளியைத் தனக்கு இடமாகக் கொண்டவள், ஓமம் செய்யும் ஓம குண்டத்தால் பல நன்மைகளைப் பெற்றாலும், கண்டத்துக்கு மேல் விளங்கி நிற்கும் நிலைபெற்ற கலப்பினை அறியாதவராக உள்ளனர்.

*1363.* *கலப்பறி யார்கடல் சூழுல கெல்லாம்*
*உலப்பறி யாருட லோடுயிர் தன்னைச்*
*சிலப்பறி யார்சில தேவரை நாடித்*
*தலைப்பறி யாகச் சமைந்தவர் தானே.*

கடல் சூழ்ந்த உலகமெல்லாம் சத்தி கலந்திருந்தால் உணரார்கள், உடலோடு கூடிய உயிரி ஒரு நாள் உடலை விட்டுப் பிரியும் என்பதை அறியார்கள், சிறு தெய்வத்தை நாடினமையால் நாதத்தினை அறியார், இவ்வண்ணம் நடப்பது அவரது தலையெழுத்தாம்.

*1364.* *தானே எழுந்த அச் சக்கரஞ் சொல்லிடின்*
*மானே மதிவரை பத்திட்டு வைத்தபின்*
*தேனே யிரேகை திகைப்பற ஒன்பதில்*
*தானே கலந்த வறையெண்பத் தொன்றுமே.*

மானே ! சுயம்புவாகத் தோன்றிய அச்சக்கரத்தைப் பற்றிச் சொல்லின், மதிக்கத் தகுந்த கோடுகள் குறுக்குநெடுக்குமாகப் பத்து கீறி அமைந்தபின், தேன் போன்றவளே ! இரேகைக்குட்பட்ட அறைகள் ஒன்பதாக, தானே குறுக்கும் நெடுக்குமாக விளங்கும் அறை எண்பதொன்றாகும்.

*1365.* *தானே எழுந்தஅச் சக்கரஞ் சொல்லிடின்*
*மானே மதிவரை பத்திட்டு வைத்தபின்*
*தேனே யிரேகை திகைப்பற ஒன்பதில்*
*தானே கலந்த வறையெண்பத் தொன்றுமே.*

பொருந்திய சக்கரத்தைப் பற்றிச் சொல்லும் போது, கட்டங்களுக்கு வெளியான மதி மண்டலம் பொன்நிறமாம், கட்டங்களில் அடிப்படையாக அமைந்துள்ள இரேகைகள் சிவப்பு நிறமாக இருக்கும், கருணையுடைய சத்தியினது அட்சரங்கள் அடைக்கும் கட்டங்கள் பச்சை நிறமாகும்.

*1366.* *ஏய்ந்த மரவுரி தன்னில் எழுதிய*
*வாய்ந்தஇப் பெண்ணெண்பத் தொன்றில் நிரைத்தபின்*
*காய்ந்தவி நெய்யுட் கலந்துடன் ஓமமு*
*மாந்தலத் தாமுயி ராகுதி பண்ணுமே.*

பொருந்திய மரப்பட்டையில் எழுதிய, இப்பெண்ணாகிய சத்தி பீசங்களை எண்பத்தோர் அறைகளில் அடைத்த பிறகு, அவிசை நெய்யுடன் கலந்து, ஆராய்ந்து எடுக்கப்பட்ட இடத்தினின்று ஓமம் செய்து பின் பிராணாகுதியும் செய்க.

*1367.* *பண்ணிய பொன்னைப் பரப்பற நீபிடி*
*எண்ணிய நாட்களில் இன்பமும் எய்திடும்*
*நண்ணிய நாமமும் நான்முகன் ஒத்தபின்*
*துண்ணென நேயநற் நோக்கலு மாமே.*

இயந்திரத்தில் அமைக்கப்பட்ட பொன்னை ஒத்த சத்தியைப் பரபரப்பு அற நீ சிக்கெனப் பற்றுக, தியானிக்கத் தொடங்கிய நாளிலேயே இன்பம் உண்டாகும், பொருந்திய புகழும் யான கர்த்தாவாகிய பிரமனை ஒத்த பிறகு, விரைவில் நேயப் பொருளாகிய சிவத்தோடு நன்றாகச் சேர்த்தலுமாகும்.

*1368.* *ஆகின்ற சத்தனங் குங்குமங் கத்தூரி*
*போகின்ற சாந்து சவாது புழுகுநெய்*
*ஆகின்ற கற்பூர மாகோ சனநீருஞ்*
*சேர்கின்ற ஒன்பதும் சேரநீ வைத்திடே.*

அரைத்த சந்தனச் சாந்து, பூ, கத்தூரி, மணம் பரவுகின்ற பல வாசனைகளின் கூட்டு, சவ்வாது, புனுகு நெய், ஆகின்ற பச்சைக் கற்பூரம், பசுவின் கோரோசனை, பனி நீர் ஆக, சேர்கின்ற ஒன்பது பொருள்களையும் ஒன்றுசேர்த்து நீ சக்கரத்துக்குச் சாத்துவாயாக.

*1369.* *வைத்திடும் பொன்னுடன் மாதவ நோக்கிடிற்*
*கைச்சிறு கொங்கை கலந்தெழு கன்னியைத்*
*தச்சிலு வாகச் சமைந்தஇம் மந்திரம்*
*அர்ச்சனை யாயிரம் ஆயிரஞ் சிந்தியே.*

சத்தியோடு மனத்தை வைக்கும் தவத்தைச் செய்வதால், உள்ளே எழுகின்ற முதிராத இளங்கொங்கையையுடைய வாலைப் பெண்ணை, பொருந்தி நவாக்கரியாக விளைந்த இம்மந்திரத்தை, ஆயிரக்கணக்கான உரு சிந்திப்பாயாக.

*1370.* *சிந்தையி னுள்ளே திகழ்தரு சோதியாய்*
*எந்தை கரங்கள் இருமூன்றும் உள்ளது*
*பந்தமா சூலம் படைபாசம் வில்லம்பு*
*முந்தை கிலீமெழ முன்னிருந் தானே.*

மனத்தில் விளங்குகின்ற ஒளி வடிவான, எம்தாயும் தந்தையுமாகிய நவாக்கரி தேவிக்குக் கைகள் ஆறு உள்ளன, அவற்றில் மழு சூலம், தோட்டி, பாசம், வில், அம்பு ஆகிய ஆயுதங்களுடன், முதலிய கிலீம் பீசத்தையுடைய தேவி உபாசகள் முன்பு வெளிப்படுவாள்.

*1371.* *இருந்தனர் சத்திகள் அறுபத்து நால்வர்*
*இருந்தனர் கன்னிகள் எண்வகை எண்மர்*
*இருந்தனர் சூழ எதிர்சக் கரத்தே*
*இருந்த கரமிரு வில்லம்பு கொண்டே.*

யோகினி சத்திகள் அறுபத்து நால்வர் இருந்தனர், வாமை, சேட்டை, இரௌத்திரி, கால கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரதமனி, சர்வபூததமனி ஆகிய எண்மரும் இருந்தனர், இரு கைகளிலும் வில்லும் அம்பும் கொண்டு, யோகினி சத்திகள் சக்கரத்தை நோக்கியவராய்ச் சூழ இருந்தனர்.

*1372.* *கொண்ட கனகங் குழைமுடி யாடையாய்க்*
*கண்டஇம் மூர்த்தங் கனல்திரு மேனியாயப்*
*பண்டமர் சோதிப் படரித ழானவள்*
*உண்டங் கொருத்தி உணரவல் லாருக்கே.*

பொன்னாலாகிய காதணி கீரிடம், ஆடை முதலியவைகளுடன், காணப்படும் இம்மூர்த்தம் அக்கினியே திருமேனியாய், பழமையாகவே சோதியைத் தனது இடமாகக் கொண்டு விளங்குபவள், என்று அறிவார்க்கு வெளிப்பட்டருளுவாள்.

*1373.* *உணர்ந்திருந் துள்ளே ஒருத்தியை நோக்கிற்*
*கலந்திருந் தெங்கும் கருணை பொழியும்*
*மணந்தெழும் ஓசை வொளிது காணுந்*
*தணந்தெழு சக்கரந் தான்தரு வாளே.*

இவ்வண்ணம் அறிந்து மனத்தினுள்ளே ஒப்பற்ற சத்தியைத் தரிசித்தால், அவள் எவ்விடத்தும் நீக்கமற நிறைந்து கருணை பொழிவாள், பின் எங்கும் கலந்துள்ள நாதமும் ஒளியும் ஆகிய பிரணவம் தோன்றும், உடலைத் தாண்டிய ஊர்த்துவ சகஸ்ரதளம் விளங்க அருள் செய்வாள்.

*1374.* *தருவழி யாகிய தத்துவ ஞானங்*
*குருவழி யாகுங் குணங்களுள் நின்று*
*சுருவழி யாகுங் கணக்கை யறுத்தப்*
*பெருவழி யாக்கும் பேரொளி தானே.*

பேரொளிப் பிழம்பாகிய பராசத்தி, உண்மையை விளக்கும் தத்துவ ஞானத்தை, சீவர்களின் குரு மண்டலத்திலிருந்து விளங்கும்படி செய்வாள், சீவர்களிடம் இறைமைக் குணங்கள் விளங்கும்படி நின்று, கருவின் வழிபட்டுப் பிறக்கும் செயலை அகற்றி, பெரிய வழியாகிய வீட்டு நெறியை அருளுவாள்.

*1375.* *பேரொளி யாய பெரிய பெருஞ்சுடர்*
*சீரொளி யாகித் திகழ்தரு நாயகி*
*காரொளி யாகிய கன்னிகை பொன்னிறம்*
*பாரொளி யாகிப் பரந்துநின் றாளே.*

பேரொளிப் பிழம்பாகிய பெருஞ்சுடராய், மேலான ஒளியாகி விளங்குகின்ற தலைவி, கருமையான ஒளி போன்ற கன்னியாகிப் பொன்னிறத்தோடு, பூமி தத்துவத்தின் ஒளியாக எங்கும் விரிந்து நின்றாள்.

*1376.* *பரந்த கரம்இரு பங்கயம் ஏந்திக்*
*குவிந்த கரமிரு கொய்தளிர்ப் பாணி*
*பரிந்தருள் கொங்கைகள் முத்தார் பவளம்*
*இருந்தநல் லாடை மணிபொதிந் தன்றே.*

அம்மையின் மேலே தூக்கிய இரு கரங்களில் தாமரையும் குமுதமும் ஏந்தி, அபய வரதமாகிய இருகரமும் கொய்கின்ற தளிர் போலும் அழகுடையனவாய், விரும்பியருளும் தனங்கள் முத்தும் பவளமும் நிறைந்து, நல்ல மணி பொதிந்த ஆடையுடன் விளங்குமன்றே.

*1377.* *மணிமுடி பாதஞ் சிலம்பணி மங்கை*
*அணியவ ளன்றி யருளில்லை யாகுந்*
*தணிபவர் நெஞ்சினுள் தன்னரு ளாகிப்*
*பணிபவர்க் கன்றோ பரகதி யாமே.*

மாணிக்கம் பதித்த கிரீடம் முடியிலும் சிலம்பு பாதத்திலும் அணிபவள் பராசத்தி, அவ்வாறு அணிபவளன்றி அருள் வழங்குவார் யாரும் இல்லையாம், புலன்வழிப் போகாது அடங்கியவர் நெஞ்சில் அருள் மயமாய் எழுந்தருளி, வணங்குபவர்க்குப் பரகதியாவாள்.

*1378.* *பரந்திருந் துள்ளே அறுபது சத்தி*
*கரந்தன கன்னிகள் அப்படி சூழ*
*மலர்ந்திரு கையின் மலரவை ஏந்தச்*
*சிறந்தவர் ஏத்துஞ் சிறீம்தன மாமே.*

சக்கரத்தைச் சூழப் பரந்து உள் முகமாக நின்று அறுபது சத்திகளும், கன்னியர் எண்மரும் அவ்வாறு சூழ நிற்க, மலர்ந்த இருகைகளிலும் மலர்களைத் தாங்கி, சிறந்தவர் ஏத்தும் ஸ்ரீம் பீசத்துக்குரிய செல்வமாக விளங்குவாள்.

*1379.* *தனமது வாகிய தையலை நோக்கி*
*மனமது வோடி மரிக்கிலோ ராண்டிற்*
*கனமவை யற்றுக் கருதிய நெஞ்சுந்*
*தினகர னாரிட செய்திய தாமே.*

இவ்வாறு செல்வமாகிய சத்தியைத் தியானித்து, மனம் வெளியே செல்வதை விட்டு அடங்கினால், ஓராண்டில் பற்றுகளான கனம் நீங்கித் தியானிக்கின்ற மனம், சிவ சூரியனிடம் பொருந்தும் செயலுடையதாம்.

*1380.* *ஆகின்ற மூலத் தெழுந்த முழுமலர்*
*போகின்ற பேரொளி யாய மலரதாய்ப்*
*போகின்ற பூரண மாக நிறைந்தபின்*
*சேர்கின்ற செந்தழல் மண்டல மானதே.*

ஆகின்ற மூலாதாரத்தெழுந்த முழு மலராகிய நாலிழ்த் தாமரையிலிருந்து, மேலே பேரொளிப் பிழம்பாய சகஸ்ரதளத்தில், முற்கூறிய சத்தி வியாபிக்கின்ற பூரணப்பொருளாய் விளங்கிய பின், மூலம் முதல் துவாதசாந்தம் வரை ஒளி மண்டலமாயிற்று.

*1381.* *ஆகின்ற மண்டலத் துள்ளே அமர்ந்தவள்*
*ஆகின்ற ஐம்பத் தறுவகை யானவள்*
*ஆகின்ற ஐம்பத் தறுசத்தி நேர்தரு*
*ஆகின்ற ஐம்பத் தறுவகை சூழவே.*

இவ்வண்ணமாகிய சோதி மண்டலத்துள் விரும்பி எழுந்தருளி இருப்பவள், ஐம்பத்தொரு மாதுருகா அட்சரமாகவும் பிரணவ பஞ்சாக்கரமாகவும் அமைந்தவள், அவளே ஐம்பத்தாறு சத்திகளாய் நின்று, ஐம்பத்தாறு விதமாய் இயக்குவள்.

*1382.* *சூழ்ந்தெழு சோதி சுடர்முடி பாதமாய்*
*ஆங்கணி முத்தம் அழகிய மேனியுந்*
*தாங்கிய கையவை தார்கிளி ஞானமாய்*
*ஏந்து கரங்கள் எடுத்தமர் பாசமே.*

சுடர் போன்ற முடியும் பாதமும் எங்கும் பரந்தெழுகின்ற சோதியாய், அவ்விடத்து முத்துபோன்ற வெண்ணிற மேனியை உடையவளாய், தாங்கி கைகளில் மஞ்சள் வரையையுடைய பைங்கிளியும் ஞான முத்திரையுமாக, மேல் ஏந்திய கைகளில் பாசமும் அங்குசமும் கொண்டு விளங்குவாள்.

*1383.* *பாசம தாகிய வேரை யறுத்திட்டு*
*நேசம தாக நினைத்திரு மும்முளே*
*நாசம தெல்லாம் நடந்திடும் ஐயாண்டிற்*
*காசினி மேலமர் கண்ணுத லாகுமே.*

முன் மந்திரத்தில் கண்டபடி நாதமாகிய ஞான முத்திரையை உணர்ந்து பாசமாகிய வேரை அறுத்து, அன்போடு மனத்தில் தியானித்திருங்கள், ஐந்து ஆண்டு சாதனையில் கேடு பயப்பனவெல்லாம் அகன்றுவிடும், பின்னர் பூவுலகுக்குமேல் அமர்ந்துள்ள சிவமாகலாம்.

*1384.* *கண்ணுடை நாயகி தன்னரு ளாம்வழி*
*பண்ணுறு நாதம் பகையற நின்றிடில்*
*விண்ணமர் சோதி விளங்க ஹிரீங்கார*
*மண்ணுடை நாயகி மண்டல மாகுமே.*

பராசத்தியின் அருளைப் பெறும் வழியாகிய, தடையற்ற நாத தரிசனம் தன்னுள் அமையுமாகில், ஆகாய மண்டலத்திலுள்ள சோதி விளங்க, ஹிரீங்காரப் பீசத்துக்குரிய சத்தி மண்டலம் அமையும்.

*1385.* *மண்டலத் துள்ளே மலர்ந்தெழு தீபத்தைக்*
*கண்டகத் துள்ளே கருதி யிருந்திடும்*
*விண்டகத் துள்ளே விளங்கி வருதலால்*
*தண்டகத் துள்ளவை தாங்கலு மாமே.*

ஹிரீங்கார மண்டலத்துள்ளே எழுகின்ற சோதியை, தரிசித்து மனத்தினுள்ளே எண்ணியிருங்கள், அது கீழிருந்து மேலே பிளந்து கொண்டு உள்ளே எழுவதால், வீணாத்தண்டில் பொருந்திய யாவற்றையும் தாங்கலுமாகும்.

*1386.* *தாங்கிய நாபித் தடமலர் மண்டலத்*
*தோங்கி எழுங்கலைக் குள்ளுணர் வானவள்*
*ஏங்க வரும்பிறப் பெண்ணி யறுத்திட*
*வாங்கிய நாதம் வலியுட ளாகுமே.*

தாங்கிய விசாலமான உந்திக் கமலத்து, ஓங்கி மேலே எழுகின்ற பிரணவத்துக்கு உணர்வாகவுள்ளவள், வருந்த வரும் பிறவியை நினைத்து நீக்கிவிட, அடங்கியிருந்த நாதம் வலிமையுடன் மேலோங்கி விளங்கும்.

*1387.* *நாவுக்கு நாயகி நன்மணி பூணாரம்*
*பூவுக்கு நாயகி பொன்முடி யாடையாம்*
*பாவுக்கு நாயகி பாலொத்த வண்ணத்தள்*
*ஆவுக்கு நாயகி அங்கமர்ந் தானே.*

நல்ல மணிகளை ஆபரணமாகவுடைய வாகீசுவரியும், பொன் முடியும் பொன்னாடையும் தரித்த இலக்குமியும், கவிதை பாடும் ஆற்றலை அளிக்கும் வெண்ணிற ஒளியில் விளங்கும் சரஸ்வதியும், ஆன்மாக்களின் நாயகியுமான மனோன்மணி சகஸ்ரதளத்தில் எழுந்தளியிருந்தாள்.

*1388.* *அன்றிரு கையில் அளந்த பொருள்முறை*
*இன்றிரு கையில் எடுத்தவெண் குண்டிகை*
*மன்றது காணும் வழியது வாகவே*
*கண்டங் கிருந்தவர் காரணி காணுமே.*

சத்தியை வழிபடுமுன் இடைகலை பிங்கலையால் வெளியே சென்று பொருளை அளந்த முறையாக, சத்தியை வழிபட்டபின் இவ்விரண்டுமே வெளிச்செல்லாது இரண்டு வெண்ணிற அமுத கலசங்களாக, சிற்றம்பலத்தைத் தரிசிக்க வழியாவதை, அறிந்து அங்கு இறந்தவர் தத்துவங்களை இயக்கிக் கொண்டிருக்கும் காரணியைக் காண்பவர் ஆவர்.

*1389.* *காரணி சத்திகள் ஐம்பத் திரண்டெனக்*
*காரணி கன்னிகள் ஐம்பத் திருவராய்க்*
*காரணி சக்கரத் துள்ளே கரந்தெங்குங்*
*காரணி தன்னரு ளாகிநின் றாளே.*

காரணிகளாகிய அட்சர சத்திகள் ஐம்பத்திரண்டென, காரணியாக அவற்றை இயக்கும் கன்னிகள் ஐம்பத்து இருவராக, காரணி விளங்கும் சிற்றம்பலத்தில் வெளிப்பட்டும் மற்றைய தத்துவங்களில் மறைந்தும் இருந்து, காரணி தன் அருளாலே சீவர்களுக்கு வெளிப்பட்டு நின்றாளே.

*1390.* *நின்றஇச் சத்தி நிலைபெற நின்றிடிற்*
*கண்டஇவ் வன்னி கலந்திடும் ஓராண்டிற்*
*கொண்ட விரதநீர் குன்றாமல் நின்றிடின்*
*மன்றினி லாடு மணியது காணுமே.*

சர்வ காரணியாக விளங்கும் இச்சத்தியை சகஸ்ரதளத்தில் நிலை பெறக் கண்டு, ஓராண்டுச் சாதனையில் ஒளி மயமான பராசத்தி உன்னை விட்டு அகலாமல் இருப்பாள், நீங்கள் எடுத்துக் கொண்ட விரதம் குறையாமல் இருப்பின், பிறகு பரமாகாயத்தில் விளங்கும் சிவ சூரியனைக் காணலாம்.

*1391.* *கண்ட இச் சத்தி இருதய பங்கயங்*
*கொண்ட இத் தத்துவ நாயகி யானவள்*
*பண்டையவ் வாயுப் பகையை யறுத்திட*
*இன்றென் மனத்துள் இனிதிருந் தானே.*

சீவர்களின் சித்தம் உலகப் பொருளோடு இருந்த போது இச்சத்தி இருதய கமலவாசினியாக இருந்தாள், முன் மந்திரத்தில் கூறியவாறு உலகப்பொருளோடு இல்லாது உலகக் காரணமான விந்து நாத சித்தமான போது, சீவனையும் உடலையும் பிறவியிலே பொருந்தியுள்ள வாயுவின் கட்டை அகற்றி, இன்று என் மனத்துள் இன்பம் பெருக்குபவளாக அமைந்தனள்.

*1392.* *இருந்தவிச் சத்தி இருநாலு கையிற்*
*பரந்தஇப் பூங்கிளி பாச மழுவாள்*
*கரந்திடு கேடகம் வில்லம்பு கொண்டங்*
*குரந்தங் கிருந்தவன் கூத்துகத் தானே.*

இந்தச் சத்தி தனது எட்டுக் கரங்களிலும், விரிந்த பூ, கிளி, பாசம், மழு, வாள், தடுக்கும் தன்மையுள்ள கேடயம், வில், அம்பு ஆகியவைகளைத் தாங்கி, ஆரவாரத்துடன் இருந்து கூத்தையும் விரும்பி நடித்தாள்.

*1393.* *உகந்தனன் பொன்முடி முத்தார மாகப்*
*பரந்த பவளமும் பட்டாடை சாத்தி*
*மலர்ந்தெழு கொங்கை மணிக்கச் சணிந்து*
*தழைந்தங் கிருந்தவள் தான்பச்சை யாமே.*

பொன்முடியை விரும்பி அணிந்தவள், முத்து மாலையும் பவள மாலையும் பரந்த பட்டு ஆடையும் அணிந்து, பரந்து எழுகின்ற கொங்கையின் மீது இரத்தினக் கச்சை அணிந்து, திகழ்ந்தங்கு இருந்தவள் பச்சை நிறமுடையவளாமே.

*1394.* *பச்சை இவளுக்குப் பாங்கிமார் ஆறெட்டு*
*கொச்சையார் எண்மர்கள் கூடி வருதலாற்*
*கச்சணி கொங்கைகள் கையிரு காப்பதாய்*
*எச்ச இடைச்சி இனிதிருந் தானே.*

பச்சை நிறமுடைய இவளுக்குச் சத்திகள் நாற்பத்தெட்டும், மழலை மொழி பேசும் தோழியர் எண்மரும் எப்போதும் கூடி வருதலால், கச்சு அணிந்த கொங்கைகளோடு, இரு புறமும் காவலை உடையவளாய், இளைத்த இடையினை உடையாள் இனிது வீற்றிருந்தாள்.

*1395.* *தாவதி னுள்ளே தாங்கிய சோதியைக்*
*காலது வாகக் கலந்துகொள் என்று*
*மாலது வாக வழிபாடு செய்துநீ*
*பாலது போலப் பரந்தெழு விண்ணிலே.*

மூலத்திலே தாங்கிய சோதி வடிவாகிய சத்தியை, சுழுமுனை மார்க்கமாகக் கலந்துகொள் என்று, விருப்பம் அவ்வாறேயாக மூலவாயுவினை மேலே செலுத்தி, நீ காதனைக் கூடச் செல்லும் காதலியைப் போல ஆகாய வீதிக்குச் செல்க.

*1396.* *விண்ணமர் நாபி இருதய மாங்கிடைக்*
*கண்ணமர் கூபம் கலந்து வருதலாற்*
*பண்ணமர்ந் தாதித்த மண்டல மானது*
*தண்ணமர் கூபந் தழைத்தது காணுமே.*

நாபிக்கும் இருதயத்துக்கும் இடையேயுள்ள ஆகாயத்தில் விளங்கும் சூரியன், கண்ணில் விளங்கும் சந்திரனோடு சேர்வதால், நாத சத்தி விளங்கும் ஞான சூரியனாயிற்று, அதுவே சந்திர மண்டலத்தின் விரிவு என்பதைத் தெரிந்துகொள்க.

*1397.* *கூபத்துச் சத்தி குளிர்முகம் பத்துள*
*தாபத்துச் சத்தி தயங்கி வருதலாற்*
*ஆபத்துக் கைகள் அடைந்தன நாலைந்து*
*பாசம் அறுக்கப் பரந்தன சூலமே.*

கண்ணுக்கு மேல் விளங்கும் சத்திக்குப் பத்துத் திசைகளும் பத்து முகங்களாகும், தாபத்தை உண்டாக்கும் சூரியன் தனது நிலையை விட்டுச் சந்திர மண்டலத்தில் மெத்தென அடங்கி வருதலால், ஆபத்தைச் செய்யும் நாடிகள் பத்தும் கீழும் மேலும் செல்வதை விட்டு அடங்கின, இவ்வாறு சீவர்களுடைய பாசத்தை அறுக்கச் சூலத்தை உபயோகித்தனள்.

*1398.* *சூலந்தண் டொள்வாள் கடர்பாறை ஞானமாய்*
*வேலம்பு தமருக மாகிளி விற்கொண்டு*
*காலம்பூப் பாசம் மழுகத்தி கைக்கொண்டு*
*கோலஞ்சேர் சங்கு குவிந்தகை எண்ணதே.*

சூலம் தண்டு, ஒளி பொருந்திய வாள், ஒளி தரவல்ல ஞான வடிவாகிய வேல், அம்பு, தமருகம், பெருமையுள்ள கிளி, வில் தாங்கி, காலம், பூ,பாசம், மழு, கத்தி ஆகியவைகளைக் கைகளில் ஏந்தி, அழகிய சங்கு, அபயம் வரதம் விளங்கும் கைகளை எண்ணுவாயாக.

*1399.* ***எண்ணமர் சத்திகள் நாற்பத்து நாலுடன்***
***எண்ணமர் கன்னிகள் நாற்பத்து நால்வராம்***
***எண்ணிய பூவித ழுள்ளே யிருந்தவள்***
***எண்ணிய எண்ணங் கடந்தநின் றாளே.***

உபாசகன் எண்ணத்தில் விரும்பியமாகின்ற சத்திகள் நாற்பத்து நால்வருடன், எண்ணத்தில் அமருகின்ற தோழியர் நாற்பத்து நால்வராம், எண்ணம் உருப்பெறும் சகஸ்ரதளத்தில் இருந்தவள், உலக எண்ணங்களைக் கடந்தபோது அவள் விளங்குபவளாக நின்றாள்.

*1400.* ***கடந்தவள் பொன்முடி மாணிக்கத் தோடு***
***தொடர்ந்தணி முத்து பவளங்கச் சாகப்***
***படர்ந்தல்குத் பட்டாடை பாதச் சிலம்பு***
***மடந்தை சிறியவள் வந்துநின் றாளே.***

அவ்வண்ணம் கடந்து நின்றவள் பொன்முடியோடு இரத்தினம், முத்து, பவளம் ஆகியவை விரவச் செய்யப்பெற்ற கச்சினை அணிந்து, பரவிய இடுப்பில் பட்டாடை புனைந்து பாதச் சிலம்பை அணிந்து, பாலை வடிவில் அங்கு எழுந்தருளினாள்.

*1401.* ***நின்றஇச் சத்தி நிரந்தர மாகவே***
***உண்டிடு மேரு வணிமாதி தானாகிப்***
***பண்டைய வானின் பகட்டை யறுத்திட***
***வொன்றிய தீபம் உணர்ந்தார்க்குண் டாமே.***

இவ்வாறு நின்ற சத்தி இடையீடின்றியே, காணப்படும் மேருவாய் அணிமாதி சத்தியாகி, பழைய சாத்திர அறிவு முதலியவற்றை அகற்றிவிட, பொருந்திய சோதியை உணர்ந்தார்க்கு உண்மை அறிவு உண்டாகும்.

*1402.* ***உண்டோர் அதோமுகம் உத்தம மானது***
***கண்டஇச் சத்தி சதாசிவ நாயகி***
***கொண்ட முகமைந்து கூறுங் கரங்களும்***
***ஒன்றிரண் டாகவே மூன்றுநா லானதே.***

சிறந்ததான கீழ் நோக்கிய சகஸ்ரதளம் ஒன்று உண்டு, அங்குக் காணப்படுபவளே சதாசிவ நாயகியாகிய மனோன்மணி,அவள் சதாசிவரைப் போல முகம் ஐந்தும், கரங்கள் (1+2+3+4=10) பத்தும் உடையவள்.

*1403.* ***நன்மணி சூலம் கபாலங் கிளியுடன்***
***பன்மணி நாகம் மழுகத்தி பந்தாகுங்***
***கண்மணி தாமரை கையில் தமருகம்***
***பொன்மணி பூணாரம் பூசனை யானதே.***

நல்ல மணி, சூலம், கபாலம், கிளியாகியவற்றோடு, பன் மணி நாகம், முழு, பல மாணிக்கங்களையுடைய பாம்பு, மழு, கத்தி, பந்து ஆகியவையும் சத்தியின் கரங்களில் உண்டு, மாணிக்கம் போன்ற தாமரை, இவைகளுடன் பொன்னாலும் மணியாலும் அலங்கரிக்கப்பட்டவள்.

*1404.* ***பூசனைச் சத்திகள் எண்ணைவர் சூழவே***
***நேசவள் கன்னிகள் நாற்பத்து நேரதாய்க்***
***காசினிச் சக்கரத் துள்ளே கலந்தவள்***
***மாசடை யாமல் மகிழ்ந்திருந் தார்களே.***

வழிபடுகின்ற சத்திகள் நாற்பதின்மர் சூழ, நேசத்தையுடைய பராசத்தி நாற்பது கன்னியர்க்கு நேராக, உடலில் உள்ள சகஸ்ரதளத்தில் கலந்தவள், குற்றங்கள் ஒன்றும் சாராதபடி மகிழ்ந்து எழுந்தருளியிருந்தார்கள்.

*1405.* ***தாரத்தி னுள்ளே தங்கிய சோதியைப்***
***பாரத்தி னுள்ளே பரந்துள் எழுந்திட***
***வேரது வொன்றிநின் றெண்ணு மனோமயங்***
***காரது போலக் கலந்தெழு மண்ணிலே.***

பிரணவத்தினுள்ளே விளங்கிய சோதியை, சுமையாகிய உடலிலிருந்து உடலைக் கடந்து எழுந்திட, அதுவே தனக்கு ஆதாரம் என்று உணர்ந்து அதை எண்ணி மனோலயம் பெறுவார்க்கு, மண்ணினின்றும் நீரை முகந்தெழும் மேகம்போல் பராசத்தி சிரசில் வெளிப்படுவாள்.

*1406.* *மண்ணில் எழுந்த அகார உகாரங்கள்*
*விண்ணில் எழுந்து சிவாய நமவென்று*
*கண்ணில் எழுந்தது காண்பரி தன்றுகொல்*
*கண்ணில் எழுந்தது காட்சி தரஎன்றே.*

சுவாதிட்டானச் சக்கரத்தில் நிலை கொண்டிருந்த அகர உகரங்கள், சகஸ்ரதளத்தை அடைந்து சிவாயநம என்று, அகக் கண்ணுக்குப் புலனாகும்படி விந்து நாதங்களாக வெளிப்பட்டன, அது காண்பதற்கு அருமையானது அன்று, அந்நாதம் எழுந்தது சாதகனுக்குக் காட்சி கொடுத்துத் தன் திருவடியில் வைத்துக் கொள்ளவேயாம்.

*1407.* *என்றங் கிருத்த அமுத கலையிடைச்*
*சென்றங் கிருத்த அமுத பயோதரி*
*கண்டங் கரமிரு வெள்ளிபொன் மண்ணடை*
*கொண்டங் கிருந்தது வண்ணம் அமுதே.*

முன்னர்க் கூறியவாறு மேலே சந்திர கலையிடை, விளங்கியிருந்த அமுதத்தை ஏந்திய தனத்தையுடைய பராசத்தி, அக்கினிக் கண்டத்தில் இடைபிங்கலையால் சுவாதிட்டானத்தில் தொழிற்படும் சுக்கில சுரோணிதத்தை, கொண்டு அமுத மயமாக மேலே இருந்தனள்.

*1408.* *அமுதம தாக அழகிய மேனி*
*படிகம தாகப் பரந்தெழு முள்ளே*
*குமுதம தாகக் குளிர்ந்தெழு முத்துக்*
*கெமுதம தாகிய கேடிலி தானே.*

நீலோற்பலமும் முத்தும் கலந்த குளிர்ச்சி பொருந்திய ஒளியில், ஆனந்த மயமாக விளங்கும் அழிவில்லாத பரமேசுவரி, அமுதம் போன்ற அழகிய மேனியோடு, வெண்ணிற ஒளியாக வெளிப்பட்டருளுவாள்.

*1409.* *கேடிலி சத்திகள் முப்பத் தறுவரும்*
*நாடிலி கன்னிகள் நாலொன் பதின்மரும்*
*பூவிலி பூவிதழ் உள்ளே யிருந்திவர்*
*நாளிலி தன்னை நணுகிநின் றார்களே.*

கேடில்லாத முப்பத்தாற சத்திகளும், நாடுதற்கு அருமையான முப்பத்தாறு தோழியர்களும், சக்கரத்தை இல்லமாகக் கொண்டவர், சக்கர இதழ்களில் கூடி இருந்து இவர்கள், காலவரையறையைக் கடந்து நின்ற அம்மையைச் சூழ நின்றார்களே.

*1410.* *நின்றது புந்தி நிறைந்திடும் வன்னியுங்*
*கண்டது சோதி கருத்துள் இருந்திடக்*
*கொண்டது வோராண்டு கூடி வருகைக்கு*
*விண்டவௌ காகரம் விளங்கின அன்றே.*

புத்தி தத்துவத்தில் சிவம் நாதமாக நிறைந்து நின்றது. அதன் ஒளியாகிய சோதி மனத்துள் நீங்காது இருக்கக் கண்டதாம், ஒரு வருட சாதனை கூடி வரும்போது, முன்னர்க் கூறிய ஔகாரம் விளங்கின.

*1411.* *விளங்கிடு வானிடை நின்றவை யெல்லாம்*
*வணங்கிடு மண்டலம் மன்னுயி ராக*
*நலங்கினர் நன்மைகள் நாரண னொத்துச்*
*கணங்கிடை நின்றவை சொல்லது மாமே.*

விளங்குகின்ற வானத்தில் நிலைபெற்றுள்ள அண்டங்களில் வாழும் உயிர்கள் எல்லாம், மண்ணுலகில் வாழும் உயிர்களைப் போலச் சாதகரை வந்து வணங்கும், நாராயணனை ஒத்துப் பெறும் இன்பங்கள், துன்பம் தரும் நோய் நிறைந்த இங்கு இருந்த சொல்ல முடியுமா? முடியாது.

*1412.* *ஆமே அதோமுக மேலே அமுதமாய்த்*
*தாமே யுகாரந் தழைந்தெழுஞ் சோமனும்*
*காமேல் வருகின்ற கற்பக மானது*
*பூமேல் வருகியாற பொற்கொடி யானதே.*

மூலாதாரத்தில் கீழ் நோக்கிய முகமாய் இருந்த குண்டலினியே, உகாரத்தைப் பொருந்தி இடை நாடியில் விளங்கி எழுகின்ற ஒளியாய், சகஸ்ரதளத்தில் நிலைபெற்று நினைவை எல்லாம் பூர்த்தி செய்யும் கற்பகத்தரு ஆயினாள், அவளேதான் சகல சித்திகளை அளிக்கும் மகாலட்சுமியும் ஆயினாள்.

*1413.* *பொற்கொடி யாளுடைப் பூசனை செய்திட*
*அக்கினி யாகிய ஆங்கார ம் போயிடும்*
*மற்கட மாகிய மண்டலத் தன்னுளே*
*பிற்கொடி யாகிய பேதையைக் காணுமே.*

பொற்கொடி போன்ற பராசத்தியை வழிபட்டால், அச்செருக்கினைத் தரும் அகங்காரம் போய்விடும், நிலைபெற்ற பெருவெளியாகிய பரமாகாயத்தில், பின்னிய கொடி போல் விளங்கும் பேதையைக் காணலாம்.

*1414.* *பேதை யிவளுக்குப் பெண்மை அழகாகும்*
*தாதை யிவளுக்குத் தாணுவுமாய் நிற்கும்*
*மாதை யவளுக்கு மண்ணுந் திலகமாய்*
*கோதையர் சூழக் குவிந்திடங் காணுமே.*

பேதையாகிய பராசத்திக்கும் எல்லா உயிர்களைப் பேணும் பெண்மையே அழகாகும், இவ்வம்மைக்குச் சிவம் தந்தையாகும், மாதரசியாகிய இவளுக்கு மண்ணுலகம் சிறிய திலகமாய், பல சத்திகள் சூழ மேலே குவிந்த இடத்தில் விளங்குவாள்.

*1415.* *குவிந்தனர் சத்திகள் முப்பத் திருவர்*
*நடந்தனர் கன்னிகள் நாலெண்பர் சூழப்*
*பரந்தித ழாகிய மங்கலத் துள்ளே*
*இருந்தனன் காணும் இடம்பல கொண்டே.*

சத்திகள் முப்பத்திருவர் இருந்தனர், கன்னியாகிய முப்பத்திருவரும் சூழ, பரந்த இதழ்களையுடைய சகஸ்ரதளத்தில், காணும் பல இடங்களையும் தனக்கு இடமாக்கிக் கொண்டு எழுந்தருளியிருந்தாள்.

*1416.* *கொண்டங் கிருந்தனர் கூத்தன் ஒளியினைக்*
*கண்டங் கிருந்தனர் காரணத் துள்ளது*
*பண்டை மறைகள் பரந்தெங்குந் தேடுமால்*
*இன்றென் மனத்துளே இல்லடைத் தாளுமே.*

நவாக்கரி சக்கரத்திலுள்ள சத்திகள், கூத்தப் பெருமான் ஒளியினைக் கண்டு ஊர்த்துவ சகஸ்ரதளத்தில் இருந்தனர், கூத்தப் பெருமானும் இச்சத்திகளும் பிரபஞ்ச காரணமானவர்கள், இவர்களைப் பழமையான வேதம் அறிந்துகொள்ளத் தேடுமாம், அத்தகைய பெருமை பெற்ற சிவசத்தி என்னுடலில் பொருந்தி மனத்தில் பொருந்தி என்னை ஆட்கொண்டது.

*1417.* *இல்லடைந் தானுக்கும் இல்லாத தொன்றில்லை*
*இல்லடைந் தானுக் கிரப்பது தானில்லை*
*இல்லடைந் தானுக் கிமையவர் தாமொவ்வார்*
*இல்லடைந் தானுக்கு இல்லாதில் லானையே.*

சிவசத்திகள் தாமே இல்லாக அடைந்து ஆளப்பெற்றார்க்கு இல்லாததொன்றும் இல்லை, இத்தகையோர் பிறரிடம் சென்று இரப்பதில்லை, அவர்களுக்குத் தேவர்களும் ஒப்பாக மாட்டார், சிவசத்தி இவர்களது ஆன்மாவையே இடமாகக் கொண்டமையால் இவர்கள் இல்லாத இடம் என்று ஒன்றும் இல்லை.

*1418.* *ஆனை மயக்கும் அறுபத்து நாற்றறி*
*ஆனை யிருக்கும் அறுபத்து நாலொளி*
*ஆனை யிருக்கும் அறுபத்து நாலறை*
*ஆளையுங் கோடும் அறுபத்து நாலிலே.*

தத்துவங்களுக்கு அரசனாகிய ஆன்மா அறுபத்து நான்கு தறிகளால் கட்டப்பட்டுள்ளது, ஆன்மாவாகிய பிரணவம் அறுபத்து நான்கு ஒளிக்கிரணங்களால் ஆகியது, ஆன்மா அறுபத்து நான்கு கலைகளில் விளங்கியுள்ளது, பிரணவத்திலே விந்து நாதமாகிய சீவனும் சிவனும் உள்ளன.

# ஐந்தாம் மந்திரம்

## 1. சுத்த சைவம்

சுத்த சைவமாவது, சடங்குகளில் நில்லாது தலைவனையும் தன்னையும் தளையையும் அறிந்து, தளையின் நீங்கித் தலைவன் திருவடிச் சார்பு பெறுதல், சைவம் சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்த சைவம் என நால்வகையாகும்.

*1419.* *ஊரும் உலகமும் ஒக்கப் படைக்கின்ற*
*பேரறி வாளன் பெருமை குறித்திடின்*
*மேருவும் மூவு காளி யிலங்கெழுந்*
*தாரணி நால்வகைச் சைவமு மாமே.*

ஊரையும் ஊர் அடங்கிய உலகத்தையும் ஒருசேரப் படைக்கின்ற, பேரறிவாளனாகிய இறைவனது பெருமையை அளவிட்டுக் கூறப்புகின், மேரு மலையும், மூவுலகங்களையும் ஆளுகின்ற இறைவனிடமிருந்து தோன்றிய பூமியும், நால்வகைச் சைவமும் அகிய இவற்றின் பெருமைக்கு ஒப்பாகும்.

*1420.* *சத்தும் அசத்துஞ் சதசத்துந் தான்கண்டு*
*சித்தும் அசித்துஞ் சேர்வுறா மேநீத்தும்*
*சுத்தம் அசுத்தமுந் தோய்வுறா மேநின்று*
*நித்தம் பரஞ்சுத்த சைவர்க்கு நேயமே.*

அழிவில்லாததும் அழிவுடையதும் இரு தன்மையும் கலந்ததும் ஆகியவை எவை என்பதை அறிந்து, அறிவும் அறியாமையும் சேராமல் விட்டும், சுத்த மாயை அசுத்த மாயை ஆகிய இரண்டிலும் பொருந்தாமல் நின்று அழியாப் பொருளான புரமே பார்த்திருப்பது சுத்த சைவர்க்கு ஆகும்.

*1421.* *கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோகம்*
*முற்பத ஞான முறைமுறை நண்ணியே*
*சொற்பத மேவித் துரிசற்று மேலான*
*தற்பரங் கண்டுள்ளோர் சைவசித் தாந்தரே.*

கற்கத் தக்கனவற்றைக் கற்று, பதினாறு கலைகளையுடைய சந்திர கலைகளை அறிந்து சிவயோகம் பயின்று, அதில் முன்னாக விளங்கும் அகர உகர மகர விந்து நாதங்களின் அறிவை முறையாக அறிந்து, பிரணவ பதம் உணர்த்தும் சாந்தியதீதை கலையைப் பொருந்தி உயிரின் மாயாசார்பான குற்றத்தை விட்டு, மேலான சிவத்தைக் கண்டுறைபவர் சைவ சித்தாந்தர் ஆவார்.

*1422.* *வேதாந்தஞ் சுத்தம் விளங்கிய சித்தாந்த*
*நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற காட்சியர்*
*பூதாந்த போதாந்த மாகப் புனஞ்செய்ய*
*நாதாந்த பூரணர் ஞானதே யத்தரே.*

வேதாந்தமாவது சுத்த சைவ சித்தாந்தமாம், இந்நெறி நிற்போரே நாத முடிவாகிய சிவத்தைத் தரிசித்த சலனமற்றவராவர், தத்துவ முடிவை ஞான மயமாகப் பண்படுத்த, நாத முடிவில் நிறைவுற்று விளங்கும் சிவம் அறியப்படு பொருளாவர்.

## 2. அசுத்த சைவம்

அசுத்த சைவமாவது, திருவேடந்தரித்துச் சரியை கிரியையாகிய இரு நெறியின் நிற்பார் நிலையைக் கூறுவது.

*1423.* *இணையார் திருவடி ஏத்துஞ் சீரங்கத்*
*திணையார் இணைக்குழை ஈரணை முத்திரை*
*குணமா ரிணைக்கண்ட மாலையுங் குன்றா*
*தணைவாஞ் சரியை கிரியையி னார்க்கே.*

இறைவனது இரு திருவடிகளையும் புகழ்பவரது பெருமையுடைய உடம்பில், இரண்டாகப் பொருந்திய இரு காதணிகளும், திருநீறும் கலைமாலையுமாகிய இரு அடையாளங்களும், நிறம் பொருந்திய இரண்டு கண்டமாலைகளும் ஆகியவை, சரியை கிரியை வழி நிற்போர்க்குக் குறையாது அணியப்படுவனவாம்.

*1424.* *காதுப்பொ னார்ந்த கடுக்கன் இரண்டுசேர்த்*
*தோதுந் திருமேனி யுட்கட் டிரண்டுடன்*
*சோதனை செய்து உபதேச மார்க்கராய்*
*ஓதி யிருப்பார் ஒருசைவ ராகுமே.*

காதினில் பொன்னால் செய்யப்பட்ட இரண்டு சுடுக்கன்களை அணிந்துகொண்டு, சொல்லப்பட்ட இரண்டு கடுக்கன்களை அணிந்துகொண்டு, சொல்லப்பட்ட சிவ வேடத்தில் இடையில் ஓர் அடையும் அதன்மேல் ஓர் அடையும் உடையராய், அத்துவா சேதனை செய்து உபதேசம் பெற்றவராய், சைவாகமங்களைப் பாடம் சொல்லிக்கொண்டிருப்பவர் ஒருவகைச் சைவராவர்.

*1425.* *கண்டங்கள் ஒன்பதுங் கண்டவர் கண்டனர்*
*கண்டங்கள் ஒன்பதுங் கண்டாய் அரும்பொருள்*
*கண்டங்கள் ஒன்பதுங் கண்டவர் கண்டமாய்*
*கண்டங்கள் கண்டோர் கடுஞ்சுத்த சைவரே.*

பிரணவமானது பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், அக்கினி, தாரகை என்று உடலில் விளங்குகிறது என்பதை அறிந்தவர் அறிந்தவராவார், இவ்வாறு அறிந்தவர் பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன், விந்து, நாதம், சத்தி, சிவன் என்ற ஒன்பது வகையாக விளங்கும் அரும்பொருளான சிவத்தை அறிவர், இவ்விதமாக ஒன்பது பேதமாக விளங்கும் சிவத்தைத் தம்முள் கண்டவர் பகுப்புடைய இப்பிரபஞ்சமெல்லாம் அறிந்தோராவர்.

*1426.* *ஞானி புவியெழு நன்னூ வனைத்துடன்*
*மோன திசையும் முழுஎண்ணெண் சித்தியும்*
*ஏனை நிலமும் எழுதா மறையீறுங்*
*கோளொடு தன்னையுங் காணுங் குணத்தனே.*

ஞானியராவார் பூமியில் தோன்றுகின்ற ஞான நூல்களுடன், மௌன நிலையையும் முழுமையாக எண்ணப்பட்ட அட்டமா சித்திகளையும், பிற உலகங்களின் அறிவையும் உபநிடத அறிவையும், சிவத்தையும் தன்னையும் உணர்ந்து நிற்கும் ஆற்றலுடன் விளங்குவர்.

## 3. மார்க்க சைவம்

மார்க்க சைவமாவது, சைவ மார்க்கத்தில் நின்று, வேதாந்த சித்தாந்த நுண்பொருளை உணர்ந்து, ஆன்ம போதம் கெட்டுச் சிவபோதத்தில் திளைத்திருப்பவர் நிலையை விளக்குவது.

*1427.* *பொன்னாற் சிவசாத னம்பூதி சாதனம்*
*நன்மார்க்கம் சாதனம் மாஞான சாதனந்*
*துன்மார்க்க சாதனந் தோன்றாத சாதனஞ்*
*சன்மார்க்க சாதன மாஞ்சுத்த சைவர்க்கே.*

பொன்னால் செய்யப்பட்ட உருத்திராக்கமான சிவசாதனமும் திருநீற்றுப் பூச்சாகிய சாதனமும், சிறப்புமிக்க ஐந்தெழுத்து ஓதுதலாகிய ஞான சாதனமும், துன்மார்க்கரோடு சேராமல் நல்லடியரோடு சேர்ந்திருத்தலாகிய சாதனமும், சுத்த சைவநெறி பற்றியவர்க்குச் சன்மார்க்க ஒழுக்கமாகும்.

*1428.* *கேடறு ஞானி கிளர்ஞான பூபதி*
*பாடறு வேதாந்த சித்தாந்த பாகத்தின்*
*ஊடுறு ஞானோ தயனுண்மை முத்தியோன்*
*பாடுறு சுத்தசை வப்பத்த நித்தனே.*

குற்றம் நீங்கிய ஞானி ஒளிவிடுகின்ற ஞானத்துக்கு அரசாவான், துன்பமில்லா வேதாந்த சித்தாந்தங்களிடையே தோன்றும் ஞானமுடையோன், உண்மையான முத்திப் பேற்றினை உணர்ந்தவன், மேன்மை பொருந்திய சுத்த சைவத்திலே பத்தியுடையவன், அழிவில்லாதவனான்.

*1429.* *ஆகமம் ஒன்பா னதிலான நாலேழு*
*மோகமி னாலேழு முப்பேத முற்றுடன்*
*வேகமில் வேதாந்த சித்தாந்த மெய்மையொன்*
*றாக முடிந்த வருஞ்சுத்த சைவமே.*

ஆகமங்கள் காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், யாமளம், காலோத்தரம், சுப்பிரபேதம், இவ்வொன்பது ஆகமங்களே விரிந்து இருபத்தெட்டு ஆகமங்களாயின, அவை சைவம், பரபரப்பற்ற வேதாந்த முடிவாம் சித்தாந்த உண்மை, சுத்த சைவர்க்கு ஒன்றாக முடிந்ததாம்.

*1430.* *சுத்தம் அகத்தந் துரியங்கள் ஓரேழுஞ்*
*சத்தும் அசத்துந் தணந்த பராபரை*
*உய்த்த பராபரை யுள்ளாம் பராபரை*
*அத்தன் அருட்சத்தி யாயெங்கு மாமே.*

கேவலத்தில் சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி என்ற மூன்றும், சுத்தத்தில் சாக்கிரம் சொப்பனம் துரியம் துரியாதீதம் என்ற நான்கும் ஆக ஏழும், சத்தும் அசத்தும் ஆகியவும் அவைகளைக் கடந்ததுமான பராபரை, சீவர்களைச் செலுத்தும் பராபரை, சீவர்களோடு உயிர்க்குயிராம் பராபரை, அத்தனாகிய சிவத்துக்கு அருட்சத்தியாக எங்கும் வியாபித்துள்ளாள்.

*1431. சத்தும் அசத்துந் தணந்தவர் தானாகிச்*
*சித்தும் அசித்துந் தெரியார் சிலோகமாய்*
*முத்தியுள் ஆனந்த சத்தியுள் மூழ்கினார்*
*சித்தியு மங்கே சிறந்துள தானே.*

சத்தும் அசத்துமாகியவற்றைக் கடந்த ஞானிகள் சத்தியே தானாகி, அறிவு, அறியாமை, நீங்கிய சிவோகம் பாவனையில், இரண்டற்ற நிலையில் அதீத பாவனையுள்ளே அழுந்தியிருப்பவர்களிடம், எல்லாச் சித்திகளும் விளங்கும்.

*1432. தன்னைப் பரனைச் சதாசிவன் என்கின்ற*
*மன்னைப் பதிபசு பாசத்தை மாசற்ற*
*முன்னைப் பழமல முன்கட்டை வீட்டினை*
*உள்ளத் தகுஞ்சுத்த சைவர் உபாயமே.*

ஆன்மாவாகிய தன்னையும், பர சிவத்தையும், சதாசிவனாகிய மன்னையும், பதி பசு பாசமாகிய முப்பொருளையும், அநாதியேயுள்ள பாசத்தளையையும், பழுதில்லா வீடுபேற்றையும், சுத்த சைவர் தடை நீங்கும் உபாயமாகக் கொண்டு எண்ணுவார்கள்.

*1433. பூரணந் தன்னிலே வைத்தற்ற வப்போதம்*
*மாரண மந்த மதித்தானந் தத்தோடு*
*நேரென ஈராறு நீதி நெடும்போகங்*
*காரண மாஞ்சுத்த சைவர்க்குக் காட்சியே.*

பூரணமான சிவத்திலே சித்தத்தை வைத்து ஆன்ம போதம் அற்று, மறை முடிவைப் பெரிதென எண்ணி ஆனந்தத்தோடு, ஒப்பெனத் துவாத சாந்தத்தில் முறையாகப் பெறும் சிவபோகம், சுத்த சைவர்க்கு முதல் நிலையில் கிட்டுவது பிரத்தியட்சம்.

*1434. மாறாத ஞான மதிப்பற மாயோகந்*
*தேறாத சிந்தையைத் தேற்றிச் சிவமாக்கிப்*
*பேறான பாவனை பேணி நெறிநிற்றல்*
*கூறாகு ஞானி சரிதை குறிக்கிலே.*

என்றும் ஒரு தன்மையான ஞானத்தில் மதிப்பின்றி, சிறந்த யோகமும் பெரிதென்று தெளியாத சிந்தையைத் தெளிவித்து, சிவத்தை அங்கே ஆக்கி, சிவோகம் பாவனை பண்ணி, முறையாக நிற்றலே, ஆராயுமிடத்து ஞானிக்குரிய சரியையாகும்.

*1435. வேதாந்தங் கண்டோர் பிரமமித் தியாதார்*
*நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற யோகிகள்*
*வேதாந்த மல்லாத சித்தாந்தங் கண்டுளோர்*
*சாதா ரணமன்ன சைவர் உபாயமே.*

வேதாந்தத்தை உணர்ந்தவர் பிரம வித்தையை அறிந்தவராவார், நாத தரிசனம் செய்தவர் நன்மைகளில் மகிழாமலும் தீமைகளில் சோர்வுறாமலும் நிற்கும் பரமஹம்ச யோகிகளாவர், வேதாந்தக் கொள்கைக்கு வேறான சித்தாந்த அனுபவமுடையோர், இயற்கையை அறிந்து உபாயநிலை சிவத்தைச் சேர்வர்.

*1436. விண்ணினைச் சென்றணு காவியன் மேகங்கள்*
*கண்ணினைச் சென்றணு காப்பல காட்சிகள்*
*எண்ணினைச் சென்றணு காம லெனப்படும்*
*அண்ணலைச் சென்றணு காபக பாசமே.*

ஆகாயத்தை இடமாகக் கொண்டுள்ள மேகங்கள் ஆகாயத்தைச் சென்று ஒட்டா, கண்ணால் காணப்படும் பல காட்சிப் பொருள்கள் கண்ணைத் தாமாகவே வந்து பொருந்த மாட்டா, அவை போல எண்ணத்துக்கு அப்பாலுள்ள பொருளாகக் கருதப்படும், அண்ணலாகிய சிவ பரம்பொருளைப் பசுவாகிய சீவர்களைப் பற்றியுள்ள பாசங்கள் சென்றடையா.

*1437. ஒன்றும் இரண்டும் இலதுமாய் ஒன்றாக*
*நின்று சமய நிராகார நீங்கியே*
*நின்று பராபரை நேயத்தைப் பாதத்தாற்*
*சென்று சிவமாதல் சித்தாந்த சித்தியே.*

பிரமப் பொருள் ஒன்றே என்னும் வேதாந்த இலட்சியமும், இறைவன் வேறு சீவன் வேறு என்னும் துவைதமும் இல்லாததாய், பொருள் தன்மையில் வேறாய்க் கலப்பினால் ஒன்றாய்ச் சுத்தாத்துவித பாவனையில் நின்று, சமய நிந்தனை விட்டு நீங்கி, பராபரையாகிய நேயப் பொருளைத் திருவடி ஞானத்தால் அடைந்து, சிவமாதலே சித்தாந்தத்தால் பெறப்படும் சித்தியாகும்.

## 4. கடுஞ்சுத்த சைவம்

ஞான நிலையில் ஆடம்பரமின்றித் தானவனாய் நிற்கும் நிலையை எடுத்து ஓதுவது இவ்வதிகாரத்திலாம். கடுஞ்சுத்த சைவர் உபாயமான கிரியைகளை விட்டு ஞானமே பெரிதெனக் கருதிச் சாயுச்சியம் பெறுவர்.

*1438.* *வேடங் கடந்து விகிரிதன்றன் பான்மேவி*
*ஆடம் பரமின்றி ஆசா பா சஞ்செற்றுப்*
*பாடொன்று பாசம் பகத்துவம் பாழ்படச்*
*சாடுஞ் சிவபோ தகர்சுத்த சைவரே.*

புற வேடங்களில் விருப்பமின்றி இறைவனைச் சார்ந்து, உலகியல் ஆடம்பரமில்லாதது ஆசையையும் பற்றையும நீத்து, பிறவித் துன்பத்தைத் தரும் பாசமும் சீவபோதமும் பாழாக, தொலைக்கும் சிவஞானம் பெற்றோரே சுத்த சைவராவார்.

*1439.* *உடலான ஐந்தையும் ஓராறும் ஐந்து*
*மடலான மாமாயை மற்றுள்ள நீவப்*
*படலான கேவல பாசந் துடைத்துத்*
*திடமாத் தனையுற்றல் சித்தாந்த மார்க்கமே.*

அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் ஆகிய ஐந்தையும் மூலாதாரம் முதலிய ஆதாரங்கள் ஆறையும், ஐந்து பிரிவாக விளங்கும் சுத்தமாயையாதி சிவதத்துவத்தையும் இவைகளில் சார்பான மற்றுள்ளவைகளையும் ஒழித்து, அவற்றால் பிறவிக்கு முன்னே படலமாகவுள்ள பாசங்களை அழித்து, உறுதியாகத் தன்னுடைய யதார்த்த நிலையை அறிந்து அதில் நிற்றலே சித்தாந்த நெறியாகும்.

*1440.* *சுத்தச் சிவனுரை தானதில் தோயாமல்*
*முத்தர் பதப்பொருள் முத்திவித் தாமூலம்*
*அத்தகை யான்மா அரனை அடைந்தற்றாற்*
*சுத்தச் சிவமாவ ரேகத்த சைவரே.*

பரமேசுவரனால் அருளிச் செய்யப்பட்ட ஆகமங்களில் கூறப்பெறும் பதமுத்திகளைச் சாராது, முத்தர் கண்ட பிரணவப் பதத்தால் உணர்த்தப்படுவதே மேலான பரமுத்திக்கு மூலம், இதனை உணர்ந்த ஆன்மா பிரணவப் பொருளான இறைவனை அறிந்து உலக பந்தங்களை விட்டால், சுத்த சிவமாம் பேறு பெறுபவரே சுத்த சைவராவர்.

*1441.* *நானென்னுந் தானென்றும் நாடிநான் சாரவே*
*தானென்று நானென் றிரண்டிலாத் தற்பதத்*
*தானென்று நானென்ற தத்துவ நல்கலால்*
*தானென்று நானென்றுஞ் சாற்றகில் லேனே,*

அறிபவனாகிய நான் என்றும், அறியப்படு பொருளாகிய சிவம் என்றும் ஆராய்ந்து சிவத்தை நான் சேரவே, சிவன் சீவன் என்ற இரண்டற்ற தற்சிவம், தானே நான் என்ற உண்மையை உணர்த்தியதால், பின்னர் அறியப்படு பொருள் என்றும் அறிபவன் என்றும் பிரித்தறிய முடியாத பெருநிலையை எய்தினேன்.

*1442.* *சாற்றரி தாகிய தத்துவஞ் சித்தித்தால்*
*ஆற்றரி தாகிய ஐந்தும் அடங்கிடும்*
*மேற்றிகழ் ஞானம் விளக்கொளி யாய்நிற்கும்*
*பாற்பர சாயுச்சிய மாகும் பதியே.*

சொல்வதற்கு அருமையான அவனேயாகிய அந்நெறி அடையப்பெற்றால், பொறுத்தற்கு அருமையான கண் முதலிய ஐம்பொறிகளும் செயலற்று அடங்கிவிடும், மேல் விளங்கும் ஞானம் விளக்கொளிபோல் பிரகாசிக்கும், அப்பால் சாயுச்சிய நிலையில் பதியோடு ஏகனாகி நிற்றல் அமையும்.

## 5. சரியை

நாடு நகரமும் தேடித் திரிந்து சிவபெருமான் என்று பாடுதலும் ஆலய வழிபாடு செய்தலும் சரியை நெறியாம்.

*1443.* ***நேர்ந்திடு மூல சரியை நெறியிதென்***
***றாய்ந்திடுங் காலாங்கி கஞ்ச மலையமான்***
***ஓர்ந்திடுங் கந்துரு கேண்மின்கள் பூதலத்***
***தோர்த்திடுஞ் சுத்த சைவத் துயிரதே.***

முத்தியைப் பொருந்துவதற்கு முதல் அங்கமான சரியை நெறி இது என்று, வேதாகமங்களை ஆராய்கின்ற காலாங்கி, கஞ்ச மலையமான், கேளுங்கள், இந்நிலவுலகில் சுத்த சைவருக்கு உயிர் போன்ற நெறி சரியையாகும்.

*1444.* ***உயிர்க்குயி ராய்நிற்றல் ஒண்ஞான பூசை***
***உயிர்க்கொளி நோக்கல் மகாயோக பூசை***
***உயிர்ப்பெறு மாவா களம்புறப் பூசை***
***செயிற்கடை நேசஞ் சிவபூசை யாமே.***

உயிருக்குயிராக இறைவன் கலந்திருத்தலை உணர்தல் சிறந்த ஞான பூசையாகும், உயிருக்கு ஒளி தருகின்ற பொருளாக இறைவனைக் காண்டல் மேன்மையான யோக பூசையாகும், புறத்தே மூர்த்தியினிடத்து பிரணாப் பிரதிட்டையாகிய ஆவாகனம் செய்தல் புறப்பூசையாகும், புறத்தே செய்யின் சிவபூசை ஞானத்தை நோக்கக் கடை நேசமாமே.

*1445.* ***நாடும் நகரமும் நற்றிருக் கோயிலுந்***
***தேடித் திரிந்து சிவபெரு மான்என்று***
***பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்***
***கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே.***

நாடு நகரம் நல்லதிருக்கோயில் ஆகியவற்றை, தேடி அலைந்து, அங்கங்கே சிவன் வீற்றிருக்கின்றான் என்று பாடுங்கள், பாடுவதோடு பணியுங்கள், அவ்வாறு பணிந்த பிறகு, ஒருமைப்பட்ட நெஞ்சத்தை இறைவன் தனக்குக் கோயிலாகக் கொள்வன்.

*1446.* ***பத்தர் சரிதை படுவோர் கிரியையோர்***
***அத்தகு தொண்டர் அருள்வேடத் தாகுவோர்***
***சுத்த வியமாதி சாதகர் தூயோகர்***
***சித்தர் சிவஞானமஞ் சென்றெய்து வோர்களே.***

பத்தர் ஆலய வழிபாடு முதலிய செய்யும் சரியை வழியில் நிற்போர், விபூதி முதலிய சிவசானங்கள் அணிந்து சிவவேடம் தாங்கிய அடியார் கிரியை வழியில் நிற்போர், தூய இயமம் முதலிய அட்டாங்க யோக உறுப்புகளை உணர்ந்து அவ்வழியில் நிற்போர் சுத்த யோகியராவர், சித்தர் சிவத்தைத் தன்னில் கண்டு தான் அதில் ஒன்றி நிற்போராவர்.

*1447.* ***சார்ந்தமெய்ஞ் ஞானத்தோர் தானவ னாயினோர்***
***சேர்ந்தவெண் யோகத்தர் சித்தர் சமாதியோர்***
***ஆய்ந்த கிரியையோர் அருச்சனை தப்பதோர்***
***நேர்ந்த சரியையோர் நீள்நிலத் தோரே.***

உண்மையான ஞானம் பெற்றவர் அவனே தானாகியவர்கள், அட்டாங்க யோக நெறியில் நின்று சமாதியடைந்தோர் யோகியராவர், ஆராய்ந்த கிரியையுடையோர் சிவபூசை தவறாமல் செய்பவர், சரியை நெறியிலே நிற்பவள் தல யாத்திரை புரிபவராவர்.

*1448.* ***கிரியை யோகங்கள் கிளர்ஞான பூசை***
***அரிய சிவனுரு அமரும் அருபத்***
***தெரியும் பருவத்துத் தேர்ந்திடும் பூசை***
***உரியன நேயத் துயர்பூசை யாமே.***

கிரியை, யோகம், கிளர்ச்சியைத் தரும் ஞானம் ஆகிய பூசை, முறையே அறிதற்கு அருமையான சிவனது உருவத்தையும் அருவத்தையும் பொருந்தும், உபாசகரின் பக்குவத்துக்கு ஏற்பத் தேர்ந்துகொள்ளும் பூசை, உரிமையான நேயப் பொருளுக்குச் செய்யும் உயர்ந்த பூசையாம்.

*1449.* ***சரியாதி நான்குந் தருஞான நான்கும்***
***விரிவான வேதாந்த சித்தாந்த மாறும்***
***பொருளா னதுநந்தி பொன்னகர் போந்து***
***மருளாகு மாந்தர் வணங்கவைத் தானே.***

சரியை முதலிய நான்கினாலும் பெறுகின்ற ஞானம் நான்கும், விரிவாகவுள்ள வேதாந்த சித்தாந்தத்தால் அடையப்படுகின்ற ஆறு விதமான முடிவினை, உண்மைப் பொருளானதாகிய நந்தியெம்பெருமான் குரு மண்டலமாகிய பொன்னகர் அடைந்து, மயக்க அறிவினைக் கொண்ட மக்கள் வணங்கி அறிவைப் பெற வைத்தனன்.

*1450. சமையம் பலகத்தித் தன்நெயல் அற்றிடும்*
*அமையும் விசேடமும் அரன்மந் திரசுத்தி*
*சமைய நிருவாணங் கலாகத்தி யாகும்*
*அமைமன்னு ஞானமார்க் கம்அபி டேகமே.*

சமைய தீட்சையால் ஆன்மாவில் பதிந்துள்ள மலக்குற்றங்களை அகற்றி ஆணவமலத்தின் விசேட தீட்சையால் சிவத்தின் துணை கொண்டு அமையப்பெற்ற மந்திரங்களால் மும்மலத்தின் வலிவைக் குறைத்தல், சமையத்தில் உள்ள நிருவாண தீட்சையால் நிவிருத்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை கலைகளின் மலக்குற்றங்களை அகற்றி, அவ்வக் கலையிலுள்ள ஆன்மாக்களை மேலுள்ள கலைகளுக்குச் செல்லத் தகுதிப்படுத்தலாகும், அபிடேகமாவது திருவருட்சத்தி நிலை பெறப்போதித்து நிலை பொறுத்தலேயாகும்.

## 5. கிரியை

மலரிட்டு வணங்கி இறைவனை அகத்தும் புறத்தும் பூசித்தல் கிரியையாகும்.

*1451. பத்துத் திசையும் பரமொரு தெய்வமுண்*
*டெத்திக் கிலரில்லை என்பதின் அமலர்க்*
*கொத்துத் திருவடி நீழல் சரணெனத்*
*தத்தும் வினைக்கடல் சாராது காணுமே.*

பத்துத் திசைகளிலும் பரசிவம் வியாபித்துள்ளது, எத்திசையில் இல்லாதவர் எப்போது இவர் என்பதால், அத்தகைய மலமில்லாதவர்க்குப் பணிந்து திருவடியை அடைக்கலம் என்று உறுதியாகக் கொள்ள, மேன்மேலும் தாவி வருகின்ற வினையாகிய கடல் இவ்வான்மாவைச் சாராது, இவ்வுண்மையை அநுபவத்தில் காண்பாயாக.

*1452. கானுறு கோடி கடிகமழ் சந்தனம்*
*வானுறு மாமல ரிட்டு வணங்கினும்*
*ஊனினை நீக்கி உணர்பவர்க் கல்லது*
*தேனமர்பூங் கழல் சேரவொண் ணாதே.*

காட்டின்கண் எங்கணும் நிறைந்து மணம் கமழும் சந்தனமும், வானாளவ நிறையும் வண்ணம் சிறந்த மலர்களும் சாத்தி வணங்கினாலும், உடல் பற்றை விட்டுத் தியானிப்பவர்க்கன்றி, தேன் போன்று இன்பத்தை தரும் சகஸ்ரதளத்தில் விளங்கும் திருவடியை அடைய முடியாது.

*1453. கோனக்கன் றாயே குரைகழல் ஏத்துமின்*
*ஞானக்கன் றாகிய நடுவே யுழிதரும்*
*வானக்கன் றாகிய வானவர் கைதொழு*
*மானக்கன் றீசன் அருள்வள்ள மாமே.*

மேன்மையான பகங்கன்றைப் போல ஒலிக்கும் கழலையுடைய திருவடியைப் போற்றுங்கள், அப்போது ஞானத்தை நல்கும் சுழுமுனை நடுவே தோன்றும், தேவர் உலகக்கன்றாகிய வானவர் வந்து உம்மை வணங்குவார்கள், பெருமை பொருந்திய இடப வாகனத்தையுடைய இறைவன் திருவருளைத் தாங்கும் பாத்திரமாகுங்கள்.

*1454. இதுபணிந் தெண்டிசை மண்டலம் எல்லாம்*
*அதுபணி செய்கின் றவளொரு கூறன்*
*இதுபணி மானுடர் செய்பணி ஈசன்*
*பதிபணி செய்வது பத்திமை காணே.*

இவ்வாறு பணிந்து எட்டுத் திசையிலுள்ள மண்டலங்களில் எல்லாம், அவனது பணியாகச் செய்கின்ற சத்தியை ஒரு பாகமாகவுடையவன் இறைவன், அவனது பெருமையை நினைந்து ஏத்துவதே மனிதர் செய்கின்ற இறை பணி, அவ்வாறெல்லாம் வல்ல பெருமானை ஏத்துவது அன்பினாலாகும் என்று அறிவாயாக.

*1455. பத்தன் கிரியை சரியை பயில்வற்றுச்*
*சுத்த அருளால் துரிசற்ற யோகத்தில்*
*உய்த்த நெறியுற் றுணர்கின்ற ஞானத்தாற்*
*சித்தங் குருவரு ளாற்சிவ மாகுமே.*

பத்தியுடையோன் தூய மந்திரம் முதலியவற்றை நினைந்து அவ்வாற நடந்து பழகி, சுத்த மாயை என்ற அருள் சத்தியால் குற்றமற்ற மெய் யோகத்தில், அமைத்த நெறியில் பொருந்தி தன்னையும் தலைவனையும் உணர்கின்ற, சித்தம் குரு மண்டலப் பிரவேசத்தால் சிவமாக அமையும்.

*1456.* *அன்பின் உருகுவ னாளும் பணிசெய்வன்*
*செம்பொன் செய்மேனி கமலத் திருவடி*
*முன்புநின் றாங்கே மொழிவ தெனக்குருள்*
*என்பினுட் சோதி இலங்குகின் றானே.*

இறைவனிடம் கொண்ட இடையறாத அன்பினால் உருகித் தினந்தோறும் நாத சம்மியம் செய்குவேன், செம்பொன்னே ஒக்கும் சகஸ்தரளத்தில் விளங்கும் விந்து நாதமாகிய திருவடி, பணிந்து நின்று பிரார்த்திட்டு எனக்கு அருள்வாயாக என்பதேயாம், அப்போது இறைவன் சிரசின்மேல் சோதியாக விளங்கி அருள் வழாங்குவான்.

*1457.* *நெறிவழி யேசென்று நேர்மையுள் ஒன்றித்*
*தறியிருந் தாற்போல் தம்மை யிருத்திக்*
*சொறியினுந் தாக்கினுந் துண்ணென் றுணராக்*
*குறியறி வாளர்க்குக் கூடலு மாமே.*

மூலாதாரம் தொடங்கி வீணாத்தண்டுடே பிரமரந்திரத்தை அடைந்து உண்மைப் பொருளான சிவத்துடன் பொருந்தி, தறியைப் போல் தம்முடலை ஆடாது அசையாது இருக்கச் செய்து, சொறிந்தாலும் தாக்கினாலும் துணுக்கென்று உணராமல், இலட்சியப் பொருளாகிய சிவத்தை அழுந்தி அறிபவர்க்கு அந்நியமாய்ப் பொருந்த முடியும்.

*1458.* *ஊழிதோ றுழி உணர்ந்தவர்க் கல்லால்*
*ஊழிதோ றூழி யுணரவுந் தானொட்டான்*
*ஆழி அமரும் அரியயன் என்றுளார்*
*ஊழி முயன்றும்ஓ ருச்சியு ளானே.*

பல்லூழிக் காலம் யோகம் பயின்று ஞானம் பெற்றார்கல்லது, ஏனையோர்க்குப் பல்லூழியானாலும் உணரப்படாதவன், பாற்கடலில் பள்ளி கொள்ளும் திருமால் பிரமன் என்றுள்ள தேவர்கள், ஊழிக் காலம் முயன்றாலும் அவனை அடைய முடியாத ஓர் உயர்ந்த இடத்தில் உள்ளான்.

*1459.* *பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோற்*
*சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது*
*ஓவியம் போல உணர்ந்தறி வாளர்க்கு*
*நாவி யணைந்த நடுதறி யாமே.*

பூவினிலே மணம் பொருந்திருப்பது போல, சீவனுக்குள்ளே சிவமணம் விளைந்தது, எழுதப்பெற்ற சித்திரம் போல அசைவற்றிருந்து அறிய வல்லார்க்கு, புனுகுப் போல சேர்ந்த நடுதறி மணம் பெறுவது போல மணம் உண்டாம்.

*1460.* *உய்ந்தனம் என்பீர் உறுபொருள் காண்கிலீர்*
*கந்த மலரிற் கலக்கின்ற நந்தியைச்*
*சிந்தை யுறவே தெளிந்திருள் நீங்கினால்*
*முந்தைப் பிறவிக்கு மூலவித் தாமே.*

உய்ந்தோம் என்று சொல்வீர், ஆனால் யோகத்தால் உள்ளே உறுகின்ற பொருளைக் காணமாட்டீர், சுவாதிட்டானத்தில் பொருந்தியுள்ள சிவத்தை, சிந்தை பொருந்தவே தெளிவு பெற்று இருளை நீங்கினால், பழைமையாக வரும் பிறவிக்கு மூலத்தை நீக்கும் மருந்து விதையாம்.

*1461.* *எழுத்தொடு பாடலும் எண்ணெண் கலையும்*
*பழித்தலைப் பாசப் பிறவியும் நீங்கா*
*வழித்தலைச் சோமனோ டங்கி யருக்கன்*
*வழித்தலைச் செய்யும் வகையுணர்ந் தேனே.*

இலக்கண அறிவு, இலக்கிய அறிவு, அறுபத்து நான்கு கலை அறிவு ஆகியவற்றால், பழியினைத் தருகின்ற பாசத்தால் விளையும் பிறவி நீங்காது, அழித்தலைச் செய்கின்ற சந்திரன், அக்கினி, சூரியன் ஆகியவற்றை வகைப்படுத்திச் சிரசுக்குக் கொண்டு செல்வதால் ஒளி அமைவதை உணர்ந்தேன்.

*1462.* *விரும்பிநின் றேசெய்யில் மெய்த்தவ ராகும்*
*விரும்பிநின் றேசெய்யின் மெய்யுரை யாகும்*
*விரும்பிநின் றேசெய்யின் மெய்த்தவ மாகும்*
*விரும்பிநின்றே செய்யில் விண்ணவ னாகுமே.*

சோம சூரியாக்கினிகளைச் சிரசில் சேர்க்கும் யோகத்தை உள்ளன்புடன் செய்பவர் உண்மைத் தவமுடையவராவர், இதுவே மகாவாக்கியப் பொருளாகும், இதுவே உண்மையான தவமாகும், இதுவே விண்ணவராக்குவது.

*1463. பேணிற் பிறவா உலகருள் செய்திடுங்*
*காணில் தனது கலவியு ளேநிற்கும்*
*நாணில் நரக நெறிக்கே வழிசெயும்*
*ஊனில் கடுமங்கி யுத்தமன் றானே.*

உடலில் அக்கினி மயமாக இருந்து சூட்டை வெளிப்படுத்திக்கொண்டுள்ளது உத்தமனாகிய பரசிவம், அதுவே ஆண், பெண் கூட்டுறவிலிருந்து அக்கினி மண்டலத்தில் விளக்கம் பெறுகிறது, அத்தகைய அக்கினியை நீ காப்பாற்றி மேலெழா செய்தால் மீண்டும் பிறவிக்கு வாராத ஒளியுலகைக் கொடுக்கும், இதைச் செய்ய நீ நாணுவாயாகில் உன்னை நரகில் செலுத்தி மேலும் பிறவிக்கே வழி செய்யும்.

*1464. ஒத்தசெங் கோலார் உலப்பிலி மாதவர்*
*எத்தனை யாயிரம் வீழ்ந்தனர் எண்ணிலி*
*சித்தர்கள் தேவர்கள் மூவர் பெருமையாய்*
*அந்த னிவனென்றே அன்புறு வார்களே.*

நேர்மையான செங்கோல் அரசர்கள், உண்மையான வேத நெறி விளங்கிய முனிவர்கள், எத்தனை ஆயிரம் பேர்கள் இவ்வுண்மை உணராது அழிந்தொழிந்தார்கள், இவ்யோகத்தை அறிந்த எண்ணற்ற சித்தர்களும், தேவர்களும் பிரமன், திருமால், உருத்திரன் ஆகிய மூவர்களும், பெருமையாகப் பரசிவத்தைத் தவிர வேறு உயிருக்கு நன்மை செய்பவர் இல்லை என்ற அடி பணிவார்கள்.

*1465. யோகிக்கு யோகாதி மூன்றுள கொண்டுற்றோர்*
*ஆகத் தகுகிரி யாதி சரியையாந்*
*தாகத்தை விட்ட சரியையொன் றாம்ஒன்றுள்*
*ஆதித்தன் பத்தியுள் அன்புவைத் தேனே.*

யோகம், கிரியை, சரியை ஆகிய மூன்று நெறிகளையும் கொண்டு மேன்மையுறுவர் யோகியராவர், அவ்வாறாகத் தகுவன கிரியையில் கிரியை, கிரியையில் சரியை ஆகியவாம், ஆசையை விட்ட சரியை ஒன்றாகும், அவ்வாறு விளங்கும் ஒளி மண்டல சிவாதித்தன் பத்தியில் சிறந்த அன்பு கொண்டேனே.

*1466. யோகச் சமயமே யோகம் பலவுன்னல்*
*யோக விசேடமே அட்டாங்க யோகமாம்*
*யோகதிர் வாணமே யுற்ற பரோதயம்*
*யோகஅபி டேகமே ஒண்சித்தி யுற்றலே.*

யோக நெறியில் சமய தீட்சை என்பது பல யோக நெறிகளைப் பற்றி எண்ணுதல், யோக நெறியில் விசேட தீட்சையாவது, அட்டாங்க யோக நெறிபற்றி நிற்றல், யோகத்தில் நிருவாண தீட்சையாவது பரை தரிசனம் பெறுதலாம், யோக அபிடேகமாவது ஒளி மிக்க சித்திகளை அடைதல்.

## 8. ஞானம்

ஞானம் என்பது பதி அறிவு ஞானம், நேயம், ஞாதுரு என்ற மூன்றும் கெட்டு ஒன்றான நிலையே ஞானம் எனப் பெறும். ஆதலால் ஞானமே வீடு பேற்றுக்கு வாயிலாகும்.

*1467. ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை*
*ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று*
*ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவா*
*ஞானத்தின் மிக்கரர் நரரின்மிக் காரே.*

ஞானத்தில் சிறந்த அறநெறி நாட்டில் இல்லை, ஞானத்தைக் கொடுக்காத சமய நெறியும் நல்லது அன்று, ஞானத்துக்குப் புறம்பானவை நல்ல வீடு பேற்றை அளிக்காது, ஞானத்தில் சிறந்து விளங்குபவரே மக்களில் மேலோராவர்.

*1468. சத்தமுஞ் சத்த மனனுந் தகுமனம்*
*உய்த்த வுணர்வு முணர்த்தும் அகத்தையுஞ்*
*சித்தமென் றிம்மூன்றுஞ் சிந்திக்குஞ் செய்கையுஞ்*
*சத்தங் கடந்தவர் பெற்றசன் மார்க்கமே.*

நாதமும் நாதவடிவான மனமும், தக்க அம்மனம் தந்த புத்தியும், சித்தம் என்ற இம்மூன்றும், அது சிந்திக்கின்ற செயலும், அவற்றால் விளையும் நாதமும் கடந்த ஞானியர் பெற்ற நெறியே சன்மார்க்கம் ஆகும்.

*1469.* *தன்பால் உலகுந் தனக்கரு காவதும்*
*அன்பா லெனக்கரு ளாவது மாவன*
*என்பார்கள் ஞானமும் எய்துஞ் சிவோகமும்*
*பின்பாலின் நேயமும் பெற்றிடுந் தானே.*

சீவனது சித்தத்தில் அமைந்துள்ள சங்கற்ப உலகமும், தனது சூழ்நிலையில் புறத்தே அமைந்துள்ள உலகமும், அன்பினால் உலகமும், அன்பினால் எனக்கு அருளாக அமைந்தன என்பர் ஞானிகள், இவ்வகையான ஞானமும் அதனால் அமையும் சிவபாவனையும், பின்னர் அறியப்படு பொருளாகிய சிவத்தையும் பெற்றிடுவர்.

*1470.* *இருக்குஞ் சேம இடம்பிரம மாகும்*
*வருக்கஞ் சராசர மாகும் உலகந்*
*தருக்கிய ஆசார மெல்லாந் தருமே*
*திருக்கமில் ஞானத்தைத் தேர்ந்துணர்ந் தோர்க்கே.*

மாறுபாடற்ற ஞானத்தைத் தெளிந்து உணர்ந்தவர்க்கு, சார்ந்திருக்கும் காவலான இடம அழியாத பிரமப் பொருளாகும், அசைவனவாயும் அசையாதனவாயும் இரு வகையாகக் காணப்படும் உலகம், மேலான ஞானம் விளங்கும் ஒழுக்கம் எல்லாந் தரும்.

*1471.* *அறிவும் அடக்கமும் அன்பும் உடனே*
*பிறியா நகர்மன்னும் பேரரு ளாளன்*
*குறியுங் கஶமுங் குரைகழல் நீங்கா*
*நெறியறி வார்க்கிது நீர்த்தொளி யாமே.*

அறிவு அடக்கம், அன்பு ஆகிய இம்மூன்றும் என்றும், நீங்கா நகரில் கோயிலாக கொள்ளும் பேரருளுடையவன், உருக்கொண்ட நிலையையும் கலியாண குணங்களையும் எண்ணி ஒலிக்கின்ற திருவடியை நீங்காத, நெறியினையுடைய ஞானிக்குச் சிந்தனையுல் நீர் அருவியின் சலசலப்பு போல் சிரசில் அமையும்.

*1472.* *ஞானம் விளைந்தெழு கின்றதோர் சிந்தையுள்*
*ஏனம் விளைந்தெதி ரேகாண் வழிதொறுங்*
*கூனல் மதிமண் டலத்தெரிர் நீர்கண்டு*
*ஊனம் அறுத்துநின் றொண்சுட ராகுமே.*

ஞானம் முதிர்ந்து எழுகின்ற எண்ண நிலையில், கருவியாகிய நாதம் தோன்றி முகத்தின் முன் எங்கும், இளம்பிறை மண்டலத்தின் ஒளியைத் தரிசித்து, உடலின் இழிதகைமையை உணர்ந்த உடலைக் கடந்து ஒளி மிக்க சோதியாகுமே.

*1473.* *ஞானிக் குடன்குண ஞானத்தில் நான்குமா*
*மோனிக் கிவையொன்றுங் கூடாமுன் மோகித்து*
*மேனிற்ற லாஞ்சத்தி வித்தை விளைத்திடுந்*
*தானிக் குலத்தோர் சரியை கிரியையே.*

ஞானிக்கு உடனாய தன்மையாக ஞானத்தில் ஞானம், ஞானத்தில் யோகம், ஞானத்தில் கிரியை, ஞானத்தில் சரியை ஆகிய நான்கும் ஆகும், அநுபவமுதிர்ந்து பிரணவ சித்தியான மௌனிக்கு இவை ஒன்றுந் தேவை இல்லை, முன்னே பரவசமடைந்து மேல் சந்திர மண்டல ஒளியில் விளங்கும் சத்தி ஞானத்தை அளித்துவிடும், அவ்வாறன்றி ஆதாரங்களிலே பொருந்தி யோகம் புரிவோர்க்குச் சரியையும் கிரியையுமேயாகும்.

*1474.* *ஞானத்தின் ஞானாதி நான்குமா ஞானிக்கு*
*ஞானத்தின் ஞானமே நானென தென்னாமல்*
*ஞானத்தில் யோகமே நாதாந்த நல்லொளி*
*ஞானக் கிரியையே நன்முத்தி நாடலே.*

ஞானிக்கு ஞானத்தில் ஞான முதலான நான்கு நிலைகள் உண்டு, ஞானத்தில் ஞானமாவது நான் என்ற அகப்பற்றும் என்து என்ற புறப்பற்றும் இல்லாமை, ஞானத்தில் யோகமாவது நாதாந்தத்தில் நற்சோதியைக் காண்டலாம், ஞானத்தில் கிரியையாவது, நல்ல வீடுபேற்றை விரும்புதலாம்.

*1475.* *நண்ணிய ஞானத்தின் ஞானாதி நண்ணுவோன்*
*புண்ணிய பாவங் கடந்த பிணக்கற்றோன்*
*கண்ணிய நேயங் கரைஞானங் கண்டுளோன்*
*திண்ணிய சுத்தன் சிவமுத்தன் சித்தனே.*

பெற்ற ஞானத்தில் ஞானாதி நான்கும் கைவரப்பெற்றவன், புண்ணியத்தால் அடையும் நற்பயனையும், பாவத்தால் வரும் தீய பயனையும் கடந்து நிற்பவளாவான், பெருமையான நேயப் பொருளின் ஞான வரம்பைக் கண்டவன், திண்மையான மலக்குற்றங்கள் அற்றவனும் சிவமுத்தனும் சித்தனுமாவான்.

*1476.* ***ஞானச் சமயமே நாடுந் தனைக்காண்டல்***
***ஞான விசேடமே நாடு பரோதய***
***ஞானநிர் வாணமே நன்றறி வானருள***
***ஞானாபி டேகமே நற்குரு பாதமே.***

மெய்ப்பொருளை விரும்பும் ஞானி மெய்ப்பொருளைப் போலத் தானும் ஒளி வடிவினன் என்று அறிவது, ஞானத்தில் சமய தீட்சையாகும், அவ்வாறு ஒளி விளங்குவதே ஞானத்தில் விசேட தீட்சையாகும், நன்மைகளை அறிந்து வழங்கும் மெய்ப்பொருளின் அருளை அடைதல் ஞானத்தில் நிருவான தீட்சையாகும், குரு மண்டலத்தில் விகற்பமறக் கலத்தல் ஞானாபிடேகமாகும்.

## 9. சன்மார்க்கம்

சன்மார்க்கமாவது, நன்னெறி அல்லது ஒளி நெறி, சன்மார்க்கத்தால் தான் அவனாம் தன்மை எய்தலாம்.

*1477.* ***சாற்றுஞ்சன் மார்க்கமாந் தற்சிவ தத்துவத்***
***தோற்றங்க னான கருதிச் சுடர்கண்டு***
***சீற்றம் ஒழிந்து சிவயோக சித்தராய்க்***
***கூற்றத்தை வென்றார் குறிப்பறிந் தார்களே.***

சொல்லப்பெறும் சன் மார்க்கமாவது, தற்பதப் பொருளான சிவத்தின் உண்மை வடிவங்களான நாத விந்துக்களில் விளங்கும் சுடரைக் கண்டு, சினத்தை விட்டுச் சிவயோகத்தில் நிலைத்த சித்தமுடையராய், காலனை வென்ற இறைவனது திருவுள்ளக் குறிப்பை உணர்ந்தவர் பற்றும் நெறியாம்.

*1478.* ***சைவப் பெருமைத் தனிநா யகன்நந்தி***
***உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு***
***தெய்வச் சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய***
***வையத்துள் ளார்க்கு வகுத்துவைத் தானே.***

சைவத்துக்குப் பெருமையைத் தரும் ஒப்பற்ற தலைவனாகிய சிவன், ஆன்மாக்கள் உய்தி பெறும்வண்ணம் அமைத்த ஒளி நெறி ஒன்றுண்டு, அதுதான் தெய்வச் சிவநெறியாகிய சன்மார்க்கம், அதனைச் சேர்ந்து உய்தி பெறுமாறு இவ்வுலகிலுள்ளார்க்கு அமைத்துக் கொடுத்தான்.

*1479.* ***தெரிசிக்கப் பூசிக்கச் சிந்தனை செய்யப்***
***பரிசிக்கக் கீர்த்திக்கப் பாதுகஞ் சூடக்***
***குருபத்தி செய்யுங் குவலயத் தோர்க்குத்***
***தருமுத்திச் சார்பூட்டுஞ் சன்மார்க்கத் தானே.***

தெரிசிக்கவும் பூசிக்கவும் தியானிக்கவும் தீண்டவும் புகழவும் திருவடி நிலையைச் சிரமேல் சூடவும், குருபத்தி செய்யும் மெய்யன்பர்களுக்கு சன்மார்க்கம் முத்தியை அடையத் துணை புரியும்.

*1480.* ***தெளிவறி யாதார் சிவனை யறியார்***
***தெளிவறி யாதார் சீவனு மாகார்***
***தெளிவறி யாதார் சிவமாக மாட்டார்***
***தெளிவறி யாதவர் தீரார் பிறப்பே.***

சிவம் அகண்ட வியாபகப் பொருள் என்பதை அறியாதார் மனத்தெளிவு பெறாதவர்கள், தெளிவில்லாதவரானபடியால் சீவனது வியாபக ஆற்றலை அடையமாட்டார், சீவன் வியாபகமாகாத போது சிவமாக மாட்டார், அதனால் தெளிவில்லாதவர் பிறப்பு முடிவுறாது பெருகி நிற்கும்.

*1481.* ***தானவ னாகித் தாவைந்தா மலஞ்செற்று***
***மோனம தாமொழிப் பான்முத்த ராவது***
***மீனமில் ஞானானு பூதியில் இன்பமுந்***
***தானவ னாயற்ற லானசன் மார்க்கமே.***

சுத்த ஆன்மாவாகிய சிவமேயாகி, தன்பால் பொருந்திய ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி ஆகிய ஐம்மலங்களையும் நீக்கி, மோனம் என்ற பெயரினையுடைய ஒரு மொழியான பிரணவத்தை அடைந்து முத்தான்மா ஆவதும், குற்றமில்லாது ஞான அனுபத்தில் இன்பம் அடைவதும், தான் சிவமாகத் தன்னிலை கெடல் சன்மார்க்கமாம்.

*1482.* ***சன்மார்க்கத் தார்க்கு முகத்தொடு பீடமுஞ்***
***சன்மார்க்கத் தார்க்கும் இடத்தொட தெய்வமுஞ்***
***சன்மார்க்கத் தார்க்கு வருக்கத் தரிசனம்***
***எம்மார்க்கத் தார்க்கும் இயம்புவன் கேண்மினோ.***

சன்மார்க்கத்தார்களது முகமே சிவன் உறையும் பீடம் என்பதும், சன்மார்க்கத்தராது இடமே கோயில் என்பதும், சன்மார்க்கத்தாரது கூட்டத்தைக் காண்பதே சிவதரிசனம் என்பதும், எம்மார்க்கத்தில் உள்ளோர்க்கும் கூறுகின்றேன், கேட்பீர்களாக.

*1483.* *சன்மார்க்க சாதனந் தான்ஞான ஞேயமாம்*
*பின்மார்க்க சாதனம் பேதையர்க் காய்நிற்கும்*
*துன்மார்க்க விட்ட துரியத் துரிசற்றார்*
*சன்மார்க்கத் தானவ னாகுஞ்சன் மார்க்கமே.*

சன்மார்க்க சாதனமானது சிவத்தை அறியும் ஞானமாம், சன்மார்க்கம் ஒழிந்த ஏனைய சாதனம் அறிவில்லாதவர்க்கு ஆம், தீமை தரும் மார்க்கத்தை விட்டுத் துரியத்தில் பொருந்திக் குற்றம் நீங்கினவர், சன்மார்க்கந்தான் அவனாகும் நன்னெறியாம்.

*1484.* *சன்மார்க்க மெய்த வருமருஞ் சீடர்க்குப்*
*பின்மார்க்க மூன்றும் பெறவியல் பாமென்றால்*
*நன்மார்க்க தானே சிவனோடு நாடவே*
*சொன்மார்க்க மென்னச் கருதிகைக் கொள்ளுமே.*

சன்மார்க்கத்தை அடைய வருகின்ற அருமையான சாதகர்க்கு, ஏனைய மூன்று மார்க்கங்களும் பெறுவது இயல்பாதலின், சிவனோடு பொருந்தும் நன்மார்க்கமே அவர்கட்கு வேண்டுவது ஆம், இதுவே பிரணவ மார்க்கம் என வேதம் கூறியது என்று கடைப்பிடிக்கவும்.

*1485.* *அன்னிய பாசமும் ஆகுங் கருமமும்*
*முன்னும் அவத்தையும் மூலப் பகுதியும்*
*பின்னிய ஞானமும் பேதாதி பேதமுந்*
*தன்னொடுங் கண்டவர் சன்மார்க்கத் தோரே.*

தனக்கு வேறாய பாசத்தையும், பாசத்தால் கருமத்தையும், கன்மங் காரணமாகப் பிறப்பு இறப்புகளாகிய அவத்தைகளையும், அவத்தைக்கு ஏதுவான மூலப் பிரகிருதியையும், இவற்றுடன் பொருந்தி இவற்றை அறியும் ஞானத்தையும், இவைகளின் பேதங்களையும், இவற்றோடு ஆன்மாவாகிய தன்னையும், கண்டவர் சன்மார்க்கத்தார் ஆவர்.

*1486.* *பசுபாச நீக்கிப் பதியுடன் கூட்டிக்*
*கசியாத நெஞ்சங் கசியக் கசிவித்*
*தொசியாத வுண்மைச் சொரூபோ தயத்துற்*
*றசைவான தில்லாமை யானசன் மார்க்கமே.*

ஆன்மாவைப் பாசத்தினின்றும் பிரித்து, பதியோடு சேர்த்து, கனியாத மனத்தை நன்றாகக் கனிய வைத்து, கெடாத மெய்ப்பொருள் தோற்றத்துள் பொருந்தி, அசையாதபடி சமாதி கூடியிருத்தலே சன்மார்க்கமாம்.

*1487.* *மார்க்கஞ்சன் மாக்கிகள் கிட்ட வகுப்பது*
*மார்க்கஞ்சன் மார்க்கமே யன்றிமற் றொன்றில்லை*
*மார்க்கஞ்சன் மார்க்க மெனுநெறி வைகாதோர்*
*மார்க்கஞ்சன் மார்க்க மாஞ்சித்த யோகமே.*

சன்மார்க்கத்திலுள்ளோர் அடைய வகுக்கும் மார்க்கம், சன்மாக்கமாகிய மார்க்கமின்றிப் பிறிதொன்றில்லை, மார்க்கமாகிய சன்மார்க்க நெறியைப் பொருந்தாதோர், மார்க்கம் யோக சித்திகளைத் தரும் நன்னெறியாம்.

## 10. சகமார்க்கம்

சகமார்க்கமாவது, தோழமை நெறியாம், சகமார்க்கத்தில் நிற்போர் சிவரூபத்தைப் பெறுவர்.

*1488.* *சன்மார்க்கந் தானே சகமார்க்க மானது*
*மன்மார்க்க மாமுத்தி சித்திக்குள் வைப்பதாம்*
*பின்மார்க்க மானது பேராப் பிறந்திறந்*
*துன்மார்க்க ஞானத் துறுதியு மாமே.*

ஞான நெறியானது தோழமை நெறியாலே அடையப்படுவது, இராஜ மார்க்கமாகிய இது பின் வீடுபேற்றையும் சித்தியையும் தருவதாம், இவையல்லாத பிற்பட்ட நெறிகள் நீங்காப் பிறப்பையும் இறப்பையும் தந்து, ஞானத்தை நினைத்து நினைத்து உறுதி பெற வாயில்களாகும்.

*1489.* *மருவுந் துவாதச மார்க்கமில் லாதார்*
*குருவுஞ் சிவனுஞ் சமயமுங் கூடார்*
*வெருவுந் திருமகள் வீட்டில்லை யாகும்*
*உருவுங் கிளையும் ஒருங்கிழப் பாரே.*

சிரசின்மேல் பன்னிரண்டு அங்குலத்தில் பொருந்துகின்ற மார்க்கத்தை அறியாதார், துவாத சாந்தத்திலுள்ள குரு மண்டலமாகிய ஒளி மண்டலத்தையும், இவற்றை உணர்த்தும் சமயத்தையும் அறியாதவராவார், இவரது இல்லத்தில் இலக்குமி தங்காது அகன்றுவிடும், தனது உருவத்தையும், சுற்றத்தையும் விட்டு இறந்துபடுவர்.

*1490.* *யோகச் சமாதியின் உள்ளே யகலிடம்*
*யோகச் சமாதியின் உள்ளே யுளரொளி*
*யோகச் சமாதியின் உள்ளே யுளசத்தி*
*யோகச் சமாதி யுகந்தவர் சித்தரே.*

துவாத சாந்தத்தில் நிலை பெற்றவர் யோக சமாதியைப் பெறுவர், இந்நிலையில் பிரபஞ்சம் எல்லாம் சூக்குமமாக அங்குள்ளன, அவ்வொளியில் சிவமும் சத்தியும் உள்ளன, இதனை விரும்பி மேற்கொண்டவர்களே சித்தர்கள்.

*1491.* *யோகமும் போகமும் யோகியர்க் காகுமால்*
*யோகம் சிவரூபம் உற்றிடும் உள்ளத்தோர்*
*போகம் புவியிற் புருடாந்த சித்திய*
*தாகும் இரண்டும் அழியாத யோகிக்கே.*

யோகமும் போகமும் ஆகிய இரண்டும் யோகியர்க்கு ஆகும், யோகத்தால் சிவசாரூபம் பெற்று விளங்குவார், அதனால் அவர் பூவுலகில் அடையப்பெறும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு புருடாத்தங்களையும் அடைந்தவராவார், அழியாத யோகிக்கு யோகமும் போகமும் பொருந்துவனவாம்.

*1492.* *ஆதார சோதனை யானாடி கத்திகள்*
*மேதாதி யீரெண் கலாந்தத்து விண்ணொளி*
*போதா லயத்துப் புலன்கர ணம்புந்தி*
*சாதா ரணங்கெட லாஞ்சக மார்க்கமே.*

ஆதார சோதனையால் நாடி சுத்தி அமைந்து, மேதை (அகரம்) முதலான பதினாறு கலைகளில் விளங்கும் ஆகாயமும் அவற்றில் விளங்கும் ஒளியும் புலனாகும், அறிவின் ஆலயம் என்ற ஆன்மாவில் புலன்களும் பொறிகளும் புத்தியும், தம்முடைய இயல்பான கீழ் இழுக்குத்தன்மையை விட்டு நிற்பதே சகமார்க்கமாகும்.

*1493.* *பிணங்கிநிற் கின்றவை ஐந்தையும் பின்னை*
*அணங்கி யெறிவ னயிர்மன வாளாற்*
*கணம்பதி னெட்டுங் கருதும் ஒருவன்*
*வணங்கவல் லான்சிந்தை வந்துநின் றானே.*

ஆன்மாவைக் கீழ் நோக்கில் அழைத்துச் செல்லுகின்ற ஞானேந்திரியங்கள் ஐந்தையும், பின்னர் மனம் என்னும் கூரிய வாளால் வருத்தித் துன்புறுத்துவேன், அப்போது வணங்கத்தக்கவனும் ஆகிய இறைவன், சிந்தையில் பொருந்தி நின்றான்.

*1494.* *வளங்கனி யொக்கும் வளநிறத் தார்க்கும்*
*வளங்கனி யொப்பதோர் வாய்மைய னாகும்*
*உளங்கனிந் துள்ள முகந்திருப் பார்க்குப்*
*பழங்கனிந் துள்ளே பகுந்துநின் றானே.*

வளமான கனியைப் போன்ற கனிவையுடைய செம்மையாளர்க்கும், மனங்கனிந்து உள்ளே மகிழ்ந்திருப்பார்க்கு, பழத்தினின்றும் சாற்றினை நீக்கி எடுப்பது போல இவரைத் தத்துவங்களினின்றும் நீக்கித் தானும் உடனிருந்தான்.

## 11. சற்புத்திர மார்க்கம்

சற்புத்திர மார்க்கமாவது கிரியை நெறியாகும். பூசித்தல் முதலியன இந்நெறிக்குரிய அங்கங்களாம்.

*1495.* *மேவிய சற்புத்திர மார்க்க மெய்த்தொழில்*
*தாவிப்ப தாஞ்சக மார்க்கஞ் சகத்தொழில்*
*ஆவ திரண்டும் அகன்று சகமார்க்கத்*
*தேவியோ டொன்றல் சன்மார்க்கத் தெளிவதே.*

பொருந்திய சற்புத்திர மார்க்கம் கிரியை வழி நிற்பதாம், சகமார்க்கமாவது யோகத்தைப் பயப்பது, மேற்கூறிய இரு மார்க்கங்களும் கடந்து யோக சத்தியோடு பொருந்தியிருத்தல், சன்மார்க்கத்தால் பெறும் ஞானமாம்.

*1496.* *பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்*
*ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை*
*நேசித்திட் டன்னமும் நீகத்தி செய்தன்மற்*
*றாசற்ற சற்புத் திரமார்க்க மாகுமே.*

பாராயணம் செய்தல், இறைவனது புகழைச் சொல்லி வணங்குதல், குறிப்பிட்ட மந்திரங்களைச் கூறிச் சிந்தித்தல், குற்றமற்ற தவ ஒழுக்கங்களை மேற்கொள்ளல், உண்மை பேசுதல், காமாதி அறுபகை நீங்குதல் , அன்போடு ஹம்சபாவனை செய்தல் ஆகிய இவ்வெட்டும், குற்றமற்ற சற்புத்திர மார்க்கத்துக்குரிய உறுப்புகளாம்.

*1497.* *அறுகாற் பறவை அலர்தேர்த் துழலும்*
*மறுகா நரையன்னந் தா மரை நீலங்*
*குறுகா நறுமலர் கொய்வன கண்டுஞ்*
*சிறுவால் அறநெறி சேரகி லாரே.*

ஆறுகால் பறவையான வண்டானது தேன் சேகரிக்கப் பல மலர்களை நாடி அலையும், அலையிலும் வெள்ளை அன்னமானது தாமரையை விட்டுக் கவர்ச்சியான நீலோற்பலம் மலரை அடையாது, அது போலக் கிரியையாளர் மணமிகு மலர்களைப் பறித்துச் சிவனை வழிபடுவது கண்டும், ஏனையோர் சிறுபொழுதேனும் சிவனை வழிபடாது பிற வழிச் சென்று கெடுகின்றார்களே !

*1498.* *அருங்கரை யாவது அவ்வடி நீழற்*
*பெருங்கரை யாவது பிஞ்ஞக னாணை*
*வருங்கரை யேகின்ற மன்னுயிர்க் கெல்லாம்*
*ஒருங்கரை யாயுல கேழினொத் தானே.*

பிறவிப் பெருங்கடலுக்கு அருமையான கரையாவது திருவடி நீழலே, பெரிய கரையாவது அரன் ஆணையின் வண்ணம் அமைதலே, திருவடியாகின்ற கரைக்குச் செல்லுகின்ற நிலைபெற்ற உயிர்கட்கெல்லாம், ஒரே அரசாய் ஏழு உலகினும் ஒத்து விளங்கியவனாவான் இறைவன்.

*1499.* *உயர்த்தும் பணிந்தும் முகந்துந் தழுவி*
*வியந்தும் அரனடிக் கேமுறை செய்மின்*
*பயந்தும் பிறவிப் பயனது வாகும்*
*பயந்து பரிக்கிலப் பான்மைய னாமே.*

மனோபாவனையில் உயர்ந்தும், திருவடியை வழிபட்டும், இன்பத்தைப் பருகியும், தழுவிப் புளாங்கிதமுற்றும், சிவபெருமான் திருவடிக்கே விண்ணப்பம் செய்யுங்கள், வரும் பிறவிக்குப் பயந்து எடுத்த பிறவியைப் பயனுடையதாக்குவது அதுவாகும், தம் இழிநிலைக்குப் பயந்து அவனைத் தாங்குபவனாகக் கொள்வார்க்கு அவன் தாங்குபவனாகவே அமைகின்றான்.

*1500.* *நின்று தொழுவன் கிடந்தெம் பிரான்தன்னை*
*என்றுந் தொழுவன் எழிற்பரஞ் சோதியைத்*
*துன்று மலர்தூவித் தொழுமின் தொழுந்தோறுஞ்*
*சென்று வெளிப்படுந் தேவர் பிரானே.*

நான் நின்று தொழுவேன், அழகிய பெருமானைக் கிடந்து என்றும் தொழுவேன், ஆதலால் நீங்களும் அழகிய பரஞ்சோதியாகிய இறைவனைப் பொருந்திய மலர் கொண்டு தொழுது வழிபடுங்கள், அவ்வாறு தொழும்போது தேவதேவனாகிய சிவபெருமான் தொழுவார்தம் சிந்தனையில் வெளிப்பட்டருளுவான்.

*1501.* *திருமன்னுஞ் சற்புத்திர மார்க்கச் சரியை*
*உருமன்னி வாழும் உலகத்தீர் கேண்மின்*
*கருமன்னு பாசங் கைகூம்பத் தொழுது*
*இருமன்னு நாடோறும் இன்புற் றிருந்தே.*

முத்தியை அளிக்க வல்ல சற்புத்திர மார்க்கத்துக்கு வாயிலாகவுள்ள சரியை பற்றி, வினைவழி வடிவு பெற்று வாழும் உலகத்தீர்! கேளுங்கள், கருவில் செலுத்துகின்ற வினைக் கூட்டங்கள் பணிய இறைவனை வணங்கி, நாடோறும் இன்பமாக நிலைபெற்று இருங்கள்.

## 12. தாச மார்க்கம்

தாச மார்க்கமாவது திருக்கோயிலில் சென்று தொண்டு செய்வது.

*1502.* *எளியனல் தீப மிடல்மலர் கொய்தல்*
*அளிதின் மெழுக லதுதூர்த்தல் வாழ்த்தல்*
*பளிமணி பற்றல் பன்மஞ் சனமாதி*
*தளிதொழில் செய்வது தான்தாச மார்க்கமே.*

செய்தவற்கு எளியனவாகிய நல்ல விளக்கைத் திருக்கோயிலில் ஏற்றுங்கள், பூச்கொய்தல், அன்போடு மெழுகுதல், திருவலகிடுதல் (கூட்டல்), இறைவனை வாழ்த்துதல், பூசை காலங்களில் கோயில்களில் மணி பற்றி அடித்தல், திருமஞ்சனம் சேர்த்தல் முதலிய திருக்கோயில் பணிகளைச் செய்வதுதான் தொண்டு நெறியாம்.

***1503.*** ***அதுவிது வாதிப் பரமென் றகல்வர்***
***இதுவழி யென்றங் கிறைஞ்சின ரில்லை***
***விதிவழி யேசென்று வேந்தனை நாடு***
***மதுவிது நெஞ்சில் தணிக்கின்ற வாறே.***

ஆதிப் பரம்பொருள் அது என்றும் இது என்றும் ஐயுற்றுத் துணிவின்றி நீங்குவர், இதுவே பரம்பொருள், இதனை வழிபடுதலே முறை என்று துணிந்து வணங்கினர் எங்கும் இல்லை, ஆனால் உமக்கு அமைந்துள்ள கர்ம நியதிப்படி எதில் பற்றுள்ளதோ அவ்வழியே சென்று தலைவனை விரும்பி வழிபடுவாயாக, அதுவே அது இது என்றும் ஐயத்தை நம் மனத்தினின்றும் போக்கும் வழியாகும்.

***1504.*** ***அந்திப்பன் திங்க ளதன்பின்பு ஞாயிறு***
***சிந்திப்பன் என்றும் ஒருவன் செறிகழல்***
***வந்திப்ப வானவர் தேவனை நாடோறும்***
***வந்திப்ப தெல்லாம் வகையின் முடிந்ததே.***

சந்திரனால் அமையும் கீழான உணர்ச்சிகளை அடக்குவேன், அதன் பிறகு அறிவினால் நிகழும் ஆராய்ச்சி, ஆராய்ச்சியின் திட ஞானம் பெற்று எங்கும் நிறைந்த திருவடியை (நாதத்தை) எப்போதும் சிந்தித்துக் கொண்டிருப்பேன். தேவதேவனாகிய சிவனை நாள்தோறும் வணங்குவேன், இவ்வாறு வழிபடுவதில் எல்லா வழிபாடுகளும் ஒரு முடிவைப் பொருந்துவதாயிற்று.

***1505.*** ***அண்ணலை வானவர் ஆயிரம் பேர்சொல்லி***
***உன்னுவர் உள்மகிழ்ந் துண்ணின் றடிதொழக்***
***கண்ணவ னென்று கருது மவர்கட்குப்***
***பண்ணவன் பேரன்பு பற்றிநின் றானே.***

தேவர்கள் பரசிவத்தை ஆயிரம் நாமங்கள் கூறி அருச்சித்துத் தியானிப்பர், ஆனால், அவர்களை விடுத்து உள்ளம் மகிழ்ந்து திருவடியை மனத்தில் எண்ணித் தொழுது, கண் போன்றவன் என்று கருதி நிற்கும் அடியார்கட்கு, நாத மயமான இறைவன் அவரது பேரன்புக்கு வெளிப்பட்டு அருளுவான்.

***1506.*** ***வாசித்தும் பூசித்தும் மாமலர் கொய்திட்டும்***
***பாசிக் களுத்தில்வீழ் கல்லாம் மனம்பார்க்கில்***
***மாசற்ற சோதி மணிமிடற் றண்ணலை***
***நேசத் திருத்த நினைவறி யாரே.***

வாசித்தாலும் பூசித்தாலும் சிறந்த மலர்களைக் கொய்து கொணர்ந்தாலும், சொன்னால் கல் வீழ்ந்த பாசிக்குளம் போன்று தெளிவில்லாதது மனம், ஆதலின் இவர்கள் குற்றமற்ற சோதியாகிய நீலகண்டப் பெருமானை, அன்பினால் இடைவிடாது மனத்தில் இருந்த நினைவு அறியாதவரேயாவர்.

## 13. சாலோகம்

சாலோகம் - இறைவன் உலகம்.

***1507.*** ***சாலோக மாதி சரியாதி யிற்பெறுஞ்***
***சாலோகஞ் சாமீபத் தங்குஞ் சரியையால்***
***மாலோகஞ் சேரில் வழியாகுஞ் சாரூபம்***
***பாலோகம் இல்லாப் பரனுரு வாமே.***

சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் ஆகிய நால்வகை முத்திகளும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நெறிகளால் அமையும். அவற்றுள் சரியை நெறி பற்றி நிற்போர் இறைவன் வாழும் உலகத்தை அடைந்து அவனுடைய சமீபத்தில் அமைவர், அத்தகைய உலகில் சாமீபத்தை அடைந்தவர் அவனது உருவத்தைப் பெறுவர், இவர் இறைவனைப் போன்ற ஒளி உருவைப் பெற்று இப்பரந்த உலகில் இல்லாமல் எங்கும் நிலைபெறும் பரன் உருவாமே.

***1508.*** ***சமயங் கிரியையிற் றன்மனங் கோயில்***
***சமய மனுமுறை தானே விசேடஞ்***
***சமயத்து மூலந் தனைத்தேறன் மூன்றாஞ்***
***சமயாபி டேகந் தானாஞ் சமாதியே.***

சமயத்தைப் பற்றி நிற்போர் செய்யத்தகும் முதல் கிரியை தன்னுள்ளத்தில் வழிபடு கடவுளை வைத்தல், சமயத்தில் விசேடம் என்பது அவ்வழிபடு கடவுளுக்குரிய மந்திரத்தை உன்னுதல், சமயத்திலுள்ள மூலமந்திரத்தின் தத்துவம் தெளிதல் மூன்றாவதாகிய நிர்வாண தீட்சையாகும், வழிபடு கடவுளை நினைந்து சமாதி கூடல் சமயத்துக்குரிய அபிடேகமாம்.

## 14. சாமீபம்

சாமீபம் - இறைவன் சமீபத்தில் உறைதல்.

*1509.* *பாசம் பகவான தாகும்இச் சாலோகம்*
*பாச மருளான தாகும்இச் சாமீபம்*
*பாசஞ் சிரமான தாகும்இச் சாரூபம்*
*பாசங் கரைபதி சாயுச் சியமே.*

சாலோக முத்தியில் பாசத்தன்மை கெடாது நின்று பிறவியைத் தரும், சமீபத்தில் பாசம் பந்தப்படுத்தாது அருளாய் நிற்கும், சாரூபத்தில் பாசமானது மேலும் மேன்மையைத் தரும், சாயுச்சியத்தில் பாசமானது முழுதுங் கரைந்து பதியை அடைவிக்கும்.

## 15. சொரூபம்

சாரூபம் - இறைவன் உருவம் பெறுதல்

*1510.* *தங்கிய சாரூபந் தானெட்டாம் யோகமாந்*
*தங்குஞ் சன்மார்க்கந் தனிலன்றிக் கைகூடா*
*அங்கத் துடல்சித்தி சாதன ராகுவர்*
*இங்கிவ ராக விழிவற்ற யோகமே.*

நிலைபெற்ற சாரூபம் என்பது யோகத்தின் எட்டாவது உறுப்பான சமாதியால் அமைவது, தங்கிய ஞானநெறி பற்றி நின்றார்க்கன்றி கைகூடாதாகும், இந்நெறியால் உறுப்போடு கூடிய சரீரசித்தி கைவரப்பெறுவர், இங்கு இவரது உடல் குற்றமற்ற யோகத்தால் திருத்தி அமைக்கப்படும்.

*1511.* *சயிலலோ கத்தினைச் சார்ந்த பொழுதே*
*சயிலம தாகுஞ் சராசரம் போலப்*
*பயிலுங் குருவின் பதிபுக்க போதே*
*கயிலை இறைவன் கதிர்வடி வாமே.*

மேருமலையைச் சார்ந்த பொழுதே, உலகில் இயங்குகின்ற பொருள், நிற்கின்ற பொருள் அனைத்தும் மேருவைப் போன்று பொன்மயமாதல் போல, நாத தத்துவத்தில் விளங்கும் குரு மண்டலத்தை அடைந்த போதே, கயிலாயப் பதியின் பேரொளி வடிவினை அடைவர்.

## 16. சாயுச்சியம்

சாயுச்சியம் - இறைவனோடு இரண்டறக் கலத்தல்.

*1512.* *சைவஞ் சிவனுடன் சம்பந்த மாவது*
*சைவந் தனையறிந் தேசிவஞ் சாருதல்*
*சைவஞ் சிவந்தன்னைச் சாராமல் நீவுதல்*
*சைவஞ் சிவானந்தஞ் சாயுச் சியமே.*

சைவம் என்பத சிவனுடன் பொருந்தி நிற்றலாம். சிவதத்துவத்தை உணர்ந்தே அதில் விளங்கும் சிவத்துடன் பொருந்தல், சமாதியில் பொருந்தாது, சிவம் தம்மிடம் பிரகாசித்துள்ளதை உணர்ந்துகொண்டிருத்தல், சிவத்துடன் பொருந்தி உவகை விட்டுச் சமாதியில் நிலைப்பவர் சிவானந்தப் பேறு பெற்றவராவர்.

*1513.* *சாயுச் சியஞ்சாக் கிராதீதஞ் சாருதல்*
*சாயுச் சிமுப சாந்தத்துத் தங்குதல்*
*சாயுச் சியஞ்சிவ மாதல் முடிவிலாச்*
*சாயுச் சியமனத் தானந்த சத்தியே.*

விழிப்பின்கண் தன்னை மறந்திருத்தல் சாயுச்சியம் அடைதல், விருப்பு வெறுப்பு அற்ற உபசாந்த நிலையில் உள்ளவரும் சாயுச்சியம் பெற்றவரே, சிவத்துடன் இலயமாதல், எல்லையற்ற ஆனந்தத்தில் திளைத்திருப்பதாகிய சாயுச்சியமே.

## 17. சத்திநிபாதம்

### மந்தம்

சத்திநி பாதம் -சத்தி நன்கு பதிதல். ஆன்மாவை விளக்கமுறாது பந்தித்திருந்த மல சத்திகள் வீழ்ந்தொழிந்து அருளைப் பெருக்கும் சத்திகள் பதிதல் அருள் பதிவுக்கேற்ப அறிவு பிரகாசிக்கும் என்க. இதில் நான்கு நிலைகள் உள்ளன. 1. மந்தம் - அற்ப அறிவைப் பெற்றவன். 2. மந்த தரம் - மந்தமாய் இருந்து மந்திரங்களை உபாசிப்பேன். 3. தீவிரம் - யோகப் பயிற்சி செய்வோன், 4. தீவிரதரம் - ஞான மார்க்கத்தை அநுசரிப்பவன்.

*1514. இருட்டறை மூலை யிருந்த குமரி*
*குருட்டும் கிழவனைக் கூடல் குறித்துக்*
*குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி*
*மருட்டி யவனை மணம்புரிந் தாளே.*

சுவாதிட்டானத்துக்குத் தொடர்பாயுள்ள மூலாதாரத்திலிருந்த குண்டலினி சத்தி, அஞ்ஞானத்திலுள்ள ஆன்மாவுக்கு ஞானம் உண்டாதற்பொருட்டு, அஞ்ஞானத்தைப் போக்கி, பாச இயல்பையும் பசு இயல்பையும் பதி இயல்பையும் உணரச்செய்து, ஆசை காட்டி அவனை மணம் புரிந்தாளே.

*1515. தீம்புல னான திசையது சிந்திக்கில்*
*ஆம்புல னாயறி வார்க்கமு தாய்நிற்குந்*
*தேம்புல னான தெளிவறி வார்கட்குக்*
*கோம்புல னாடிய கொல்லையு மாமே.*

இனிமையைத் தருகின்ற நிலையினை எண்ணில், சிவனை அறிகின்ற இடமாய், அறிகின்றவர்கட்கு இன்பம் தருவதாய் அமையும், தேன் போலும் பொருளாகிய தெளிவினை நுகரகின்றவர்க்கு, பசுக்கள் விரும்பிய புன்செய் நிலமாகிய மூலாதாரம் அமையும்.

*1516. இருள்நீக்கி எண்ணில் பிறவி கடத்தி*
*அருள்நீங்கா வண்ணமே யாதி யருளும்*
*மருள்நீங்கா வானவர் கோனொடுங் கூடிப்*
*பொருள்நீங்கா இன்பம் புலம்பயில் தானே.*

ஆணவமாகிய இருளிலிருந்து எடுத்து எண்ணற்ற பிறவிகளைக் கடக்கச் செய்து, திருவருளினின்றும் என்றும் நீங்காவண்ணம் ஆதிசத்தி அருள் செய்வாள், மயக்கம் நீங்காத தேவர்களுக்குத் தலைவானகிய சிவத்துடன் பொருந்தி, விந்து கெடாத இன்பத்தை அநுபவிக்கின்ற இடம் மூலாதாரமாகும்.

*1517. இருள்சூ ழறையில் இருந்தது நாடிற்*
*பொருள்சூழ் விளக்கது புக்கெரித் தாற்போன்*
*மருள்சூழ் மயக்கத்து மாமலர் நந்தி*
*அருள்சூழ் இறைவனும் அம்மையு மாமே.*

குண்டலினி சத்தி இத்தகைய இருட்டறையில் இருந்த கருத்தை ஆராயின், இருளில் பொருளால், சூழப்பெற்ற விளக்கு புகுந்து எரிவத போல, ஆணவமாகிய இருளில் விளங்கிய குரு மண்டலம், அருளால் சூழ்ந்த சிவசத்தியாதற்பொருட்டேயாம்.

### மந்திரம்

*1518. மருட்டிப் புணர்ந்து மயக்கமும் நீக்கி*
*வெருட்டி வினையறுத் தின்பம் விளைத்து*
*குருட்டினை நீக்கித் குணம்பல காட்டி*
*அருட்டிகழ் ஞான மதுபுரிந் தானே.*

குண்டலினி சத்தி மேலே சென்று ஆன்ம வியாபகத்தைத் தன் வியாபகத்துள் அடக்கிஆணவ மலத்தோடு மயங்கியிருந்த நிலையைப் போக்கி, கன்மங்களை விலக்கி இன்பமூட்டி, அறியாமையை அகற்றிச் சிவம் விளங்கக்கூடிய திருவருட்குணங்களைப் பதிவித்து, அருள் மயமான ஞானசத்தி விளங்குமாறு செய்தாள்.

*1519. கன்னித் துறைபடிந் தாடிய ஆடவர்*
*கன்னித் துறைபடிந் தாடுங் கருத்திலர்*
*கன்னித் துறைபடிந் தாடுங் கருத்துண்டேற்*
*பின்னைப் பிறவி பிறிதில்லை தானே.*

முன்னர்ப் பெண்ணோடு பொருந்தி குண்டலினியின் ஆற்றலில் விளங்கிய ஆண் மக்கள், அதை மாற்றியமைக்கும் உபாயத்தை உணரவில்லை, அப்படி அதை மாற்றி அமைக்கும் உபாயத்தை உணர்ந்தவர்க்கு, தொடர்ந்து வரும் பிறவித் துன்பம் இனி இல்லையாம்.

***1520.*** ***செய்யன் கரியன் வெளியன்நற் பச்சையன்***
***எய்த உணர்ந்தவர் எய்வர் இறைவனை***
***மைவென் றகன்ற பகடுரி போர்த்தவெங்***
***கைய னிவனென்று காதல்செய் வீரே.***

மூலாதாரத்துச் செய்யாகிய சுவாதிட்டானத்தில் விளங்கும் பிரமனும், அதன் தொடர்பாகிய மணிபூரகத்தில் விளங்கும் திருமாலும், வெளியான மூலாதாரத்தில் விளங்கும் உருத்திரரும், கண்டத்திலிருந்து மறைப்பினைச் செய்யும் மகேசுவரனும், பொருந்துவண்ணம் அறிந்தவர் இறைவனை அடைவர், இறைவானகிய இவன் மையினையும் பின்னடையச் செய்யும் கருமையான யானையின் தோலை உரித்துப் போர்த்த அக்கினி கலையில் விளங்குபவன், என்று அறிந்து உறுதியாகக் காதல் செய்யுங்கள்.

***1521.*** ***எய்திய காலங்கள் எத்தனை யாயினுந்***
***தையலும் தானுந் தனிநா யகமென்பர்***
***வைகலுந் தன்னை வணங்கு மவர்கட்குக்***
***கையிற் கருமஞ்செய் காட்டது வாமே.***

உலகிலுள்ள சீவபேதம் எத்தனை தாம் அழிந்து தோன்றினாலும், சத்தியும் சிவமும் என்றும் அழியாப் பெருமை உடையது என்பர், நாடோறும் விடியற்காலையில் சிவசத்தியை வழிபடுவோர்க்கு, அவரது சுழுமுனையில் விளங்கி உணர்த்தியருளுவான்.

***1522.*** ***கண்டுகொண் டோமிரண் டுந்தொடர்ந் தாங்கொளி***
***பண்டுபண் டோயும் பரமன் பரஞ்சுடர்***
***வண்டுகொண் டாடு மலர்வார் சடையண்ணல்***
***நின்றுகண் டார்க்கிருள் நீங்கிநின் றானே.***

உடம்பிலுள்ள சூரிய சந்திரனைத் தொடர்ந்து சென்று ஒளியினைக் கண்டுகொண்டோம், அவை பழமையாகவே பரமசிவமாகிய சோதிப் பிழம்பிடம் சென்று முடிவுறும், ரீங்காரத் தொனியோடு கூடிய சகஸ்ரதளத்தில் ஒளியோடு பிரகாசிக்கும் அண்ணலை, நிலை பெற்றுக் கண்டவர்க்கு அவரது உள்ளத்தில் இருளை மாற்றியருளினான்.

## தீவிரம்

***1523.*** ***அண்ணிக்கும் பெண்பிள்ளை அப்பனார் தோட்டத்தில்***
***எண்ணிக்கும் ஏழேழ் பிறவி யுணர்விக்கும்***
***உண்ணிற்ப தெல்லாம் ஒழிய முதல்வனைக்***
***கண்ணுற்று நின்ற கனியது வாகுமே.***

எவ்வுயிர்க்கும் தந்தையாகிய சிவன் வாழும் தோட்டமாகிய சகஸ்ரதளத்தில் உலகியல் பெண்பிள்ளை அளிக்கும் விஷயானந்தம் சாதனமாய் இன்பம் கொடுக்கும், அதனால் சாதகனுடைய எழுவதைத் தோற்றத்தில் எழுந்த பிறவிகளையும் அவைகளில் செய்த நல்வினை தீவினைகளையும் அறியும் திவ்விய திருஷ்டி கிட்டும், தன் உள்ளத்தில் சிவம் பிரகாசியாது நின்ற இடையூறு அனைத்தும் அகல, சிவத்தைக் கண்டு பொருந்தி சிவக்கனியின் சுவையாக நீங்கள் ஆகுங்கள்.

***1524.*** ***பிறப்பை யறுக்கும் பெருந்தவம் நல்கும்***
***மறப்பை யறுக்கும் வழிபட வைக்குங்***
***குறப்பெண் குவிமுலை கோமள வல்லி***
***சிறப்போடு பூசனை செய்யநின் றார்க்கே.***

அஞ்ஞானமாகிய காட்டில் வாழும் இளமை நலம் குன்றாத குண்டலினியம்மை, சிறப்பாகத் தம்மிடம் விளக்கமுறும்படி பூசை செய்து காண்பவர்க்கு, பிறப்பை அறுத்துப் பெரிய தவத்தின் பயனை அளிப்பாள், அறியாமை காரணமாகவுள்ள மறதியை ஒழித்துத் தன்னைச் சதாகாலமும் வழிபடச் செய்வாள்.

***1525.*** ***தாங்குமின் எட்டுத் திசைக்குந் தலைமகள்***
***பூங்கமழ் கோதைப் புரிகுழ லாளொடும்***
***ஆங்கது சேரும் அறிவுடை யார்கட்குத்***
***தூங்கொளி நீலந் தொடர்தலு மாமே.***

எட்டுத் திசைக்குத் தலைவனாகிய சிவத்தை, ஆதாரபதுமங்களை மாலையாகக் கொண்டு சித்ரணி நாடியில் விளங்கும் குண்டலினி சத்தியோடு, பொருந்தித் தியானியுங்கள், அங்ஙனம் பொருந்தித் தியானிப்பவர்க்கு, மயக்கத் தரும் நீல ஒளியைத் தொடர்ந்து அருள் பெற முடியும்.

*1526.* *நணுகினு ஞானக் கொழுந்தொன்று நல்கும்*
*பணிகிலும் பன்மலர் தூவிப் பணிவன்*
*அணுகிய தொன்றறி யாத வொருவன்*
*அணுகும் உலகெங்கு மாவியு மாமே.*

மேலே கண்ட வகையில் சத்தியின் அருள் பெற்றவனை அடைந்த பிறர்க்கு ஞானம் அமையும், அவனை வணங்கின் அவனும் பல மலர்களைத் தூவி வழிபடுவான், அத்தகைய மேலோன் தன்னைப் பணிவாரைக் கண்டு செருக்குக் கொள்ளாமல் சமத்துவ நிலையில் நிற்பன், அவன் உலகெங்கும் சென்று வரும் ஆற்றலைப் பெறுவான்.

## தீவிரதரம்

*1527.* *இருவினை நேரொப்பில் இன்னருட் சத்தி*
*குருவென வந்து குணம்பல நீக்கித்*
*தருமெனு ஞானத்தால் தன்செய லற்றால்*
*திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே.*

நல்வினை தீவினையாகிய இரண்டும் சமமாக ஒத்த காலத்தில், இனிமையான அருள் சத்தி குரு மண்டலத்தில் விளங்கி, ஆன்மப் பிரகாசம் அடைவதற்கு இடையூறான குணங்களைப் போக்கியருளுவள் என்னும் அறிவால், தன்முனைப்பால் செய்யும் செயலற்றிருப்பின், மும்மலங்களும் கெட்டுச் சிவமேயாய் விளங்குவன்.

*1528.* *இரவும் பகலும் இலாத இடத்தே*
*குரவஞ் செய்கின்ற குழவியை உன்னி*
*அரவஞ்செய் யாமல் அவளுடன் சேரப்*
*பரிவொன்றி லாளும் பராபரை தானே.*

விந்து நாதம் இல்லாத இடமாகிய நாதாந்தத்தில், ஓசையை உண்டாக்குகின்ற சத்தியைத் தியானித்து, மந்திரமற்ற நாதத்தில் அவளுடன் ஒன்றினால், பராபரையாகிய அவளும் அன்போடு இவனைப் பொருந்தி வாழ்வள்.

*1529.* *மாலை விளக்கும் மதியமும் ஞாயிறுஞ்*
*சால விளக்குந் தனிச்சுடர் அண்ணலுள்*
*ஞானம் விளக்கிய நாதன்என் உள்புகுந்*
*தூனை விளக்கி யுடனிருந் தானே.*

மாலைக் காலத் தீபம் சந்திரனும், சூரியனும் ஆகிய ஒளிப்பொருள்களுக்கு, மிகவும் ஒளி தந்தருளும் ஒப்பற்ற பரஞ்சுடராகிய அண்ணலும், உண்மை ஞானத்தை விளக்கிய தலைவனும் ஆகிய சிவன், எனது உள்ளத்துப் புகுந்து ஊனுடலைப் பிரகாசிக்கச் செய்து என் உயிருடன் பொருந்தி நின்றனன்.

## 18. புறச்சமய தூஷணம்

புறச்சமய தூஷணம் - புறச்சமய நிந்தனை, புறத்தே இறைவனைக் காண வேண்டும் என்று கூறும் சமயம் புறச்சமயமாகும். புறச்சமயம் பிறவி நீங்கும் வழியினைத் தெரிவிக்க மாட்டாது.

*1530.* *ஆயத்துள் நின்ற அறுசம யங்களுங்*
*காயத்துள் நின்ற கடவுளைக் காண்கிலா*
*மாயக் குழியில் விழுவர் மனைமக்கள்*
*பாசத்தில் உற்றுப் பதைக்கின்ற வாறே.*

கூட்டமாகவுள்ள ஆறு சமயங்களும், உடம்பினுள் விளங்கும் இறைவனைக் காண உதவி செய்யா, அதனால் அச்சமயங்களைப் பற்றி நிற்போர் மயக்கத்தைத் தரும் குழியில் விழுவர், மேலும் அவர் மனைவி மக்களாகிய பாசத்தில் கட்டுண்டு தவிப்பவராவர்.

*1531.* *உள்ளத்து ளேதான் கரந்தெங்கும் நின்றவன்*
*வள்ளல் தலைவன் மலருறை மாதவன்*
*பொள்ளற் குரம்பைப் புகுந்துபுறப்படுங்*
*கள்ளத் தலைவன் கருத்தறி யார்களே.*

எங்கும் நிறைந்தவன் ஒவ்வோர் உயிரினிடமும் அவரவர் உள்ளத்தில் தன்னைக் காட்டாது மறைந்துள்ளார்கள், அவன் கொடை வழங்குவதில் வள்ளல், சிரசிலுள்ள சகஸ்ரதளத்தில் சத்தியும் தானும் பொருந்தி நிற்பான், ஒன்பது வாயில்களைக் கொண்ட உடம்பினுள் புகுந்து மேல் நோக்கிச் செல்லும் கள்வன், அவன் தொழிற்படும் வகையினை உலகினர் அறியாதவராக உள்ளனர்.

*1532.* *உள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் என்பவர்க்*
*குள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் எம்மிறை*
*உள்ளத்தும் இல்லை புறத்தில்லை என்பவர்க்*
*குள்ளத்தும் இல்லை புறத்தில்லை தானே.*

உயிரினிடமாக இருந்து அறிவு செம்மையுற்ற ஞானிகட்கு அவரின் உயிரின் இடமாக இருந்து அருள் புரிவான், உயிருக்கு அந்நியமாய் இருந்து உயிர்களை நடத்துகிறான் என்று பேத ஞானமுடைய பக்தனுக்கு வேறாக வெளியில் நின்று அருள் வழங்குவான் எமது இறைவன், உள்ளும் புறம்பும் இல்லை என்ற நாத்திகர்களுக்கு இரண்டிடத்தும் இல்லாதவனாகிறான்.

*1533.* *ஆறு சமயமுங் கண்டவர் கண்டிலர்*
*ஆறு சமயப் பொருளும் அவனலன்*
*தேறுமின் தேறித் தெளிமின் தெளிந்தபின்*
*மாறுதல் இன்றி மனைபுக லாமே.*

ஆறு சமயங்களையும் அறிந்தவர் இறைவனை உள்ளவாறு உணர்ந்தவர் அல்லர், ஆதலால் ஆறு சமயங்களால் முடிவாகக் கூறப்பட்ட பொருளும் அவன் அல்லன் என்பது துணிபு, ஆகவே, இறைவனைப் பற்றிய அறிவை ஆராய்ந்து தெளியுங்கள், தெளிந்த பின் நிலையான வீட்டின் பத்தை அடையலாம்.

*1534.* *சிவமல்ல தில்லை யறையே சிவமாந்*
*தவமல்ல தில்லை தலைப்படு வார்க்கிங்கு*
*அவமல்ல தில்லை அறுசம யங்கள்*
*தவம்மல்ல நந்திதாள் சார்ந்துய்யு நீரே.*

இவ்வுலகில் சிவத்தைக் காட்டிலும் எங்கும் நிறைந்த மேலான பொருள் இல்லை என்று செப்புவாயாக, ஆன்மாவில் மறைந்துள்ள சிவத்தை அறிந்து அநுபவத்தைப் பெற்றுச் சிறப்படைதலே தவமே தவிர பிற இல்லை, இவ்வுண்மையை அறியாது சமயத்துறையில் புகுந்து சிறக்க விரும்புவார்க்கு ஆறு சமயங்களும் வீணானவையாகும், தவத்தின் பயனை அளிக்கவல்ல உங்கள் குரு மண்டலத்தில் விளங்கும் சிவத்தைச் சார்ந்துய்யுங்கள்.

*1535.* *அண்ணலை நாடிய ஆறு சமயமும்*
*விண்ணவ ராக மிகவும் விரும்பியே*
*முண்ணின் றழியு முயன்றில ராதலான்*
*மண்ணின் றொழியும் வகையறி யார்களே.*

இறைவனைத் தேடி ஆறு சமய நெறி நின்றோரும், விண்ணவராவதற்கு மிகவும் விரும்பி, மயக்கத்துள் பட்டு அழிவர், அவர் தேவ தேவனாகிய இறைவனை அடைய முயற்சி செய்யாதவராதலின் பிறவி நீங்கும் உபாயம் அறியாதவராவார்.

*1536.* *சிவகதி யேகதி மற்றுள்ள எல்லாம்*
*பவகதி பாசப் பிறவியொன் றுண்டு*
*தவகதி தன்னொடு நேரொன்று தோன்றில்*
*அவகதி மூவரும் அவ்வகை யாமே.*

சிவ நெறியே மேலான நெறி, ஏனையவை பிறவியைத் தரும் நெறிகள், அவற்றைச் சாரின் மலத்தால் உளதாம் பிறவியாகிய ஒன்று உண்டு, தன் அகத்தே சிவ ஒளி தோன்றில் தவநெறியாம், பிரமன் விஷ்ணு உருத்திரர் ஆகிய மூவரும் பிறவியை நல்கும் அவநெறியினரேயாம்.

*1537.* *நூறு சமயம் உளவா நுவலுங்கால்*
*ஆறு சமயமவ் வாறுட் படுவன*
*கூறு சமயங்கள் கொண்ட நெறிநில்லா*
*ஈறு பரநெறி யில்லா நெறியன்றே.*

சொல்லப்போனால் பல நூற்றுக்கணக்கான சமயங்கள் உளவாம், ஆறு சமயங்களும் அவ்வகையுள் அடங்கிவிடும், கூறப்பெறும் சமயங்கள் மேற்கொண்ட நெறிகளைத் கடந்த முடிவையுடையது சிவநெறி, இதுவே வீடு பேற்றை அளிக்கும் நெறியாகும்.

*1538.* *கத்துங் கழுதைகள் போலுங் கலதிகள்*
*சுத்த சிவனெங்குத் தோய்வுற்ற நிற்கின்றான்*
*குற்றந் தெளியதார் குணங்கொண்டு கோதாட்டார்*
*பித்தேறி நாளும் பிறந்திறப் பாரே.*

பொருள் அறியாமலே கத்துகின்ற கழுதைகள் போன்றவர்கள் மூடர்கள், தூய்மையான சிவன் எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கின்றான், எனினும் தம்மிடம் குற்றம் நீங்காதார் அவனிடமுள்ள பெருமைக் குணங்களைப் பாராட்டமாட்டார், உண்மை உணராது மயக்கம் அடைந்து பிறந்து இறந்து உழல்வார்.

*1539. மயங்குகின் றாரு மதிதெளிந் தாரும்*
*முயங்கி யிருவினை முழைமுகப் பாச்சி*
*இயங்கிப் பெறுவரே வீறது காட்டிற்*
*பயங்கெட் டவர்க்கோர் பரநெறி யாமே.*

ஞான சாத்திரங்களை ஓதித் தெளிந்தாரும் ஓதாது பத்தி மார்க்கத்தில் நின்றாரும், இருவினை நுகர்ந்து சுழுமுனை நாடியின் வழியே சென்று, முடிவான பிரமரந்திரத்தில் கூடி அருளைப் பெறுவரேல், அச்சந்தவிர்ந்து நிற்போர்க்கு ஒரு மேலான நெறியாகும்.

*1540. சேயன் அணியன் பிணியிலன் பேர்நந்தி*
*தூயன் துளக்கற நோக்கவல் லார்கட்கு*
*மாயன் மயக்கிய மானுட ராமவர்*
*காயம் விளைக்குங் கருத்தறி யார்களே.*

தலயாத்திரை செய்யும் பக்தர்களுக்கு விரும்பிய தலங்களில் நின்றருளுவான், தன்னுடன் உள்ளான் என்பவர்க்கு அவ்வண்ணமே உள்ளே நின்றருளுவான், இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கியவள், அத்தகைய சோதியை நந்தி என்பர், மன ஒருமைப்பாட்டுடன் தியானிக்க வல்லார்கட்குத் தூய்மையான சோதி வடிவில் வெளிப்படுவான், மாயையின் கவர்ச்சி நீங்காதவர்க்குக் கண்ணுக்குப் புலப்படாதவனாகவே உள்ளவன், அதனால் மாயையின் பிடியிலிருந்த மயக்கத்தை விடாதவர், எடுத்த உடம்பின் பயனை உணராதவர்.

*1541. வழியிரண் டுக்குமோர் வித்தது வான*
*பழியது பார்மிசை வாழ்தல் உறுதல்*
*கழியறி வாளன்றன் சொல்வழி முன்னின்*
*றழிவழி வார்நெறி நாடநில் லாரே.*

நற்கதியாகிய முறையை அறிந்து வாழ்பவர்க்கும் அறியாது வாழ்பவர்க்கும் வினைப்போகமாகிய உடம்பு வித்தாம், பூமியின்கண் வாழ்ந்து மீண்டும் பிறப்பையும் இறப்பையும் பெறுதல் பழியாகும், பிராணனைப் பிரமப் புழைக்குச் செலுத்தும் உபாயத்தைக் கற்பிக்கும் குரு வழி நின்று, தம்மை அகண்டாகாரத்தில் ஒன்றுபடுத்திக் கொள்ளும் நெறியை விரும்பவில்லையே!

*1542. மாதவர் எல்லாம் மாதேவன் பிரான்என்பர்*
*நாதம தாக அறியப் படுநந்தி*
*பேதஞ்செய் யாதே பிரான்என்ற கைதொழில்*
*ஆதியும் அந்நெறி யாகிநின் றானே.*

பெரிய தவமுடையார் அனைவரும் மகாதேவனாகிய பரமசிவனைத் தம்மைச் செலுத்துபவன் என்று வணங்குவர், அவன் குரு மண்டலத்தில் ஸ்பந்த ரூபமாக வெளிப்படுவதனால் அறியப்படத்தக்கவன், அந்த ஸ்பந்த உணர்வே அவன் என்று வீணாத்தண்டின் வழியாக வணங்குவாயாகில், அம்முதல்வனும் அந்நெறிக்கண் வெளிப்பட்டருளுவான்.

*1543. அரநெறி யப்பனை யாதிப் பிரானை*
*உரநெறி யாகி யுளம்புகுந் தானைப்*
*பரநெறி தேடிய பத்தர்கள் சித்தம்*
*பரனறி யாவிடிற் பல்வகைத் தூரமே.*

எல்லாச் சமயங்கட்கும் தலைவனை, யாவற்றுக்கும் முன்னோனை, பக்தியினால் விரும்புவோர்களின் மன மண்டலத்தில் விளங்குவோனை, மேலான மார்க்கத்தை நாடிய பத்தர்களின் சித்தம், விரும்பித் தேடிய போது அவன் அறிந்து வெளிப்படாவிடில் சமய உண்மை அறிவதற்கு அருமையாகிவிடும்.

*1544. பரிசறி வானவன் பண்பன் பகலோன்*
*பெரிசறி வானவர் பேற்றில் திகழுந்*
*துரிசற நீதினை தூய்மணி வண்ணன்*
*அரிதவன் வைத்த அறநெறி தானே.*

சீலர்களுக்கு அளிக்க வேண்டிய பரிசை அறிந்தவன், விரும்பினவரை ஆதரிக்கும் பண்பை உடையவன், ஒளி மயமானவன், வானவர் பெற்றுள்ள பேறுகளுக்கெல்லாம் அவனே பெரிய தலைமையாகவுள்ள, உன்னுடைய சந்தேக புத்தியை விட்டு நினைப்பாயாக, தூய்மையான ஒளிக்கல் போன்ற சோதியையுடையவன், அவன் வைத்த தர்ம மார்க்கமாவது அருமையானதாகும்.

*1545. ஆன சமயம் அதுஇது நன்றெனும்*
*மாய மனிதர் மயக்க மதுவொழி*
*கானங் கடந்த கடவுளை நாடுமின்*
*ஊனங் கடந்த உருவது வாமே.*

சமயங்களில் அது நல்லது இது நல்லது என்று கூறும், மயக்கத்தை உடைய மனிதரது மயக்கச் சூழலை விட்டு அகல்வாயாக, நாதாந்தத்தில் விளங்கும் சிவத்தை நாடுங்கள், மலமாயா கன்மங்களுடன் கலந்துள்ள ஊனுடலைக் கடந்துள்ள பிரணவ தேகத்தைப் பெறுவீர்கள்.

***1546.*** ***அந்நெறி நாடி அமரரும் முனிவருஞ்***
***செந்நெறி கண்டார் சிவனெனப் பெற்றார்பின்***
***முன்னெறி நாடி முதல்வன் அருளிலார்***
***சென்னெறி செல்லார் திகைக்கின்ற வாறே.***

மேலே சொன்ன நாத மார்க்கத்தை அறிந்து அடைந்த தேவர்களும் முனிவர்களும், செம்மையாகிய நெறி இதுவே என்று கண்டு சிவமாம் பேறு பெற்றார்கள், அப்படியிருக்க மக்கள் வகுத்த வேறு நெறிகளை நாடி முதல்வனது அருளைப் பெறாதார், செல்லுகின்ற நெறியில் செல்லாது திகைக்கின்றவாறு என்னே !

***1547.*** ***உறுமா றறிவதும் உள்நின்ற சோதி***
***பெறுமா றறியிற் பிணக்கொன்றும் இல்லை***
***அறுமா றதுவான வங்கியு ளாங்கே***
***இறுமா றறிகிலர் ஏழைகள் தாமே.***

நாம் அடையத்தக்க நெறியாக அறிவதும், உயிருக்கு உயிராக நிற்கின்ற சோதியைப் பெறுவதற்குரிய நெறியில் நின்று அறியில் யாதொரு மாறுபாடம் உண்டாகாது, நம்முடைய மல கன்மங்கள் நீங்குவதற்குரிய வழியாகவுள்ள செந்தீயுள் நின்று தற்போதங் கழிவதை மக்கள் அறிகின்றிலர், இவர் அறிவில்லாதவர்தாமே!

***1548.*** ***வழிநடக் கும்பரி சொன்றுண்டு வையங்***
***கழிநடக் குண்டவர் கற்பனை கேட்பர்***
***கழிநடக் குத்துய ரம்மது நீக்கிப்***
***பழிநடப் பார்க்குப் பரவலு மாமே.***

இறைவனை அடைய வகுத்த வழி மேலே சொன்ன வழி ஒன்றேயாகும், உலக இன்பத்தில் மிகவும் நாட்டங்கொண்டு நடப்பவர் பிறர் கூறும் கற்பனைகளைக் கேட்பர், பிறவிச் சுழியில் அகப்பட்டு நடக்கும் துன்பத்தை நீக்கி, உலக இன்பத்தைப் பழித்து நடப்பவர்க்குப் பிறரால் புகழவும் ஆகும்.

***1549.*** ***வழிசென்ற மாதவம் வைகின்ற போது***
***பழிசெல்லும் வல்வினைப் பற்றறுத் தாங்கே***
***வழிசெல்லும் வல்வினை யார்திறம் விட்டிட்***
***டுழிசெல்லில் உம்பர் தலைவன்முன் னாமே.***

மேலே உணர்த்திய சிவநெறி பற்றி அத்தவம் நிலை பெற்ற போது, பழி பாவங்களில் செலுத்தும் வலிமையான வினைத்தளைகளை அறுத்து, அவ்வினை வழியே செல்லும் தீவினையாளரையும் புறக்கணித்து நீங்கி, பிரமரந்திரத் தொளைவழி செல்லின் தேவதேவனாகிய சிவன் வெளிப்படுவான்.

## 19. நிராகாரம்

நிராகாரம் - வடிவின்மை, அருவம், இங்கு அருவமான உயிர் உணர்வில் அருவமான இறைவன் உணர்வாய்க் கலந்திருக்குந் தன்மையைக் கூறுவது.

***1550.*** ***இமையங்க ளாய்நின்ற தேவர்கள் ஆறு***
***சமையங்கள் பெற்றனர் சாத்திரம் ஓதி***
***யமையறிந் தோமென்ப ராதிப் பிரானுங்***
***கமையறிந் தாருட் கலந்துநின் றானே.***

இமய மலை போன்று மிகவும் பாராட்டத்தக்க தேவாம்சம் பெற்றவர், அவரது இயல்புக்கேற்ப ஆறு சமயங்களைச் செய்தனர், அக்காலத்திலுள்ள சாத்திரங்களை ஓதிப் பொருந்த அறிந்தோம் என்பர், ஆயினும் ஆதியாகிய சிவன் பொறுமையோடு அறிந்து அடங்கிய ஞானியர் உள்ளத்தில் கலந்து நின்றான்.

***1551.*** ***பாங்கமர் கொன்றைப் படர்சடை யானடி***
***தாங்கு மனிதர் தரணியில் நேரொப்பர்***
***நீங்கிய வண்ணம் நினைவுசெய் யாதவர்***
***ஏங்கி உலகில் இருந்தழு வாரே.***

சீர்களது பொன்னொளி மண்டலம் என்ற அறிவு மண்டலத்தில் விளங்கும் சிவத்தை, நினைத்து தம்மிடம் அநந்நியமாகப் பெற்றவர் உலகில் சிவத்தை ஒப்பர், அவனை வேறென்று கருதி நீங்கி நினையாமலே இருப்பவர், துன்பத்துள் ஆழ்ந்து இவ்வுலகில் உய்வின்றி வருந்துவர்.

*1552.* **இருந்தழு வாரும் இயல்புகெட் டாரும்**
**அருத்தவ மேற்கொண்டங் கண்ணலை எண்ணில்**
**வருந்தா வகை செய்த வானவர் கோனும்**
**பெருந்தன்மை நல்கும் பிறப்பிலி தானே.**

உலகில் இருந்து சூழ்நிலை காரணமாக வருந்தி அழுகின்றவரும், நல்ல இயல்பிலிருந்து அதனை இழந்து வருந்துவோரும், அண்ணலாகிய சிவத்தை நினைந்து அருந்தவம் மேற்கொண்டால், அவரவர்க்குரிய இன்னல்களைப் போக்கி வருந்தாமல் செய்து, தேவ தேவனும், பிறப்பில்லாதவனுமாகிய சிவன் பெரிய தகுதியை அளித்தருளுவான்.

*1553.* **தூரறி வாளர் துணைவர் நினைப்பிலர்**
**பாரறி வாளர் படுபயன் றானுண்பர்**
**காரறி வாளர் கலந்துபிறப் பார்கள்**
**நீரறி வார்நெடு மாமுகி லாமே.**

இறைவன் தூரத்திலுள்ளான் என்று சென்று வழிபடும் பக்தர்கள் அவன் துணையாக இருந்து வேண்டுவன அளிப்பதை அறியாதவாராவர், பூமியிலுள்ள போகப் பொருளை விரும்பினவர் அதனால் வரும் தவிர்க்கமுடியாத துன்பப் பயனை அடைந்து வருந்துவர், அறியாமையுடைய இவ்விருவகையினரும் உலகப் பொருளோடு பொருந்திப் பிறவியில் படுவர்கள், இறைவன் தம்மைவிட்டகலாதவன் என்ற தன்மையை அறிந்தவர் உலகினர்க்குப் பெரிய மேகம் போலக் கைம்மாறு கருதாது பயன்படுவர்.

*1554.* **அறிவுடன் கூடி அழைத்தோர் தோணி**
**பறியுடன் பாரம் பழம்பதி சிந்துங்**
**குறியது கண்டுங் கொடுவினை யாளர்**
**செறிய நினைக்கிலர் சேவடி தானே.**

அறிவோடு கூடி அறிந்து அநுபவிப்பதொரு தோணியாகிய சிவம், வினைகளுக்குச் சேமிப்பான இடமாகிய காரண சரீரத்தை அழிக்கும் தூணாகாரமான சோதியின இயல்பை அறிந்திருந்தும், கொடிய வினைக் கூட்டத்தை உடையார், சிவபெருமானது திருவடியைப் பொருந்த நினைக்கவில்லையே !

*1555.* **மன்னும் ஒருவன் மருவு மனோமயன்**
**என்னின் மனிதர் இகழ்வரிவ் வேழைகள்**
**துன்னி மனமே தொழுமின் துணையிலி**
**தன்னையும் அங்கே தலைப்பட லாமே.**

நிலைபெற்ற சிவபரம்பொருள், மனத்தோடு பொருந்தியவன் என்றாலும், மனிதர்கள் அறியாது இகழ்வார்கள், இவர்கள் உண்மைச் செல்வத்தை உணராதவர்கள், அங்ஙனம் இகழாது மனம் பொருந்தித் தொழுங்கள், தொழுதால் உவமையில்லாச் சிவத்தைக் கண்டு சிவப்பேற்றை அடையலாம்.

*1556.* **ஓங்காரத் துள்ளொளி உள்ளே உதயமுற்**
**றாங்கார மற்ற அனுபவங் கைகூடார்**
**சாங்கால முன்னார் பிறவாமை சார்வுறார்**
**நீங்காச் சமயத்துள் நின்றொழிந் தார்களே.**

சீவர்கள் பிரணவத்தில் சிவத்தைக் கண்டு, தமது தனித் தன்மையை நீக்கி ஒன்றாந் தன்மை பெற்று விளங்கும் அநுபவத்தைக் கைவரப்பெறார், காலத்தால் உடல் அழியும் என்பதை எண்ணிப் பார்ப்பத்தில்லை, பிறவாமையைப் பொருந்தார், மயக்கந்தரும் சமயத்தினின்று நீங்காதவர்களாக அழிந்து ஒழிந்தார்கள்.

## 20. உட்சமயம்

உட்சமயமாவது, சீவனும் விளங்கும் சிவச்சோதியை அறியச் செய்தல், இதனை ஒளிநெறி அல்லது சன்மார்க்கம் என்பர்.

*1557.* **இமையவர் தம்மையும் எம்மையும் முன்னம்**
**அமைய வகுத்தவன் ஆதி புராணன்**
**சமையங்க ளாறுத்தன் தாளிணை நாட**
**அமையங் சூழல்கின்ற ஆதிப் பிரானே.**

தேவர்களையும் சீவர்களாகிய எம்மையும், பழமையாகவே தனுகரங்களைத் தந்துஉலகில் பொருந்தி அநுபவிக்கும்படி வைத்தவன், மிகப் பழமையானவன், அகச்சமயங்கள் ஆறும் தனது திருவடியை நாட, அவற்றில் கலந்து நின்று வியாபித்திருப்பவனே முதல்வனாவான்.

*1558.* **ஒன்றது பேரூர் வழியா றதற்குள்**
**என்றது போல இருமுச் சமயமும்**
**நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்**
**குன்று குரைத்தெழு நாயையொத் தார்களே.**

ஒரே ஊருக்குச் செல்ல ஆறு வழிகள் உள்ளன, அது போல ஆறு சமயங்களும் ஒரே பொருளை அடையவுள்ளன, இது நன்று அது தீது என்று சொல்பவர்கள், மலையைப் பார்த்துக் குரைத்த நாயைப் போல ஒரு பயனையும் எய்தார்.

*1559.* *சைவப் பெருமைத் தனிநா யகன்தன்னை*
*உய்ய வுயிர்க்கின்ற ஒண்சுடர் நந்தியை*
*மெய்ய பெருமையர்க் கன்பனை இன்பஞ்செய்*
*வையத் தலைவனை வந்தடைந் துய்மினே.*

பெருமை வாய்ந்த சைவ சமயத்துக்கு ஒப்பற்ற தலைவனை, சீவர்கள் உய்யும் வண்ணம் உயிர்க்குயிராய் இருக்கின்ற ஒளிவடிவான குருநாதனை, உண்மை உணர்வு பெற்றார்க்கு அன்பனை, இன்பந் தருகின்ற உலக முதல்வனை, வந்து அடைந்து உய்தி பெறுவீர்களாக.

*1560.* *சிவனவன் வைத்ததோர் தெய்வ நெறியிற்*
*பவனவன் வைத்த பழவழி நாடி*
*இவனவன் என்ப தறியவல் லார்கட்*
*கவனவ னங்குள தாங்கட னாமே.*

சிவபெருமான் சீவர்கள் உய்தி பெறுமாறு அமைத்த நெறியில், கடவுளாகிய அவன் வைத்த பழமையான வழியே சென்று, இச்சீவனே சிவன் என்று உணர வல்லார்க்கு, அவ்வச் சமயத்திலும் உள்ள அப்பெருமான் அங்குத் தோன்றுவது அதன் கடமையாம்.

*1561.* *ஆமா றுரைக்கும் அறுசம யாதிக்குப்*
*போமாறு தானில்லை புண்ணிய மல்லதங்*
*காமாம் வழியாக்கும் அவ்வே றுயிர்கட்கும்*
*போமாறவ் வாதாரப் பூங்கொடி யானே.*

அங்ஙனம் சீவர்கள் உய்தி பெறும்வண்ணம் அமைக்கப்பட்ட ஆறு சமய உச்சிக்குச் சீவர்கள் தாமாகப் போகும் வழிதான் இல்லை, அவர் செய்த புண்ணியமே அங்கு அவ்வழியை அமைப்பதாகும், அங்ஙனம் சீவர்கள் மேலேறிச் செல்லத் தாங்கி நிற்பது திருவருளின் ஆற்றலாகும்.

*1562.* *அரனெறி யாவ தறிந்தேனும் நானுஞ்*
*சிவநெறி தேடித் திரிந்தஅந் நாளும்*
*உரநெறி யுள்ளக் கடல்கடந்த தேறுந்*
*தரநெறி நின்ற தனிச்சுடர் தானே.*

அரனை அடைவதற்குரிய வழியாவதை அறிந்தேனாகிய நானும், வேறு சில நெறிகளைத் தேடித் திரிந்த அக்காலத்திலும், வன்மை மிக்க நெறியில் எண்ணமாகிய மேன்மையான நெறியாக நின்றது ஒப்பற்ற சுடரேயாம்.

*1563.* *தேர்ந்த அரனை அடைந்த சிவநெறி*
*பேர்ந்தவர் உன்னிப் பெயர்ந்த பெருவழி*
*ஆர்ந்தவர் அண்டத்துப் புக்க அருள்நெறி*
*போந்து புனைந்து புணர்நெறி யாமே.*

ஆராய்ச்சியாலும் அனுபவத்தாலும் சிவனே பரம்பொருள் எனத் தெளிந்தடைந்த சிவநெறி, புறச்சமய நெறி நின்றவர் ஆராய்ந்து மீண்டும் வந்தடைந்த பெருநெறியாம், அகச்சமயத்துள் பொருந்தியவரும் அவரவர் பக்குவத்துக்கேற்ப அநுபவம் பெற அவ்வவ்வண்டங்களுக்குச் செல்ல அருளும் நெறி, அவ்வம் முத்திகளிலே நின்று மீண்டும் வந்து பொருந்தி உய்தி பெறும் நெறியாம்.

*1564.* *ஈரு மலத்தை இரண்டற வீசுமின்*
*ஊருஞ் சகாரத்தை ஓதுமின் னோதியே*
*வாரு மரனெறி மன்னியே முன்னியத்*
*தூருஞ் சுடரொளி தோன்றலு மாமே.*

புறப்பொருளில் செல்லும் மனத்தை அகப்பொருளாகிய சிவத்தைப் பொருந்துமாறு நிறுத்துங்கள், அதற்காக மூலாதாரத்திலிருந்து மேனோக்கிப் படரும் சிகாரத்தால் உணர்த்தப்பெறும் பஞ்சாட்சரத்தை ஓதுங்கள், அரனுடைய நெறியைப் பொருந்தி இச்சாதனையைச் செய்து வாருங்கள். நெற்றிக்கு முன்னே செந்நிறம் பொருந்திய ஒளி தோன்றலுமாகும்.

*1565.* *மினற்குறி யாளனை வேதியர் வேதத்*
*தனற்குறி யாளனை ஆதிப் பிரான்தன்னை*
*நினைக்குறி யாளனை ஞானக் கொழுந்தி*
*னயக்குறி காணில் அரனெறி யாமே.*

யோகக் காட்சியினருக்கு மின்னல் போன்ற ஒளியில் வெளிப்படுபவனை, அந்தணர் ஓம்பும் வேள்வித்தீயில் வெளிப்படுபவனை, முழுமுதற்கடவுளை, எவ்வுருவில் நினைத்தாலும் அவ்வுருவில் வெளிப்படுபவனை, பரஞானத்தால் ஒளி மயமாகக் காணில், அதுவே அரனெறியாகிய சைவ நெறியாகும்.

*1566.* *ஆய்ந்துண ரார்களின் ஆன்மாச் சதுர்பல*
*வாய்ந்துண ராவகை நின்ற அரனெறி*
*பாய்ந்துணர் வார்அரன் சேவடி கைதொழு*
*தேய்ந்துணர் செய்வதோர் இன்பமு மாமே.*

ஆராய்ந்து ஒளி நெறியே சிறந்தது எனத் தெளியாத ஆன்மாவின் ஆற்றல் பலவாகும், அவர் சேர்ந்து அறியாவண்ணம் நின்ற அரனெறி, புகுந்து உணர்வார் அரனது திருவடியைப் பற்றி நின்று, பொருந்தி உணர்வது ஒப்பற்ற இன்பமாகும்.

*1567.* *சைவ சமயத் தனிநா யகன்நந்தி*
*உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு*
*தெய்வச் சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய*
*வையத் துளார்க்கு வகுத்துவைத் தானே.*

சைவ சமயத்துக்கு ஒப்பற்ற தலைவன் சிவபெருமான், அவன் ஆன்மாக்கள் உய்ய வகுத்துத் தந்த ஒளி நெறி ஒன்றுண்டு, இதுவே தெய்வத் தன்மை பொருந்திய சிவநெறியாகிய சன்மார்க்கமாகும், அதனைச் சார்ந்து உய்தி பெற உலக மக்களுக்குச் சிவன் அருளியதாம்.

*1568.* *இத்தவம் அத்தவம் என்றிரு பேரிடும்*
*பித்தரைக் காணின் நகுமெங்கள் பேர்நந்தி*
*எத்தவ மாகிலென் எங்குப் பிறக்கிலென்*
*ஒத்துணர் வார்க்கொல்லை யூர்புக லாமே.*

இத்தவம் நல்லது அத்தவம் நல்லது என்று பேத ஞானம் படைத்த அறிவிலிகளைக் கண்டால், எங்கள் சிவபெருமான் நகை செய்யும், எந்தத் தவமாக இருந்தால் என்ன? அல்லது எங்கே பிறந்தால் என்ன? அபேதமாக நின்று உணர்வார்க்கு முத்தியாகிய ஊரை அடைதல் கூடும்.

*1569.* *ஆமே பிரான்முகம் ஐந்தொடு மாருயிர்*
*ஆமே பிரானுக் கதோமுக மாறுள*
*தாமே பிரானுக்குத் தன்சிர மாலைக்கும்*
*தாமே பிரானுக்கு நரரியல் பாமே.*

சதாசிவம் முகங்கள் ஐந்தொடும் எல்லா உயிர்களிடத்தும் பொருந்தி விளங்கும், அப்பிரானுக்குத் தத்புருடம், அகோரம், சத்தியோ சாதம், வாம தேவம், ஈசானம் என்ற ஐந்து முகங்களோடு கீழே அதோமுகம் என்ற ஒன்றும் சேர்ந்து ஆறுமுகங்கள் உள்ளன,சிவத்தை அறிந்து வழிபடுவார்க்குச் சதாசிவம் போல் ஆறு முகங்களும் ஒன்றாய்விடும், சிவத்தை அறிந்து வழிபடாத போது அதோமுகம் கீழ் நோக்கியே செலுத்தும்.

*1570.* *ஆதிப் பிரானுல கேழும் அளந்தவன்*
*ஓதுக் கடலும் உயிர்களு மாய்நிற்கும்*
*பேதிப் பிலாமையின் நின்ற பராசத்தி*
*ஆதிக்கட் டெய்வமும் அந்தமு மாமே.*

முதல்வனாகிய சிவன் உலகு அனைத்திலும் கலந்து விளங்குபவன், அலைகடலும், கடல்சூழ் உலகுயிர்களுமாய் நிற்கும், பேதிப் பிலாமையின் நின்ற பராசத்தி, அச்சிவத்தோடு பிரிப்பின்றி நின்ற பராசத்தி, ஆதியில் உலக உற்பத்திக்கு உபகாரியாகவும் இறுதியில் ஒடுக்கிக் கொள்பவனாயும் உள்ளாள்.

*1571.* *ஆய்ந்தறி வார்கள் அமரர்வித் தியாதரர்*
*ஆய்ந்தறி யாவண்ணம் நின்ற அரனெறி*
*ஆய்ந்தறிந் தேனவன் சேவடி கைதொழ*
*ஆய்ந்தறிந் தேனிம்மை அம்மைகண் டேனே.*

தற்போது முனைப்பால் ஆராய்ந்து அறிவார்கள் அமரர் கந்தருவர் முதலியோர், ஆராய்ச்சியால் அறிய முடியா வகை நின்ற அரனெறியான சைவத்தை, அவன் திருவடியை வழிபடும் பேறு பெற்றமையால் ஆராய்ந்து உணர்ந்தேன், அதனால் இப்பிறப்பிலேயே மறுமை இன்பத்தினைப் பெற்றேன்.

*1572.* *அறியவொண் ணாதவ் வுடம்பின் பயனை*
*அறியவொண் ணாத அறுவகை யாக்கி*
*அறியவொண் ணாத அறுவகைக் கோசத்*
*தறியவொண் ணாததோர் அண்டம் பதிந்ததே.*

உடம்பைப் பெற்ற பயன் இறைவனை அறிவதே என்பதை மக்கள் அறியவில்லை, அறிய முடியாது ஏகமாயுள்ள ஆகாயத்தை ஆறாதாரங்களில் இயங்கும்படி வைத்து, அறிய முடியாத வகையாக ஆறு கோசங்களில் அநுபவம் பெறச் செய்து, ஆகாய மயமான சிவம் அறியவொண்ணாது அண்டமாய் உள்ளது.

## ஆறாம் தந்திரம்

## 1. சிவகுரு தரிசனம்

சிவகுரு தரிசனமானது உள்ளத்தில் உறையும் சிவனைக் குருவாகக் காண்டல் அக்குருநாதன் பிரணவ உபதேசத்தால் குற்றங்களை நீங்கசெய்து உண்மை இயல்புகளை உணர்த்துவார், இது சத்தியோ நிர்வாண தீட்சை எனப் பெறும்.

*1573. பத்திப் பணித்துப் பரவு மடிநல்கிச்*
*சுத்த வுரையால் துரிசறச் சோதித்துச்*
*சத்தும் அசத்துஞ் சதசத்துங் காட்டலாற்*
*சித்தம் இறையே சிவகுரு வாமே.*

பத்தியை உண்டாக்கி, திருவடியை வணங்கச் செய்து, பிரணவ உபதேசத்தால் குற்றங்களை நீங்கச் செய்து, சத்தும் அசத்தும் சத சத்துமான பொருள்களின் உண்மை இயல்புகளை உள்நின்று உணர்த்தியமையால், சித்தத்தில் உள்ள இறைவனே குருவாவன்.

*1574. பாசத்தைக் கூட்டியே கட்டிப் பறித்திட்டு*
*நேசித்த காயம் விடுவித்து நேர்நேரே*
*கூசற்ற முத்தியிற் கூட்டலா நாட்டத்த*
*தாசற்ற தற்குரு அம்பல மாமே.*

ஆணவத்தால் மறைப்புண்டு கிடந்த சீவனை மாயா மலத்தைக் கூட்டி ஆணவத்தை அகற்றி, உடலே தான் என்றிருந்த ஆசையை அறுத்து, நேருக்கு நேரே நின்று குலையாத முத்தியில் கூட்டுவதற்குப் பகாரப்படுவது, உபாசகனின் ஒளி மண்டலத்தில் விளங்கும் உருவமற்ற சற்குருவாம்.

*1575. சித்திகள் எட்டொடுந் திண்சிவ மாக்கிய*
*சத்தியும் எண்சத்தித் தூய்மையும் யோகத்துச்*
*சத்தியும் மந்திர சாதக போதமும்*
*பத்தியும் நாதன் அருளிற் பயிலுமே.*

அணிமாதி சித்திகள் எட்டுடனும், சாதகனைச் சிவமாகச் செய்த பக்குவ நிலையும், வாமாதி எண் சத்திகளால் பந்திக்காத தூய்மையும், யோகத்தால் உண்டாகும் ஆற்றலும், மந்திரங்களைத் தியானிப்பதால் விளையும் ஞானமும், இறைவன்பால் உண்டாகும் அன்பும் ஆகிய எல்லாம், சிவகுருவின் அருளால் நடைபெறும்.

*1576. எல்லா வுலகிற்கும் அப்பாலோன் இப்பாலாய்*
*நல்லார் உள்ளத்து மிக்கருள் நல்கலால்*
*எல்லாரும் உய்யக்கொண் டிங்கே அளித்தலாற்*
*சொல்லார்ந்த நற்குருச் சுத்த சிவமே.*

இருநூற்று இருபத்து நான்கு புவனங்களையும் கடந்து விளங்குபவன் இப்பிரகிருதி மயமான உலகிலும் உள்ளவனாய், நல்லவர்கள் உள்ளத்தில் சிறந்து விளங்கி அருள் புரிவதாலும், எல்லோரும் உய்யும் வண்ணம் இம்மண்ணுலகிலேயே அருள் செய்வதாலும், பிரணவ சொரூபமாகவுள்ள நல்ல குரு சிவமேயாகும்.

*1577. தேவனுஞ் சுத்த குருவும் உபாயத்துள்*
*யாவையும் மூன்றா யுளக்கண் டுரையாகவே*
*மூவாப் பசுபா மாற்றியே முத்திப்பால்*
*யாவையும் நல்குங் குருபரன் அன்புற்றே.*

தேவனும் சுத்த குருவாகவும் உள்ள சிவன், ஆகமத்துள் எல்லாம் பதி பசு பாசம் என்று மூன்றாகக் கருதுவது அறிந்து, உபதேசத்தாலே அழிவற்ற சீவனது பாசத்தை நீக்கியே, குருபரன் அன்பு கொண்டு முத்தியின்கண் யாவையும் அருளும்.

*1578. சுத்த சிவன்குரு வாய்வந்து தூய்மைசெய்*
*தத்தனை நல்கருள் காணா அதிமூடர்*
*பொய்த்தகு கண்ணான் நமரென்பர் புண்ணியர்*
*அத்தன் இவனென் றடிபணி வாரே.*

சுத்த சிவனே சீவர்களிடம் கருணை கொண்டு குருவாக வந்து மலக் குற்றத்தினை நீக்கி, அத்துணை புரியும் அருளினைக் காணாத அறிவிலிகள், பொய் மிகுந்த புவன போகங்களையே பொருளெனக் கண்டறியும் பாசம் பற்றியவர் குருவை நம்மவர் என்று தம்மோடு ஒப்ப வைத்து எண்ணுவர், சிவ புண்ணியமுடைய ஞானியர் சிவனே இவன் என்று அடி பணிந்து வணங்குவர்.

*1579. உண்மையிற் பொய்மை ஒழித்தலும் உண்மைப்பார்*
*திண்மையும் ஒண்மைச் சிவமாய அவ்வரன்*
*வண்மையும் எட்டெட்டுச் சித்தி மயக்கமும்*
*அண்ணல் அருளன்றி யாரறி வாரே.*

ஞானத்தால் பொய்மை நீக்குதலும், பிருதிவி தத்துவத்தின் வலிமையும், சிவமாகிய அவ்வரனது உபகாரமும், அறுபத்து நான்கு கலைகளால் வரும் மயக்க அறிவும், அண்ணலின் சத்தி பதியாது யார் அறிய முடியும்?

*1580. சிவனே சிவஞானி யாதனற் சுத்த*
*சிவனே எனஅடி சேரவல் லார்க்கு*
*நவமான தத்துவ நன்முத்தி நண்ணும்*
*பலமான தின்றிப் பரலோக மாமே.*

சிவனே சிவஞானியாக அமைவதால், தனக்கு உபதேசம் செய்யும் குருவைச் சிவனென்று எண்ணித் திருவடியை அடைவார்க்கு, சிவத்தினது தோழமையும் நல்ல முத்தியும் பொருந்தும், அவர் பிறப்பின்றி மேலான சிவலோகத்தைச் சென்றடைவர்.

*1581. குருவே சிவமெனக் கூறினன் நந்தி*
*குருவே சிவமெனன் பதுகுறித் தோரார்*
*குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்*
*குருவே யுரையுணர் வற்றதோர் கோவே.*

எனது குரு மண்டலத்தில் விளங்கும் நந்தி குருவே சிவம் என உபதேசித்தான், குரு மண்டலமே சிவனுமாய் உயிருக்குத் தலைவனுமாயுள்ளது, குருமண்டலமே வாக்கு உணர்வைக் கடந்து விளங்கும் அரசனாகும், இத்தகைய பெருமையுடைய குரு மண்டலத்தில் சிவம் உள்ளிருந்து விளங்குவதைச் சாமானியர் அறியாதவராக உள்ளார்.

*1582. சித்தம் யாவையுஞ் சித்தித் திருந்திடும்*
*அத்தம் உணர்த்துவ தாகும் அருளாலே*
*சித்தம் யாவையும் திண்சிவ மானக்கால்*
*அத்தனும் அவ்விடத் தேயமர்ந் தானே.*

சீவர்களிடமுள்ள சித்த மண்டலம் தன்னறிவுக்கு வரவேண்டிய எல்லாவற்றையும் நினைத்துக் கொண்டிருக்கும், அருள் சத்தி பதிந்தவர்க்குச் செம்பொருளே உணர்த்துவதாகும், அந்நெறியே சித்தம் முழுமையும் வேறு பொருளுக்கிடமின்றிச் சிவத்துக்கே இடமாக்கினால், அத்தனாகிய சிவனும் அவ்விடத்தில் அமர்ந்தருளுவான்.

*1583. தானந்தி சீர்மையுட் சந்தித்த சீர்வைத்த*
*கோனந்தி யெந்தை குறிப்பறி வாரில்லை*
*வானந்தி யென்று மகிழும் ஒருவற்குத்*
*தானந்தி யங்கித் தனிச்சுட ராமே.*

சிவமாகிய தானே விளங்கும் சிறப்பான குரு மண்டலத்துள் பொருந்துவதால் அமையும் பெருமையை வைத்த, தலைவனாகிய நந்தி எம்பெருமானது குறிப்பை உணர்வார் இல்லை, ஆகாயத்தில் குரு மண்டலத்தில் விளங்குபவன் என்று மகிழ்ந்திருப்பார்க்கு, முன்னர் அக்கினி மண்டலத்தில் விளங்கிய அரசனே ஒப்பற்ற சிவ சூரியனாகும்.

*1584. திருவாய சித்தியும் முத்தியும் சீர்மை*
*மருளா தருளும் மயக்கறும் வாய்மைப்*
*பொருளாய வேதாந்த போதமும் நாதன்*
*உருவா யருளாவிடி லோர்ஒண் ணாதே.*

ஞானமாகிய பேறும், அதன் பயனான முத்தியும், அச்சிறப்பினில் மயங்காத அருளும், அஞ்ஞானம் நீங்கும் உண்மைப் பொருளான வேதாந்த ஞானமும், குருநாதன் மானிடர் சட்டை தாங்கி வராவிட்டால் அறியவொண்ணதாகிவிடும்.

*1585. பத்தியும் ஞானவை ராக்கிய மும்பர*
*சித்திக்கு வித்தாஞ் சிவோகமே சேர்தலான்*
*முத்தியின் ஞான முளைத்தலால் அம்முளை*
*சத்தி யருள்தரில் தானெளி தாமே.*

சிவத்தினிடம் பத்தியும், அதனால் ஞானத்தைப் பெற வேண்டும் என்ற வைராக்கியமும், வீடு பேறடையச் சாதனங்களையும், அவற்றால் சிவமே தான் என்ற பாவனை முதிர்ந்து, வீடு பேற்றுக்கு ஏதுவான ஞானம் தோன்றி, அந்த ஞானப் பயிர் சத்தியின் அருளால் எளிதாக வளர்ந்து முத்தி கிட்டும்.

*1586. பின்னெய்த வைத்ததோர் இன்பப் பிறப்பினை*
*முன்னெய்த வைத்த முதல்வனை எம்மிறை*
*தன்னெய்தங் காலத்துத் தானே வெளிப்படு*
*மன்னெய்த வைத்த மனமது தானே.*

இவ்வுலகில் நான் வீடுபேறடைவதற்காக அமைந்த இன்பப் பிறப்பை, முன்னமே எனக்கு உதவிய முதல்வனாகிய இறைவனை, ஞானத்தால் அடையுங் காலத்தில் அவன் என்னிடமாகத் தானே வெளிப்படுவான், அங்ஙனம் எனத தலைவனை அடையத் துணை செய்தது என்னுடைய மனமேயாகும்.

*1587. சிவமான ஞானந் தெளியவொண் சித்தி*
*சிவமான ஞானந் தெளியவொண் முத்தி*
*சிவமான ஞானஞ் சிவபரத்தே யேகச்*
*சிவமான ஞானஞ் சிவானந்த நல்குமே.*

அகண்டமான சிவஞானம் தெளியவே சிறந்த சித்திகள் உண்டாம், அத்தகைய சிவஞானத்தில் நின்று மேலும் தெளிய சிறந்த முயற்சி கிட்டும், சிவமான ஞானத்தால் சிவம் ஆன்மாவில் நிலை பெற, சிவமான ஞானத்தால் சிவனாந்தம் விளையும்.

*1588. அறிந்துணர்ந்த தேனிவ் வகலிட முற்றுஞ்*
*செறிந்துணர்ந் தோதித் திருவருள் பெற்றேன்*
*மறந்தொழிந் தேன்மதி மாண்டவர் வாழ்க்கை*
*பிறித்தொழிந் தேனிப் பிறவியை நானே.*

நான் நூலறிவினால் அறிந்தும் அநுபவத்தில் உணர்ந்தும் இவ்விரிந்த உலகங்களையெல்லாம் கண்டேன், சிவத்தோடு பொருந்திச் சிவத்தைத் தியானித்து சிவத்தின் அருளைப் பெற்றேன், அறிவில்லாதவர் கூட்டத்தை விட்டு ஒழிந்தேன், அதனால் இப்பிறவியை நீங்கினேன்.

*1589. தரிக்கின்ற பல்லுயிர்க் கெல்லாந் தலைவன்*
*இருக்கின்ற தன்மையை ஏதும் உணரார்*
*பிரிக்கின்ற இந்தப் பிணக்கறுத் தெல்லாங்*
*கருக்கொண்ட ஈசனைக் கண்டுகொண் டேனே.*

வினைக்கீடாகப் பெற்ற உடல் முதலியவற்றைச் சுமக்கின்ற பல்லுயிர்க்கெல்லாம் தலைவனாகிய இறைவன், எவ்வாறு சீவர்களோடு பொருந்தி இயக்குகின்றான் என்பதை எவ்வகையாலும் அறியார், சீவர்கள் அறியா வகை பிரிக்கின்ற நடைகளை நீக்கி, எல்லா உயிர்களையும் தன் கருவில் கொண்ட இறைவனை நான் கண்டுகொண்டேனே.

## உ. திருவடிப் பேறு

திருவடி - திருவருள். கால் என்பது குண்டலினி சத்தி, அது சிரசை நோக்கிப் பாய்வதே அருள், அவ்வாறு சிரசின் மேல் பொருந்தியிருப்பதே திருவடிப் பேறு.

*1590. இசைந்தெழும் அன்பின் எழுந்த படியே*
*பசைந்தெழும் ஈசரைப் பாசத்துள் ஏகச்*
*சிவந்த குருவந்து சென்னிகை வைக்க*
*உவந்த குருபதம் உள்ளத் துவந்ததே.*

திருவருளால் இறைவனைப் பொருந்த எழுகின்ற அன்பின் வழியே, அன்பை ஆதாரமாகக் கொண்டு வெளிப்படுகின்ற இறைவனை இறவா இன்ப அன்பில் பற்ற, செவ்வொளியானது மேல் நோக்கி ஏறுதலைச் செய்து சிரசில் படா, விரும்பிய திருவடி உள்ளத்தே இன்பமாய் நிறைந்தது.

*1591. தாடந்த போதே தலைதந்த எம்மிறை*
*வாடந்த ஞான வலிமையுந் தந்திட்டு*
*வீடந்த மின்றியே யாள்கென விட்டருட்*
*பாடின் முடிவைத்துப் பார்வந்து தந்ததே.*

இறைவன் திருவருளை நல்கியபோதே, பொறி புலனுக்கு அடிமையாகக் கிடந்த எனக்கு ஞானத்தைக் கொடுத்த எம் தலைவன், ஞான வாளை உதவி அஞ்ஞானத்தை வேறுபடுத்தும் திறமையும் கொடுத்து, வீட்டுவகை முடிவிலாக் காலம் அருளி, பூமி தத்துவம் என்ற சுவாதிட்டானத்தில் வந்து அருட்சத்தியை இன்பமாக என்னுடைய சிரசில் பதித்தனன்.

**1592.** *தானவ னாகிச் சொரூபத் துவத்திட்டு*
*ஆன சொரூபங்கள் நான்கும் அகற்றின*
*ஏனைய முத்திரை யீந்தாண்ட நன்னந்தி*
*தானடி முற்சூட்டித் தாபித்த துண்மையே.*

என்னைச் சிவம் வந்து ஆட்கொண்டு அவனாகச் செய்தபோது, சிவசொரூபமாக நான் ஆனபோது முன்னர்ச் சிவமாக விளங்கிய பிரமன், விஷ்ஸ, உருத்திரன், மகேசுவரன் ஆகிய நான்கு சொரூபங்களும் என்னை விட்டு அகற்றப் பெற்றன, இதர அடையாளங்களான அருவச் சதாசிவர், விந்து, நாதம், சத்தி ஆகியவைகளை என்னிடம் சிறப்பாக விளங்கும்படி செய்து, தனது திருவருளை முன்னமேயே பெற்றவன் என்ற உண்மையைத் தாபித்தருளினன் நந்தி.

**1593.** *உரையற் றுணர்வற் றுயிர்பர மற்றுத்*
*திரையற்ற நீர்போல் சிவமாதல் தீர்த்துக்*
*கரையற்ற சத்தாதி நான்குங் கடந்த*
*சொரூபத் திருத்தினன் சொல்லிறந் தோமே.*

அநுபவ நிலையில் பேச்சற்று, உணர்வு கெட்டு, தான் என்ற நிலை அறியாது, தெளிந்த நீர் போல அசைவின்றியிருக்கும் சிவமாந் தன்மையும் கெட்டு, சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி ஆகிய நான்கு வாக்கினால் உதிக்கும் நாதத்தைக் கடந்த எல்லையற்ற, தனது சொரூபத்துடன் ஒன்றாக்கினன், அதனால் பிறப்பு இறப்புக்கு எல்லையான பிரணவத்தைக் கடந்துவிட்டோம்.

**1594.** *குரவன் உயிர்முச் சொரூபமுங் கைக்கொண்*
*டரிய பொருள்முத் திரையாகக் கொண்டு*
*பெரிய பிரானடி நந்தி பேச்சத்*
*துருகிட என்னையங் குய்யக்கொண் டானே.*

தீட்சை செய்ய அமைந்த குரு சீடனின் தூல, சூக்கும, காரண உடல்களிலுள்ள காரணமான தடைகளை நீக்கி, அரிய உயிரைக் குருவினிடம் பொருந்தும்படி செய்து, யாவருக்கும் தலைவனான சிவத்துடன் மௌனயோகத்தில் விளங்கிடப் பொருந்தி, என்னை ஆண்டு கொண்டருளினான்.

**1595.** *பேச்சற்ற இன்பத்துப் பேரானந் தத்திலே*
*மாச்சற்ற என்னைச் சிவமாக்கி மாள்வித்துக்*
*காச்சற்ற சோதி கடன்மூன்றுங் கைக்கொண்டு*
*வாச்ச புகழ்மாளத் தாள்தந்து மன்னுமே.*

முன்னிலையில் அமைந்த குரு மௌனாந்தமாகிய பேரின்பத்திலே, எனது பசுகரணங்களை அழித்து என்னிடம் அகண்ட அறிவாகிய சிவத்தைப் பதிப்பித்து என்னை நான் அறியாமல் செய்து, வெப்பமற்ற சந்திர மண்டல ஒளியில் மனம் வாக்கு காயம் ஆகிய மூன்றையும் கைக்கொண்டு, அவற்றால் அடைந்த பெருமைகளை அழித்துத் திருவடிகளைச் சூட்டி என்னிடத்தில் நிலை பெற்றனன்.

**1596.** *இதயத்தும் நாட்டத்தும் என்றன் சிரத்தும்*
*பதிவித்த பாதப் பராபரன் நந்தி*
*கதிவைத்த வாறும் மெய்காட் டியவாறும்*
*விதிவைத்த வாறும் விளம்பவொண் ணாதே.*

எனது ஆத்மாவிலும் பார்வையிலும் எனது சிரத்தின்மீதும், திருவருளைப் பதிவித்த பராபரனாகிய குருவானவர், கீழ் முகமாகச் சுருண்டு கிடந்த குண்டலினியை ஊர்த்துவ கதியாக அமைத்தருளியதும், விந்து நாதங்களை உணர்த்தியருளியதும், எம்முறையில் விந்து நாதங்களை உணர்த்தியிருளியதும், எம்முறையில் விந்து நாதங்கள் தொழிற்படுமோ அம்முறையில் உணர்த்தியருளியது, பிறருக்கு எடுத்துச் சொல்ல முடியாததாகும்.

**1597.** *திருவடி வைத்தென் சிரத்தருள் நோக்கிப்*
*பெருவடி வைத்தந்த பேர்நந்தி தன்னைக்*
*குருவடி விற்கண்ட கோனையெங் கோவைக்*
*கருவழி வாற்றிடக் கண்டுகொண் டேனே.*

என்னுடைய சிரசின் மீது திருவடியைச் சூட்டி, அருளால் பார்த்து, எங்குமாயிருக்கும் பெரிய வடிவினைத் தந்த பெரிய பெருமானை, குரு வடிவில் வந்த தலைவனை, எம்முடைய அரசனை, பிறவி உண்டாகும் வழி உலர்ந்து போகக் கண்டுகொண்டேன்.

**1598.** *திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்குந்*
*திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்குந்*
*திருவடி ஞானஞ் சிறைமல மீட்குந்*
*திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.*

திருவடி ஞானம் சிமயமாக ஆக்கும், திருவடி ஞானம் சிவலோகத்தில் சேர்க்கும், திருவடி ஞானம் சீவனைச் சிறைப்படுத்தியிருந்த சிறைப்படுத்தியிருந்த மலத்தினின்றும் நீக்கும், திருவடி ஞானமே அணிமாதி சித்திகளையும் முத்திப் பேற்றினையும் அளிக்கும்.

*1599.* *மேல்வைத்த வாறுசெய் யாவிடின் மேல்வினை*
*மால்வைத்த சிந்தையை மாயம தாக்கிடும்*
*பால்வைத்த சென்னிப் படரொளி வானவன்*
*தாள்வைத்த வாறு தரிப்பித்த வாறே.*

முன்னிலையில் அமைந்த குருநாதன் கீழ் நோக்குதலையுடைய குண்டலினி சத்தியை மேல்நோக்குதலைச் செய்யும்படி உபாயம் அமைக்காவிடில், முற்காலத்தில் செய்தவினைகள் அறியாமையால் மயங்கிய மனத்தை மாயையின் வழிச் செலுத்திவிடும், அவ்விதம் அமையாமல் பால் போன்ற வெண்ணிற ஒளியாகப் பிரகாசிக்கும் மதிமண்டலத்தில் விளங்கும் சதாசிவம், தனது திருவடியைப் பதிப்பித்துத் தன்னை அகலாது நிலை பெறவும் செய்தான்.

*1600.* *கழலார் கமலத் திருவடி என்னும்*
*நிழல்சேரப் பெற்றேன் நெடுமால் அறியா*
*அழல்சேரும் அங்கியுள் ஆதிப் பிரானுங்*
*குழல்சேரும் என்னுயிர்க் கூடுங் குலைத்தே.*

ஒலிக்கின்ற கழல் பொருந்திய கமலத்தில் விளங்கும் திருவடி நிழலை அடைய பெற்றேன். திருமாலும் காணமாட்டாத, வெம்மை பொருந்திய அக்கினி மண்டலத்தில் உள்ள உருத்திர மூர்த்தியும், என்னுடைய உடல் பற்றை அழித்துச் சுழுமுனை உச்சியில் ஒளி பொருந்திய சிவமாக அமைந்தது.

*1601.* *முடிமன்ன ராகின்மூ வுலகம தாள்வர்*
*அடிமன்னர் இன்பத் தளவில்லை கேட்கின்*
*முடிமன்ன ராய்நின்ற தேவர்கள் ஈசன்*
*குடிமன்ன ராய்க்குற்ற மற்றுநின் றாரே.*

முடி சூடிய மன்னராயின் மூன்று உலகங்களையும் ஒருசேர ஆளுவர், ஆராயின் சிவனடியாகிய மன்னர்கள் பெறும் இன்பத்துக்கு அளவே இல்லை. முடிமன்னராக உள்ள தேவர்களும், இறைவனுக்கு வழிவழி ஆட்செய்யும் குடிமன்னராயின் குற்றம் நீங்கி நின்றோர் ஆவர்.

*1602.* *வைத்தேன் அடிகள் மனத்தினுள் ளேநாள்*
*பொய்த்தே யெரியும் புலன்வழி போகாமல்*
*எய்த்தேன் உழலும் இருவினை மாற்றிட்டு*
*மெய்த்தேன் அறிந்தேனவ் வேதத்தின் அந்தமே.*

நான் என் மன மண்டலத்துள் இறைவனது திருவடிகளான விந்து நாதங்களைப் பதித்துக் கொண்டேன். அதனால் பொய்யை மெய் போன்று காட்டி அக்கினியைத் தூண்டி நடத்தும் புலன்வழிச் செல்லாமல் மனத்தை மீட்டு, இளைத்தவனாகிய நான் படும் இருவினைத் துயரினை மாற்றி, வேதத்தின் முடிவாகிய ஞானாந்தத்தை அடைந்தேன்.

*1603.* *அடிசார லாம்அண்ணல் பாத மிரண்டும்*
*முடிசார வைத்தனர் மூன்னை முனிவர்*
*படிசார்ந்த இன்பப் பழவடி வெள்ளக்*
*குடிசார் நெறிகூடி நிற்பவர் கொள்கையே.*

திருவருளைப் பெறலாம், சிவ குருவினது இரண்டு திருவடிகளையும், பழமையான முனிவர் முடிவில் தரித்துக் கொண்டனர், படி முறையிலே அடைந்த பேரின்ப வெள்ளத்து, குடியாகக் கொண்ட நெறியிலே கூடி நிற்பவர் கொள்கை இதுவாம்.

*1604.* *மந்திர மாவதும் மாமருந் தாவதுந்*
*தந்திர மாவதுந் தானங்க ளாவதுஞ்*
*சுந்தர மாவதுந் தூய்நெறி யாவதும்*
*எந்தை பிரான்தன் இணையடி தானே.*

நினைப்பவனைக் காக்கும் மந்திரமாவதும், பிறவி நோய்க்கு மருந்தாவதும், திருவருளைப் பெறக்கூடிய கிரியை யாவதும், அடைந்தார் பெறும் பயன் எய்தும் புண்ணியத்தலங்களாவனவும், நன்மையைப் பெறுவதால் வரும் அழகாவதும், வீடு பேற்றை அளிக்கும் மேன்மையான நெறியாவதும், எந்தையாகிய சிவபிரானது இரு திருவடிகளேயாம்.

## 3. ஞாதுரு ஞானஞேயம்

ஞாதுரு - காண்போன். ஞானம் காணும் அறிவு, ஞேயம் - காணப்படும் பொருள். இங்குக் காண்பவன் ஆன்மா; காண்பது, சிவஞானம்; காணப்படும் பொருள் சிவம்.

*1605.* *நீங்காச் சிவானந்த ஞேயத்தே நின்றிடப்*
*பாங்கான பாசம் படரா படரினும்*
*ஆங்கார நீங்கி யதனிலை நிற்கவே*
*நீங்கா அமுத நிலைபெற லாமே.*

ஆன்மா என்றும் நீங்காத சிவனாந்தமாகிய சிவத்திடம் பொருந்தி நிற்க, அநாதியே பற்றியுள்ள ஆணவ மலம் அறிவை மறைக்காது, அங்ஙனம் மறைப்பினும் தன்முனைப்பு நீங்கி அச்சிவனாந்த நிலையில் நிற்கவே, என்றும் தன்னை விட்டு நீங்காத பேரின்பமாகிய அமுதத்தில் நிலை பெறலாம்.

*1606.* *ஞேயத்தே நின்றோர்க்கு ஞானாதி நின்றிடும்*
*ஞேயத்தின் ஞாதுரு ஞேயத்தில் வீடாகும்*
*ஞேயத்தின் ஞேயத்தை ஞேயத்தை யுற்றவர்*
*ஆயத்தில் நின்ற அறிவறி வாரே.*

அறியப்படும் பொருள் சிவம் என்று துணிந்து அவ்வழி நிற்போர்க்கு ஞானத்துக்குரிய மற்றவைகளும் பொருந்தி நிற்கும், அங்ஙனம் அறியப்படும் பொருளான சிவத்தை ஆன்மா அறிந்து அதுவாகவே அமைவது வீடாகும். ஞேயப் பொருளாகிய சிவத்தைப் பிரியாத சத்தியை உணர்ந்தவர், இக்கூட்டத்தால் விளைந்த மெய்ஞ்ஞான அறிவை அறிவார்.

*1607.* *தானென் றவனென் றிரண்டாகுந் தத்துவந்*
*தானென் றவனென் றிரண்டும் தனிற்கண்டு*
*தானென்ற பூவை யவனடி சாத்தினால்*
*நானென் றவனென்கை நல்லதொன் றன்றே.*

உண்மைப் பொருள் தான் என்று ஆன்மாவும் அவன் என்று சிவமும் ஆக இரண்டு உள்ளன, தன்னையும் அவனையும் தன்னொளியில் கண்டு, தானாக விளங்கும் சகஸ்ரதள உணர்வை அவன் விளங்கும் நிமிர்ந்த சகஸ்ரதளத்துக்கு மாற்றினால், நான் என்றும் அவன் என்றும் வேறுபடுத்திக் காணும் உணர்வு மாறி நானே அவன் என்று கூறுவது நல்லது ஒன்றல்லவா!

*1608.* *வைச்சன வாறாறு மாற்றி யெனைவைத்து*
*மெச்சப் பரன்றன் வியாத்துவ மேலிட்டு*
*நிச்சய மாக்கிச் சிவமாக்கி ஞேயத்தால்*
*அச்சங் கெடுத்தென்னை யாண்டனன் நந்தியே.*

சிவனுக்கு உபகாரமாக வைத்த முப்பத்தாறு தத்துவங்களின் தொழிலையும் மாற்றி என்னை நிலைபெறச் செய்து, உலகவர் பாராட்டும் வண்ணம் பரனது வியாபகத்துள் இருத்தி, அவ்வநுபவத்தில் நிலைபெறச் செய்து சிவமாக்கி, என்னை ஆட்கொண்டருளினான் என் குருநாதனாகிய சிவன்.

*1609.* *முன்னை யறிவறி யாதஅம் மூடர்போற்*
*பின்னை யறிவறி யாமையைப் பேதித்தான்*
*தன்னை யறியப் பரனாக்கித் தற்சிவத்*
*தென்னை யறிவித் திருந்தனன் நந்தியே.*

சிவ தீட்சைக்கு முன் அகண்டத்தை அறியாத அம்மூடரைப் போல, சிவ தீட்சைக்கு பின் கட்டியறியும் அறியாமையை மாற்றியருளினான் நந்தியாகிய குருநாதன், தான் என்ற ஆன்மாவைப் பரம் என்று ஆக்கி, தத் என்ற பொருளான சிவம் என்னுடைய இயல்பை எனக்கு உணர்த்தியிருந்தனன்.

*1610.* *காணாத கண்ணுடன் கேளாத கேள்வியுங்*
*கோணாத போகமுங் கூடாத கூட்டமும்*
*நாணாத நாணமும் நாதாந்த போதமும்*
*காணா யெனவந்து காட்டினன் நந்தியே.*

கட்பொறியால் காணாத காட்சியுடன், செவிப்பொறியால் கேளாத கேள்வியும், மாறுபடாத சிவானந்தமும், கூடிப் பிரியாத சேர்க்கையும், நாணமில்லாத பற்றும், நாதாந்தத்தில் விளங்கும் அறிவும், நந்தியெம்பெருமான் காண்பாயாக எனக் காட்டியருளினான்.

*1611.* *மோனங்கை வந்தோர்க்கு முத்தியுங் கைகூடும்*
*மோனங்கை வந்தோர்க்கு சித்தியும் முன்னிற்கும்*
*மோனங்கை வந்தூமை யாமொழி முற்றுங்காண்*
*மோனங்கை வந்தைங் கருமமும் முன்னுமே.*

பிரணவ யோகம் பழகி வந்தோர்க்கு வீடு பேறு கிட்டும், அவருக்கு மகா சித்திகளும் அவர் முன்னின்று தொழில் புரியும், அவருக்குப் பேசா அனுபூதி பிறந்து சிவோகத்தில் பொருந்தியிருத்தல் கூடும், இந்நிலை பெற்றோர் படைத்தலாதி ஐந்தொழிலைப் புரிவர்.

*1612.* *முத்திரை மூன்றின் முடிந்தது மூன்றன்பால்*
*வைத்த கலைகால் நான்மடங் கான்மாற்றி*
*உய்த்தவத் தானந்தத் தொண்குரு பாதத்தே*
*பெத்த மறுத்தோர் பிறந்திற வாரே.*

மூன்று முத்திரையின் காரியம் காண்பான், காட்சிப் பொருள் ஆகிய மூன்றன் வேறுபாடற்றபோது முடிந்தது, அமைத்த இடை பிங்கலை வழியாகச் செல்லும் பிராணனை உண்ணாக்கின் வழி நான்கு விரற்கடைப் பிரதேசத்தில் சஞ்சரிக்கும்படியாக மாற்றி, செலுத்திய விஷயானந்தத்தில் ஒளிமயமான குருவினது திருவடிக்கண், பொருந்திப் பந்தங்களை விட்டவர் மீண்டும் பிறந்து இறக்க மாட்டார்.

*1613.* *மேலைச் சொரூபங்கள் மூன்று மிகுசத்தி*
*பாலித்த முத்திரை பற்றும் பரஞானி*
*ஆலித்த நாட்டமே ஞேயம் புகுந்தற்ற*
*மூலச் சொரூபன் மொழிஞா துருவனே.*

நவந்தரு பேதங்களில் மேலான விந்து, நாதம், சாதாக்கியம் என்ற மூன்றும், மிகுந்த சத்தி விளங்கும் அடையாளம் அல்லது முதல் நிலையாம், இதனைப் பற்றியுள்ள பரம ஞானி, ஒலிக்கின்ற நடனமே புரியும் ஞேயப் பொருளாகிய சிவத்துடன் கலந்து தன் நிலைகெட்ட, மூலமான பரன் என்று மொழியப் பெற்ற காண்பான் ஆகும்.

## 4. துறவு

துறவி - அன்பினால் இறைவனைப் பற்றி இயல்பான முறையில் பாசங்களின் நீங்குதல், அறிவினால் ஆராய்ச்சி செய்து பற்றின் நீங்குதல் அவா அறுத்தலில் பின்னர்க் கூறப்பெறும்.

*1614.* *இறப்பு பிறப்பும் இருமையும் நீங்கித்*
*துறக்குந் தவங்கண்ட சோதிப் பிரானை*
*மறப்பில ராய்நித்தம் வாய்மொழி வார்கட்*
*கறப்பதி காட்டும் அமரர் பிரானே.*

இறப்பும் பிறப்புமாகிய இரு தன்மைகளும் நீங்கி, உலக இன்பங்களை இயல்பாகத் துறக்கின்ற தவத்தை அருளிச்செய்த ஒளி வடிவினை, மறவாதவராய் நாடோறும் நாதோபாசனை செய்வார்கட்கு, சிவபிரான் சிவலோகம் அருளுவான்.

*1615.* *பிறந்தும் இறந்தும்பல் பேதைமை யாலே*
*மறந்து மலஇருள் நீங்க மறைந்து*
*சிறந்த சிவனருள் சேர்பரு வத்துத்*
*துறந்த வுயிர்க்குச் சுடரொளி யாமே.*

வினைவழி பிறந்தும் வினை நீங்கிய வழி இறந்தும், பல்வகை அறியாமையாலே செய்வன தவிர்வன மறந்து, சிவ சிந்தனை பால் ஆணவத்தால் உண்டாகிய அறியாமை நீங்க, அறியாமையில் மறைந்து அறிவிற்சிறந்த சத்திநிபாதம் வந்தகாலத்து, பற்றுகளைத் துறந்த உயிர்க்குச் சுடரொளியாகத் தோன்றும்.

*1616.* *அறவன் பிறப்பிலி யாரும் இலாதான்*
*உறைவது காட்டகம் உண்பது பிச்சை*
*துறவனுங் கண்டீர் துறந்தவர் தம்மைப்*
*பிறவி யறுத்திடும் பித்தன்கண் டீரே.*

நியதியை உடையவன், அனாதியே உள்ளவன், அதனால் தனியன், அவன் தங்கம் இடம் எல்லாத் தத்துவங்களும் சுட்டெரிக்கப்பட்ட இடம், அவன் ஏற்பது சீவபோதம், ஆதலால் அவன் துறவி என்பதை அறியுங்கள், பற்றுகளை நீத்தவரை, பிறவியைப் போக்கும் பித்தனாவான் என்பதையும் அறிந்துகொள்ளுங்கள்.

*1617.* *நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்*
*நெறியில் வழுவின் நெருஞ்சில் முட்பாயும்*
*நெறியில் வழுவா தியங்கவல் லார்க்கு*
*நெறியின் நெருங்சில்முட் பாயகி லாவே.*

அனாதியான இறைவன் சீவர்கள் அடைய வேண்டிய நெறியையும் நெருஞ்சில் முள் போல ஒதுக்கித் தள்ள வேண்டிய செயலையும் படைத்துள்ளான், அறவழியில் நில்லாது தவறினால் நெருஞ்சில் முள் குத்துவது போன்ற துன்பங்கள் அடைய மாட்டா.

*1618.* *கேடுங் கடமையுங் கேட்டுவந் தைவரும்*
*நாடி வளைந்தது நான்கட வேனலேன்*
*ஆடல் விடையுடை அண்ணல் திருவடி*
*கூடுந் தவஞ்செய்த கொள்கையன் றானே.*

அசைந்தாடிக் கொண்டிருக்கும் ஒளி மண்டலத்தில் அண்ணலது விந்து நாதமாகிய திருவடிகளை, நான் என்றும் பிரியாதே கூடும் தவம் செய்த கொள்கையுடையவன், ஆதலால் மறத்தால் வரும் கேட்டையும் அறத்தால் செய்யு கடமையையும் உணர்ந்திருப்பதால், ஐம்புல ஆசையால் விளையும் பயனுக்கு நான் உட்பட்டவன் அல்லன்.

*1619.* *உழவன் உழவுழ வானம் வழங்க*
*உழவன் உழவினிற் பூத்த குவளை*
*உழவன் உழத்தியர் கண்ணொக்கும் என்றிட்*
*டுழவன் அதனை யுழலொழிந் தானே.*

மேலும் மேலும் சாதனையை விரும்பிச் செய்ய, ஆகாய மண்டலம் விளங்க, ஞான சாதனையில் அமைந்த நீலோற்பல ஒளி, ஞான சாதனை செய்தவன் இது அருள் சத்தியின் ஒளி என்று கண்டு, ஞான சாதகன் மேலும் சாதனையற்ற அருளில் சாட்டம் கொண்டு விளங்கினான்.

*1620.* *மேல்துறந் தண்ணல் விளங்கொளி கூற்றுவன்*
*நாள்துறந் தார்க்கவன் நண்ப னவாவிலி*
*கார்துறந் தார்க்கவன் கண்ணுத லாய்நிற்கும்*
*பார்துறந் தார்க்கே பதஞ்செய லாமே.*

இயல்பாகவே பற்றும் வெறுப்பும் இல்லாதவன், கூற்றுவன் நாள் என்ற காலத்தைக் கடந்தவருக்கு அவன் நண்பன், எல்லாவற்றையும் உடைமையால் அவன் ஆசையற்றவன், அஞ்ஞானமாகிய இருளை விட்டு ஒளி பெறுவோர்க்குத் தனது நெற்றிக் கண்ணால் அநுக்கிரகம் செய்வான், பூமி தத்துவம் என்ற பாலுணர்ச்சியைத் துறந்தவர்க்கே தனது திருவடியைத் தந்தருளுவான்.

*1621.* *நாகமும் ஒன்று படம்ஐந்து நாலது*
*போகமுட் புற்றிற் பொருந்தி நிறைந்தது*
*ஆக மிரண்டும் படம்விரித் தாட்டொழிந்*
*தேகப் படஞ்செய் துடம்பிட மாமே.*

அதற்குப் படம் ஐந்து, அது நுகரும் போகம் நான்கு, அது புற்றுக்குள்ளே பொருந்தி நிறைந்துள்ளது, அதற்குரிய இரண்டு உடல்களிலும், படம் விரித்து ஆட்டொழித்து படத்தை விரித்து ஆடிக் கொண்டிருந்ததை விட்டு, ஒரே படமாகச் செய்து கொண்டு உடம்பு இடமாகக் கிடக்கும்.

*1622.* *அகன்றார் வழிமுதல் ஆதிப் பிரானும்*
*இவன்றா னெனநின் றெளியனும் அல்லன்*
*சிவன்றான் பலபல சீவனு மாகும்*
*நயன்றான் வரும்வழி நாமறி யோமே.*

துறந்தாரது வழி முதல்வனும் துறவாதாரைப் பிறவிக்கு விடுபவனுமாகிய ஆதியையுடைய பிரான், இவன் என்று சுட்டியறியும் எளிமையுடையவன் அல்லன், சிவனது திருவருளே பத்குவத்துக்கேற்பப் பல பல சீவன்களிலும் ஆகும், அவன் செய்யும் நன்மைகள் வரும்வழி நம்மால் அறிய முடியுமோ? முடியாது.

*1623.* *தூம்பு திறந்தன ஒன்பது வாய்தலும்*
*ஆம்பற் குழலியின் கஞ்சுளிப் பட்டது*
*வேம்பேறி நோக்கினன் மீகாமன் கூரையிற்*
*கூம்பேறிக் கோயிலிற் பூக்கின்ற வாறே.*

உடலைக் கடந்த போது கண் முதலிய ஒன்பது வாயில்களால் வரும் அறிவு விடுபட்டது. சந்திரமண்டலத்தில் அமைந்த தொனியில் சம்மியம் செய்த போது தேகமாகிய சட்டையின் அநுபவம் முடிவுற்றது, பிரபஞ்சம் இனித்த நிலை மாறிக் கசப்பாயிற்று, உடலைச் செலுத்திய ஆன்மான சிரசின் உச்சியில் தலைவன் வாழும் ஊர்த்துவ சகஸ்ரதளத்தில் விளங்கியதே.

## 5. தவம்

தவமாவது தன்னுள் மறைந்துள்ள பொருளைக் காணச்செய்யும் முயற்சி அஃது இடையறாது இறைவனை எண்ணியிருத்தலால் கை கூடும்.

*1624.* *ஒடுங்கி நிலைபெற்ற உத்தமர் உள்ளம்*
*நடுங்குவ தில்லை நமனுமங் கில்லை*
*இடும்பையும் இல்லை இராப்பகல் இல்லை*
*படும்பயன் இல்லை பற்றுவிட் டோர்க்கே.*

சிவத்தினிடம் மனத்தை வைத்து நிலைபெற்ற உத்தமர்களின் உள்ளமானது, உலகிலுள்ள எத்தகைய துன்பத்தையும் கண்டு அஞ்சுவதில்லை, அத்தகையவர் எமனுக்கும் பயப்படுவதில்லை, அவர்களுக்குத் துன்பமும் இல்லை, இரவு பகல் என்ற வேறுபாடும் இல்லை, பிற பொருளின்மேல் பற்று நீத்தவர்க்கு விளைகின்ற பயன் வேறொன்றும் இல்லை.

*1625.* *எம்மா ருயிரும் இருநிலத் தோற்றமுஞ்*
*செம்மா தவத்தின் செயலின் பெருமையும்*
*அம்மான் திருவருட் பெற்றவர்க் கல்லா(து)*
*இம்மா தவத்தின் இயல்பறி யாரே.*

எமது உரிய உயிர் உடலோடு புணர்ப்பதாகிய பிறப்பும், அது உடம்போடு கூடி அநுபவிப்பதற்கு இடனாகிய உலகப்படைப்பும், சிறப்பான தவத்தின் மேன்மையும், சிவனது அருள் பெற்றவர்க்கு அல்லால், இப்பெரிய தவத்தின் தன்மையை அறிய மாட்டார்.

*1626.* *பிறப்பறி யார்பல பிச்சைசெய் மாந்தர்*
*சிறப்பொடு வேண்டிய செல்வம் பெறுவர்*
*மறப்பில ராகிய மாதவஞ் செய்வார்*
*பிறப்பினை நீக்கும் பெருமைபெற் றாரே.*

பல வகையாகப் பொருளீட்டும் முயற்சியின்றிப் பிச்சை எடுக்கின்ற மனிதர்கள் பிறப்பின் நோக்கத்தை அறியமாட்டார், ஆனால் இறைவனை மறவாது பெரிய தவத்தைச் செய்பவர்கள் சிறப்பொடு செல்வத்தைப் பெறுவர், இப்பிறப்பில் சிறப்போடு வேண்டிய செல்வத்தைப் பெறுவர், மேலும் பிறப்பினை நீக்கும் பெருமையும் பெற்றவர் ஆவர்.

*1627.* *இருந்து வருந்தி எழிற்றவஞ் செய்யும்*
*பெருந்தன்மை யாளரைப் பேதிக்க வென்றே*
*இருந்திந் திரனே யெவரே வரினுந்*
*திருந்துந்தஞ் சிந்தை சிவனவன் மாலே.*

தனித்திருந்து சிவப்பேற்றை அடைய அரிதின் முயன்று, அழகிய தவத்தினை இயற்றும் மன உறுதி பூண்டோரை, மனத்தை மாற்ற வேண்டும் என்றே, சூழ்ந்திருந்து இந்திரனே பிற தேவரோ யார் வந்தாலும், மயங்காது தம்முடைய மனத்தைச் சிவத்தின்பால் உறுதியாக வைத்துத் திருந்தியிருப்பர்.

*1628.* *சரந்துங் கரந்திலன் கண்ணுக்குந் தோன்றான்*
*பரந்த சடையன் பசும்பொன் நிறத்தன்*
*அருந்தவர்க் கல்லால் அணுகலு மாகான்*
*விரைந்து தொழப்படும் வெண்மதி யானே.*

பக்குவமடைந்த ஆன்மாக்களால் விரைந்து தொழப்படும் வெண்மதியில் விளங்குபவன், தவமிலார்க்கு மறைந்தும் தவமுடையோர்க்கு வெளிப்பட்டும் உள்ளான், அகக்கண்ணுக்கேயன்றிப் புறக்கண்ணுக்குத் தோன்றாதவன், பரந்த ஒளிக்கிரணத்தையுடையவன், பசும்பொன் போன்ற நிறமுடையவன், அரிய தவத்தினையுடையவர்க்கன்றி அணுகுவதற்கும் முடியாதவன்.

*1629.* *பின்னெய்த வைத்ததோர் இன்பப் பிறப்பினை*
*முன்னெய்த வைத்த முதல்வனை எம்மிறை*
*தன்னெய்துங் காலத்துந் தானே வெளிப்படும்*
*மன்னெய்த வைத்த மனமது தானே.*

ஆன்மாக்கள் பின்னே அடைய வேண்டிய இன்பப் பிறப்பை, முன்னமேயே நியதியாக வைத்த முதற்பொருளாகிய எமது இறைவனை, ஆன்மா தன்னை அறியப் புகும் போது தானே வந்து அடையும், அவ்வாறு உயிருக்குத் தலைவனை அடையச் செய்து மனத்திட்டமேயாம்.

*1630.* *அமைச்சரும் ஆனைக் குழாமும் அரசும்*
*பகைத்தெழும் பூசலுட் பட்டார் நடுவே*
*அமைத்ததோர் ஞானமும் ஆத்தமும் நோக்கி*
*இமைத்தழி யாதிருந் தார்தவத் தாரே.*

தம்மையும் தலைவனையும் கண்ட தவத்தோர், அமைச்சும் யானைக் கூட்டமும் அரசும், ஒன்றுக்கொன்று மாறுபட்டு எழும் போரின் நடுவிலும், திருவருளில் அமைத்த ஞானமும் அதனால் பெற வேண்டிய ஞேயப் பொருளாகிய சிவத்தையும் நோக்கி, இமையாது நிலை பெற்றிருந்தார்.

*1631.* *சாத்திரம் ஓதுஞ் சதுர்களை விட்டுநீர்*
*மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்*
*பார்த்தவப் பார்வை பசுமரத் தாணிபோல்*
*ஆர்த்த பிறவி அகலவிட் டோடுமே.*

சாத்திரம் படித்துக்கொண்டு பெருமை அடைவதை விட்டு, நீங்கள் ஒரு கண நேரமாவது புறத்தே செல்லும் மனத்தைத் தடுத்து அகத்தே நோக்குங்கள், அவ் அகமுகப் பார்வையானது பசு மரத்தில் அடித்த ஆணி போல் நிலைபெற, பிணித்த பிறவியானது கட்டுகளினின்றும் அகன்று நீங்கிவிடும்.

*1632.* *தவம்வேண்டு ஞானந் தலைப்பட வேண்டில்*
*தவம்வேண்டா ஞானம் சமாதிகை கூடில்*
*தவம்வேண்டா மச்ச கசமார்க்கத் தோர்க்கு*
*தவம்வேண்டா மாற்றத் தனையறி யாரே.*

ஞானம் பெற வேண்டுமாயின் தவம் வேண்டும், ஞான சமாதி கூடிய பின்னர் அதற்குரிய சாதனை வேண்டியதில்லை, இல்லறத்திலிருந்து யோகம் பயிலுவோர்க்குச் சமாதி பெறுவதற்குரிய தவம் வேண்டியதில்லை, நான் தவம் வேண்டா எனக் கூறும் உண்மையினை உலகினர் அறியார்.

## 6. தவதூடணம்

தவதூடனம் - தவ நித்தை, அஃதாவது புற நோக்கை விட்டு அதிக நோக்குக் கொண்டவர்க்குப் புறத்தே செய்யும் கிரியை ஒன்றும் வேண்டா என்று கூறுவது.

*1633.* *ஓதலும் வேண்டாம் உயிர்க்குயி ருள்ளூற்றாற்*
*காதலும் வேண்டா மெய்க்காய மிடங்கண்டாற்*
*சாதலும் வேண்டாஞ் சமாதிகை கூடினாற்*
*போதலும் வேண்டாம் புலன்வழி போகார்க்கே.*

உயிர்க்குயிராகிய பொருளை உள்ளே பெற்ற பின் சற்று அறிய வேண்டியது ஒன்றும் இல்லை, உண்மைப் பொருளான சிவத்தை எடுத்த உடலில் கண்டால் அன்பு செய்தலும் வேண்டா, தன்னை மறந்த சமாதி நிலை கிட்டியபின் இறத்தலும் வேண்டியதில்லை, மனத்தைப் புலன் வழியாகப் போகாது தடுத்து நிலை நிறுத்தும் ஆற்றல் பெற்றவர்க்குப் பிற இடங்களுக்குச் சென்று தவம் செய்ய வேண்டியது இல்லை.

*1634.* *கத்தவும் வேண்டாங் கருத்தறிந் தாறினாற்*
*சத்தமும் வேண்டாஞ் சமாதிநிலை கூடினாற்*
*சுத்தமும் வேண்டாந் துடக்கற்று நிற்றவாற்*
*சித்தமும் வேண்டாஞ் செயலற் றிருக்கிலே.*

உண்மையை உணர்த்தும் நூல்களின் கருத்துகளை அறிந்து அடங்கினால் ஓதலும், அங்ஙனம் அறிந்து மெய்ப்பொருளோடு கூடினால் நாத சம்மியமும் தேவையில்லை, இவ்வாறு நின்றவர் மனம் அசுத்தமின்மையின், சுத்தம் செய்யும் காரியமும் வேண்டா, சித்தம் எண்ணுவதை விட்டபோதே சித்தமும் வேண்டா.

*1635.* *விளைவறி வார்பண்டை மெய்த்தவஞ் செய்வார்*
*விளைவறி வார்பண்டை மெய்யுரை செய்வார்*
*விளைவறி வார்பண்டை மெய்யுறஞ் செய்வார்*
*விளைவறி வார்விண்ணின் மண்ணின்மிக் காரே.*

தவத்தின் பயனை அறிபவர்களே உண்மைத் தவத்தைச் செய்பவர், இவர்களே உண்மையை அறிந்து சீடனுக்கு எடுத்துரைக்கும் உண்மைக் குரலராவர், இவர்களே பழமையான சூக்கும தேகத்தை உறுதி செய்பவர், ஆதலால் இவர் விண்ணகத்தும் மண்ணகத்தும் மிக்கார் ஆவர்.

*1636.* *கூடித் தவஞ்செய்து கண்டேன் குரைகுழல்*
*தேடித் தவஞ்செய்து கண்டேன் சிவகதி*
*வாடித் தவஞ்செய்ய தேதவம் இவைகளைத்*
*தூடிற் பலவுல கோரொத் தவரே.*

திருவருளோடு பொருந்தி நிற்கின்ற தவத்தைச் செய்து ஒலிக்கின்ற பரநாத வடிவாகிய திருவடியைக் கண்டேன், நெடுநாள் அந்நிலையிலிருந்து தேடிச் சிவகதியைப் பெற்றேன், இவ்வாறு இந்திரியங்களைத் தன் வழிப்படுத்தி ஒடுங்கி நிற்றலே தவம், இவ்வாறன்றி மாறுபட்டு இந்திரிய வயம் மயங்கிய பல உலகத்தினர் எத்தவமுடையோர் ஆவர்?

*1637.* *மனத்துறை மாகடல் ஏழுங்கை நீந்தித்*
*தவத்திடை யாளர்தஞ் சார்வத்து வந்தார்*
*பவத்திடை யாகார் அவர்பணி கேட்கின்*
*முகத்திடை நந்தியை முந்தலு மாமே.*

மனத்திலே சங்கற்பத்தாலாகிய பெரிய கடலாகவுள்ள ஏழினையும் கடந்து, தவமுடையோர் வழி சார்ந்து அவரோடு இணங்கியிருப்பார் பிறப்புக்கு வரமாட்டார், பின் அத்தவமுடையோர் ஏவலைக் கேட்டு நடந்தால், சிவத்தைத் தம் முகத்தின் கண்டு சிவப்பேறு அடைதலும் கூடும்.

*1638.* *மனத்திடை நின்ற மதிவான் உருவி*
*இனத்திடை நீக்கி இரண்டற வீர்த்துப்*
*புனத்திடை அஞ்சும் போகாமல் மறித்தால்*
*தவத்திடை யாறொளி தன்னொளி யாமே.*

மனமாகிய உறையுளில் செறிக்கப்பட்ட ஞான வாளை உருவி, பிரபஞ்ச வாசனையை விட்டு, சிவத்துடன் அநந்தியமாகப் பொருந்தி, ஞானேந்திரியங்கள் ஐந்தும் விஷயங்களைப் பற்றி வெளிச் செல்வதைத் தடுத்தால், தவத்திடை காணும் சிவ ஒளியே தன்னொளியாகும்.

*1639.* *ஒத்து மிகவு நின்றானை யுரைப்பது*
*பத்தி கொடுக்கும் பணிந்தடி யார்தொழ*
*முத்தி கொடுக்கும் முனிவ னெனும்பதஞ்*
*சத்தான செய்வது தான்தவந் தானே.*

சீவர்களது அறிவினில் பொருந்தி நின்றானை உணர்வது, சிவக்காதலை உண்டாக்கும், மேலும் அடியார் பணிந்து நாடோறும் தொழுகின்றமையால் முத்தியும் கிட்டும், அவ்வாறு பிரபஞ்ச நோக்கை முனிகின்றவன் என்ற சொல்லை உண்மைப்படுத்துவதே தவமாம்.

*1640.* *இலைதொட்டுப் பூப்பறித் தெந்தைக்கென் றெண்ணி*
*மலர்தொட்டுக் கொண்டேன் வரும்புனல் காணேன்*
*தலைதொட்ட நூல்கண்டு தாழ்ந்ததென் உள்ளந்*
*தலைதொட்டுக் கண்டேன் தவங்கண்ட வாறே.*

பத்திரங்களை எடுத்தும், பூவினைக் கொய்தும் எம்மிறைந்த ஆகும் என்று நினைந்து, மலர்களைத் தொடுத்துக் கொண்டிருந்தேன், அப்போது ஆகாய கங்கையாகிய ஒளியைக் காணவில்லை, மூலாதாரத்திலிருந்து சிரசுவரை செல்லுகின்ற சுழுமுனை நாடியைக் கண்டு என் மனம் அடங்கியது, சிரசில் சந்திர கலை விளங்கும்படி செய்து தவத்தின் பொருளை அறிந்தேன்.

*1641.* *படர்சடை மாதவம் பற்றிய பத்தர்க்*
*கிடரடை யாவண்ணம் ஈசன் அருளும்*
*இடரடை செய்தவர் மெய்த்தவ நோக்கில்*
*உடரடை செய்வ தொருமனத் தாமே.*

படர்ந்த ஒளிக்கிரணத்தை உடைய தவத்தைச் செய்த அன்பர்க்கு, துன்பம் வாராவண்ணம் இறைவன் காத்தருளுவான், துன்பத்தை வாராவண்ணம் செய்தவரது உண்மைத் தவத்தை ஆராயின், உடம்பை மீண்டும் பெருமை செய்வது அவரது மன ஒருமைப்பாட்டினால் ஆகும்.

*1642.* *ஆற்றிற் கிடந்த முதலைகண் டஞ்சிப்போய்*
*ஈற்றுக் கரடிக் கெதிர்ப்பட்ட தன்னொக்கும்*
*நோற்றுத் தவஞ்செய்யார் நூலறி யாதவர்*
*சோற்றுக்கு நின்று சுழல்கின்ற வாறே.*

நூலை அறியாதவராய்ப் பொறுமையோடு தவம் செய்யாதவர், வயிற்றுக்கு இரை தேடி வருந்தி அலைவது, ஆற்றிலேயுள்ள முதலைக்கு அஞ்சி ஓடி, அண்மையிலே ஈன்ற கரடிக்கு முன்னே அடைந்து வருந்துதலை ஒக்கும்.

*1643.* *பழுக்கின்ற வாறும் பழமுண்ணு மாறுங்*
*குழக்கன்று துள்ளியக் கோணியைப் பல்காற்*
*குழக்கன்று கொட்டிவிற் கட்டவல் லார்க்குள்*
*இழுக்காது நெஞ்சத் திடவொன்று மாமே.*

சிவ யோகத்தால் சிவக்கனி பழுக்குமாறும் அதை உண்ணுமாறும், பிராணன் பன்முறை சஞ்சரிக்கின்ற உடம்பிடை, பிரணானைச் சுழுமுனையில் நிறுத்த வல்லார்க்கு, சுவாசம் இயங்குந்தன்மை கெடு ஊர்த்துவ சகஸ்ரதளத்தில் ஒன்றி நின்றுவிடும்.

*1644.* *சித்தஞ் சிவமாகச் செய்தவம் வேண்டாவால்*
*சித்தஞ் சிவானந்தஞ் சேர்ந்தோர் உறவுண்டால்*
*சித்தஞ் சிவமாக வேசித்தி முத்தியாஞ்*
*சித்தஞ் சிவமாதல் செய்தவப் பேறே.*

சித்தம் இடையறாது சிவத்தை நினைந்து சிவமாகவே அவருக்குச் செய்ய வேண்டிய தவம் ஒன்றும் வேண்டா, அவ்வாறு சித்தம் சிவமாகிப் பேரானந்தம் பொருந்திய அடியார் உறவும் உண்டானால், அவர்களது சித்தம் சிவமாய்ச் சித்தியும் முத்தியும் உண்டாம், ஆகையால் சித்தமானது சிவமாவதே பூர்வம் செய்த தவத்தின் பயனாம்.

## 7. அருளுடைமையின் ஞானம் வருதல்

அருள் - நாத விந்துவாகிய திருவடி, அருளுடைமையின் ஞானம் வருதலாவது, நாத விந்துவாகிய திருவடி பொருந்தியபோது ஞானம் விளங்குதல்.

*1645.* *பிரானருள் உண்டெனில் உண்டுநற் செல்வம்*
*பிரானருள் உண்டெனில் உண்டுநன் ஞானம்*
*பிரானரு ளிற்பெருந் தன்மையும் உண்டு*
*பிரானரு ளிற்பெருந் தெய்வமு மாமே.*

சிவனது அருள் உண்டாயின் நல்ல செல்வம் உண்டாகும், நல்ல ஞானம் உண்டாகும், பெருந்தன்மை உண்டாகும், பெரிய தெய்வமும் ஆவர்.

*1646.* *தமிழ்மண் டலம்ஐந்துந் தாவிய ஞானம்*
*உமிழ்வது போல உலகந் திரிவர்*
*அவிழு மனமுள்ளம் ஆதி யறிவுந்*
*தமிழ்மண் டலம்ஐந்துந் தத்துவ மாமே.*

சரியை வழிநிற்போர் தமிழ் மண்டலமும் அதனைச் சார்ந்த கன்னடம், மலையாளம், துளுவம், தெலுங்கு ஆகிய மண்டலங்களிலுள்ள தலங்களை அடைந்து வழிபடுவதில் அவர்களிடம் மறைந்துள்ள ஞானம் வெளிப்படும் என்று சுற்றித் திரிவர், ஞானிகள் இவ்வுண்மையைத் தமது தேகத்தில் உணர்ந்து ஒன்றான சிவமே பலவான சத்திகளாக விளங்குகிறது என்ற அறிந்து, எங்கும் செல்லாமல் இருந்த இடத்திலேயே அகண்ட வழிபாட்டைச் செய்து பெரும்பயனை அடைகின்றனர்.

*1647.* *புண்ணிய பாவம் இரண்டுள பூமியில்*
*நண்ணும் பொழுதறி வார்சில ஞானிகள்*
*ஏண்ணி இரண்டையும் வேரறுத் தப்புறத்*
*தண்ணல் இருப்பிடம் ஆய்ந்துகொள் வீரே.*

புண்ணியம் என்றும் பாவம் என்றும் இவ்வுலகில் இரண்டு உள்ளன, இவை வினை காரணமாக இன்ப துன்பமாகப் பொருந்துகின்றது என்று உணர்வார் சிவ ஞானிகள், இவ்வாறு உணர்ந்து இவற்றுக்குக் காரணமான வினையாகிய வேரினை அறுத்து, ஆதலால் நீங்களும் வினை நீங்கியவிடத்து வெளிப்படும் அண்ணலை ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள்.

*1648.* *முன்னின் றருளு முடிகின்ற காலத்து*
*நன்னின் றுலகில் நடுவுயி ராய்நிற்கும்*
*பின்னின் றருளும் பிறவியை நீக்கிடும்*
*முன்னின் றெனக்கொரு முத்திதந் தானே.*

வினைகள் முடிகின்ற காலத்தில் சிவம் தனது சத்தியைப் பதிப்பித்து ஆண்டருளும், அந்நிலை வாராத இடைக்காலத்தில் உயிருக்குயிராய் நின்று வினைகளை ஊட்டி நிற்கும், சீவனுக்குப் பின்னே நின்றருளிப் பிறவியை நீக்கிவிடும், அவனே முன் தோன்றி வீடுபேற்றை அளிப்பவனாவான்.

*1649.* *சிவனரு ளாற்சிலர் தேவரு மாவர்*
*சிவனரு ளாற்சிலர் தெய்வத்தோ டொப்பர்*
*சிவனரு ளால்வினை சேரகி லாமை*
*சிவனருள் கூறில்அச் சிவலோக மாமே.*

சிவத்தின் அருள் பதிவித்தலாற் சிலர் தேவ வடிவம் பெறுவர், சிவத்தின் அருளால் சிலர் தெய்வத் தன்மை பெறுவர், சிவத்தின் அருளால் சிலருக்கு வினை சேராமை பொருந்தும், சிவத்தின் அருளைச் சொல்லப்போனால் மேலே கண்ட மூவரும் சிவலோக வாசிகளேயாவர்.

*1650.* *புண்ணியன் எந்தை புனிதன் இணையடி*
*நண்ணி விளக்கென ஞானம் விளைந்தது*
*மண்ணவ ராவதும் வானவ ராவதும்*
*அண்ணல் இறைவன் அருள்பெற்ற போதே.*

புண்ணியப் பயனானவனும் எனது தந்தையுமான சிவத்தின் விந்துநாதமாகிய இரு திருவடிகளைப் பொருந்திய போது, விளக்கொளி போல் ஞானம் விளங்கியது, மண்ணுலகில் ஞானிகளாக வாழ்வதும் விண்ணுலகில் தேவ உருவில் விளங்குவதும், என் அண்ணலாகிய சிவன் அருள் பெற்ற போது ஆவதேயாம்.

*1651.* *காயத்தே ரேறி மனப்பாகன் கைகூட்ட*
*மாயத்தே ரேறி மயங்கு மலையுணர்*
*நேயத்தே ரேறி நிமலன் அருள்பெற்றால்*
*ஆயத்தே ரேறி யவனிவ மாமே.*

உடம்பாகிய ஊர்தியில் ஊர்ந்து மனமாகிய பாகன் செலுத்த, அழியும் தத்துவ உணர்வுகளில் தலைப்பட்டு மயங்கும் உயிர்கள், உணர்வில் விளங்கும் ஒளி மண்டலத்தில் அமர்ந்து மலமில்லாத சதாசிவ குருவின் அருள் பெற்றால், அடியார் கூட்டத்தில் ஒருவனாகி இவனும் சிவரூபம் பெறுவான்.

*1652.* *அவ்வுல கத்தே பிறக்கில் உடலொடும்*
*அவ்வுல கத்தே யருந்தவம் நாடுவர்*
*அவ்வுல கத்தே யரனடி கூடுவர்*
*அவ்வுல கத்தே யருள்பெற வாரே.*

சிவன் உலகு ஞானத்தோடு பிறந்தால், எடுத்த உடலிலேயே சிவலோகம் சேரும் அருமைத் தவத்தை நாடுவர், சிவலோகத்தே அரன் திருவடி அடைவர், சிவலோகத்தில் சத்தியின் ஆற்றலைப் பெறுவர்.

*1653.* *கதிர்கண்ட காந்தங் கனவின் வடிவாம்*
*மதிகண்ட காந்தம் மணிநீர் வடிவாஞ்*
*சதிகொண்ட சாக்கி யெரியின் வடிவாம்*
*எரிகொண்ட ஈசன் எழில்வடி வாமே.*

சூரியனைக் கண்ட சூரிய காந்தக்கல் நெருப்பில் வடிவமாகும், சந்திரனைக் கண்ட சந்திர காந்தக்கல் முத்துப் போன்ற நீரின் வடிவாகும், சக்கியோடு மோதும் முக்கியைக் கொண்ட சக்கி முக்கி தீயினை உண்டாக்கும் அக்கினி வடிவாம், ஆனால் அக்கினி மண்டலத்தைத் தன்னுள் இழுத்துக் கொண்ட சிவன் அக்கினியின் தன்மையை விட்டு அழகான சந்திரனொளி மயமாக விளங்குவான்.

*1654.* *நாடும் உறவுங் கலந்தெங்கள் நந்தியைத்*
*தேடுவன் தேடிச் சிவபெரு மான்என்று*
*கூடுவன் கூடிக் குரைகழற் கேசெல்ல*
*வீடு மளவும் விடுகின் றிலேனே.*

நாடுகின்ற உறவாக எம் குருநாதனாகிய சிவத்தைப் பொருந்தித் தேடுவேன். தேடிச் சிவபெருமான் என்று கூடுவேன், அங்ஙனம் கூடி ஒலிக்கின்ற திருவடிக்குச் செல்லுவதற்கு, உடலை விட்டு உயிரைப் பிரித்து அறியும் வரையில் விட மாட்டேன்.

## 8. அவ வேடம்

அவ வேடம் - பயனற்ற சின்னம். அகம் புறம் ஒத்தில்லாது வேடம் புனைவது பயனின்றாகும்.

*1655.* *ஆடம் பரங்கொண் டடிசிலுண் பான்பயன்*
*வேடங்கள் கொண்டு வெருட்டிடும் பேதைகாள்*
*ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியுந்*
*தேடியுங் காணீர் சிவனவன் தாள்களே.*

ஆடம்பரங்களைக் கொண்டு சோறு உண்பதையே பயனாக, பயனற்ற வேடங்களைப் பூண்டு உலகை மருட்டிடும் அறிவிலிகாள்! பொய் வேடத்தை விட்டுச் சிவனை நினைந்து ஆடியும் பாடியும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தும் மகிழ்ச்சியோடு பிதற்றியும், சிவனது திருவடிகளைத் தேடிக் காணுங்கள்.

*1656.* *ஞானமில் லார்வேடம் பூண்டிந்த நாட்டிடை*
*ஈனம தேசெய் திரந்துண் டிருப்பினும்*
*மான நலங்கெடும் அப்புவி யாதலால்*
*ஈனவர் வேடங் கழிப்பித்தல் இன்பமே.*

சிவஞானமில்லாதர் தவவேடம் பூண்டு, இந்நாட்டில் இழிவான செயலைச் செய்து, பிச்சை எடுத்து உண்டு உயிரோடு இருப்பினும் அந்த நாடு அதன் பெருமை குன்றும், ஆதலால் இழிவுடையோராகிய அவரது வேடத்தை அகற்றுவது இன்பமாம்.

*1657.* ***இன்பமுந் துன்பமும் நாட்டா ரிடத்துள்ள***
***நன்செயல் புன்செய லாலந்த நாட்டிற்காம்***
***என்ப இறைநாடி நாடோறும் நாட்டினின்***
***மன்பதை செப்பஞ் செயின்வையம் வாழுமே.***

இன்பமும் துன்பமும் நாட்டு மக்கள் செய்த, நல்வினை தீவினையால் அந்நாட்டிற்கு ஆகும் என்று கூறுவர், ஆதலால் அரசன் இதனை நன்கு ஆராய்ந்து நாள்தோறும் நாட்டில், அவவேடத்தாரை நல்வழிப்படுத்துமாயின் உலகம் வாழும்.

*1658.* ***இழிகுலத் தோர்வேடம் பூண்பர் மேலெய்த***
***வழிகுலத் தோர்வேடம் பூண்பர் தேவாகப்***
***பழிகுலத் தாகிய பாழ்சண்ட ரானார்***
***கழிகுலத் தோர்கள் களையப்பட் டோரே.***

தாழ்ந்த குலத்துத் தோன்றியவர்கள் மேல் நிலை அடைய வேடம் கொள்வர், வழிவழி அடிமை செய்யும் குலத்தில் வந்தவர் தெய்வ நிலை அடைவதற்காக வேடம் கொள்வர், பழிக்கத்தக்க செயலைச் செய்யும் குலத்தில் வந்த பாழான சண்டாளர்கள் வேடம் பூணில் கழிக்கத்தக்க குலத்தவர்களாவர். ஆதலார் நீக்கத் தக்கவராம்.

*1659.* ***பொய்த்தவஞ் செய்வார் புகுவர் நரகத்துப்***
***பொய்த்தவஞ் செய்தவர் புண்ணிய ராகார்***
***பொய்த்தவம் மெய்த்தவம் போகத்துட் போக்கியஞ்***
***சத்தியம் ஞானத்தால் தங்குத் தவங்களே.***

பொய்யான வேடத்தைப் பூண்டு தவம் செய்பவர் நரகத்துப் புகுவர், அங்ஙனம் பொய்த் தவத்தைச் செய்தவர் ஒரு போதும் புண்ணியராகார், பொய்த்தவமானது மெய்த்தவம் போன்று இவ்வுலக இன்பங்கள் சிலவற்றை அளிக்கவல்லதாம், ஆனால் உண்மை ஞானத்தினால் தான் தவத்தின் பயன் சித்திக்கும்.

*1660.* ***பொய்வேடம் பூண்பர் பொசித்தல் பயனாக***
***மெய்வேடம் பூண்போர் மிகுபிச்சை கைக்கொள்வர்***
***பொய்வேடம் மெய்வேடம் போலவே பூணினும்***
***உய்வேட மாகும் உணர்ந்தறிந் தோர்க்கே.***

வயிறார உண்பது ஒன்றே பயன் என்று கருதிப் பொய்யாகத் தவ வேடம் புனைவர், உண்மையாகத் தவவேடம் பூண்போர் உயிர் பிரியாதிருக்கக் கைப்பிள்ளை ஏற்பர், பொய்யான வேடத்தை மெய்யான வேடம் போலப் பூண்டாலும், வேடத்தின் உண்மையும் மேன்மையும் உணரின் அதுவே அவர் உய்தி பெறுவதற்குரிய வேடமாகும்.

## 9. தவ வேடம்

தவ வேடம் - தவத்துக்குரிய சின்னம் விபதி, உருத்திராக்கம், குண்டலம் முதலியன தவத்துக்குரிய சின்னாங்களாம்.

*1661.* ***தவமிக் கவரே தலையான வேடர்***
***அவமிக் கவரே யதிகொலை வேடர்***
***அவமிக் கவர்வேடத் தாகாரல் வேடத்***
***தவமிக் கவர்க்கன்றித் தாங்கவொண் ணாதே.***

தவத்தில் சிறந்தவரே முதன்மையான வேடம் பூண்டவர்கள், அங்ஙனமன்றிப் பொய்யான வேடத்தைப் பூண்டவர் கொடுமை மிக்க கொலை பாதகராவார், அத்தகைய கீழான செயலுடையோர் வேடத்துக்குப் பொருந்தார், அவ்வேடம் தவத்தால் சிறந்தார்க்கன்றித் தாங்க முடியாது.

*1662.* ***பூதி யணிவது சாதன மாதியிற்***
***காதணி தாம்பிர குண்டலங் கண்டிகை***
***ஓதி யவர்க்கும் உருத்திர சாதனந்***
***தீதில் சிவயோகி சாதனந் தேரிலே.***

சிவ அடையாளங்களில் முதன்மையாவது திருநீறு, காதில் அணிவது தாமிரத்தாலாய குண்டலம், கழுத்தில் அணிவது உருத்திராக்க மாலை, இவை வேதாகமங்களை ஓதியவர்க்குரிய சின்னங்கள், இனித் தீமையில்லாத சிவ யோகத்துக்குரிய, யோகிக்கு உரியன, உள்ளாடையும், கைப்பையும், தோகையாலாகிய சட்டையும் சுற்றிய சடையும், உடம்பு முழுவதும் அணியும் திருநீறும், அங்கையில் மண்டை ஓடும், அழகிய வலக்கையில் பிரப்பம் கோலும் ஆம்.

*1664.* *காதணி குண்டலங் கண்டிகை நாதமும்*
*ஊதுநற் சங்கும் உயர்கட்டி கப்பரை*
*ஏதமில் பாதுகம் யோகாந்த மாதனம்*
*ஏதமில் யோகபட் டந்தண்டம் ஈரைந்தே.*

காதணியாகிய குண்டலமும், கழுத்தணியாகிய உருத்திராக்கமும், சிவ சிவ ஒலியும், ஊதுகின்ற வெண்சங்கும், மேலான ஆறு கட்டியும், மண்டையாகிய சட்டியும், குற்றமில்லாத பாதக் குறடும், சிவயோகத்துக்குரிய இருக்கையும், குற்றமில்லாத யோகப்பட்டமும், யோக தண்டமும், ஆகிய பத்து அடையாளங்களும் சிவயோகிக்கு உரியன.

## 10. திருநீறு

திருநீறு - விபூதி. விபூதி என்பது ஒளியை நினைவுபடுத்தும் சாதனம், "ஆன நீற்றுக் கவசம் அடையப் புகுமின்" என்பது திருவாசகம்.

*1665.* *நூலுஞ் சிகையும் உணரார்நின் மூடர்கள்*
*நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்*
*பாலொன்றும் அந்தணர் பார்ப்பார் பரமுயிர்*
*ஓரொன் றிரண்டெனில் ஓங்காரம் ஓதிலே.*

பூணூலையும் சிகையையும் அணிந்திருந்தும் அவற்றின் மூடர்கள் அறிவதில்லை, பூணூல் என்பது வேதாந்தத்தைக் குறிப்பது, நுட்பமான குடுமி என்பது வேதாந்த ஞானத்தை உணர்த்துவது, பிரமத்தின் (சிவத்தின் பால் இரண்டற்று ஒன்றின அந்தண்மையுடையோர் பரமும் உயிரும் ஒன்றென்று பார்ப்பார், அவ்விதம் ஒன்றாவது நின்றவர் ஓங்காரம் ஓதில் ஒன்றாவார்.

*1666.* *கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை*
*மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்*
*தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி*
*சிங்கார மான திருவடி சேர்வரே.*

சிவபெருமான் பூசும் கவசத் திருநீற்றை, ஒளி கெடாமல் பூசி மகிழ்வீராயின், பண்டைய வினைகளும் உங்களிடம் தங்கா, சிவகதியும் உங்களிடம் வந்து பொருந்தும், ஆனந்த மயமான திருவடியை அடையலாம்.

*1667.* *அரசுட னாலத்தி யாகும்அக் காரம்*
*விரவு கனலில் வியனுரு மாறி*
*நிரவயன் நின்மலன் தாள்பெற்ற நீதர்*
*உருவம் பிரமன் உயர்குல மாமே.*

அரசு, ஆல், அத்தியின் சமித்துகள், வேள்வித் தீயில் பொருந்தி உருவம் மாறி, விபூதியாகும், அவயவம் இல்லாதவனும் மலம் இல்லாதவனும் ஆகிய சிவத்தின் திருவடியை உணர்ந்து அநுபவிக்கும் நியதியுடையவர், உருவமும் மாற்றம் பெற்று பிரமத் தியானத்தால் உயர்குலத்தோராவர்.

*1668.* *ஞானமி லார்வேடம் பூண்டும் நரகத்தார்*
*ஞானமுள் ளார்வேடம் இன்றெனில் நன்முத்தர்*
*ஞானமுள தாக வேண்டுவோர் நக்கன்பால்*
*ஞானமுள வேட நண்ணிநிற் போரே.*

உண்மைச் சிவஞானம் இல்லாதவர் உண்மைச் சிவ ஞானியர் போல் வேடந்தாங்கியில் நரகத்தை அடைவர், உண்மைச் சிவஞானம் உடையோர் சிவஞானியர்க்குரிய வேடத்தைத் தாங்காவிடினும் நல்ல முத்தர்களேயாவார்கள், சிவஞானப் பேறு உண்டாக வேண்டுமென்ற விருப்புடையோர், சிவத்தினிடம் என்றும் நீங்காத பேரொளியைப் பொருந்தி நிற்பர்.

*1669.* *புன்ஞானத் தோர்வேடம் பூண்டும் பயனில்லை*
*நன்ஞானத் தோர்வேடம் பூணார் அருள்நண்ணித்*
*துன்ஞானத் தோர்சம யத்துரி கள்ளோர்*
*பின்ஞானத் தோரொன்றும் பேசகில் லாரே.*

இழிந்த ஞானமுடையோர் ஞானிகள் வேடத்தைத் தாங்கியும் அதனால் ஆவதொரு பயனும் இல்லை, நல்ல ஞானமுடையோர் திருவருளில் தோய்ந்து வேடம் பூண்பதில் விருப்பமற்று இருப்பர், திரிபு உணச்சியுடையோர் சமயக் காழ்ப்புடையோராவர், பின்பு அநுபவமுள்ள ஞானிகள் சமயக் காழ்ப்பு உடையோரிடம் வாது செய்ய விரும்பார்.

*1670.* *சிவஞானி கட்குஞ் சிவயோகி கட்கும்*
*அவமான சாதனம் ஆகாது தேரில்*
*அவமா மலர்க்கது சாதன நான்கும்*
*உவமான மில்பொருள் உள்ளுற லாமே.*

சிவஞானிகளுக்கும் சிவயோகிகளுக்கும், ஆராயின் பயனற்றதான புறச்சாதனங்கள் ஆகா, அவர்களுக்குத் திருநீறு, உருத்திராக்கம், சடைமுடி, அஞ்செழுத்து ஆகிய நான்கு புறச்சாதனங்களும் வீணேயாகும், அவர்கள் உவமிக்க ஒண்ணாத பொருளை உள்ளே பொருந்தி வாழலாம்.

*1671.* ***கத்தித் திரிவர் கழுவடி நாய்போற்***
***கொத்தித் திரிவர் குரக்களி ஞானிகள்***
***ஒத்துப் பொறியும் உடலும் இருக்கவே***
***செத்துத் திரிவர் சிவஞானி யோர்களே.***

செப்பிடு வித்தைக்காரர்கள், கழுமரத்தின் அடியில் இருக்கும் நாய் போலக் கத்தித் திரிவார்கள், மேலும் கழுகு போல ஏமாளிகளைப் பிடுங்கித் திரிவார்கள், ஆனால் சிவ ஞானிகளே, ஐம்பொறிகளும் உடலும் நுகர்ச்சிக்குத் தக்கனவாக ஒத்திருந்தும், போகங்களை விரும்பாது செத்தாரைப் போலத் திரிவர்.

*1672.* ***அடியா ரவரே யடியா ரலாதார்***
***அடியாரு மாகாரவ் வேடமு மாகார்***
***அடியார் சிவஞான மானது பெற்றோர்***
***அடியா ரலாதார் அடியார்கள் அன்றே.***

அருள் இயக்கத்தால் முனைப்பற்று, அதன்வழி இயங்கும் சிவமெய்யுணர்வினர் மெய்யடியராவர், அத்தகுதி இல்லாதார் அடியாரும் ஆகார், அவர் கொள்ளும் வேடமும் சிவக்கோலமாகாது, திருவடி ஞானம் பெற்றோரே மெய்யடியார் ஆவர், அடியார் தன்மையிலாதார் ஒருகாலும் மெய்யடியார்கள் ஆகார்.

*1673.* ***ஞானிக்குச் சுந்தர வேடமும் நல்லவாந்***
***தானுற்ற வேடமுந் தற்சிவ யோகமே***
***ஆனவவ் வேடம் அருண்ஞான சாதனம்***
***ஆனது மாமொன்றும் ஆகா தவனுக்கே.***

சிவஞானிகளுக்கு அழகிய வேடமும் நல்லவாகும், தான் பெற்ற அவ்வேடத்தின் உட்கருத்தை உணர்ந்து அதன்படி ஒழுகில் அதுவே சிவயோகமாம், அங்ஙனம் அமைந்த அவ்வேடம் ஞானத்தை அளிக்கும் சாதனமுமாகும், ஞானசாதனம் என்று உணராதவனுக்கு வேடம் மட்டிலுந்தான் பொருந்தும்.

*1674.* ***ஞானத்தி னாற்பத நண்ணுஞ் சிவஞானி***
***தானத்தில் வைத்த தனியால யத்தனாம்***
***மோனத்த னாதலின் முத்தனாஞ் சித்தனாம்***
***ஏனைத் தவசி இவனென லாகுமே.***

சிவஞானி ஞானத்தில் ஞானமாகிய நான்காம் மார்க்கம் பொருந்தும், அகண்டமான சிவம் இவனுடலை ஆலயமாகக் கொண்டு விளங்குவதால் ஞானியின் தேகமே ஒப்பற்ற சிவாலயமாகும், சிவஞானி பிரணவோபாசனை உடையவனாதலின் முத்தனாகவும் சித்தனாகவும் விளங்குவான், ஏனைய தவத்தர்களின் நிலை எல்லாம் இவனிடம் உள்ளமையால் அவரெல்லாம் இவனைப் போன்றவர் ஆவரோ? ஆகமாட்டார் என்றபடி.

*1675.* ***தானன்றித் தன்மையுந் தானவ னாதலும்***
***ஏனைய வச்சிவ மான இயற்கையுந்***
***தானுறு சாதக முத்திரை சாத்தலு***
***மோனமும் நந்தி பதமுத்தி பெற்றதே.***

தற்போதம் நீங்கிய தன்மையும், மற்றும் தான் சிவமேயாகி விளங்குதலும், உலகிலுள்ள எப்பொருளுக்கும் உரிய முக்காலத்தையும் அறியும் ஆற்றலும், பக்குவ சீவர்களுக்குப் பார்வையாலோ பரிசத்தாலோ ஞானத்தை வழங்குதலும், பிரணவ சித்தியும் சிவபதவி அடைந்தோர்க்கு உரியனவாம்.

## 12. சிவ வேடம்

சிவ வேடமாவது சிவனுக்கு அடிமை என்றுணர்ந்திருப்போர் கொள்ளும் வேடம். இவ்வேடத்தார் தமக்கென ஒரு செயலற்றார் என்க.

*1676.* ***அருளாள் அரனுக் கடிமைய தாகிப்***
***பொருளாந் தனதுடற் பொற்பதி நாடி***
***இருளான தின்றி யிருஞ்செய்ய அற்றோர்***
***தெருளாம் அடிமைச் சிவவேடத் தாரே.***

திருவருளால் சிவனுக்கு உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணித்து அடிமையாகி, பொருளாகிய தனது உடலுக்குமேல் விளங்கும் பொன்னொளி மயமான அண்ட கோசத்தை உணர்ந்து, இருள் நீங்கித் தம் செயல் அற்றவரே, தெளிந்த அடிமை பூண்ட சிவ வேடத்தார் ஆவர்.

*1677. உடலில் துவக்கிய வேடம் உயிர்க்காகா*
*உடல்கழன் றால்வேடம் உடனே சுழலும்*
*உடலுயிர் உண்மையென் றோர்ந்துகொள் ளாதார்*
*கடலில் அகப்பட்ட கட்டையொத் தாரே.*

உடலில் புனைந்த புற வேடங்கள் ஒளிமயமான உயிருக்குப் பயன்படா, உடலை விட்டு உயிர் பிரிந்த போது உடலைச் சார்ந்த அறிவற்ற சாதனங்களும் பிரிந்து விடும், உடல் அசத்துப்பொருள் உயிர் சத்துப் பொருள் என்று அறியாதார், கடலில் அகப்பட்ட மரக்கட்டை போல அலக்கழிவர்.

*1678. மயலற் றிருளற்று மாமன மற்றுக்*
*கயலுற்ற கண்ணியர் கையிணக் கற்றுத்*
*துயலற் றவரோடுந் தாமே தாமாகிச்*
*செயலற் றிருப்பார் சிவவேடத் தாரே.*

ஆணவமல காரியமான மயக்கத்தை விட்டு, அதன் விளைவான இருளையும் அகற்றி, வலிமையுள்ள மனம் எண்ணுதலை விட்டு, கயல் மீனைப் போன்ற கண்ணையுடைய பெண்களின் கையால் தழுவப் பெறுதலையும் நீங்கி, மயக்கமற்றவரோடு இணங்கி, தமக்கெனச் செயலின்றி இருப்பார் சிவ வேடத்தார் ஆவர்.

*1679. ஓடுங் குதிரைக் குசைதிண்ணம் பற்றுமின்*
*வேடங்கொண் டென்செய்வீர் வேண்டா மனிதரே*
*நாடுமின் நந்தியை நம்பெரு மான்தன்னைத்*
*தேடும்இன் பப்பொருள் சென்றெய்த லாமே.*

மனிதர்களே, பிராண ரூபமாக உங்களிடம் ஓடிக்கொண்டிருக்கும் குதிரையைக் கடிவாளங்கொண்டு உறுதியாகப் பற்றி நிறுத்துங்கள், வேடத்தை மட்டும் தாங்கி என்ன செய்வீர்கள்? வீணான வேடத்தை விடுங்கள், நம் தலைவன் நந்தி தங்கியுள்ள குரு மண்டலத்தில் மனத்தைச் செலுத்துங்கள், நீங்கள் தேடுகின்ற இன்பப் பொருளான சிவத்தைப் சென்றடையலாம்.

## 13. அபக்குவன்

அபக்குவன் - தகுதியில்லாதவன்.

*1680. குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்*
*குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்*
*குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடிக்*
*குருடுங் குருடுங் குழிவிழு மாறே.*

அறியாமையை அறிவினால் போக்கும் குருவினைக் கொள்ள மாட்டார், அறியாமையை நீக்காத குருவினைக் கொள்வர், அது, குருடனும் குருடனும் சேர்ந்து குருட்டுத் தனமாக ஆடி, இரு குருடர்களும் அறியாமையால் குழியில் விழுவது போலாம்.

*1681. மனத்தில் எழுந்ததோர் மாயக்கண் ணாடி*
*நினைப்பின் அதனின் நிழலையுங் காணார்*
*வினைப்பயன் போக விளக்கியுங் கொள்ளார்*
*புறக்கடை இச்சித்துப் போகின்ற வாறே.*

மனிதன் எண்ணுவன எல்லாம் பிரதிபலித்துக் கொண்டிருப்பது காரண சரீரம், எண்ணங்கள் நிறைந்த மனமுடையவர் காரண சரீரத்தின் நிழலைக் கூட அணுகி அநுபவிக்கமாட்டார், எண்ணங்களால் உண்டாகிய வினைப்பயன்களை மாற்றிக்கொள்ளவும் அறியார், அறியாமையால் மீண்டும் காம வழியை இச்சித்துப் போய் எண்ணங்களைப் பெருக்கிக் கொள்கின்றனர்.

*1682. ஏயெனில் என்னென மாட்டார் பிரசைகள்*
*வாய்முலை பெய்ய மதுரநின் றூறிடுந்*
*தாய்முலை யாவ தறியார் தமருளோர்*
*ஊனிலை செய்யும் உருவிலி தானே.*

மக்கள் 'ஏய்' என்று கூப்பிட்டால் 'என்ன' என்று கூடப் பதில் கூறமாட்டார் (இது உலக இயல்பு), சிசுவின் வாயில் தாயின் தனத்தை வைக்க அமுதம் ஊறும், ஆனால் எவ்வாறு தாயின் தனத்தில் அமுதம் ஊறுகிறது என்பதை நம்மவர் அறிவதில்லை, அவ்வாறு அமுதம் பெய்து ஊனில் உயிரை நிலைக்கச் செய்பவன் உருவில்லாத சிவனேயாம்.

*1683.* *வாயொன்று சொல்லி மனமொன்று சிந்தித்து*
*நீயொன்று செய்யல் உறுதி நெடுந்தகாய்*
*தீயொன்றிங் குன்னைத் தெளிவன் தெளிந்தபின்*
*பேயென்றிங் கென்னைப் பிறர்தெளி யாரே.*

உறுதி கொண்ட பெருந்தன்மையுடையோனே! வாய் ஏதோ ஒன்றைச் சொல்லவும் மனம் வேறொன்றைச் சிந்திக்கவும் நீ மற்றொன்றைச் செய்யாதே, முக்கரண சுத்தியோடு இருப்பின் நீ சிவாக்கினியைப் பெற்றவன் என்று நான் கூறுவேன், அவ்வாறு தெளிந்த பின்னர் என் கூற்று பித்தன் கூற்று என்று பிறர் கூற மாட்டார்.

*1684.* *பஞ்சத் துரோகத்திப் பாதகர் தம்மை*
*யஞ்சச் சமயத்தோர் வேந்தன் அருந்தண்டம்*
*விஞ்சச்செய் திப்புவி வேறே விடாவிடில்*
*பஞ்சத்து ளாய்புவி முற்றும்பா ழாகுமே.*

பஞ்சமாபாதங்களைச் செய்பவரை அஞ்சும்படி, தக்க சமயத்தில் அறிந்து ஓர் அரசன் மிகுதியான தண்டனை அளித்து, இந்நாடு கடத்தாவிடில், நாடு பஞ்சத்தால் அகப்பட்டு முழுதும் பாழாகும்.

*1685.* *தவத்திடை நின்றவர் தாமுண்ணுங் கன்மஞ்*
*சிவத்திடை நின்றது தேவர் அறியார்*
*தவத்திடை நின்றறி யாதவர் எல்லாம்*
*பலத்திடை நின்றதோர் பாடது வாமே.*

தவத்தில் நிலைபெற்றோர்கள் தாம் அநுபவிக்கும் கன்மம், சிவத்தினால் அநுபவித்துக் கழிவதற்காக அமைக்கப்பட்டது. இதனைத் தேவரும் அறியார், தவத்தில் நிலைத்து நின்று அறியாதவர் எல்லாம், பிறவித் துன்பத்தில் அகப்பட்டு வருந்துவர்.

*1686.* *கன்றலுங் கருதலுங் கருமஞ் செய்தலும்*
*தின்றலுஞ் சவைத்தலுந் தீமை செய்தலும்*
*பின்றலும் பிறங்கலும் பெருமை கூறலும்*
*என்றிவை இறைபால் இயற்கை அல்லவே.*

பிறரைக் கோபித்தலும், எதையாவது எண்ணுதலும், வினைகளைச் செய்தலும், தின்னுதலும், சுவைத்தலும், பிறர்க்குத் தீமை புரிதலும், குறைவு படுதலும், நிறைவுபடுதலும், தன் பெருமை தான் கூறலும், ஆகிய ஒன்பதும் இறைவன்பால் உற்றவர்க்குக் கூடாவாம்.

*1687.* *விடிவ தறியார் வெளிகாண மாட்டார்*
*விடிவில் வெளியில் விழிக்கவு மாட்டார்*
*கடியதோ ருண்ணிமை கட்டுமின் காண்மின்*
*விடியாமை காக்கும் விளக்கது வாமே.*

அநுகூலமானதை அறிய மாட்டார், பரவெளியைக் காண மோட்டார், அநுகூலமான பரவெளியில் பார்வையைச் செலுத்த மாட்டார், காவலுடன் கூடிய கண்ணிமைகளைப் புற நோக்கிலிருந்து தடுத்து நிறுத்துங்கள், அக நோக்கை அறியுங்கள், தொடர்ந்து வரும் துர்ப்பாக்கியத்தைத் தவிர்க்கும் ஒளியாகச் சிவம் விளங்கும்.

*1688.* *வைத்த பசுபாச மாற்று நெறிவைகிப்*
*பெத்த மறமுத்த னாகிப் பிறழ்வுற்றுத்*
*தத்துவ முன்னித் தலைப்படா தவ்வாறு*
*பித்தான சீடனுக் கீயப் பெறாதானே.*

அனாதியே ஆன்மாவோடு பிணிக்கப்பெற்ற ஆணவ மலத்தை மாற்றுகின்ற வழியினைப் பொருந்தி, மலக்குற்றம் நீங்க முத்தியில் விருப்பனாகி உலக இயலில் மாறுபட்டு, உண்மைப் பொருளை நாடி மேன்மையடையாவண்ணம், உறுதியில்லாத சீடனுக்கு ஞானத்தைக் கொடுக்கலாகாது.

*1689.* *மன்னும் மலம்ஐந்தும் மாற்றும் வகையோரான்*
*துன்னிய காமாதி தோயுந் தொழில்நீங்ககான்*
*பின்னிய பொய்யன் பிறப்பிறப் பஞ்சாதான்*
*அன்னிய னாவான் அசற்சீட னாமே.*

நிலையான ஆணவமாதி ஐம்மலங்களையும் நீக்கும் வகையை ஆராயான், பொருந்திய காமம் முதலானவற்றில் முழ்குந் தொழிலினின்றும் பிரியான், பொய்யைக் கலவாது பேச அறியாதவன், பிறப்பு இறப்புகளுக்கு அஞ்சாதவன், இவன் தீட்சைக்குரிய சீடன் அல்லன் என்று தள்ளத்தக்கவன் ஆவான்.

# 14. பக்குவன்

பக்குவன் - தகுதியுடையவன். குரு உபதேசப்படி ஒழுகுபவன் பக்குவமுடையவனாவான்.

*1690.* *தொழுதறி வாளர் கருதிகண் ணாகப்*
*பழுதறி யாத பரம குருவை*
*வழியறி வார்நல் வழியறி வாளர்*
*அழிவறி வார்மற்றை யல்லா தவரே.*

வழிபாடு செய்யும் பக்குவமுள்ள சீடர் வேதாகம முறை உணர்ந்து, குற்றமே அறியாத மேலான குருவை, நாடி அறிவார், இவர் நம்முத்தியை விரும்பும் அறிவுடையவர், மற்றைய முத்தியை விரும்பாத உலக நிலையில் உள்ளவர் அழிந்து போகும் வழியைத்தான் அறிவர்.

*1691.* *பதைத்தொழிந் தேன்பர மாவுனை நாடி*
*யதைத்தொழிந் தேன்இனி யாரொடுங் கூடேன்*
*சிதைத்தடி யேன்வினை சிந்தனை தீர*
*உதைத்துடை யாயுகந் தாண்டரு ளாயே.*

பரமனே! உன்னை விரும்பி என் பரபரப்பு நீங்கினேன், உலக வாழ்வில் அலுத்துப் போனேன், இனிமேல் நான் யாரிடமும் சென்று சேர மாட்டேன், அடியேனது வினையைக் கெடுத்து, கவலை நீங்கும் வண்ணம் மாற்றி, என்னை உடையவளே ! மகிழ்ச்சியோடு என்னை ஆட்கொண்டு அருள்வாயாக.

*1692.* *பதைக்கின்ற போதே பரமென்னும் வித்தை*
*விதைக்கின்ற வித்தினை மேல்நின்று நோக்கிச்*
*சிதைக்கின்ற சிந்தையைச் செவ்வே நிறுத்தி*
*இசைக்கின்ற அன்பருக் கீயலு மாமே.*

சீடன் பரபரப்போடு உள்ள போதே மேலான ஞானத்தை, அளிக்கின்ற ஒளியை ஆசாரியன் சகஸ்ரதளத்தில் பொருந்தித் தியானித்து, சிதறுகின்ற சீடனது சிந்தையை ஒருமுகப்படுத்தி, தன்னொடு பொருந்துகின்ற அன்புடைய சீடர்க்கு அளிக்கலாகும்.

*1693.* *கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்ளுக*
*உள்ள பொருளுடன் ஆவி யுடன்ஈக*
*எள்ளத் தனையும் இடைவிடா தேநின்று*
*தெள்ளி யறியச் சிவபதந் தானே.*

கொண்டால் நல்ல குருநாதனைக் கொள்க, உன்னிடம் உடைமையாகக் கருதப்பட்ட பொருளையும் உனது உடலையும் உனது உயிரையும் காணிக்கையாகக் கொடுக்க, எள்ளளவு காலமும் இடைவிடாமல் அவர் காட்டிய வழியிலே நின்று, தெளிந்து உணரச் சிவபதம் தானே விளையும்.

*1694.* *சோதி விசாகந் தொடர்ந்திரு தேன்நண்டு*
*ஓதிய நானே உணர்வது தானென்று*
*நீதியுள் நீர்மை நினைந்தவர்க் கல்லது*
*ஆதியும் ஏதும் அறியகி லானே.*

சுவாதியும் விசாகமும் ஆகிய இரு நட்சத்திரங்களும், பெரிய விருச்சிகமும் கடகமும் ஆகிய இரு நட்சத்திரங்களும், ஆகச் சொல்லப்பட்ட நாள்கள் குருமுகமாய் உபதேசத்துக்குரியன என்ற முறைமையை உணர்வதன்றி, இதற்குரிய காரணமும் முதலும் அறிய முடியாது.

*1695.* *தொழிலார மாமணித் தூய்தான சிந்தை*
*எழிலால் இறைவன் இடங்கொண்ட போதே*
*விழலார் விறலாம விளையது போகக்*
*கழலார் திருவடி கண்டரு ளாமே.*

குரு உபதேசம் பெற்ற பெரிய மணியைப் போன்ற தூய்மையான சிந்தையில், ஒளி பொருந்திய இறைவன் எழுந்தருளிய விருப்பமுடையாரது வலிமைமிக்க வினை நீங்க, இறைவனது திருவடி என்றும் நாதவுணர்வு பெற்று அருளைப் பெறலாம்.

*1696.* *சாத்திக னாய்ப்பா தத்துவந் தானுன்னி*
*ஆத்திக பேத நெறிதோற்ற மாகியே*
*ஆர்த்த பிறவியி னஞ்சி யறநெறி*
*சாத்தவன் லானவன் சற்சீட னாமே.*

சத்துவ குணமுடையவனாகி, சிவதத்துவத்தைத் தியானித்து, ஆத்திகர்களால் கொள்ளப்பட்ட ஏதேனும் ஒரு துவைத நெறியைப் பற்றினவனாய், வினையால் பிணிக்கப்பட்ட பிறவிக்கு அஞ்சி, மேலான தரும நெறியைக் கைக்கொள்பவனே நல்ல பக்குவமுள்ள சீடனவாவான்.

*1697.* *சத்தும் அசத்துமெய் வாறெனத் தானுன்னிச்*
*சிந்தை யுருக்கிச் சிவனருள் கைகாட்டப்*
*பத்தியின் ஞானம் பெறப்பணிந் தானந்தச்*
*சத்தியில் இச்சை தருவோன்சற் சீடனே.*

உலகில் நித்தியமாய் அழியாத பொருள் எவை, அநித்தியமாய் அழியும் பொருள் எவை என்று தான் சிந்தித்து உணர்ந்து, சிவத்தையே சிந்தித்துச் சிவத்தின் சத்தி பதியப்பெற்றுச் சிவத்தை உணர்த்த உணர்த்த, நித்தியப் பொருளான சிவத்தினிடம் சிவஞானத்தைப் பெறப் பணிந்து, ஆனந்தமே வடிவான சிவசத்தியின் இச்சைக்குத் தக்கவாறு தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்பவனே நல்ல சீடனாவான்.

*1698.* *அடிவைத் தருளுதி யாசானின் றுன்னா*
*வடிவைத்த மாமுடி மாயப் பிறவி*
*அடிவைத்த காய அருட்சத்தி யாலே*
*அடிபெற்ற ஞானத்த னாசற்று ளோனே.*

குருநாதனே இன்று தங்களது திருவடியைச் சூட்டி அருளும் என்று, குருவினது வடிவத்தைத் தம்முடைய சிரசின்மேல் தியானிக்க, வஞ்சனையுடைய பிறவியைக் கோபிக்கின்ற அருட்சத்தியாலே, அருள் பெற்ற ஞான முடையோனே குற்றம் நீங்கிய சீடன் ஆவான்.

*1699.* *சீரா ரு ஞானத்தின் இச்சை செலச்செல்ல*
*வாராத காதல் குருபரன் பாலாகச்*
*சாராத சாதக நான்குந்தன் பாலுற்றோன்*
*ஆராயும் ஞானத்த னாமடி வைக்கவே.*

சீடன் சிறப்புப் பொருந்திய அநுபவ ஞானத்தில் விருப்பம் மிக்கு, இதுவரை கண்டறியாத காதல் குருபரனான சிவத்தின்பால் உண்டாக, இதுகாறும் அமையப்பெறாத சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்ற நான்கும் தன்னிடம் அமையப்பெற்றோன், திருவடி தீட்சைக்குப் பிறகு ஞானத்தின் அநுபவத்தை ஆராய்பவன் ஆவான்.

*1700.* *உணர்த்து மதிபக் குவர்க்கே யுணர்த்தி*
*இணக்கிற் பராபரத் தெல்லையுள் இட்டுக்*
*குணக்கொடு தெற்குத் தரபச்சி மங்கொண்*
*டுணர்த்துமி னாவுடை யாள்தன்னை யுன்னியே.*

உணர்த்துவதும் சத்திநிபாதம் மிக்கு உடையவர்க்கேயாகும், பசுக்களுக்கு உதவும் பராசத்தியை நினைந்து, ஒன்றோடும் பற்றில்லாத பராபரமாகிய சிவத்தின் எல்லைக்குச் சீடனைக் கொண்டு சென்று, கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு ஆகிய இடங்களை அறிவியுங்கள்.

*1701.* *இறையடி தாழ்ந்தை வணக்கமும் எய்திக்*
*குறையது கூறிக் குணங்கொண்டு போற்றச்*
*சிறையுடன் நீயறக் காட்டிச் சிவத்தோ*
*டறிவுக் கறிவிப்போன் சன்மார்க்கி யாமே.*

உபதேச குருவின் திருவடிகளை வணங்கி, ஐந்து வகையான வணக்கங்களைச் செய்து, ஆன்மாவின் குறையைக் கூறி, அழியாத குணத்தை அளிக்கும்படி சீடன் வேண்டிப் போற்ற, குருவானவர், "சிறைப்பட்டு உடலையே உண்மையென்று நம்பியுள்ள மாணவ, நீ அகண்ட சிவமாவாய்" என்பதை உணர்த்தி, சிவ அறிவுடன் ஆன்ம அறிவையும் ஒன்றுபடுத்தும் நெறியை அறிவிப்பவனே சன்மார்க்க உபதேச குரு ஆவர்.

*1702.* *வேட்கை விடுநெறி வேதாந்த மாதலால்*
*வாழ்க்கைப் புனல்வழி மாற்றிச்சித் தாந்தத்து*
*வேட்கை விடுமிக்க வேதாந்தி பாதமே*
*தாழ்க்குந் தலையினோன் சற்சீட னாமே.*

ஆசையை விடுகின்ற நெறியே வேதாந்தமாதலால், உலக வாழ்வுக்குத் துணைபுரிகின்ற புலன்வழிச் செல்லுக்கின்ற பொறிகளை மாற்றி, சிந்தாந்தச் செந்நெறியிலே சென்று விருப்பத்தை விடுகின்ற சிறந்த வேதாந்தியான குருவின் திருவடிகளில், வணங்குகின்ற தலையினை உடையவனே சிறந்த பக்குவமுள்ள சீடனாவன்.

*1703.* ***சற்குணம் வாய்மை தாயவிலே கந்தண்மை***
***சற்குரு பாதமே சாயைபோல் நீங்காமே***
***சிற்பர ஞானந் தெளியத் தெளிவோர்தல்***
***அற்புத மேதோன்ற லாகுஞ்சற் சீடனே.***

சத்துவ குணம், உண்மை, கருணை, ஆராய்ச்சி அறிவு, தாழ்வு, உபதேச குருவின் திருவடியை நிழல் போல நீங்காமை, உண்மையான பரஞானத்தைச் சிந்தித்துத் தெளிந்து அறிதல், அற்புதமே உண்டாதல், ஆகிய தகுதிகளை உடையவனே பக்குவமுள்ள சீடனாவான்.